ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

2447/50 - 2025 ජූලි මස 31 වැනි බුහස්පතින්දා - 2025.07.31

2447/50 ஆம் இலக்கம் - 2025 ஆம் யூலை மாதம் 31 ஆந் திகதி வியாழக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

பகுதி I : தொகுதி (I) - பொது

அரசாங்க அறிவித்தல்கள்

பொதுமக்கள் பாதுகாப்பு மற்றும் பாராளுமன்ற அலுவல்கள் அமைச்சு

சிறுவர்களுக்கு எதிரான மனித விற்பனை சார்ந்த ஒழுங்கமைக்கப்பட்ட குற்றங்களைக் கண்டறிதல், புலன்விசாரணை செய்தல் மற்றும் வழக்குத் தொடுத்தல் சார்ந்த சட்ட அமுலாக்க அதிகார சபைகளுக்கான நியம தொழிற்பாட்டு நடைமுறைகள்

நன்றி நவிலல்கள்

சிறுவர்களுக்கு எதிரான மனித விற்பனை சார்ந்த ஒழுங்கமைக்கப்பட்ட குற்றங்களைக் கண்டறிதல், புலன்விசாரணை செய்தல் மற்றும் வழக்கு தொடுத்தல் தொடர்பான இந்த நியம தொழிற்பாட்டு நடைமுறைகள் சிறுவர் பாதுகாப்பு மற்றும் சட்ட அமுலாக்கம் சார்ந்த பல துறைகளின் பல்வேறுபட்ட பங்குதாரர்கள், துறைசார் நிபுணர்கள் மற்றும் வல்லுநர்கள் ஆகியோரின் ஒத்துழைப்புடன் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சினால் விருத்தியாக்கப்பட்டது. இந்த நியம தொழிற்பாட்டு நடைமுறைகள் எதிர்காலத்திற்கு ஏற்றதாகவும் சூழமைவு சார்ந்ததாக நடைமுறை சாத்தியப்பாடு உடையதாகவும் இருப்பதை உறுதிசெய்யும் பொருட்டு சிறுவர் மற்றும் மகளிர் பணியகம் மற்றும் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தில் உள்ள பல்வேறு பிரிவுகள் போன்ற சம்பந்தப்பட்ட அனைத்து பொலிஸ் பிரிவுகளும் வெளிப்படுத்திய அர்ப்பணிப்பு மற்றும் வழங்கிய மகத்தான ஒத்தாசைக்கு எமது மனப்பூர்வமான நன்றியினைத் தெரிவிக்க விரும்புகின்றோம். எங்களின் முக்கிய தொழில்நுட்ப பங்காளியாகிய "சேவ் த சில்ட்ரன்" நிறுவனம் இந்த முயற்சியினை சாத்தியமானதாக மாற்றியமைக்கும் பொருட்டு அமைச்சுடன் இணைந்து விடாமுயற்சியுடன் பணியாற்றியதற்காக இந் நிறுவனத்திற்கு எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம். மேலும், இந்த நியம தொழிற்பாட்டு நடைமுறைகளுக்காக அழைக்கப்பட்ட தொழில்நுட்பப் பணிக்குழு (TWG) விரிவான முறையில் கலந்தாராய்வு செயன்முறையை மேற்கொள்வதற்கு உதவும் பொருட்டு அயராது உழைத்தது என்பதையும் இங்கு குறிப்பிட்டாக வேண்டும். TWG இன் பல உறுப்பினர்கள் தேசிய மனித விற்பனைக்கு எதிரான செயலணியின் பிரதிநிதிகளாக இருந்ததுடன் இந்த நியம தொழிற்பாட்டு நடைமுறைகளைத் தயாரிப்பதற்கான இவர்களின் ஒத்துழைப்பு பெரிதும் பாராட்டிற்குரியதாகும்.

இந்த நியம தொழிற்பாட்டு நடைமுறைகளில் இணையவெளிக் குற்றம் சார்ந்த கூறுகளுக்கு பயன்படுத்தப்படும் முக்கிய தொழில்நுட்ப வளமாக இந்திய தரவுப் பாதுகாப்பு பேரவையால் உருவாக்கப்பட்ட இணைய குற்ற விசாரணைக் கையேடு பயன்படுத்தப்படுகின்றது. இந்த SOPயை வடிவமைப்பதில் மேற்படி வளத்தினால் கிடைத்த தொழில்நுட்ப திசையையும் வழிகாட்டுதலையும் நாங்கள் கௌரவமாக ஏற்றுக்கொள்கின்றோம்.

மிகவுயர்ந்த ஆலோசனை செயன்முறையை செயற்படுத்தும் பொருட்டு நேரத்தையும் தங்களது முயற்சியையும் அர்ப்பணித்து இந்த SOPயை ஆவணப்படுத்திய எங்கள் ஆலோசகர்களுக்கு எமது நன்றி உரித்தாக வேண்டும். இறுதியாக, இந்த SOPயை

இவ் அதிவிசேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

நடைமுறைப்படுத்துவதற்கு தொடர்பாடல், ஒருங்கிணைப்பு, நிர்வாகம் போன்றவற்றில் உறுதுணையாக இருந்த பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சின் ஊழியர்களுக்கும் எங்கள் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

மனித விற்பனையை எதிர்த்துப் போராடும் பொருட்டு இந்த SOP இற்கான நிதி உதவி சர்வதேச புலம்பெயர்வுக்கான அமைப்பின் மூலம் அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தினால் பெருமனதுடன் வழங்கப்பட்டது என்பதையும் குறிப்பிட விரும்புகின்றோம்.

நன்றி நவிலல்கள்

D.W.R.B. செனவிரத்ன - செயலாளர், பொதுமக்கள் பாதுகாப்பு மற்றும் பாராளுமன்ற அலுவல்கள் அமைச்சு
ஜூலியன் செல்லப்பா - பணிப்பாளர், சேவ் த சில்ரன், இலங்கை

தொழில்நுட்ப பணிக்குழு:
வியானி குணதிலக

தொழில்நுட்ப பணிக்குழுவின் தலைவர் (TWG),
முன்னாள் செயலாளர், பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சு (MOPS)

T. V. D. தமயந்தி எஸ். கருணாரத்ன
TWG இன் இணைத் தலைவர், மேலதிக செயலாளர், பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சு

சேத்திய குணசேகர
மேலதிக சொலிசிட்டர் ஜெனரல், சட்டமா அதிபர் திணைக்களம் - சிறுவர் பாதுகாப்பு பிரிவு (CP Unit)

கயானி கௌசல்யா விஜேசிங்க
ஆணையாளர், நன்னடத்தை மற்றும் சிறுவர் பாதுகாப்புச் சேவைகள் திணைக்களம் (DPCCS)

DIG ரேணுகா ஜயசுந்தர
மகளிர் மற்றும் சிறுவர் துஷ;பிரயோக புலன்விசாரணைப் பிரிவு, பொலிஸ் திணைக்களம், இலங்கை

மஹேஷிகா சில்வா
பிரதி சொலிசிட்டர் ஜெனரல், சட்டமா அதிபர் திணைக்களம்

மயூரி ஆர் பெரேரா
சிரேஷ்ட உதவிச் செயலாளர், பாதுகாப்பு அமைச்சு (MOD)

பிரீத்திகா சகலசூரிய
பணிப்பாளர்/சட்டப் பிரிவு, தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை
(NCPA)

திமுத்து அபேவர்தன
மேஜர் SLAC, ஒருங்கிணைப்புக் குழு உறுப்பினர், தேசிய மனித விற்பனைக்கு எதிரான செயலணி (NAHTTF), MOD

பணிப்பாளர்
குற்றப்பிரிவு, இலங்கை பொலிஸ் திணைக்களம்

பணிப்பாளர்
குற்றப் புலனாய்வுத் திணைக்களம் (CID), இலங்கை காவல்துறை

பணிப்பாளர்/சட்டம்
இலங்கை பொலிஸ் திணைக்களம்

பணிப்பாளர்
மனித விற்பனை, கடத்தல் புலன்விசாரணை மற்றும் கடல்சார் குற்ற புலன்விசாரணைப் பிரிவு, இலங்கை பொலிஸ் திணைக்களம்

பணிப்பாளர்;
சிஐடி, சட்டவிரோத சொத்துக்கள் மற்றும் ஆதனங்கள் புலன்விசாரணைப் பிரிவு, இலங்கை பொலிஸ் திணைக்களம்

பணிப்பாளர்
கணினி குற்றப் புலனாய்வுப் பிரிவு, இலங்கை பொலிஸ் திணைக்களம்

பணிப்பாளர்
இலங்கை பயங்கரவாத தடுப்பு மற்றும் புலனாய்வுப் பிரிவு, இலங்கை பொலிஸ் திணைக்களம்;

அஜித் தென்னகோன்
தலைவர், தடயவியல் மருத்துவம் மற்றும் நச்சுயியல் நிறுவனம், மருத்துவ பீடம், கொழும்பு பல்கலைக்கழகம் (முன்னாள் JMO)

ஏ.து.டீ பண்டாரநாயக்க
சிரேஷ்ட அரசாங்க பகுப்பாய்வாளர் தடயவியல் நீர்ப்பாயவியல் மற்றும் DNA, அரசாங்க பகுப்பாய்வாளர் திணைக்களம்

J. M. R. ஜயதிலக்க / கே.கே. அப்சரா
கேள்விகள் மற்றும் ஆவணங்களை பரிசோதிப்பவர், அரச பகுப்பாய்வாளர் திணைக்களம்

பணிப்பாளர் நாயகம்
குற்றத்தால் பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் சாட்சிகளைப் பாதுகாப்பதற்கான தேசிய அதிகாரசபை

M. R. லத்தீப்
ஓய்வுபெற்ற சிரேஷ்ட பிரதி பொலிஸ் மா அதிபர், குற்ற மற்றும் ஒழுங்கமைக்கப்பட்ட குற்றப்பிரிவு மற்றும் பொலிஸ் போதைப்பொருள் பணியகம் மற்றும் தளபதி, விசேட அதிரடிப்படை,
இலங்கை பொலிஸ் மற்றும் NCPA இன் முன்னாள் பணிப்பாளர்

அமில பெரேரா
முகாமைத்துவப் பணிப்பாளர், பீனிக்ஸ் ஐடி லங்கா
(டிஜிட்டல் சைபர் தடயவியல் நிபுணர்)

ரனிக்ஷா டி சில்வா
MHPSS நிபுணர் மற்றும் கருத்திட்ட முகாமையாளர், Free Yezidi
பவுன்டேஷன், ஈராக்

மினோலி பி. தொன்
தலைவர், பாதுகாப்பு பிரிவு, புலம்பெயர்வுக்கான சர்வதேச அமைப்பு
(IOM), இலங்கை

மிக்ஷெல் பெர்மன்
சிரேஷ்ட கருத்திட்ட ஒருங்கிணைப்பாளர், விற்பனைக்கு எதிரான, பாதுகாப்புப் பிரிவு, புலம்பெயர்வுக்கான சர்வதேச அமைப்பு
(IOM), இலங்கை

புலம்பெயர்வோர் விற்பனை மற்றும் கடத்தல் (HTMS) பிரிவு
இன்டர்போல், லியோன், பிரான்ஸ்

புத்தினி விதான
சிரேஷ்ட தொழில்நுட்ப ஆலோசகர், சிறுவர் பாதுகாப்பு மற்றும் வணிக நடவடிக்கைகளில் சிறுவர் உரிமைகள், சேவ் த சில்ரன்
இன்டர்நெஷனல், இலங்கை

ஜனனி சந்திரமோகன்
தொழில்நுட்ப ஆலோசகர், மனநல உள சமூக உதவி (MHPSS)
மற்றும் சிறுவர் பங்கேற்பு, சேவ் த சில்ரன் இன்டர்நெஷனல்,
இலங்கை

சுசேதா கொபல்லவ
சிரேஷ்ட முகாமையாளர், மனித விற்பனை தடுப்பு, சேவ் த சில்ரன்
இன்டர்நெஷனல், இலங்கை

சுருக்கெழுத்துப்பெயர்கள்

AGD	சட்டமா அதிபர் திணைக்களம்
CCID	கணினி குற்றப் புலனாய்வுப் பிரிவு
CID	குற்றப் புலனாய்வுத் திணைக்களம்
CRC	சிறுவர் உரிமைகள் தொடர்பான ஐக்கிய நாடுகளின் உடன்படிக்கை - (1989)
CSAM	சிறுவர்களை பாலியல் துஷ்பிரயோகத்திற்குட்படுத்தும் பொருள்
CSEM	சிறுவர்களை பாலியல் சுரண்டலுக்குட்படுத்தும் பொருள்
CSO	சிவில் சமூக அமைப்பு
CYPO	சிறுவர் மற்றும் இளம் ஆட்கள் கட்டளைச் சட்டம்
CWB	சிறுவர் மற்றும் மகளிர் பணியகம்
EU	ஐரோப்பிய ஒன்றியம்
FIR	முதல் தகவல் அறிக்கை
HC	மேல் நீதிமன்றம்
HRC	மனித உரிமைகள் பேரவை
ICSE	சர்வதேச சிறுவர் பாலியல் சுரண்டல் (தரவுத்தளம்)
ILO	சர்வதேச தொழிலாளர் அமைப்பு
INTERPOL	சர்வதேச குற்றவியல் பொலிஸ் அமைப்பு
IO	புலன்விசாரணை உத்தியோகத்தர்
IOM	புலம்பெயர்வுக்கான சர்வதேச அமைப்பு
JMO	சட்ட மருத்துவ அதிகாரி
MLEF	சட்டம்சார் மருத்துவ பரிசோதனை படிவம்
MLR	சட்டம்சார் மருத்துவ அறிக்கை
MoPS	பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சு
NAHTTF	தேசிய மனித விற்பனைக்கு எதிரான செயலணி
NCMEC	காணாமல் போன மற்றும் சுரண்டலுக்கு உள்ளாக்கப்பட்ட சிறுவர்களுக்கான தேசிய மையம்
NCPA	தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை
NGO	அரச சார்பற்ற நிறுவனம்
PO	நன்னடத்தை உத்தியோகத்தர்
SAARC	பிராந்திய ஒத்துழைப்புக்கான தெற்காசிய சங்கம்
SC	உயர் நீதிமன்றம்
SOCO	தடயவியல் சொகோ பொலிஸ் உத்தியோகத்தர்
SOP	நியம தொழிற்பாட்டு நடைமுறை
TIP	மனித விற்பனை
UN	ஐக்கிய நாடுகள்
UNHCR	ஐக்கிய நாடுகளின் அகதிகளுக்கான உயர் ஸ்தானிகர்
UNICEF	ஐக்கிய நாடுகளின் சிறுவர் நிதியம்
UNCRC	ஐக்கிய நாடுகளின் சிறுவர் உரிமைகள் தொடர்பான உடன்படிக்கை
UNDHR	அனைத்துலக மனித உரிமைகள் பிரகடனம்
UNODC	போதைப்பொருள் மற்றும் குற்றங்கள் தொடர்பான ஐக்கிய நாடுகளின் அலுவலகம்
UNTOC	நாடுகடந்த ஒழுங்கமைக்கப்பட்ட குற்றங்களுக்கு எதிரான ஐக்கிய நாடுகளின் உடன்படிக்கை
VoT	மனித விற்பனையால் பாதிக்கப்பட்டவர்
WHO	உலக சுகாதார அமைப்பு

உள்ளடக்கம்

முன்னுரை

நிறைவேற்றுச் சுருக்கம்

1. அறிமுகம்

   1.1 பின்னணி
   1.2 சிறுவர் சார்ந்த மனித விற்பனை எனும் குற்றம்
   1.3 இலங்கையில் சிறுவர் விற்பனையை எதிர்த்துப் போராடுவதற்கான கொள்கைச் சட்டகம்
   1.4 சிறுவர் விற்பனை தொடர்பான சட்டக் கட்டமைப்பு

2. நியம தொழிற்பாட்டு நடைமுறைகள்

   2.1 கட்டம் ஒன்று - கண்டறிதல் மற்றும் மீட்பு

      2.1.1 முதல் தகவல் அறிக்கையிடல் (FIR)/முறைப்பாடுகள்
      2.1.2 மீட்பு
      2.1.3 ஆரம்ப பரிசோதனை (பிரித்தறிதல்)
      2.1.4 அவசரத் தேவைகளைக் கண்டறிதல்/பாதிக்கப்பட்டவர்களுக்கான சேவை வழங்குநர்களுடன் தகவல்களைப் பகிர்தல் (தங்குமிடம் உட்பட)
      2.1.5 சுகாதார சேவைகளுக்கு ஆற்றுப்படுத்துதல்
      2.1.6 பிள்ளையை நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்துதல்
      2.1.7 பொருத்தமான நபரிடம் ஒப்படைத்தல் சார்ந்த கட்டளை
      2.1.8 குற்றத்தால் பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் சாட்சிகளைப் பாதுகாப்பதில் தேசிய அதிகாரசபையுடன் ஒருங்கிணைந்து பணியாற்றுதல்

   2.2 படிமுறை இரண்டு - புலன்விசாரணை

      2.2.1 புலன்விசாரணையைத் திட்டமிடுதல்
      2.2.2 பாதிக்கப்பட்ட சிறுவர்களையும் சாட்சிகளையும் நேர்காணல் செய்தல்
      2.2.3 புலன் விசாரணைத் திட்டத்தின் மீளாய்வு
      2.2.4 மேலதிக விசாரணைகள்

         2.2.4.1. சொத்துக்களை முடக்குதல் /பறிமுதல் செய்தல்
         2.2.4.2 குற்றங்களை அடையாளங் காணுதல் - மனித விற்பனை சார்ந்த கூறுகளை நிறுவுதல்
         2.2.4.3 சந்தேக நபர்கள் மற்றும கைது செய்யப்பட்டவர்களை விசாரணை செய்தல்
         2.2.4.4 ஆதாரங்களின் சுருக்கத்தைக் கொண்டு 'B' அறிக்கையைத் தயாரித்தல்
         2.2.4.5 நீதவான் முன்னிலையில் ஆஜர்படுத்துதல் ('B' அறிக்கையுடன்)
         2.2.4.6 விளக்கமறியல் மற்றும் பிணை வழங்குதல்
         2.2.4.7 வெளிநாடுகளில் உள்ள சந்தேக நபர்களைக் கண்டறிதல் மற்றும் கைது செய்தல்

   2.3 கட்டம் மூன்று - வழக்கு விசாரணை

      2.3.1 குற்றச்சாட்டுகளை உருவாக்குதல் - சட்டமா அதிபர் திணைக்களத்தின் அறிவுறுத்தல்கள்
      2.3.2 குற்றப்பகர்வு
      2.3.3 தனிப்பட்ட சட்ட பிரதிநிதித்துவம்/சட்ட உதவி
      2.3.4 வழக்கு விசாரணை செயன்முறை
      2.3.5 பாதிக்கப்பட்ட சிறுவர் இலங்கைக்கும் இலங்கையிலிருந்தும் திரும்புதல்
      2.3.6 பாதிக்கப்பட்ட சிறுவர்கள் மீண்டும் பாதிக்கப்படுவதையும் மேலதிக சித்திரவதைக்கு ஆளாவதையும் தடுத்தல்

உள்ளடக்கம்

3. சிறுவர்களுக்கு எதிரான இணையவழி குற்றங்கள் (சைபர் கிரைம்)
3.1 சிறுவர்களுக்கு எதிரான இணையவழி குற்றங்களின் வகைகள்
3.2 இணையவழி குற்றங்கள் தொடர்பான இலங்கையின் சட்டக் கட்டமைப்பு
3.3 இணையவழி குற்ற புலன்விசாரணையின் கட்டங்கள்

3.3.1 முதல் தகவல்
3.3.2 புலன்விசாரணைக்கு முந்தைய மதிப்பீடு

3.3.2.1 குற்றத்தை அடையாளங் காணுதல்
3.3.2.2 தொழில்நுட்ப மதிப்பீடு

3.3.3 சான்றுகள் சேகரிப்பு

3.3.3.1 குற்ற நிகழ்விடத்தைப் பாதுகாத்தல்
3.3.3.2 சம்பவம் / குற்றத்தைக் கட்டுப்படுத்துதல்
3.3.3.3 சான்றுகளின் அடையாளமிடல் மற்றும் ஆவணப்படுத்தல்
3.3.3.4 ஆதாரங்களை மாற்றுவதைத் தவிர்த்தல்
3.3.3.5 சாதனங்களை கைப்பற்றுதல், சேமித்தல் மற்றும் போக்குவரத்து செய்தல்
3.3.3.6 சேமிப்பக ஊடுபொருளை கையாளுதல்
3.3.3.7 தடயவியல் நகல்

3.3.4 குற்ற நிகழ்விடத்தில் இடம்பெறும் பூர்வாங்க நேர்காணல்கள்
3.3.5 டிஜிட்டல் தடயவியல் பகுப்பாய்வு

3.4 நிபுணத்துவ இணையவழி குற்றப் புலனாய்வுப் பிரிவு - CID

4. சார்ந்த நியம தொழிற்பாட்டு நடைமுறைகளை நடைமுறைப்படுத்துதல்

4.1 ஒருங்கிணைப்பு
4.2 புதுப்பித்தல் மற்றும் மீளாய்வு
4.3 ஆற்றல் விருத்தி
4.4 நியம தொழிற்பாட்டு நடைமுறைகள் நடைமுறைப்படுத்தல், உதவி வழங்குதல் மற்றும் மேற்பார்வை செய்தல்

இணைப்பு 1: மனித விற்பனை குற்றங்களின் கூறுகளைப் புரிந்துகொள்ளுதல்
இணைப்பு 2: முக்கிய சொற்களஞ்சியம்
இணைப்பு 3: மனித விற்பனை மற்றும் சிறுவர் விற்பனை தொடர்பான சர்வதேச மற்றும் தேசிய சட்டக் கட்டமைப்பு
இணைப்பு 4: பொதுமக்களின் உரிமைகளைப் பாதுகாப்பதற்கும் முன்னேற்றுவதற்கும் சட்ட அமுலாக்க அதிகாரிகளுக்கு உயர் நீதிமன்றத்தினால் வழங்கப்பட்டுள்ள வழிகாட்டுதல்கள்
(SC[FR]) மனு இலக்கம். 677/2012 - 11/06/2019)

முன்னுரை

சிறுவர் விற்பனை மற்றும் சிறுவர்களுக்கு எதிரான ஒழுங்கமைக்கப்பட்ட குற்றங்கள் என்பன மனித உரிமைகளின் கடுமையான மீறல்களில் ஒன்றாக இருப்பதுடன் இதனை எதிர்த்துப் போராடும் பொருட்டு ஒருங்கிணைக்கப்பட்டதும் மூலோபாயரீதியிலானதும் கூட்டாக இணைந்து செயலாற்றுகின்றதுமான பதிலளிப்பு தேவைப்படுகின்றது. இலங்கையில், இத்தகைய குற்றங்களின் கடுமையான தாக்கம் அதிகரித்து வருகின்றதென அடையாளம் காணப்பட்டதையடுத்து சிறுவர் விற்பனையை திறம்பட எதிர்த்துப் போராடுவதற்கு வலுவான கட்டமைப்புகள் தேவையெனும் நிர்ப்பந்தம் எழுந்துள்ளது. இந்த நியம தொழிற்பாட்டு நடைமுறைகள் (SOP) ''சிறுவர்களுக்கு எதிரான விற்பனை சார்ந்த ஒழுங்கமைக்கப்பட்ட குற்றங்களைக் கண்டறிதல், விசாரணை செய்தல் மற்றும் வழக்குத் தொடுப்பதற்கான மேற்படி சவால்களை எதிர்கொள்வதில் குறிப்பிடத்தக்க முன்னேற்றகரமானதொரு முயற்சியினை பிரதிபலிப்பதாக அமைகின்றன.

சேவ் த சில்ரன்-இலங்கையுடன் இணைந்து பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சினால் விருத்தியாக்கப்பட்ட இந்த நியம தொழிற்பாட்டு நடைமுறைகள், மனித விற்பனையை எதிர்த்துப் போராடுவதற்கு வழிசமைக்கும் பரந்தளவிலான தேசிய மூலோபாயத்தின் மூலைக்கல்லாக செயற்படுகின்றது. இலங்கையில் மனித விற்பனைக்கு எதிரான பொறிமுறைகளில் உள்ள இடைவெளிகளை இயன்றளவு குறைக்கும் பொருட்டு அரச மற்றும் அரச சார்பற்ற பங்குதாரர்களின் கூட்டமைப்பை தோற்றுவிக்கும் தேசிய மனித விற்பனைக்கு எதிரான செயலணி (NAHTTF) மேற்கொண்ட முயற்சிகளின் முக்கியமானதொரு அம்சத்தை இந்த ஆவணம் உருவாக்குகின்றது. இந்த முன்னெடுப்பானது குறிப்பாக விற்பனையால் பாதிக்கப்பட்டவர்களை அடையாளங் காணுதல், பாதுகாத்தல் மற்றும் ஆற்றுப்படுத்தல் தொடர்பான நியம தொழிற்பாட்டு நடைமுறைகள் (2014) மற்றும் சிறுவர் விற்பனையால் பாதிக்கப்பட்டவர்களை அடையாளங் காணுதல், பாதுகாத்தல் மற்றும் ஆற்றுப்படுத்தல் (2021) பற்றிய வழிகாட்டுதல் குறிப்பு உட்பட இதற்கு முந்தைய மைல்கற்களை குறைநிரப்பு செய்வதாக அமைகின்றன.

இலங்கை பொலிஸ் திணைக்களத்திற்கான முதன்மை ஒருங்கிணைப்பு அமைப்பு என்ற வகையில் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சானது சிறுவர் விற்பனை சம்பவங்களைக் கண்டறிதல், விசாரணை செய்தல் மற்றும் வழக்கு தொடுத்தல் என்பவற்றை சார்ந்தாக நாடாளவிய ரீதியில் செயற்படும் சட்ட அமுலாக்க முகவர் நிறுவனங்கள் இவ்விடயத்தில் ஒருங்கிணைந்த மற்றும் வினைத்திறன்மிக்க அணுகுமுறையை கடைப்பிடிப்பதை உறுதி செய்வதில் இன்றியமையாத பங்கை வகிக்கிறது. சிறுவர் மற்றும் மகளிர் பணியகம் (CWB) மற்றும் மனித விற்பனை குற்றங்களை புலன்விசாரணை செய்யும் பிற பொலிஸ் பிரிவுகள் ஆகியவற்றை வலுவூட்டுவதன் மூலம் சிறுவர் உரிமைகளை நிலைநிறுத்துவதற்கும் பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதியை உறுதி செய்வதற்கும் அமைச்சு தனது உறுதிப்பாட்டை மேலும் வலுப்படுத்திக்கொள்கின்றது. இந்த நியம தொழிற்பாட்டு நடைமுறையின் கீழ் கூட்டு முயற்சிகளைப் பொருத்தமட்டில் அவை மேம்பட்ட புலனாய்வு நுட்பங்களை ஒருங்கிணைத்தல், துறைகளுக்கு இடையேயான ஒத்துழைப்பை மேம்படுத்துதல் மற்றும் சர்வதேச சிறந்த நடைமுறைகளுடன் இலங்கையின் நடைமுறைகளை சீரமைத்தல் ஆகியவற்றை நோக்கமாகக் கொண்டுள்ளன.

சிறுவர்களுக்கு எதிரான பிற குற்றங்களில் இருந்து விற்பனையை வேறுபடுத்துவதன் முக்கியத்துவத்தையும் இந்த நியம தொழிற்பாட்டு நடைமுறை அடிக்கோடிட்டுக் காட்டுகிறது. ஆட்சேர்ப்பு உத்திகள் முதல் சீர்ப்படுத்துதல் மற்றும் சிக்க வைக்கும் முறைகள் வரை சிறுவர்களை சுரண்டும் நடவடிக்கைகளின் நுணுக்கங்கள் சார்ந்த விடயங்களில் சிறப்பு புலன்விசாரணை உத்திகள் தேவை என்பதை இது ஏற்றங்கீகரிக்கின்றது. இந்த குறிப்பிட்ட இயக்கவியலுக்கு ஏற்ப அவர்களின் பதிலளிப்புகளை மாற்றியமைத்துக் கொள்வதற்கு இயலச் செய்யும் பொருட்டு சட்ட அமுலாக்கத்திற்கான கருவிகளை வழங்குவதன் மூலம், விற்பனையில் ஈடுபடுபவர்களை அடையாளங் காணுதல் மற்றும் கைதுசெய்தல் மற்றும் இந்த கொடூரமான குற்றங்களுக்கு எதிராக வழக்கு தொடுத்தல் ஆகியவற்றை வலுப்படுத்துவதற்கான வாய்ப்பு கிட்டுகின்றது.

பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சு மற்றும் அதனுடன் தொடர்புடைய நிறுவனங்கள் அரச சார்பற்ற சேவை வழங்குநர்களுடன் இணைந்து, சமூகத்தில் மிகவும் பாதிக்கப்படக்கூடிய உறுப்பினர்களான எமது சிறுவர்களைப் பாதுகாப்பதற்கான முக்கியமானதொரு தேவை உள்ளதென்பதை ஏற்றங்கீகரிக்கின்றன. இந்த நியமதொழிற்பாட்டு நடைமுறைகள் குற்றவாளிகளை சட்டத்தின் முன் கொண்டு வருவதோடு மட்டுமல்லாமல், இச்செயன்முறை முழுவதிலும் பாதிக்கப்பட்ட ஒவ்வொரு சிறுவரும் பாதுகாக்கப்படுவதையும் ஆதரிக்கப்படுவதையும் உறுதிப்படுத்தும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளன. ஒரு கட்டமைக்கப்பட்ட, தரப்படுத்தப்பட்ட மற்றும் சிறுவர் உரிமைகளுக்கு இசைந்தொழுகும் அணுகுமுறை மூலம் இந்த முன்னெடுப்பானது ஒவ்வொரு புலன்விசாரணை மற்றும் வழக்கு தொடுக்கும் விடயத்திலும் பிள்ளையின் உச்சமட்ட நலன்கள் முன்னிலைப்படுத்தப்படும் வகையிலான ஒரு சூழலை உருவாக்க முயல்கிறது.

இந்த குறிப்பிடத்தக்க நடவடிக்கையை நாம் முன்னெடுத்துச் செல்லும் இத்தருணத்தில் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சின் முன்னால் செயலாளர் திரு.வியானி குணதிலக்க மற்றும் மேலதிக செயலாளர் (அபிவிருத்தி மற்றும் திட்டமிடல்) திருமதி தமயந்தி எஸ். கருணாரத்ன மற்றும் அவரது அபிவிருத்திப் பிரிவின் குழுவைச் சேர்ந்த திருமதி. ரேணுகா ஜயசுந்தர, மகளிர் மற்றும் சிறுவர் வலயத்தின் பிரதிப் பரிசோதகர் நாயகம் மற்றும் குறிப்பாக இலங்கைப் பொலிஸ் திணைக்களத்தின் மகளிர் மற்றும் சிறுவர் பணியகத்திலுள்ள அவரது குழு ஆகிய தரப்புகளுக்கு எனது மனமார்ந்த நன்றியினை தெரிவித்துக்கொள்கின்றேன். சேவ் தி சில்ரன் ஸ்ரீ லங்கா மற்றும் அதன் குழுவைச் சேர்ந்த புத்தினி விதான – சிரேஷ்ட தொழில்நுட்ப ஆலோசகர் - சிறுவர் பாதுகாப்பு மற்றும் வணிகத்தில் சிறுவர் உரிமைகள், சேவ் த சில்ரன் இன்டர்நெஷனல் - ஸ்ரீலங்கா, மற்றும் மனித விற்பனைக்கு எதிரான பிரிவின் சிரேஷ்ட முகாமையாளர் சுஷேதா கொபல்லவ, சேவ் த சில்ரன் இன்டர்நெஷனல் – ஸ்ரீலங்கா, மற்றும் இந்த முயற்சிக்கு பங்களித்த அனைத்து பங்குதாரர்களுக்கும் எனது விசேட நன்றி உரித்தாக வேண்டும். இந்த நியம தொழிற்பாட்டு நடைமுறைகள் பாதிக்கப்பட்டவர்களுக்கு நம்பிக்கை தரும் கலங்கரை விளக்கமாகவும், இலங்கையில் சிறுவர் விற்பனை அச்சுறுத்தலுக்கு எதிராக சட்ட அமுலாக்க அதிகாரிகளுக்கு ஒரு சக்திவாய்ந்த கருவியாகவும் செயற்பட வேண்டுமென்பதே எனது எதிர்பார்ப்பாகும்.

டீ.டபிள்யூ.ஆர்.பி. சேனவிரத்ன,
செயலாளர்,
பொதுமக்கள் பாதுகாப்பு மற்றும் பாராளுமன்ற அலுவல்கள் அமைச்சு,
இலங்கை.

நிறைவேற்றுச் சுருக்கம்

சிறுவர்களுக்கு எதிரான மனித விற்பனை சார்ந்த ஒழுங்கமைக்கப்பட்ட குற்றங்களைக் கண்டறிதல், புலன்விசாரணை செய்தல் மற்றும் வழக்கு தொடுத்தல் தொடர்பாக சட்ட அமுலாக்க உத்தியோகத்தர்களுக்காக இந்த நியம தொழிற்பாட்டு நடைமுறைகள் (SOPs) 'மனித விற்பனையை எதிர்த்துப் போராடுவதற்கும் பாரியளவு தாக்கத்தை ஏற்படுத்துவதற்கும் அரசாங்கத்தினதும் சிவில் சமூக அமைப்புக்களினதும் (CSO) ஆற்றலை வலுப்படுத்துதல்'' கருத்திட்டத்தின் (IMPACT) கீழ் ஐக்கிய அமெரிக்காவின் இராஜாங்கத் திணைக்களம் மற்றும் புலம்பெயர்வுக்கான சர்வதேச அமைப்பு ஆகியவற்றின் நிதியுதவியுடன் சேவ் த சில்ரன் இலங்கையுடன் இணைந்து பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சினால் (MoPS) தயாரிக்கப்பட்டுள்ளது. மனித விற்பனையை எதிர்த்துப் போராடும் விடயத்தில் அடையாளம் காணப்பட்ட இடைவெளிகளை நிவர்த்தி செய்யும் பொருட்டு ஒன்றிணைந்து செயற்படும் ''தேசிய மனித விற்பனைக்கு எதிரான செயலணி (NAHTTF) மற்றும் அதன் அரச மற்றும் அரச சார்பற்ற பங்குதாரர்களின் கூட்டமைப்பு ஆகியவற்றினால் செயற்படுத்தப்படும் முன்னெடுப்புகளில் மேற்படி நியம தொழிற்பாட்டு நடைமுறைகள் ஒரு முக்கிய அங்கமாக அமைகின்றன.

இந்த SOPs, தற்போதுள்ள, 2014 ஆம் ஆண்டு அரசாங்கத்தால் தயாரிக்கப்பட்டு அங்கீகரிக்கப்பட்ட **'மனித விற்பனையால் பாதிக்கப்பட்டவர்களை அடையாளங் காணுதல், பாதுகாத்தல் மற்றும் ஆற்றுப்படுத்தல் தொடர்பான நியம தொழிற்பாட்டு நடைமுறைகள்" மற்றும் 2021 ஆம் ஆண்டு தயாரிக்கப்பட்டு அங்கீகரிக்கப்பட்ட ''மனித விற்பனையால் பாதிக்கப்பட்ட சிறுவர்களை அடையாளங் காணுதல், பாதுகாத்தல் மற்றும் ஆற்றுப்படுத்துதல் சார்ந்த வழிகாட்டல் குறிப்பையும்''** குறைநிரப்பு செய்கின்றது.

மனித விற்பனை தொடர்பான குற்றங்களை அடையாளங் காணுதல், விசாரணை செய்தல் மற்றும் வழக்குத் தொடருதல், சிறுவர்களுக்கு எதிரான பிற குற்றங்களில் இருந்து மனித விற்பனையை வேறுபடுத்தி கண்டறிதல் மற்றும் சிறுவர் விற்பனையை புலன் விசாரணை செய்வதற்கான பயனுறுதிமிக்க மற்றும் இற்றைப்படுத்தப்பட்ட நடைமுறைகளை அறிமுகப்படுத்த வேண்டியதன் அவசியம் ஆகியவற்றை மேம்படுத்தும் முயற்சிகளின் ஒரு பகுதியாக இலங்கை பொலிஸ் திணைக்களத்தின் சிறுவர்கள் மற்றும் மகளிர் பணியகம் (CWB) மற்றும் மனித விற்பனை சார்ந்த விடயங்களை புலனாய்வு செய்யும் பிற பொலிஸ் பிரிவுகள் மேற்படி சிறுவர் விற்பனை சம்பவங்களை பிரித்தறிந்து அடையாளம் காண்பதற்கும், புலன் விசாரணை செய்வதற்கும் மற்றும் வழக்குகளைத் தொடுப்பதற்கும் சட்ட அமுலாக்க அதிகாரிகளுக்கு உதவும் பொருட்டு இத்தகைய நியம தொழிற்பாட்டு நடைமுறைகளை காணப்படுவதன் முக்கியத்துவத்தை வலியுறுத்தின.

பிற நாடுகளில் காணப்படும் சிறுவர்களுக்கு எதிரான ஒழுங்கமைக்கப்பட்ட குற்றங்கள் தொடர்பான தற்போதைய விசாரணை நடைமுறைகள் பற்றிய சுருக்கமான ஆய்வின் ஊடாக இத்தகைய குற்றங்களை கையாள்வதற்கும் இது தொடர்பான விடயத்தில் இலங்கையின் நடைமுறைகளில் காணப்படும் இடைவெளிகளை நிரப்புவதற்கும் தொழில்நுட்ப வளர்ச்சிக்கு இணையாக மேம்பட்ட மற்றும் சிக்கலான விசாரணை முறைகளை அறிமுகப்படுத்த வேண்டியதன் தேவைப்பாடு உலகளாவிய ரீதியில் அடையாளம் காணப்பட்டுள்ளது.

ஒட்டுமொத்த செயன்முறை முழுவதிலும், பாதிக்கப்பட்ட சிறுவர்களை பாதுகாத்தல் மற்றம் மனித விற்பனை சார்ந்த சட்டங்களின்

கீழ் குற்றம் புரிந்தவர்களுக்கு எதிராக வழக்குத் தொடுத்தலை உறுதிப்படுத்தும் அதேவேளை இலங்கையிலுள்ள சட்ட அமுலாக்க அதிகாரிகளுக்கு சிறுவர் விற்பனையை திறம்படக் கண்டறிதல், புலன்விசாரணை செய்தல் மற்றும் வழக்கு தொடுத்தல் போன்ற விடயங்களின் போது தெளிவான செயன்முறை மற்றும் நடைமுறையை வழங்குவதே இதன் இறுதி இலக்காகும்.

சிறுவர்களை சுரண்டலுக்கு உட்படுத்தும் ஒவ்வொரு வடிவத்திலும் வெவ்வேறு வகையிலான ஆட்சேர்ப்பு உத்திகள், பயிற்சியளித்து சீர்படுத்தும் செயன்முறைகள் மற்றும் வலையில் சிக்க வைக்கும் முறைகள் ஆகியவற்றைக் கொண்டிருப்பதால், இத்தகைய மாறுபட்ட அம்சங்களுக்கு ஏற்புடைய விதத்தில் விசாரணை உத்திகளை உருவாக்குவதன் மூலம் விற்பனையில் ஈடுபடுபவர்களைக் கண்டறிந்து கைது செய்வதற்கான வாய்ப்புகளை சட்ட அமுலாக்க அதிகாரிகள் மேம்படுத்திக் கொள்ளலாம்.

இந்த நியம தொழிற்பாட்டு நடைமுறைகளுக்குள் முதன்மையான வகிபாகமானது பொலிஸ் திணைக்களத்தின் சிறுவர் மற்றும் மகளிர் பணியகத்தைச் (CWB) சார்ந்ததாக அமைகின்றது. எவ்வாறாயினும், ஒரு பயனுறுதிமிக்க மற்றும் வினைத்திறன்மிக்க புலனாய்வுச் செயல்பாட்டை மேற்கொள்ளும் பொருட்டு CWB ஆனது, குற்றங்களின் புலன் விசாரணையை நிர்வகிக்கும் சட்டங்களுக்கு அமைவாகவும் சிறுவர் உரிமைகளுக்கு இசைந்தொழுகும் அதேவேளை சர்வதேச சிறந்த நடைமுறையை பிரதிபலிக்கும் வகையிலான தரநிலைப்படுத்தப்பட்ட ஒரு கட்டமைப்பு மற்றும் ஆவணப்படுத்தப்பட்ட செயற்பாட்டு நடைமுறைகளை மேற்கொள்ள வேண்டும். மேலும், CWB விசாரணை, வழக்குத் தொடருதல் மற்றும் குற்றத்தால் பாதிக்கப்பட்ட சிறுவரின் சிறந்த நலன் நிலைநிறுத்தப்படுவதை உறுதிசெய்வதற்காக சம்பந்தப்பட்ட பிற பொலிஸ் பிரிவுகள், அரச திணைக்களங்கள், நிறுவனங்கள் மற்றும் அரச சார்பற்ற சேவை வழங்குநர்களுடன் நெருக்கமாக ஒத்துழைத்து செயலாற்றுதல் முக்கியமானதாகும்.

1.1 பின்னணி

மனித விற்பனை (TIP) என்பது நவீன கால அடிமைத்தனத்தின் ஒரு வடிவமாகக் கருதப்படுவதுடன் இது உழைப்பு மற்றும் வர்த்தக பாலியல் சுரண்டல், உறுப்பு அகற்றுதல், பிச்சை எடுக்கச் செய்வித்தல், அடிமைத்தனம், சேவகம் போன்றவற்றின் நோக்கங்களுக்காக அடிப்படை மனித உரிமைகள் மற்றும் கண்ணியத்தை குறைமதிப்பிற்கு உட்படுத்துகின்ற செயலாக செயற்படுகின்றது. குறிப்பாக தொழில்நுட்பத்தின் அதிகரித்த பயன்பாடு, உலகளாவிய நிதி உறுதியற்ற தன்மை மற்றும் கோவிட் போன்ற தொற்றுநோய்களின் பரவல் போன்ற காரணங்களினால் மனித விற்பனையானது ஒரு சிக்கல் தன்மை நிறைந்ததொரு நிகழ்வாக மாறியுள்ளது. இதன் கீழ் புதிய வகையான பல மனித விற்பனை வடிவங்கள் தோன்றியுள்ளதுடன் மக்களைச் சுரண்டல் சூழ்நிலைகளில் சிக்க வைப்பதற்காக பல்வேறு செயற்பாட்டாளர்கள் மற்றும் குற்றவாளிகளின் வலைப்பின்னல்கள் இத்தகைய உறுதியற்ற தன்மை மற்றும் எளிதில் பாதிப்படையும் தன்மை ஆகியவற்றை தங்களுக்கு சாதகமாக பயன்படுத்திக் கொள்வதையும் காணக்கூடியதாக உள்ளது.

மனித விற்பனையின் இருண்ட பக்கம் சிறுவர்களை விற்பனை செய்வதாக இருப்பதுடன் எளிதில் பாதிப்படையும் நிலையில் இருத்தல் இவர்களை குற்றச் செயலில் ஈடுபடுபவர்களின் வலையமைப்புகளின் இலக்காக மாறுவதற்கான காரணமாக அமைகின்றது. சிறுவர் விற்பனையைத் தடுத்தல், பாதிக்கப்பட்டவர்களை பாதுகாத்தல் மற்றும் அவர்களுக்கு உதவுதல் சார்ந்த முன்னெடுப்புகள் மற்றும் அத்தகைய குற்றங்களுக்குப் பின்னால் உள்ள குற்றவாளிகளுக்கு எதிராக சட்டத்தை திறம்பட அமுலாக்குதல் உள்ளடங்கலாக சிறுவர் விற்பனையை நிவர்த்தி செய்தல் முன்னுரிமையாகவும் அவசரத் தேவையாகவும் கருதி செயற்படுவதற்கு நாடுகள் தற்போது கவனம் செலுத்துகின்றன.

பின்வரும் SOP கள் புலன் விசாரணை அதிகாரிகளால் பின்பற்றப்பட வேண்டிய குறிப்பிட்ட படிமுறைகளுடன் கூடிய நியம நடைமுறைகளை தாபிப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளதுடன் சிறுவர் விற்பனை சம்பவங்களை வெற்றிகரமாக கண்டறிதல், விசாரணை செய்தல் மற்றும் வழக்குத் தொடுப்பதில் பயன்படுத்தப்பட வேண்டிய ஆற்றுப்படுத்தல் மற்றும் கூட்டு செயன்முறைகள் மற்றும் வழிமுறைகளை கோடிட்டுக் காட்டுகின்றன. துஷ்பிரயோகம் மற்றும் சுரண்டல் சூழ்நிலைகளில் சிறுவர்களை சிக்க வைக்க நபர்கள் மற்றும் குழுக்கள் தொழில்நுட்பத்தை மிக அதிகமாக பயன்படுத்துகின்ற சூழ்நிலை தொடர்பில் கவனம் செலுத்துகின்ற போது இது மிகவும் ஏற்புடையதாகும்.

1.2 சிறுவர் சார்ந்த மனித விற்பனை எனும் குற்றம்

சிறுவர் விற்பனை என்பது உலகின் ஒவ்வொரு பிராந்தியத்திலும் காணப்படும் ஒரு பாராதூரமான குற்றமாக காணப்படுவதுடன் இது சிறுவர்களின் அனைத்து உரிமைகளையும் மீறுகின்றதொரு விடயமாகவும் காணப்படுகின்றது. சிறுவர் விற்பனை சார்ந்த விடயத்தில் சர்வதேச அளவில் முக்கியத்துவம் அளிக்கப்பட்டு வரும் நிலையில் பிரச்சினைக்கு தீர்வு காணும் அவசரத் தேவைப்பாட்டின் காரணமாக பாதிக்கப்படுவதைத் தடுக்கவும், பாதுகாக்கவும் மற்றும் பாதிப்படைந்தவர்களுக்கு உதவவும், குற்றத்திற்கு எதிராக சட்டத்தை திறம்பட செயல்படுத்தவும் முன்னெடுப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

சிறுவர் விற்பனையில் சுரண்டலின் நோக்கமானது பெரும்பாலும் பலவந்தப்படுத்தி தொழிலுக்கமர்த்துதல், பாலியல் செயற்பாடுகளுக்கு பயன்படுத்துதல் மற்றும் சிறுவர் பாலியல் துஷ்பிரயோகம் சார்ந்த சாதனங்களை தயாரித்தல் (CSAM), நேரடி இணையவழி பாலியல் ஊக்குவிப்பு தளங்களில் சிறுவர்களைப் பயன்படுத்துதல் உள்ளிட்ட பல்வேறு வகையான பாலியல் சுரண்டல்களுக்கு சிறுவர்களை பயன்படுத்துதல், சிறுவர்களை யாசகம் செய்ய வைத்தல் மற்றும் தத்தெடுப்பு உள்ளிட்ட பல்வேறு வகையான சுரண்டல்கள் உள்ளடங்குகின்றன. சிறுவர் தொழிலானது வீட்டு வேலைகள், விவசாய வேலைகள், சிறிய அளவிலான தொழிற்சாலைகள் மற்றும் கடைகளில் வேலை செய்தல் போன்ற பல வடிவங்களை உள்ளடக்குகிறது. சிறுவர் தொழிலாளர்களை மலிவாக பெற்றுக்கொள்ளவும் கட்டுப்படுத்தவும் முடியுமென கருதுவதனால் இதற்கான கிராக்கி அதிகமாக காணப்படுகின்றது.

போதைப்பொருள் வர்த்தகத்திலும் சிறுவர்கள் பயன்படுத்தப்படுகிறார்கள் என்பதுடன் அவர்கள் போதைப்பொருட்களை எடுத்துச் செல்பவர்களாக அல்லது விநியோகஸ்தர்களாக ஈடுபடுத்துப்படுகின்றனர். சிறுவர்களை போதைப்பொருட்களைப் பயன்படுத்துவதற்கு கட்டாயப்படுத்தப்படுவதன் மூலம் இவர்கள் போதைப்பொருட்களுக்கு அடிமையாவதனால் மனித விற்பனை சுழற்சியில் மேலும் சிக்கிக் கொள்கிறார்கள். போதைப்பொருள் கடத்தலின் சட்டவிரோத தன்மை காரணமாக, பெரும்பாலும் கைது செய்யப்படும் சிறுவர்கள் பாதிக்கப்பட்டவர்களாக அல்லாமல் குற்றவாளிகளாகக் கருதப்படுகின்ற அதேவேளை இதன் விளைவாக மீண்டும் பாதிக்கப்படுகின்றனர்.

பதினெட்டு (18) வயதுக்குட்பட்ட சிறுவர், சிறுமிகள் உளவியல் மற்றும் உடல் ரீதியான வற்புறுத்தல் மூலம் யாசகம் செய்ய நிர்ப்பந்திக்கப்படுகின்றனர். பொருளாதார நெருக்கடி காரணமாக யாசகம் செய்வது பெரும்பாலும் குடும்ப உறுப்பினர்களால் பிள்ளையின் மீது திணிக்கப்படுவதுடன் பெற்றோரின் அதிகாரம் பயன்படுத்தப்பட்டு யாசகம் செய்தல் உறுதிப்படுத்தப்படுவதால் இந்தப் பிரச்சினையைக் கட்டுப்படுத்துவது மிகவும் கடினமானதாக இருக்கின்றது. ஒழுங்கமைக்கப்பட்ட யாசகம் செய்தல், யாசகத்தை செய்ய பணிக்கின்ற எஜமானர்களுக்கு அதிக இலாபம் ஈட்டுவதற்கான வழிமுறையாக வேகமாக வளர்ந்து வருவதுடன் இது தனிநபர்கள் பிச்சை எடுப்பதை கட்டுப்பாட்டில் வைத்துக்கொண்டு அதிலிருந்து பாதிக்கப்பட்டவருக்கு ஒரு சிறிய விகிதத்தை வழங்கும் முறையாக மாறியுள்ளது.

மேலும், தத்தெடுக்கும் நோக்கங்களுக்காக சிறுவர்கள் வாங்கப்படலாம் அல்லது விற்பனை செய்யப்படலாம். சிறுவர்கள் பெரும்பாலும் சிறுவர் இல்லங்கள், மருத்துவமனைகளிலிருந்து பெற்றுக்கொள்ளப்படுகின்றார்கள் அல்லது கடத்தப்படுகின்றார்கள், சிறுவர்களை சுரண்டும் நோக்கத்துடன் பிள்ளையின் பாதுகாவலை விட்டுக்கொடுக்கும் வகையில் பெற்றோர்கள் ஏமாற்றப்படுகிறார்கள். மேலும் மனமாற்றி ஒத்துக்கொள்ள வைக்கப்படலாம் அல்லது அச்சுறுத்தப்படலாம்.

தனிநபர்கள், குறிப்பாக பெண்கள் மற்றும் சிறுவர்களின் விற்பனையை தடுக்கவும், அடக்கவும் மற்றும் கடத்தல்காரர்களை தண்டித்தல் தொடர்பான ஐக்கிய நாடுகளின் நெறிமுறைகள் (2000) 1, மனித விற்பனையை பின்வருமாறு வரையறுத்துள்ளது:

‘.. சுரண்டலின் நோக்கமானது மிரட்டல், பலாத்காரம் மற்றும் பிற வகையான வற்புறுத்தல், கடத்தல், மோசடி, ஏமாற்றுதல், அதிகாரத்தை துஷ்பிரயோகம் செய்தல், பாதிக்கப்படக்கூடிய நிலையை துஷ்பிரயோகம் செய்தல் அல்லது சுரண்டல், நோக்கத்திற்காக மற்றொரு நபரின் மீது கட்டுப்பாட்டைக் கொண்ட ஒருவரின் ஒப்புதலைப் பெற பணம் அல்லது சலுகைகளை வழங்குதல் அல்லது பெறுதல், அல்லது இவற்றின் மூலம் ஆட்களை ஆட்சேர்ப்பு செய்தல், கொண்டு செல்லுதல், இடமாற்றம் செய்தல், தங்க வைத்தல் அல்லது பெறுதல். சுரண்டல் என்பது குறைந்தபட்சம், மற்றவர்களின் விபச்சாரத்தை சுரண்டுதல் அல்லது பிற வகையான பாலியல் சுரண்டல், கட்டாய உழைப்பு அல்லது சேவைகள், அடிமைத்தனம் அல்லது அடிமைத்தனம், உறுப்பு அகற்றுதல் போன்ற நடைமுறைகளை உள்ளடக்கும்’.

மேற்படி வரைவிலக்கணம் மனித விற்பனை தொடர்பில் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட வரைவிலக்கணமாகும். மேலே உள்ள வரைவிலக்கணத்திற்கு ஏற்ப மனித விற்பனையை எதிர்த்துப் போராடுவதற்கான உள்நாட்டுச்சட்டங்களை உருவாக்குவதை பல நாடுகள் அறிமுகப்படுத்தியுள்ளன.

உண்மையில் மனித விற்பனையால் பாதிக்கபட்ட சிறுவரை தீர்மானிக்க, ‘சிறுவர்’ என்பதன் சட்ட வரைவிலக்கணத்தைப் பற்றி கவனம் செலுத்துவது முக்கியமானதாகும். மேலே குறிப்பிடப்பட்ட சமவாயத்தின் 3(இ) பிரிவு ‘பதினெட்டு வயதுக்கு குறைந்த எந்தவொரு நபரையும்’ ‘‘சிறுவர்’’ என்று வரைவிலக்கணம் செய்கிறது.

---

1 http://www.ohchr.orgen/instruments-mechanisms/instruments/protocol-prevent-suppress-and-punish- trafficking- prersons

சமவாயத்தின் பிரிவு 3(இ) பிரிவு சிறுவர் விற்பனையை பின்வருமாறு வரையறுக்கிறது

இந்த உறுப்புரையின் (அ) உப பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள விடயத்துடன் எந்த வகையிலும் இதனுடன் தொடர்பில்லாத போதிலும், 'சுரண்டல்' நோக்கத்திற்காக ஒரு சிறுவரை ஆட்சேர்ப்பு செய்தல், ஏற்றிச் செல்லுதல், இடமாற்றம் செய்தல், அடைக்கலமளித்தல் அல்லது பொறுப்பேற்றுக்கொள்ளுதல் ஆகியவை 'மனித விற்பனை' எனக் கருதப்படும்'.

செயல்		**நோக்கம்**		
• ஆட்சேர்ப்பு செய்தல் • ஏற்றிச் செல்லுதல் • இடமாற்றம் செய்தல் • அடைக்கலமளித்தல் • நபர்கள் பொறுப்பேற்றல்	+	• கீழ்வரும் வகையிலான செயல்கள் உள்ளிட்ட சுரண்டல்கள் • பாலியல் தொழிலில் ஈடுபடுத்துதல் • பாலியல் சுரண்டல் • அடிமைத்துவம் அல்லது அதற்கு சமமான நடைமுறைகள் • உறுப்புகளை அகற்றுதல் • பிற வடிவிலான சுரண்டல்கள்	=	**சிறுவர் விற்பனை**

மேலேகுறிப்பிடப்பட்டுள்ள வரைவிலக்கணத்தின்படி, சிறுவர் விற்பனை சம்பவமென தீர்மானிக்கும் பொருட்டு, 'செயல்' மற்றும் சுரண்டலின் 'நோக்கம்'ஆகியவற்றில் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட கூறுகள் உள்ளதென நிரூபிக்கப்படுதல் மாத்திரம் தேவையெனக் குறிப்பிடுதல் முக்கியமாகும். வயதுவந்தவர்களின் விடயத்தில் போல ஒரு மனித விற்பனை குற்றம் நிறுவப்படும் பொருட்டு பாதிக்கப்பட்ட சிறுவரின் சம்மதத்தை பெற்றுக்கொள்வதற்கான 'செயல்' ஏற்புடையதாக அமையாததால் சம்மதத்தைப் பெற பயன்படுத்தப்படும் 'செயல்' இவ்விடயத்தில் நிறுவப்பட வேண்டிய அவசியமில்லை.

மனித விற்பனை சம்பவத்தை அடையாளம் காண உதவும் பொருட்டு அதைச் சார்ந்த அறிகுறிகளைத் தேடி அறிந்துகொள்ளுதல் பயனுடையதாக அமைவதுடன் அவற்றில் சில அறிகுறிகள் பாதிக்கப்பட்ட சிறுவர்களால் வெளிப்படுத்தப்படும் வெளிப்படையான மற்றும் புலப்படும் அறிகுறிகளாகும். மற்றைய சில அறிகுறிகள் குறைந்தளவு வெளிப்படையானவையாக இருக்கக்கூடும் என்பதுடன் மேலதிக விசாரணை வரை வெளிப்படுத்தப்படாதவைகளாக இருக்கலாம். பாதிக்கப்பட்டவர் மனித விற்பனைக்கு உள்ளாகியிருக்கின்றாரா அல்லது மனித விற்பனை சார்ந்த சூழ்நிலைகள் காணப்படுகின்றதென சம்பந்தப்பட்ட அதிகாரி சந்தேகிக்கிறாரா என்பதை தீர்மானிக்க அறிகுறிகளின் ஆரம்ப அடையாளம் முக்கியமானதாகும். ஆரம்ப அறிகுறிகளின் இருப்பு அல்லது இல்லாமை என்பது மனித விற்பனை நிறுவப்பட்டதா இல்லையா என்பதை அர்த்தப்படுத்தக்கூடாது. அனைத்து அறிகுறிகளும் ஒட்டுமொத்தமாக கருதப்பட வேண்டும் என்பதுடன் இதற்கான காரணம் யாதெனில் எந்தவொரு ஒற்றை அறிகுறியும் தானாக இதற்கான பதிலை வழங்காது. வரையறையுடன் இணைந்ததாக மனித விற்பனை குற்றங்கள் மற்றும் அவற்றினால் பாதிக்கப்பட்டவர்களை அடையாளங் காணும் செயல்பாட்டில் அறிகுறிகள் உதவுகின்றன.

மனித கடத்தல் பல பரிமாணங்களைக் கொண்டதாக இருப்பதால், மனித விற்பனை செயற்பாட்டில் எந்தவொரு செயலிலும் பல குற்றவாளிகள் மற்றும் விற்பனைதாரர்கள் உள்ளடக்கியிருக்கலாம். இந்தக் குற்றத்தில் குற்றவாளிகளாக இருக்கும் நபர்கள் பின்வரும் தரப்புகளை சேர்ந்தவர்களாக இருக்கக்கூடும்.

- ஆட்சேர்ப்பு செய்பவர்கள்
- ஆட்சேர்ப்பு செய்பவரின் முகவர்கள்
- விற்பனை செய்யப்பட்ட நபரொருவரை விற்பனை செய்பவர்கள்
- விற்பனை செய்யப்பட்ட நபரொருவரை வாங்குபவர்கள்
- ஏற்றிச் செல்பவர்கள்
- விற்பனைக்கான சூழ்ச்சியை செய்பவர்கள்
- விற்பனைக்கான ஒத்துழைப்பு வழங்குபவர்கள்
- வாடிக்கையாளர்/சேவையாளர்கள்

விற்பனையுடன் சம்பந்தப்பட்டிருக்கக் கூடிய/சம்பந்தப்பட்டிருக்கும் அனைவரையும் அடையாளங் காணும் பொருட்டு புலனாய்வு உத்தியோகத்தர் மனித விற்பனை செயன்முறையை ஆராய்தல் வேண்டும்.

1.3 இலங்கையில் சிறுவர் விற்பனையை எதிர்த்துப் போராடுவதற்கான கொள்கைச் சட்டகம்.

இலங்கையில் சிறுவர் உரிமைகளின் அடித்தளம் குறிப்பாக ஐக்கிய நாடுகளின் சிறுவர் உரிமைகள் தொடர்பான உடன்படிக்கை (UNCRC) 1989[2] உள்ளடங்கலாக சர்வதேச சட்டங்கள் மற்றும் கொள்கைகளில் வேரூன்றியுள்ளன. இந்தக் கோட்பாடுகள் சிறுவர்களின் நல்வாழ்வைப் பாதுகாப்பதற்கான தேசத்தின் அர்ப்பணிப்புக்கு வழிகாட்டுகின்றன. மேலும், இலங்கை அரசியலமைப்பின் அரச கொள்கையின் வழிகாட்டுதல் கோட்பாடுகள் ஊடாக சிறுவர்கள் மற்றும் இளைஞர்களின் தேவைகளுக்கு முன்னுரிமை அளிக்குமாறு அரசாங்கத்தைக் கோருவதன் மூலம் இந்த அர்ப்பணிப்பை உறுதிப்படுத்துகிறது.

தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையினால் சிறுவர் பாதுகாப்புக்கான தேசியக் கொள்கையானது 2009[3] தயாரிக்கப்பட்டது. சிறுவர்களுக்கெதிராக இடம்பெறும் வன்முறை, சுரண்டல், புறக்கணிப்பு, பொறுப்புக்களை தட்டிக்கழித்தல் மற்றும் சிறுவர்களுக்கு இடம்பெறும் அனைத்து வகையான உள, உடல் மற்றும் பாலியல் துஷ்பிரயோகங்களைத் தடுப்பதற்கான பரந்த கட்டமைப்பை இந்தக் கொள்கை வழங்குகிறது. சிறுவர்களைப் பாதுகாப்பது தொடர்பில் இந்தக் கொள்கையில் குறிப்பிடப்பட்டுள்ள கோட்பாடுகள், தரநியமங்களை செயற்படுத்துவது மற்றும் அரசு தலைமையிலான பல்துறை சார்ந்த பல பங்குதாரர் அணுகுமுறையின் அவசியம் வலியுறுத்தப்படுகிறது.

இதற்கிணையாக, மனித விற்பனையால் பாதிக்கப்பட்ட சிறுவர்களை அடையாளம் காணுதல், பாதுகாத்தல் மற்றும் ஆற்றுப்படுத்துதல் குறித்த வழிகாட்டுதல் குறிப்பில்[4], சிறுவர் பாதுகாப்பு குறித்து கடைப்பிடிக்கப்பட வேண்டியவை கோட்பாடுகள் மற்றும் வழிகாட்டுதல்கள் தொடர்பாகவும் விற்பனையால் பாதிக்கப்பட்ட சிறுவர்கள் தொடர்பாக அனைத்து பங்குதாரர்களாலும் மேற்கொள்ள வேண்டிய குறிப்பிட்ட நடவடிக்கைகள் தொடர்பாகவும் குறித்துரைக்கப்பட்டுள்ளன. மேலும் மேற்படி வழிகாட்டுதல் குறிப்பானது மனித விற்பனையால் பாதிக்கப்பட்ட சிறுவர்களை கையாளும் போது பொலிஸ் உத்தியோகத்தர்கள், பிரதேச மற்றும் மாவட்ட மட்டத்திலான சிறுவர் உரிமைகள் மேம்பாட்டு உத்தியோகத்தர்கள், தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையின் உத்தியோகத்தர்கள், நன்னடத்தை உத்தியோகத்தர்கள், தொழில் உத்தியோகத்தர்கள், மகளிர் அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் மற்றும் ஏனைய தொடர்புடைய அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் போன்றவர்களுக்கு இது வழிகாட்டலாக செயற்படுகிறது.

மேலும், தேசிய மனித விற்பனைக்கு எதிரான செயலணியால் (NAHTTF) தயாரிக்கப்பட்ட, **தேசிய மனித விற்பனையை கண்காணிப்பதற்கும் எதிர்த்துப் போராடுவதற்குமான தேசிய மூலோபாயத் திட்டம், (2021 - 2025)**[5] சிறுவர்களை விற்பனை செய்தல் உள்ளிட்ட சகல வடிவங்களிலுமான மற்றும் கருதப்படுகின்ற மனித விற்பனையைத் தடுப்பதற்காக மேற்கொள்ளப்பட வேண்டிய மூலோபாயத் தலையீடுகளையும் முயற்சிகளையும் குறிப்பிடுகின்றது.

1.4 சிறுவர் விற்பனை தொடர்பான சட்டக் கட்டமைப்பு

தற்போது இலங்கையில் சிறுவர் பாதுகாப்பு தொடர்பில் பல்வேறு கோணங்களில் குறித்துரைக்கும் சட்டங்கள் காணப்படுகின்றன. மேலும், எமது நாடு முக்கிய சர்வதேச ஒப்பந்தங்கள் மற்றும் உடன்படிக்கைகளை ஏற்று அங்கீகரிக்கப்பட்டுள்ளதுடன் இதன் விளைவாக சிறுவர்களை வன்முறை, துஷ்பிரயோகம் சுரண்டல் மற்றும் புறக்கணிப்பு ஆகியவற்றிலிருந்து பாதுகாக்க ஒரு வலுவான சட்ட கட்டமைப்பு உருவாகியுள்ளது. அத்துடன், **2003 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க தண்டனை சட்டக்கோவை (திருத்தச்) சட்டத்தின் 360(இ) பிரிவு** மூலமாக சிறுவர் விற்பனை உள்ளிட்ட மனித விற்பனையை குற்றமாக அறிமுகப்படுத்தியுள்ளது.

இதற்கு முன்னதாக, 1995ஆம் ஆண்டின் 22ஆம் இலக்க சட்டத்தினூடாக 360(அ) பிரிவு இரத்து செய்யப்பட்டதோடு, இலங்கைக்குள் அல்லது இலங்கைக்கு வெளியே பாலியல் தொழிலில் ஈடுபடுத்தும் நோக்கத்துடன் எந்தவொரு வயதையும் சேர்ந்த எவரேனுமொரு

---

2. https://www.ohchr.org/en/instruments-mechanisms/instruments/convention-rights-child
3. chrome-extension://efaidnbmnnnibpcajpcglclefindmkaj/https://childprotection.gov.lk/images/pdfs/actsguidelines/2020.12.31%20National%20Policy%20on%20Child%20Protection.pdf
4. Backup_of_Backup_of_save the children Adhil edit.cdr (nahttf.gov.lk)
5. Microsoft Word - Final__NATIONAL ACTION PLAN_2021-2025.docx (nahttf.gov.lk)

ஆண் அல்லது பெண்ணை சம்மதத்துடன் அல்லது சம்மதமின்றி கொள்முதல் செய்வதனூடாக விற்பனை எனும் குற்றம் இடம்பெறுகின்றது என்ற ஏற்பாட்டுக்கமைய 'விற்பனை' என்ற குற்றம் அறிமுகப்படுத்தப்பட்டது.

சட்டத்தின் 360(ஆ) பிரிவில் 'எவரேனும் சிறுவன்/ சிறுமியொருவர் பாலியல் ரீதியாக துஷ்பிரயோகம் செய்யும் பொருட்டு அல்லது எந்தவொரு ஆபாசமான அல்லது அநாகரீகமான காட்சிக்கு அல்லது நிகழ்ச்சிகளில் பங்கேற்க வைப்பதற்காக ஏதேனுமொரு இடத்தில் இருப்பதற்கு அச் சிறுவருக்கு இடமளிக்கின்ற' எவரேனும் நபரொருவர் பாலியல் சுரண்டல் நோக்கங்களுக்காக ஒரு சிறுவரை வாங்குபவராக செயல்படுகின்றமை சிறுவர்களை பாலியல் சுரண்டலுக்கு உட்படுத்தும் குற்றத்தை புரிவதாக குறித்துரைக்கின்றது.

1998 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க தண்டனைச் சட்டக் கோவை (திருத்தச்) சட்டத்தினூடாக சிறுவர்களுக்கு எதிரான குற்றங்கள் தொடர்பான மேலதிக ஏற்பாடுகளை உருவாக்கியது.

2021 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க அபாயகரமான தொழில்கள் சார்ந்த ஒழுங்குவிதிகளில் (இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அதி விசேட வர்த்தமானி, இல. 2254/35) ஒரு சிறுவர் (18 வயதுக்குட்பட்ட) பணியில் அமர்த்தப்பட முடியாத தொழில்களின் பட்டியலை முன்வைத்துள்ளது. 2021 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க பெண்கள், இளம் பராயத்தினர் மற்றும் சிறுவர்களுக்கான வேலைவாய்ப்பு (திருத்தச்) சட்டம், தொழிலுக்கான குறைந்தபட்ச வயதை 16 வயது வரை உயர்த்தியுள்ளது.

எவ்வாறாயினும், சிறுவர்கள் தொடர்பான சட்டக் கட்டமைப்பு காலம் கடந்து காணப்படுவதாகவும் சட்டத்தின் சில ஏற்பாடுகளில் சிறுவர்கள் மீது பாரபட்சம் காட்டப்படுவதான தன்மை உள்ளதாகவும் இருக்கின்றதை கவனத்தில் கொள்ள வேண்டும். சிறுவர்கள் தொடர்பான முதன்மை நடைமுறைச் சட்டமாகிய சிறுவர்கள் மற்றும் இளம் ஆட்கள் கட்டளைச் சட்டம் 1939 ஆம் ஆண்டின் காலனித்துவ காலத்திற்கு முந்தைய ஒரு சட்டமாக இருப்பதுடன், அப்போதிலிருந்து வரையறுக்கப்பட்ட சில திருத்தங்களுக்கு மாத்திரமே உட்படுத்தப்பட்டுள்ளது. இதே மாதிரியான பழமையான நிலைமை அநாதை இல்லங்கள் கட்டளைச் சட்டம், தத்தெடுப்பு கட்டளைச் சட்டம் மற்றும் அலைந்து திரிபவர்கள் கட்டளைச் சட்டம் போன்ற பிற சட்டங்களிலும் காணப்படுவது அவதானிக்கப்படுகின்ற அதேவேளை, ஒட்டுமொத்தமாக எடுத்தப் பார்க்கின்ற போது அச்சட்டங்கள் சிறுவர்கள் மீது பாதகமான விளைவுகளை ஏற்படுத்துகின்றன.

சிறுவர் விற்பனையை கையாள்வதற்கான சர்வதேச சட்டக் கட்டமைப்பை உருவாக்குவதற்கு அடிப்படையாக அமைந்துள்ள முக்கிய ஆவணங்களாக ஐக்கிய நாடுகளின் சிறுவர் உரிமைகள் பற்றிய சமவாயம் 1989, சிறுவர் ஊழியத்தின் மோசமான வடிவங்கள் பற்றிய சர்வதேச தொழிலாளர் அமைப்பின் சமவாயம் **(C 182) 1999[6], சர்வதேச தொழிலாளர் அமைப்பின் குறைந்தபட்ச வயது பற்றிய உடன்படிக்கை (C138) 1973[7], மற்றும் நபர்களை குறிப்பாக பெண்கள் மற்றும் சிறுவர்கள் உள்ளிட்ட மனித விற்பனையைத் தடுக்கவும், கட்டுப்படுத்தவும் விற்பனையாளர்களுக்கு தண்டனை வழங்குதல் பற்றிய ஐக்கிய நாடுகளின் சமவாயம் (2000),** ஆகியவற்றை சுட்டிக்காட்ட முடியும். சிறுவர் உரிமைகள் பற்றிய ஐக்கிய நாடுகளின் சமவாயத்திற்கு சிறுவர்களை விற்பனை செய்தல் பற்றியதான மேலதிக வரைவொன்றும் காணப்படுகின்றது. அது **2000ஆம் ஆண்டில் ஐக்கிய நாடுகளின் சபையால் முறையாக நிறைவேற்றப்பட்ட சிறுவர்களை விற்பனை செய்தல், சிறுவர்களை பாலியல் தொழிலில் ஈடுபடுத்துதல் மற்றும் சிறுவர் ஆபாசக் காட்சிகள் பற்றிய மேலதிக வரைவு[8]** ஆகும். இந்த மேலதிக வரைவினூடாக பிரதானமாக சிறுவர் விற்பனை, சிறுவர்களை பாலியல் தொழிலில் ஈடுபடுத்துதல் மற்றும் சிறுவர் ஆபாச காட்சிகளைத் தடைசெய்ய வேண்டுமென அரசுகளுக்கு கட்டளையிட்டுள்ளது.

6. https://normlex.ilo.org/dyn/normlex/en/f?p=NORMLEXPUB:12100:0::NO::P12100_ILO_CODE:C182
7. https://normlex . i l o . o r g /dyn/normlex/en/f?p=NORMLEXPUB:12100:0::NO::P12100_ILO_CODE:C138#:~:text=The%20minimum%20age%20for%20admission%20to%20any%20type%20of%20employment,be%20less%20than%2018%20years.
8. https://www.ohchr.org/en/instruments-mechanisms/instruments/optional-protocol-convention-rights-childsale-children-child8.

2 நியம தொழிற்பாட்டு நடைமுறைகள்

சிறுவர் விற்பனையானது நேரடி மற்றும் நிகழ்நிலை ஆகிய இரு சூழல்களிலும் இடம்பெறுகிறது. அவற்றைக் கண்டறிதல், விசாரணை செய்தல் மற்றும் வழக்குத் தொடுப்பதற்கான நடைமுறைகள் குறிப்பிடத்தக்க வேறுபாடுகளைக் கொண்டுள்ளன. சிறுவர்களுக்கு எதிரான அனைத்து வகையான விற்பனை தொடர்பான ஒழுங்கமைக்கப்பட்ட குற்றங்களுக்கும் கீழே கொடுக்கப்பட்டுள்ள நியம தொழிற்பாட்டு நடைமுறைகள் ஏற்புடையதாக உள்ளது. ஏதேனும் குற்றமானது நேரடி/டிஜிட்டல் சூழலை உள்ளடக்கியதாக இருப்பின், இங்கே சுட்டிக் காட்டப்பட்டுள்ள நடவடிக்கை முறைகளுக்கு மேலதிகமாகப் பிரிவு 6.3இல் உள்ள 'சிறுவர்களுக்கு எதிரான இணையவழி குற்றங்களின் புலன்விசாரணை' இன் கீழான நடவடிக்கை முறைகளும் பின்பற்றப்படுதல் வேண்டும்.

குறிக்கோள்கள்

- தற்போதைய சட்டங்கள், கொள்கைகள் மற்றும் நடவடிக்கை முறைகளுடன் இணைந்த வகையிலான சிறுவர் விற்பனை சம்பவங்களுக்கான பயனுறுதிமிக்க விசாரணை நடவடிக்கை முறையொன்றினை அறிமுகப்படுத்துதல்.
- சிறுவர்களை விற்பனை செய்தல் பற்றிய சம்பவங்களில் குற்றவாளிகளுக்கு தண்டனை வழங்குவது உள்ளிட்ட விரைவான மற்றும் பயனுள்ள வகையில் சட்டத்தை அமுல்படுத்துதல்.
- சிறுவர்களை விற்பனை செய்தல் பற்றிய சம்பவங்களை அடையாளம் காண்பதில், விசாரணை செய்வதில் மற்றும் வழக்குத் தொடுப்பதில் பயனுறுதிமிக்க ஒருங்கிணைப்பை உறுதிப்படுத்துதல் மற்றும் சட்ட அமுலாக்கப் பிரிவினர் கடைப்பிடிக்க வேண்டிய குறிப்பிட்ட படிமுறைகளை நிறுவனமயமாக்கல்.
- பாதிக்கப்பட்டவர்கள் மீண்டும் பாதிக்கப்படுவதைத் தடுத்தல் மற்றும் பாதிக்கப்பட்ட சிறுவர்களின் பாதுகாப்பிற்காக பொருத்தமான நடவடிக்கைகள் எடுக்கப்படுவதையும் உறுதி செய்தல்.

நியம தொழிற்பாட்டு நடைமுறைகளின் கட்டங்கள்

கட்டம் 1- கண்டறிதல் மற்றும் மீட்பு

கட்டம் 2- புலன்விசாரணை

கட்டம் 3- வழக்கு விசாரணை

2.1 கட்டம் ஒன்று - கண்டறிதல் மற்றும் மீட்பு

சிறுவர் விற்பனை தொடர்பில் சாத்தியமுடைய சம்பவம் கண்டறியப்படுவதற்கு, 'முதல் தகவல் அறிக்கை' அல்லது சம்பந்தப்பட்ட முறைப்பாடானது முதல் பதிலளிப்பு நிறுவனம் அல்லது சட்ட அமுலாக்க நிறுவனத்தால் பெறப்படுதல் வேண்டும். பொலிஸாரால் நடத்தப்படும் முன்கூட்டிய விசாரணைகள் அல்லது தேடுதல் நடவடிக்கைகள் சிறுவர் விற்பனை தொடர்பில் சாத்தியமான சம்பவங்களைக் கண்டறிய உதவும்.

2.1.1 முதல் தகவல் அறிக்கையிடல் (FIR) / முறைப்பாடுகள்

முதல் தகவல் அல்லது முறைப்பாடு என்பது நிகழ்வதற்கு சாத்தியமான ஒரு மனித விற்பனை சம்பவத்தைக் கண்டறிவதற்கான ஆரம்பப் படியாக இருப்பதுடன் அடையாளங் காணுதல் மற்றும் மேலதிக புலன்விசாரணைகள் பதிவு செய்யப்படுதல் ஆகியவற்றுக்கு தேவையான முக்கியமான தகவல்களை உறுதி செய்வதற்காக சீரமைப்பு செய்யப்பட வேண்டும்.

1979 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க குற்றவியல் நடவடிக்கைமுறை சட்டக் கோவையின் பிரிவு 109 இன் ஏற்பாடுகளின்படி, வாய்மொழியாகவோ அல்லது எழுத்து மூலமாகவோ கொடுக்கப்பட்ட குற்றச் செயல் தொடர்பான முதல் தகவலை ஒரு பொலிஸ் உத்தியோகத்தர் பதிவு செய்துகொள்ளலாம்.

சிறுவர் விற்பனை தொடர்பான தகவல் அல்லது முறைப்பாட்டை எவரேனும் சிறுவருக்கு எதிராக செய்யப்பட்ட குற்றத்தைப் பற்றிய தகவல்களைக் கொண்ட எந்தவொரு தரப்பினராலும் வாய்மொழியாகவோ அல்லது எழுத்து மூலமாகவோ வழங்கப்படலாம். பிரதேச செயலகம் மற்றும் மாவட்ட மட்டத்தை அடிப்படையாகக் கொண்ட முதல் பதிலளிப்பு உத்தியோகத்தர்கள் மூலமாகவும் முதல் தகவல் பெறப்படலாம்.

அத்தகைய தரவுத்தளங்களின் தினசரி கண்காணிப்பின் ஒரு பகுதியாக பின்வரும் தரவுத்தளங்கள் மூலம் முதல் தகவலைப் பெறலாம் என்பதுடன் காணாமல் போன/சுரண்டப்பட்ட இலங்கை சிறுவர்கள் தொடர்பாக இந்தத் தரவுத்தளங்களை இயக்கும் நிறுவனங்களுக்கு செய்யப்படும் தகவல் கோரிக்கைகள் மூலமும் பெற்றுக்கொள்ள முடியும்.;

(1.) காணாமல் போன மற்றும் சுரண்டலுக்கு உள்ளாக்கப்பட்ட சிறுவர்களுக்கான தேசிய மையம் - NCMEC
(2.) சர்வதேச சிறுவர் பாலியல் சுரண்டல்கள் பற்றிய (ICSE) புகைப்பட மற்றும் காணொளி தரவுத்தளம் – INTERPOL

முதல் தகவலை பதிவு செய்ய பொறுப்புடைய உத்தியோகத்தர்கள்:

**குறிப்பு : இந்த நடவடிக்கை குற்றப் புலனாய்வின் மிக முக்கியமான கட்டங்களில் ஒன்றாக கருதப்படுகிறது. சாட்சியங்களை மீட்டெடுப்பதற்கான மிகப் பெரிய வாய்ப்புகள் ஏற்படும் இந்த சந்தர்ப்பத்தில் காவல்துறை உடனடியாக பணிகளை ஆரம்பிக்க வேண்டும். காலம் கடப்பதனூடாக, சாட்சியங்களை மீட்டெடுப்பதற்கான வாய்ப்புகள் குறைவடையும். சாட்சியாளர்களாகக் கூடிய நபர்களை கண்டுபிடிப்பது கடினமாகலாம். குற்ற நிகழிடம் விசாரணைக்கு பயன்பாடற்ற நிலைக்கு தள்ளப்படலாம். சந்தேக நபர்கள் தப்பித்துச் சென்று விடுவார்கள்.

பொலிஸார் - பொலிஸ் நிலையத்தின் எந்தவொரு உத்தியோகத்தரும் முதல் தகவலைப் பதிவு செய்யலாம். எவ்வாறாயினும், சிறுவர் மற்றும் பெண்கள் பணியகத்துடன் இணைக்கப்பட்டுள்ள ஒரு உத்தியோகத்தர் ஒரு சிறுவர் அல்லது பெண்ணுக்கு எதிரான குற்றம் தொடர்பான சம்பவத்தின் அத்தகைய தகவலை பதிவு செய்வது பொருத்தமானதென வலியுறுத்தி பரிந்துரைக்கப்படுகிறது. ஒருமுறை பதிவு செய்யப்பட்ட முதல் தகவலை, முறைப்பாட்டாளருக்கு அவர் புரிந்துகொள்ளும் மொழியில் வாசித்துக் காட்டுதல் வேண்டும். தேவைப்படுமிடத்து மொழிபெயர்ப்பாளர்களின் உதவியைப் பெற்றுக்கொள்ளுதல் வேண்டும்.

முறைப்பாடு மற்றும் குற்றம் குறித்து பொறுப்பதிகாரிக்கு (OIC) தெரிவிக்க வேண்டும் என்பதுடன் அதன் பின்னர் அவ்விடயம் உதவி பொலிஸ் அத்தியட்சகருக்கு (ASP) அறிவித்தல் வேண்டும்.

தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை (NCPA)- பொலிஸ் பிரிவின் பொறுப்பதிகாரி மற்றும் பணிப்பாளர் - சட்ட அமுலாக்க பிரிவு முதல் தகவலை பதிவு செய்யலாம். பொலிஸ் பிரிவு என்பது சிறுவர் மற்றும் பெண்கள் பணியகத்தின் ஒரு கிளையாகும்.

இந்தக் கட்டத்தில் முதல் தகவல் அல்லது முறைப்பாடு பொதுவாக மனித விற்பனை குற்றமாக அடையாளம் காணப்படாது. 'மேலோட்டமாக நோக்குமிடத்து' இது சிறுவர் பாலியல் சுரண்டல், பாலியல் துஷ்பிரயோகம், பாலியல் வல்லுறவு, உடல் ரீதியான துஷ்பிரயோகம், சிறுவர் உழைப்பு அல்லது சிறுவர் தொடர்பான வேறு ஏதேனும் குற்றமாக அடையாளம் காணப்படலாம். இதனை ஒரு மனித விற்பனை குற்றமாக முறைப்பாடு செய்வதற்கு சிறுவர் அல்லது முறைப்பாட்டாளர் மனித விற்பனை சம்பவமொன்று நடந்திருப்பதை புரிந்து கொள்ளாமல் இருக்கலாம். முதல் தகவல் அல்லது முறைப்பாட்டை பெறும்போது, தொடர்பாடலுக்கு இடையூறான ஒரு வகையான இயலாமையை சிறுவர் கொண்டிருக்கின்றதென உத்தியோகத்தருக்கு காணக்கூடியதாக இருந்தால் (நடத்தை அல்லது வளர்ச்சி குறைபாடு/உணர்வு அல்லது பேச்சுக் குறைபாடு போன்றவை காரணமாக புரிந்துகொள்வதற்கு அல்லது புரிந்துகொள்ளப்படுவதற்கு கடினமாக இருக்கின்றதென) தேவையான உதவி வழங்கப்பட வேண்டும் என்பதுடன் சிறுவருக்கு சம்பவம் தொடர்பான தகவலை வழங்குவதற்கு நியாயமான கால அவகாசம் வழங்கப்பட வேண்டும்.

மேலும், 1939 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க சிறுவர் மற்றும் இளம் ஆட்கள் கட்டளைச் சட்டத்தின் 20ஆவது பிரிவின் ஊடாக எந்தவொரு சட்ட நடவடிக்கைகளிலும் பங்கேற்கும் சிறுவரின் அல்லது இளைஞரின் அடையாளம் காண வழிவகுக்கும் பெயர்கள், முகவரிகள், பாடசாலை, புகைப்படம் அல்லது எந்த விவரங்களையும் வெளியிடுவதைத் தடை செய்கிறது. சம்பவ விவரங்களை சட்ட அமுலாக்க உத்தியோகத்தர்களுக்கு அறிவித்ததன் பின்னர் சிறுவர் மீண்டும் பாதிக்கப்படுவதைத் தடுப்பதற்கு இது முக்கியமானதாக அமைகின்றது.

முதல் தகவல் சிறுவர் தொழிலாளர் தொடர்பான சம்பவமாக இருந்தால், சிறுவர் தொழிலாளர் சம்பவம் தொடர்பான தகவல்கள் பதிவு செய்யப்படுவதை உறுதிசெய்வதற்கு தொழில் திணைக்களத்தின் சம்பந்தப்பட்ட உத்தியோகத்தர்களுக்கு தெரிவிக்க வேண்டும் என்பதுடன் சம்பந்தப்பட்ட மனித விற்பனை உழைப்பு சுரண்டலுக்காக செய்யப்பட்டதா என்பதை இனங்காண்பதற்காக தொழில் உத்தியோகத்தர்கள் பொலிசாருடன் இணைந்து செயற்பட முடியும்.

2.1.2 மீட்பு

மீட்பு என்பது சுரண்டல் சூழ்நிலையிலிருந்து பாதிக்கப்பட்டவரை அகற்றுவதற்கும் மனித விற்பனை சூழ்நிலையை முடிவுக்குக் கொண்டுவருவதற்கும் செய்யப்படும் எந்தவொரு தலையீடும் ஆகும். மனித விற்பனைக்கு ஆளாகக்கூடியவர்களாக குறிப்பாக

சிறுவர்களாக மற்றும்/அல்லது உடனடி ஆபத்தில் இருப்பவர்களாக இருக்குமிடத்து அத்தகைய சூழ்நிலைகள் பற்றிய தகவல் கிடைத்தவுடன் அவர்கள் உடனடியாக மீட்கப்பட வேண்டும். பாதிக்கப்படக்கூடிய பிள்ளையை காப்பாற்றுவதானதொரு நடவடிக்கை எனில், பொலி பொலிஸார் அந்த மீட்புத் திட்டத்தை வரைபடமாக்கி தேவையான உத்தியோகத்தர்களுடன் ஒருங்கிணைப்பதற்கும் நடவடிக்கை மேற்கொள்ளுதல் வேண்டும்.

பாதிக்கப்பட்டவர் அல்லது சாட்சியாளர் நேரடியாக அல்லது பாதகாவலர் ஊடாக பொலிஸாரை தொடர்பு கொண்டு முறைப்பாடு செய்தால் மீட்பு நடவடிக்கை மேற்கொள்ளப்படலாம். ஒரு மீட்பு நடவடிக்கையின் முதன்மை நோக்கம் பாதிக்கப்பட்டவரின் சுரண்டல் நிலையை முடிவுக்குக் கொண்டு வந்து உதவி செயன்முறையைத் தொடங்குவதாகும். பாதிக்கப்படுவதற்கு சாத்தியமுள்ள ஒருவருக்கு உயிராபத்து காணப்படின்;, அது தொடர்பில் உடனடி தலையீடு தேவைப்படுகிறது. பாதிக்கப்பட

சாத்தியமுள்ளவருக்கு உடனடி அச்சுறுத்தல் இல்லை என்றால், இருப்பிடத்தை அடையாளம் கண்டு தொடர்ந்து பொலிஸார் கண்காணிப்பை மேற்கொள்ளலாம் என்பதுடன் இதனூடாக தேவையான ஆதாரங்களையும் பெற்றுக்கொள்ள முடியும். ஒரு முன்கூட்டிய மீட்புத் திட்டத்தை உருவாக்கி மீட்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

அத்துடன் மனித விற்பனையால் பாதிக்கப்பட்ட சிறுவர்களை இனங்காணுதல், பாதுகாப்பு வழங்குதல் மற்றும் ஆற்றுப்படுத்துதல் சார்ந்த நியம தொழிற்பாட்டு நடைமுறை வழிகாட்டுதல் குறிப்புக்கு இணங்க, தங்குமிடம், மருத்துவம் மற்றும் சட்ட பணிப்புரைகள் போன்ற சேவைகளை வழங்கும் முக்கிய பங்குதாரர்கள் மற்றும் சம்பந்தப்பட்ட விசாரணை பிரிவுகளின் பிரதிநிதிகள் ஆகியோருடன் ஒருங்கிணைந்து செயலாற்ற வேண்டும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

மீட்பு நடவடிக்கையின் தேவை ஏற்படுமிடத்து பின்வரும் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும்:
மீட்புக் குழு:

1. சிறுவர் மற்றும் பெண்கள் பணியகத்தைச் சேர்ந்த ஒரு பெண் உத்தியோகத்தரைக் கொண்டிருக்க வேண்டும்.
2. மிகவும் அருகாமையில் உள்ள பொலிஸ் நடமாடும் குழுவிற்கு தகவல் தெரிவிக்க வேண்டும்.
3. விசேட சாட்சியங்களை சேகரிக்க தேவைப்பட்டால், SOCO குழுவிலிருந்து உத்தியோகத்தர்கள் அழைத்து வரப்பட வேண்டும்.
4. குழுவை இரண்டு பிரிவுகளாகப் பிரிக்க வேண்டும் - ஒரு குழு பாதிக்கப்பட்டவர்களைக் கையாளுவதற்கும் மற்றொரு குழு சந்தேக நபர்களைக் கைது செய்து அவர்கள் தொடர்பில் நடவடிக்கை எடுப்பதற்கும் பணியாற்ற வேண்டும்.

மீட்புப் பணியைத் திட்டமிடும் போது, சிறுவர் தொடர்பான உதவியைப் பெறுவதற்காக, பின்வரும் உத்தியோகத்தர்களுக்கு பொலிசார் தகவல் தெரிவிக்க வேண்டும்.

பொலிஸ் பொறுப்பதிகாரியின் (OIC) அனுமதியுடன்:

- சிறுவர் உழைப்பு சுரண்டல் சம்பவம் இடம்பெறுமிடத்து சம்பந்தப்பட்ட தொழில் உத்தியோகத்தருக்கு அறிவிக்க வேண்டும்.
- சம்பந்தப்பட்ட நன்னடத்தை உத்தியோகத்தருக்குத் தெரிவிக்கப்பட வேண்டும். (1939 சிறுவர் மற்றும் இளம் ஆட்கள் கட்டளைச் சட்டத்தின் 17ஆவது வாசகத்திற்கமைய)
- தகவல் தொழில்நுட்ப அறிவுடைய பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர்
- சம்பந்தப்பட்ட பிரதேச செயலகத்தின் உத்தியோகத்தர்கள் (சிறுவர்கள் தொடர்பில் பணிபுரியும்) உதா: சிறுவர் உரிமைகள் மேம்படுத்தல் உத்தியோகத்தர், சிறுவர் பாதுகாப்பு உத்தியோகத்தர்
- மிக அருகாமையிலுள்ள அரச மருத்துவமனை
- நோயாளர் காவு வண்டி (அம்புலன்ஸ்) (தேவைப்பட்டால்)
- சிறுவர் உளவியலாளர்

தேவைப்படுமிடத்து திட்டமிடப்பட்ட மீட்பு பற்றிய தகவல்கள் பின்வருவனவற்றுடன் பகிர்ந்து கொள்ளப்பட வேண்டும்;.

- சட்ட மருத்துவ அதிகாரி
- பொலிஸ் திணைக்களத்தின் தடயவியல் கைரேகை நிபுணர்
- அரச இராசயன பகுப்பாய்வாளர்

- பொலிஸ் நிதியியல் புலனாய்வுத் துறையின் பிரதானி (பண மோசடி, சட்டவிரோத சொத்துக்கள் என்பன தொடர்பில் சந்தேகித்திற்கிடமான வியாபார நிலையமாக இருப்பின்)

மீட்பு நடவடிக்கையின் படிமுறைகள்

1. இடத்தைக் கண்டறிந்து, இயன்றளவு விரைவில் சம்பவ இடத்திற்குச் செல்லவும்.
2. குழுவிற்கு குறைந்தபட்சம் ஒரு பெண் அதிகாரியை இணைத்தல், உப பொலிஸ் பரிசோதகர் (ஸ்ஐ) அல்லது அதற்கு மேலான பதவிநிலையைக் கொண்ட அதிகாரி ஒருவரால் குழு வழிநடாத்தப்படல்.
3. தேவைப்படும் இடங்களில் மாறு வேடம் பூண்ட ஒருவரை பயன்படுத்தவும்.
4. வருகையாளர்களின் பதிவேடு காணப்படின் மற்றும் அவசியமெனில் அதனை பரிசோதனை செய்தல். (ஹோட்டல், லாட்ஜ், ஸ்பா போன்றவை)
5. பாதிக்கப்பட்டவர்களையும் சம்பந்தப்பட்ட சந்தேக நபர்களையும் அடையாளங் காணுதல்.
6. பாதுகாப்பு நோக்கங்களுக்காக பிள்ளையை பொலிஸ் காவலில் வைத்தல்.
7. சந்தேக நபர்களை கைது செய்தல்.
8. குற்றம் நடந்த இடத்தைப் பாதுகாக்க அனைத்து நபர்களும் விரைவில் குற்றம் நடந்த இடத்தில் இருந்து அகற்றப்பட வேண்டும் என்பதுடன் எந்தவொரு பாதிக்கப்பட்டவரையும் பார்வையின் ஊடாகவோ அல்லது வாய்மொழியாகவோ அச்சுறுத்துவதற்கான வாய்ப்பினை விற்பனையில் ஈடுபட்டவர்களுக்கு வழங்காதிருத்தல்.
9. பாதிக்கப்பட்ட சிறுவர்கள் மற்றைய வயதுவந்த சந்தேக நபர்களை/குற்றவாளிகளிடமிருந்து வேறுபடுத்தி தனியாக அழைத்துச் செல்லுதல்.
10. எப்போதும் சிறுவர் மற்றும் சிறுவரின் குடும்பத்தின் அடையாளங்கள் எல்லா நேரங்களிலும் பொதுமக்கள் மற்றும் ஊடகங்களிலிருந்து மறைக்கப்படுவதை கண்டிப்பாக உறுதிசெய்தல்.
11. மனித விற்பனை அல்லது சுரண்டலில் பெற்றோர்கள்/பாதுகாவலர்களின் ஈடுபாட்டை சந்தேகிக்கக் காரணங்கள்

    இருந்தாலொழிய சிறுவரை அவர்களின் பெற்றோர் அல்லது பாதுகாவலரிடமிருந்து பிரிக்கக் கூடாது. மேற்கூறியவற்றை சந்தேகிக்க காரணங்கள் இருந்தால், சந்தேகப்படும் பெற்றோர்/பாதுகாவலரிடமிருந்து சிறுவரைப் பிரிக்க வேண்டும்.

**குறிப்பு : 1998 ஆம் ஆண்டின் 50 ஆம் இலக்க தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை சட்டத்தின் 33 ஆம் பிரிவு ஏதேனுமொரு வளாகத்தில் சிறுவர் துஷ்பிரயோகம் நடைபெறுகிறது என்றோ அல்ல அத்தகைய இடத்தை சோதனையிடுவதற்கு நீதிமன்ற எழுத்தாணையை பெற்றுக்கொள்வதற்கு விண்ணப்பிக்கும் நிலையில் அத்தகைய சிறுவர் துஷ்பிரயோகம் தொடர்பான விசாரணையை பாதிக்கலாம் என்றோ எந்த வகையிலும் நம்புவதற்குக் காரணம் உள்ள ஏதேனும் சந்தர்ப்பத்தில் அத்தகைய வளாகத்திற்கு பிரவேசித்து சோதனையிடுவதற்கு சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையின் எவரேனுமொரு உத்தியோகத்தரை நீதிமன்ற எழுத்தாணையின்றி நியமிப்பதற்கு அதிகாரசபையின் தலைவருக்கு அதிகாரத்தை வழங்கியுள்ளது. இத்தகைய சோதனையின் பேது பாதிக்கப்பட்ட சிறுவரை மீட்கும் நடவடிக்கையை செயற்படுத்துவதற்கு ஏதுவாக அமையலாம்.

மீட்பு நடவடிக்கையின் நிறைவில் பின்வரும் படிமுறைகள் பின்பற்றப்படுதல் வேண்டும்:

- துல்லியமான களக் குறிப்புகளைத் தயாரித்தல், புகைப்படம் எடுத்தல், வீடியோ ஆதாரங்களை பதிவு செய்தல்.
- சிறுவரின் பெற்றோர் அல்லது சட்டபூர்வ பாதுகாவலரைக் கண்டறிந்து, சிறுவருடன் பொலிஸ் நிலையத்திற்குச் செல்லுதல்.
- தேவைப்படுமிடத்து சிறுவருக்கு தற்காலிக பாதுகாப்பான தங்குமிடம்/பாதுகாப்பு இடத்தை ஏற்பாடு செய்தல். (பெரும்பாலும் சிறந்த பாதுகாப்பு இடமாக அருகில் உள்ள மருத்துவமனை அமைகின்றது)
- பாதிக்கப்பட்ட சிறுவர் மருத்துவப் பரிசோதனை/மருத்துவ உதவிக்காக சட்ட மருத்துவ அதிகாரியிடம் அனுப்பி வைக்கப்படுதல் வேண்டும்
- சிறுவரின் சிறப்புத் தேவைகள்/தேவைப்பாடுகள் உட்பட வேறு ஏதேனும் தேவைகள்/தேவைப்பாடுகள் உள்ளதா என ஆராயந்தறிதல்.

- சிறுவரின் குடும்பத்தைக் கண்டறிந்து சிறுவரை பெற்றோர்/பாதுகாவலருடன் மீண்டும் இணைக்க அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்ள வேண்டும் என்பதுடன் குறிப்பாக சிறுவர் துணையின்றியும் குற்றத்திற்கு பெற்றோர்/ பாதுகாவலர்கள் உடந்தையாக இருப்பதாக நம்புவதற்கு காரணம் இல்லாதவிடத்தும் இவ்விடயத்தை மேற்கொள்வதற்கு உடனடியாக ஆவணம் செய்தல் வேண்டும். சிறுவரின் நலன்கள் எப்போதும் கருத்திற் கொள்ளப்படும் என்பதுடன் சிறுவரை இடம் அமர்த்துதல் அல்லது பெற்றோர்/ பாதுகாவலர்களிடம் சிறுவரை ஒப்படைப்பது தொடர்பான முடிவுகளை

இந்த நலன்களைப் பாதுகாப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும்.

- சிறுவரின் பாதுகாப்பை உறுதி செய்ய நடவடிக்கை எடுத்தல். (நன்னடத்தை உத்தியோகத்தர்/தேசிய சிறுவர் அதிகார சபை உத்தியோகத்தர்/ குற்றத்தால் பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் சாட்சிகளுக்கான தேசிய அதிகாரசபையுடன் கலந்துரையாடி மேற்கொள்ளப்படுதல் வேண்டும்)

மீட்பு நடவடிக்கைக்குப் பின்னர் கீழ்வரும் நிறுவனங்களுக்கு சம்பவத்தைப் பற்றிய தகவல்களைப் பகிர்தல்:

- சிறுவர் அடையாளம் காணப்பட்டவுடனே நன்னடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்பு சேவைகள் அதிகார சபை.
- ஆரம்ப பரிசோதனை மற்றும் விசாரணைக்கான வழிகாட்டுதல்கள் பெறப்படுவதை உறுதிப்படுத்துவதற்காக சிறுவர் மற்றும் மகளிர் பணியகத்தின் தலைமை அலுவலம்.
- பொலிஸ் தலைமையகத்தின் குற்றப்பிரிவு.
- குற்றப் புலனாய்வுத் திணைக்களம்.
- 2020 ஆகஸ்ட் 31 ஆம் திகதிய மற்றும் CRTM 1978 இலக்கமுடைய பொலிஸ் சுற்றறிக்கையின் பிரகாரம் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை.

2.1.3 ஆரம்ப பரிசோதனை (பிரித்தறிதல்)

முதல் தகவல் பதிவு செய்யப்பட்ட பின்னர் ஆரம்ப பரிசோதனை (பிரித்தறிதல்) நடத்தப்படுகிறது. விற்பனையால் பாதிக்கப்பட்ட சிறுவர்கள் சார்ந்ததாக இது எளிமையாகவும், விரிவானதாகவும், முடிந்தவரை சுருக்கமாகவும் இருக்க வேண்டும். இது பல்வேறு நேர்காணல்/ தொடர்ச்சியாக சம்பவ விவரங்களை வழங்குவதைத் தடுப்பதாக அமைகின்றது. மனித விற்பனை சம்பவத்தை முதற்கட்டமாக அடையாளம் காண உதவும் குறிகாட்டிகளுடன் கூடிய தரநியமப்படுத்தப்பட்ட பிரித்தறிதல் படிவத்தின் மூலம் பிரித்தறிதல் செய்யப்பட வேண்டும்.

கவனத்திற்கொள்ள வேண்டிய முக்கியமான விடயங்கள்:

- முதல் தகவலைப் பதிவுசெய்து, ஆரம்ப பிரித்தறியும் விடயத்தை மேற்கொள்ளும் அலுவலர்களுக்கு சிறுவர் விற்பனை சம்பவத்தை முதற்கட்டமாக அடையாளங் காணும் பொருட்டு போதுமான அளவு பயிற்சியளிக்கப்பட்டு, தேவையான பிரித்தறிதல் திறன்கள் மற்றும் தரநியமத்திலான பிரித்தறியும் கருவியொன்று வழங்கப்பட்டிருத்தல் வேண்டும். சம்பவத்தின் தன்மை மற்றும் சிறுவரின் நலன்களின் அடிப்படையில், விசாரணை உத்தியோகத்தர் ஒரு பெண் உத்தியோகத்தராகவோ அல்லது ஆண் உத்தியோகத்தராகவோ இருத்தல் வேண்டும். தேவைப்படும் போது, பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கு அறிவுறுத்தல்கள் / வழிகாட்டுதல்களை வழங்க முடியும்.
- சிறுவர் தொடர்பாடலை மேற்கொள்ள முடியாத வகையிலான வளர்ச்சிக் குறைபாட்டுடன் இருப்பது தெளிவாகத் தெரியுமிடத்து (நடத்தை அல்லது வளர்ச்சி குறைபாடு/ உணர்ச்சி அல்லது பேச்சுக் குறைபாடு போன்றவை காரணமாக புரிந்துகொள்வது மற்றும் புரிந்துகொள்ளப்படுவதற்கு கடினமாக இருத்தல்) முதல் தகவலைப் பெறும் போது நியாயமான உதவியை வழங்க வேண்டும். உதாரணமாக:
- சிறுவரை எந்தவொரு சந்தர்ப்பத்திலும் புண்படுத்தாத பராமரிப்பாளர் அல்லது நம்பகமான வயது வந்தவரின் உதவி கிடைக்கக் கூடியதாக இருத்தல் வேண்டும் என்பதுடன் அவர்கள் சிறுவரின் சார்பாக அவர்களின் சிறப்புத் தேவைகளைத் தெரிவிக்க கூடியவர்களாக இருத்தல் வேண்டும்.
- மொழித் தேர்வு உட்பட தொடர்பாடலுக்கான சிறுவரின் விருப்பங்களைப் புரிந்து கொள்ள முயற்சி எடுக்கப்பட வேண்டும்.
- முதல் தகவல், நேர்காணல் சந்தர்ப்பங்களில் இடைவேளைகள் வழங்கப்படுதல் மற்றும் நேர்காணலை கட்டம் கட்டமாக நடாத்துதல்.
- உடலமைப்புக்குரிய பொம்மைகள், உடலமைப்புக்குரிய வரைபடங்கள் மற்றும் வரைதல் பொருள் போன்ற நேர்காணல் உதவிகளைப் பயன்படுத்துதல்

- சிறுவர் முதல் தகவல் வழங்குதலின் போது/பிரித்தறியப்படும் போது சிறுவர் மனவழுத்தத்திற்கு உள்ளாகக்கூடும் என்பதால் சிறுவர் விற்பனைக்கு ஆளாகியிருக்கக்கூடிய சிறுவர் சார்ந்த முதல் தகவல்களை பதிவு செய்யும்/ஆரம்ப பிரித்தறிதல் விடயத்தில் ஈடுபடும் உத்தியோகத்தர் பாதிக்கப்பட்ட/பாதிக்கப்பட்டு மீண்டவரை மையமாகக் கொண்ட அணுகுமுறையைக் கடைப்பிடிப்பது முக்கியமானதாகும். சிறுவரின் உரிமைகள் மற்றும் மீண்டும் பாதிக்கப்படுவதைத் தடுத்தல் ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு, சிறுவர் எப்போதும் சிறுவர் நேயமிக்க முறையில் நேர்காணல் செய்யப்படுவதை உறுதி செய்யும் பொருட்டு மனித விற்பனையில் பாதிக்கப்பட்டவர்களை நேர்காணல் செய்வது தொடர்பாக சட்ட அமுலாக்கத்திற்கான தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையின் வழிகாட்டுதல்களைப் பாருங்கள்.[9]
- மேலும், ஆரம்ப அடையாளங் காணுதல் பாதிக்கப்பட்ட சிறுவரின் ஆரம்ப நிலை பற்றிய குறிப்பை வழங்க வேண்டும் என்பதுடன் இது ஒரு புலன்விசாரணையையும் உதவி மற்றும் பாதுகாப்பிற்கான அணுகலையும் தொடங்கும்.
- ஆரம்ப பிரித்தறிதலின் முடிவில், மேலதிக விசாரணைகளுக்கு ஒத்துழைக்கும் வகையில் விசாரணைத் திட்டம் உருவாக்கப்பட வேண்டும்.

பிரித்தறிதல் செயன்முறை

ஆரம்ப பிரித்தறிதல் இரண்டு கட்டங்களில் செய்யப்படலாம்:

நிலை ஒன்று: குறிகாட்டிகளின் அடிப்படையில் பிரித்தறிதல்

9 விற்பனையால் பாதிக்கப்பட்ட சிறுவர்களை நேர்காணல் செய்வது தொடர்பான சட்ட அமுலாக்க உத்தியோகத்தர்களுக்கான வழிகாட்டுதல்கள்.

எந்தவொரு மனித விற்பனை சூழ்நிலையிலும் எப்போதும் கருத்தில் கொள்ளப்பட வேண்டிய 'முதல் தோற்ற' குறிகாட்டிகள் உள்ளன. இந்த குறிகாட்டிகள் தான் ஒரு நபர் பாதிக்கப்பட்டவரா என்பதை உறுதிப்படுத்துகின்றது. எனவே, மேலதிக பிரித்தறிதல் தேவைப்படுகின்றது.[10] அவையாவன:

- துஷ்பிரயோகத்தின் அறிகுறிகள்: இயல்பாகவே, விற்பனையில் ஈடுபடுபவர்கள் தங்கள் பாதிக்கப்பட்டவர்களை தொடர்ச்சியான உடல் மற்றும் உளவியல் துஷ்பிரயோகத்திற்கு உட்படுத்துகின்றனர். இவ்விடயம் சார்ந்த அறிகுறிகள் காணக்கூடியதாகவும் கண்ணுக்கு புலப்படாதவைகளாகவும் இருக்கலாம் (உளவியல்), என்பதுடன் சில சந்தர்ப்பங்களில், சுயமாகவே செய்து கொண்டவைகளாக இருக்கலாம்.
- சிறுவர் அந்தப் பகுதியைச் சேர்ந்தவரல்ல என்பதற்கான அறிகுறிகள்: பாதிக்கப்பட்ட சிறுவர்கள் பெரும்பாலும் அவர்கள் கண்டுபிடிக்கப்பட்ட பகுதியைச் சேர்ந்தவர்களாக இருப்பதில்லை.
- சூழமைவு: பாதிக்கப்பட்டவர்கள் கண்டுபிடிக்கப்பட்ட சூழமைவை கவனமாக ஆராய்வது முக்கியமானதாகும். பாதிக்கப்பட்ட அனைவரும் விற்பனைக்கு ஆளாக்கப்பட்டவர்கள் என்பது கற்பனைக் கதையாக இருக்கலாம். சிலர் வலுக்கட்டாயமாக அழைத்துச் செல்லப்பட்டாலும், பல பாதிக்கப்பட்டவர்கள் உண்மையில் விருப்பத்துடன் யாரோ ஒருவருடன் செல்வதற்கு ஈர்க்கப்படுகிறார்கள். பெரும்பாலும் போலியான பாசாங்கு மூலம் (உதாரணமாக வயதுவந்த 'காதலர்கள்')
- ஆவணங்கள்: அடையாள ஆவணங்கள் இல்லாமை அல்லது போலியான ஆவணங்கள்.

9 Guidelines for Law Enforcement Officials on Interviewing Child Victims of Trafficking.pdf (savethechildren.net)
10. நேரடி உதவி பற்றிய புலம்பெயர்வு பற்றிய சர்வதேச அமைப்பின் கையேடு
https://publications.iom.int/system/files/pdf/iom_handbook_assistance.pdf

**குறிப்பு : ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட குறிகாட்டிகள் இருப்பது, ஒரு நபர் விற்பனைக்கு ஆளாகியுள்ளார் என்பதை உறுதிப்படுத்தாது. இது மேலதிக பிரித்தறிதல் தேவைப்படுகின்றது என்பதையே உணர்த்துகின்றது.

நிலை இரண்டு: பிரித்தறிதல் வினாக்கள்



சிறுவர் விற்பனை குற்றத்தின் அம்சங்களைப் பற்றிய தகவல்களுக்கு **இணைப்பு 1 ஐப்** பார்க்கவும்.

2.1.4 அவசரத் தேவைகளைக் கண்டறிதல்/பாதிக்கப்பட்டவர்களுக்கான சேவை வழங்குநர்களுடன் தகவல்களைப் பகிர்தல் (தங்குமிடம் உட்பட)

முதல் தகவலைப் பெறும் அல்லது மீட்பு நடவடிக்கையை மேற்கொள்ளும் பொலிஸ் உத்தியோகத்தர்கள் ஏதேனும் அவசர உதவிகள் இருக்குமெனில் அவை வழங்கப்படுவதை உறுதி செய்வதற்காக ஆரம்ப பரிசோதனையின் போது பாதிக்கப்பட்ட சிறுவர்களின் உடனடித் தேவைகளை மதிப்பீடு செய்தல் வேண்டும். உடனடித் தேவைகள் குறித்த இந்த மதிப்பீட்டை, ஆரம்ப பரிசோதனை செயற்பாட்டின்போது,பொலிஸ் திணைக்களத்தின் மகளிர் மற்றும் சிறுவர் பணியகத்தின் உத்தியோகத்தர்களினால் மேற்கொள்ள முடியும். இந்த தேவைகளுக்குள் பாதுகாப்பு, உடல் அல்லது உளவியல் தேவைகள் ஆகியவையும் அடங்கும். பாதிக்கப்பட்ட சிறுவர் வெளிநாட்டவராக இருந்தால் அல்லது பொலிஸாருக்கு புரிந்துகொள்ள முடியாத மொழியைப் பேசினால், மொழிபெயர்ப்புச் சேவைகள் தேவைப்படலாம், ஏதேனும் குறைபாடுகள் உள்ள சிறுவனாக இருந்தால், சமூக சேவைகள் திணைக்களம் போன்ற சம்பந்தப்பட்ட சேவை வழங்குநர்களின் உதவியுடன் தேவையான சேவைகள் மற்றும் தங்குமிடங்கள் வழங்கப்பட வேண்டும்.

இயன்ற அனைத்து சந்தர்ப்பங்களிலும், பாதிக்கப்பட்ட சிறுவர்களின் தேவைகளை அடையாளங் காணும் விடயமானது ஒரு நன்னடத்தை அதிகாரியுடன் கலந்தாலோசிக்கப்பட்டு பொலிஸ் உத்தியோகத்தரினால் மேற்கொள்ளப்படுதல் வேண்டும். இதற்கான காரணம் யாதெனில் தேவைகள் பற்றிய மதிப்பீடானது சிறுவரின் அடுத்தடுத்த பராமரிப்புத் திட்டத்தின் அடிப்படையை உருவாக்குவதாக இருப்பதாகும். மேலும், இது முதன்மையாக நன்னடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்பு சேவைகளால் முகாமை செய்யப்படும். இந்த ஆரம்ப பரிசோதனை செயன்முறை பாதிக்கப்பட்டவருக்கு ஏதேனும் உடனடி ஆபத்துகள் அல்லது பாதுகாப்புத் தேவைகள் இருக்குமாயின் அவற்றை மதிப்பிடவும், அதற்கேற்ப அவற்றை நிவர்த்தி செய்வதற்கும் உதவும்.

பராமரிப்பு இல்லாத மற்றும் குடும்பத்திலிருந்து பிரிக்கப்பட்ட சிறுவர்கள் உட்பட, ஆபத்தில் உள்ள சிறுவர்கள் தொடர்பான அடுத்தடுத்த நடவடிக்கைகள் மற்றும் தீர்மானங்கள், சிறுவரின் பாதுகாப்புத் தேவைகள் பற்றிய முழுமையான மதிப்பீட்டின் அடிப்படையில் அமைதல் வேண்டும். அகதிகளுக்கான ஐக்கிய நாடுகளின் உயர் ஸ்தானிகர் (UNHCR) தனிமைப்படுத்தப்பட்ட சிறுவர்களின் பாதுகாப்பிற்காக 'உச்சகட்ட நலன்சார்ந்த மதிப்பீடு' எனப்படும் மதிப்பீட்டுக் கருவியை அறிமுகப்படுத்தியுள்ளது[11] அதற்கிணையாக 'உச்சகட்ட நலன்சார்ந்த மதிப்பீடு' மூலமாக சிறுவர்களின் உச்சமட்ட நலன்களுக்கு ஏற்ப நடவடிக்கை எடுக்கப்படுவதை உறுதிசெய்யும் பொருட்டு சிறுவர் பாதுகாப்பு சார்ந்த செயற்பாட்டாளர்களுக்கு ஒத்துழைப்பு மற்றும் வழிகாட்டல் பெற்றுக் கொடுக்கப்படும்.

தீர்மானங்களை மேற்கொள்வதற்கு முன்னதாக 'உச்சகட்ட நலன்சார்ந்த மதிப்பீடு' மேற்கொள்ளப்பட வேண்டிய சில தீர்மானங்கள் உள்ளன:

- சிறுவரின் குடும்பம் தொடர்பிலான கண்காணிப்பைத் தொடங்குதல்.
- தற்காலிக பராமரிப்பை வழங்குதல்.
- ஆபத்தில் உள்ள சிறுவர்களுக்கான பாதுகாப்புத் திட்டத்தை உருவாக்குதல்.
- பிள்ளையை மீள ஒப்படைத்தல் மற்றும் சமூகத்துடன் ஒருங்கிணைத்தல்.

ஆபத்தில் உள்ள சிறுவரென கண்டறியப்பட்ட பிறகு, மிக விரைவில் சிறுவரின் 'உச்சகட்ட நலன்சார்ந்த மதிப்பீடு' நடாத்தப்பட வேண்டும். உடனடி ஆபத்தை எதிர் கொண்டிருக்கும் ஒரு சிறுவருக்கு சம்பந்தப்பட்ட நன்னடத்தை உத்தியோகத்தர் மற்றும் பிற சிறுவர் பாதுகாப்பு உத்தியோகத்தர்களின் ஒத்துழைப்புடன் சிறுவரின் பாதுகாப்பை உறுதி செய்வதற்கான நடவடிக்கைகளுடன், மதிப்பீடு உடனடியாக மேற்கொள்ளப்பட வேண்டும்.

2.1.5 சுகாதார சேவைகளுக்கு ஆற்றுப்படுத்துதல்

சிறுவர் விற்பனையால் பாதிக்கப்பட்டவர் என கண்டறிந்த அல்லது காப்பாற்றிய பின்னர் பொலிஸார் பாதிக்கப்பட்டவரை அருகிலுள்ள அரச மருத்துவமனையில் அல்லது சட்ட மருத்துவ அதிகாரியிடம் (JMO) தேவையான மருத்துவப் பரிசோதனை மற்றும் சிகிச்சைக்காக பரிந்துரை செய்ய வேண்டும்.

பாதிக்கப்பட்ட சிறுவரின் முதற்கட்ட மருத்துவ பரிசோதனை சட்ட மருத்துவ அதிகாரியினால் மேற்கொள்ளப்படும். பாதிக்கப்பட்ட சிறுவர் பரிசோதிக்கப்பட்டவுடன் மருத்துவ-சட்டப் பரிசோதனைப் படிவம் (MLEF) பூர்த்தி செய்யப்படல்

11. https://www.unhcr.org/media/unhcr-guidelines-determining-best-interests-child

வேண்டும். அதனையடுத்து நீதிமன்ற நடவடிக்கைகளின் நோக்கத்திற்காக சட்ட மருத்துவ அதிகாரியினால் மேற்படி மருத்துவ- சட்ட அறிக்கை (MLR) வழங்கப்பட வேண்டும். காலதாமதமின்றி சட்ட மருத்துவ அதிகாரியின் அலுவலகத்தில் இருந்து மேற்படி மருத்துவ-சட்ட அறிக்கையை பெற்றுக்கொள்வதற்கு உத்தரவிடுமாறு பொலிஸார் நீதிமன்றத்தைக் கோர வேண்டும்.

சிறுவர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருந்தால் மருத்துவமனை மற்றும் சட்ட மருத்துவ அதிகாரி, மனநல மருத்துவர், சிறுவர் வைத்திய நிபுணர் மற்றும் பிற மருத்துவர்கள் உள்ளிட்ட சம்பந்தப்பட்ட மருத்துவ அதிகாரிகளால் மருத்துவ சிகிச்சைக் கலந்துரையாடல் (CCC) நடாத்தப்படும். சிறுவரின் உடனடி மருத்துவ தேவைகளை நிவர்த்தி செய்வதே இதன் நோக்கமாகும். மேற்படி மருத்துவ சிகிச்சைக் கலந்துரையாடல் சட்ட மருத்துவ அதிகாரியின் தலைமையில் நடாத்தப்படும்.[12]

அதனையடுத்து சிறுவரின் பராமரிப்பு, பாதுகாப்பு மற்றும் சிறுவரின் ஒட்டுமொத்த நல்வாழ்வுக்குத் தேவையான தரப்பினர்களாகிய பொலிஸார், தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை, நன்னடத்தை உத்தியோகத்தர் மற்றும் மருத்துவ அதிகாரிகள் போன்ற முக்கிய பங்குதாரர்களுடன் நிறுவன ரீதியான சம்பவ மாநாடு (ICC) நடாத்தப்படும். சிறுவரின் உளவியல், மருத்துவ, சமூகம் மற்றும் கல்வித் தேவைகளைக் கண்டறிவதற்காக பிள்ளையின் விரிவான மதிப்பீடு நடத்தப்படுவதை உறுதி செய்வதே நிறுவன ரீதியான சம்பவ மாநாட்டின் பெறுபேறாகும். சம்பவ மாநாடுகளின் அறிக்கைகள் சம்பந்தப்பட்ட நீதவானின் பரிசீலனைக்காக நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்படுகின்றன. பிள்ளையை 'தகுதியான நபரிடம் பராமரிப்புக்காக ஒப்படைத்தல்' கட்டளையைப் பிறப்பித்தல் உள்ளடங்கலாக பிள்ளையின் பராமரிப்பு மற்றும் பாதுகாப்பு தொடர்பான தீர்மானங்களை மேற்கொள்ளும்போது சம்பவ மாநாட்டின் அறிக்கைகளை நீதவான்கள் தீவிரமாகக் கருத்திற் கொள்ள வேண்டும்.

2.1.6 சிறுவரை நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்துதல்

சிறுவர்கள் மற்றும் இளம் ஆட்களுக்கான கட்டளைச் சட்டத்தின் பிரிவு 17(1) இன் கீழ், விசாரணைக் கட்டத்தில் சிறுவரை அல்லது இளம் ஆளை நீதவானின் முன் முன்னிலைப்படுத்த வேண்டிய ஒரு சந்தர்ப்பத்தில், பொலிசார் சம்பந்தப்பட்ட நன்னடத்தை உத்தியோகத்தருக்கு அத்தகைய விடயம் பற்றிய அறிவித்தல் வேண்டும். நன்னடத்தை அலுவலருக்கு மேற்படி கட்டளைச் சட்டத்தின் அட்டவணையின்படி, பின்வரும் தகவல்களை எழுத்து மூலமாகவோ அல்லது வாய்மொழியாகவோ தொலைபேசி மூலமாகவோ வழங்குதல் வேண்டும்.

1. சிறுவரின் பெயர்
2. வயது
3. சிறுவரின் பாலினம்
4. குற்றம்

பொலிஸ் 'ஏ' அறிக்கையுடன் பிள்ளையை நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்துதல் வேண்டும்.

கவனத்திற்கொள்ளப்பட வேண்டிய விசேட கரிசனைகள்:

- எல்லா சந்தர்ப்பங்களிலும் சிறுவர் நேயமிக்க நடைமுறைகள் பயன்படுத்தப்பட வேண்டும். வலுவீனத்தோடு கூடிய சிறுவர்களின் விசேட தேவைகள் மற்றும் தேவைப்பாடுகளும் கருத்தில் கொள்ளப்பட வேண்டும்.

- உரிய சம்பவத்தின்/ வழக்கின் தீவிரத்தன்மையைக் கருத்தில் கொண்டு, சட்ட அமுலாக்கத்திற்கான உயர் நீதிமன்றத்தின் விதிகளுக்கமைவாகவும் (இணைப்பு 4) சிறுவர்கள் மற்றும் இளம் ஆட்களுக்கான கட்டளைச் சட்டத்திற்கமைவாகவும், பாதிக்கப்பட்ட சிறுவர்களுடன் தொடர்புடைய விடயங்களில் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியினால் நிர்ணயிக்கப்பட்ட வழிகாட்டுதல்கள் பின்பற்றப்படுதல் வேண்டும். நன்னடத்தை உத்தியோகத்தரின் அறிக்கை கிடைத்ததன் சமர்ப்பித்த பின்னர் பிள்ளையின் பாதுகாப்பு தொடர்பான முடிவு நீதிமன்றத்தால் தீர்மானிக்கப்பட வேண்டும்.

**குறிப்பு : சிறுவர்கள் மற்றும் இளம் ஆட்கள் கட்டளைச் சட்டத்தின் 17(2) பிரிவிற்கமைய, பொலிஸ் உத்தியோகத்தரிடமிருந்து அறிவிப்பு கிடைக்கப் பெற்றதன் பின்னர், நன்னடத்தை சிறுவரின் பின்னணியை ஆராய்ந்து நீதிமன்றத்தில் சமர்ப்பிப்பதற்காக ஒரு அறிக்கையைத் தயாரிக்க வேண்டும். நன்னடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்பு சேவைகள் திணைக்களத்தின் மூலம் பராமரிப்பு மற்றும் பாதுகாப்பு தேவைப்படும் பாதிக்கப்பட்ட சிறுவர்களுக்கு விசேட உதவி வழங்கப்படுவதை உறுதுசெய்வதற்காக இந்த செயன்முறையை உள்ளடக்குதல் மிகவும் முக்கியமானதாகும்.

12. Chromeextension://efaidnbmnnnibpcajpcglclefindmkaj/https://medicine.kln.ac.lk/depts/forensic/images/ LearningMaterials/Guidelines/National_Guideline_on_Child_Abuse_and_Neglect.pdf

2.1.7 பொருத்தமான நபரிடம் ஒப்படைத்தல் சார்ந்த கட்டளை

சிறுவர் மற்றும் இளம் ஆட்களுக்கான கட்டளைச் சட்டத்தின் 35-38 பிரிவுகள், ஒரு பிள்ளையைப் பாதுகாப்பான இடத்தில் வைப்பதற்கும், ஒரு நன்னடத்தை உத்தியோகத்தருக்கு மேற்பார்வை அதிகாரங்களை வழங்குவதற்குமான ஏற்பாடுகளை வழங்குகிறது.

பிரிவு 35 - சிறார் நீதிமன்றமாக செயற்படும் நீதவான் நீதிமன்றம் ஒரு சிறுவர் அல்லது இளம் ஆளுக்கு பராமரிப்பு தேவை என்று திருப்தி அடையும் அதேவேளை பிள்ளை 12 வயதை எட்டியிருந்தால், பின்வரும் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும்.

- சிறுவரின் பராமரிப்பை மேற்கொள்ளத் தயாராக இருக்கும் உறவினர் அல்லது பாதுகாவலராக இருக்கும் பொருத்தமான நபரின் பராமரிப்பில் பிள்ளையை ஒப்படைத்து விடுதல்.
- சிறுவரை சரியான முறையில் பராமரிப்பதற்கான கடுமையான அறிவுறுத்தல்களின் பேரில் பெற்றோர் அல்லது பாதுகாவலரிடம் பிள்ளையை விடுவித்தல்.
- சிறுவரை மூன்று வருடங்களுக்கு (3) மேற்படாத வகையில் ஒரு நன்னடத்தை உத்தியோகத்தரின் மேற்பார்வையில் வைத்தல்.
- அங்கீகரிக்கப்பட்ட அல்லது சான்றளிக்கப்பட்ட பாடசாலைக்கு சிறுவரை அனுப்புதல்.

சிறுவரின் உச்சமட்ட நலன்கள் பாதுகாக்கப்படுகின்றன என்பதை உறுதிப்படுத்தவும், நிறுவனங்களில் வைக்கப்பட்டுள்ள சிறுவர்களுக்கு பாதுகாப்பை வழங்கவும், குற்றச்செயல்களினால் பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் சாட்சிகளின் பாதுகாப்புக்கான தேசிய அதிகார சபையின் சம்பந்தப்பட்ட உத்தியோகத்தர்கள் மற்றம் நன்னடத்தை உத்தியோகத்தர்கள் ஆகியோருடன் இணைந்து புலனாய்வு உத்தியோகத்தர்கள் பணியாற்ற வேண்டும்.

2.1.8 குற்றத்தால் பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் சாட்சிகளைப் பாதுகாப்பதில் தேசிய அதிகார சபையுடன் ஒருங்கிணைந்து பணியாற்றுதல்

2023 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க குற்றச்செயல்களுக்குப் பலியாக்கப்பட்டோருக்கும் சாட்சிகளுக்குமான உதவி மற்றும் பாதுகாப்புச் சட்டம் நிறுவப்பட்ட குற்றத்தால் பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் சாட்சிகளுக்கான பொலிஸ் உதவிப் பிரிவு, பாதிக்கப்பட்ட சிறுவருக்கு அல்லது அவர்களின் குடும்பத்திற்கு அச்சுறுத்தல் அல்லது பாதுகாப்பு அபாயங்கள் இருக்கும் சந்தர்ப்பங்களில் புலனாய்வு உத்தியோகத்தர்களுக்கு உதவி வழங்கும்.

சட்டத்தின் பாகம் IV இன் 27 மற்றும் 28 ஆம் பிரிவுகள் குற்றத்தால் பாதிக்கப்பட்ட நபருக்கு அல்லது சாட்சிக்கு பாதுகாப்பைப் பெறுவதற்கான உரிமையை வழங்குகிறது. இந்தச் சட்டத்தின் கீழ் குற்றத்தினால் பாதிக்கப்பட்ட எந்தவொரு நபருக்கு அல்லது சாட்சிக்கும் வழங்கக்கூடிய பாதுகாப்பின் தன்மை பின்வருமாறு அமையலாம்:

- ஆளுக்கான அல்லது சொத்துக்கான பாதுகாப்பை வழங்குதல்.
- உணவுப் பொருட்களுக்கான வசதிகள் உட்பட தற்காலிக தங்குமிடத்திற்கான ஏற்பாடு.
- குற்றச்செயல்களுக்கு பலியாக்கப்பட்டவரின் அல்லது சாட்சியின் சம்மதத்துடன் நிரந்தர அல்லது தற்காலிக மீளமர்த்துகை.
- வழக்கு நடவடிக்கைகள் முழுவதையும் அல்லது அதன் பகுதியை இரகசியமாக நடாத்துதல்.
- குற்றச்செயல்களுக்கு பலியாக்கப்பட்டவரின் அல்லது சாட்சியின் ஆளடையாளத்தை மறைத்தல்.
- சிறுவரின் அதிசிறந்த நலன்களை உறுதிப்படுத்துவதற்கும், கல்விக்கான உரிமை உட்பட அவரின் உரிமைகளைப் பாதுகாப்பதற்கும் விசேட நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்.
- குற்றஞ்சாட்டப்பட்டவரை எதிர்கொள்வதன் மூலம் குற்றச்செயல்களுக்கு பலியாக்கப்பட்டவர் அல்லது சாட்சி தொல்லைக்குட்படுத்தப்படுவதிலிருந்தும், அச்சுறுத்தப்படுவதிலிருந்தும், பலவந்தப்படுத்தப்படுவதிலிருந்தும் அல்லது அழுத்தம் கொடுப்பதிலிருந்தும் தடுத்தல் .
- குற்றச்செயல்களுக்கு பலியாக்கப்பட்டவரின் அல்லது சாட்சியின் அடையாளம் மற்றும் பின்னணித் தகவல்கள் அச்சு மற்றும் இலத்திரனியல் ஊடகம் மற்றும் வேறு வழிமுறைகளில் வெளிப்படுத்தப்படுவதைத் தடுத்தல்.
- குற்றச்செயல்களுக்கு பலியாக்கப்பட்டவரின் அல்லது சாட்சியால் வழங்கப்படக்கூடிய சாட்சியங்களின் வெளிப்படுத்துகையைத் தடுப்பதற்கு பொருத்தமான நடவடிக்கைகளை பின்பற்றுதல்.

புலனாய்வு உத்தியோகத்தர்கள் குற்றச்செயல்களுக்கு பலியாக்கப்பட்ட சிறுவர்களுக்குத் தேவையான பாதுகாப்பு மற்றும் சேவைகள் கிடைக்கப்பெறுவதை உறுதி செய்வதற்காக குற்றத்தால் பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் சாட்சிகளைப் பாதுகாப்பதற்கான தேசிய அதிகார சபையின் உத்தியோகத்தர்களுடன் மற்றும் குற்றத்தால் பாதிக்கப்பட்டவர்கள் சாட்சிகளுக்கு உதவி வழங்குவதற்கான பொலிஸ் பிரிவின் உத்தியோகத்தர்களுடன் ஒருங்கிணைப்பு மற்றும் நெருக்கமான ஒத்துழைப்புடன் பணியாற்றுதல் வேண்டும்.

2.2 படிமுறை இரண்டு - புலன்விசாரணை

சிறுவர்களுக்கு எதிரான மனித விற்பனை சார்ந்த ஒழுங்கமைக்கப்பட்ட குற்றங்கள் மற்றும் புலனாய்வு பற்றிய படிமுறைகளை இந்தப் பிரிவு கோடிட்டுக் காட்டுகிறது. சிறுவர்களுக்கு எதிரான இணையவழி அல்லது மனித விற்பனை தொடர்பான இணையவழி குற்றங்கள் சம்பந்தப்பட்ட சம்பவங்கள் எனில் பின்பற்றப்பட வேண்டிய மேலதிக நடைமுறைகளை அறிந்துகொள்வதற்காக பிரிவு 3.3 ஐப் பார்க்கவும்.

புலன்விசாரணைகள் மூன்று படிமுறைகளைக் கொண்டுள்ளன:

1. புலன்விசாரணையைத் திட்டமிடுதல்.
2. பாதிக்கப்பட்டவரை/சாட்சிகளை நேர்காணல் செய்தல்.
3. புலனாய்வுத் திட்டத்தினை மீளாய்வு செய்தல்.

2.2.1 புலன்விசாரணையைத் திட்டமிடுதல்

விசாரணையின் ஆரம்ப கட்டத்தில், பொறுப்பதிகாரி புலன்விசாரணை உத்தியோகத்தர்களுடன் முறையான திட்டமிடல் கூட்டம் நடைபெறுவதை உறுதி செய்துகொள்ள வேண்டும். அதனையடுத்த பொறுப்பதிகாரி இதுவரை சேகரிக்கப்பட்ட சாட்சியங்களின் சுருக்கத்தை ஆவணப்படுத்தி தொகுக்க வேண்டும் என்பதுடன் பாதிக்கப்பட்டவர்களின் மற்றும் சாட்சிகளிடமிருந்து பெறப்பட்ட வாக்குமூலங்கள் முன்வைக்கப்பட்ட ஏனைய சாட்சியங்கள் என்ற வகையில் வகைப்படுத்துதல் வேண்டும். கூடுதல் விசாரணைகள் மேற்கொள்ளப்பட வேண்டிய விடயங்களை பட்டியற்படுத்தி, அந்த பட்டியலை 'உடனடி' விசாரணை செய்ய வேண்டிய, அதாவது உடனடி நடவடிக்கைக்கு முன்னுரிமை அளிக்கப்பட வேண்டியவை என்றவகையில் மேலும் வகைப்படுத்த வேண்டும் என்பதோடு அவற்றில் கீழ்வரும் விடயங்கள் உள்ளடங்கும்:

- பிரதான சாட்சியங்களை அடையாளங் கண்டு நேர்காணல் செய்தல்.
- பாதிக்கப்பட்டவர்களை அடையாளங் காணுதல்.
- குற்றம் இடம்பெற்ற இடங்களென கருதப்படக்கூடிய வேறு இடங்கள் இருப்பின் அவற்றை அடையாளங் காணுதல்.
- சாட்சியங்களைப் பெறுவதற்காக பரிசோதனை செய்ய வேண்டிய இடங்களை அடையாளங் காணுதல்.
- பரிசோதனை செய்தல் மற்றும் சந்தேக நபர்களைக் கைது செய்தல்.

தொடர்புடைய சிரேஷ்ட பொலிஸ் உத்தியோகத்தர்கள் மற்றும் பிரிவுகள் - அதாவது மாவட்டத்தின் உதவிப் பொலிஸ் அத்தியட்சகர்/சிறுவர் மற்றும் மகளிர் பணியகத்தின் தலைமை அலுவலகம்/ குற்றப்புலனாய்வுத் திணைக்களம் ஆகியவற்றுக்கு விசாரணைகளின் முன்னேற்றம் குறித்து அறிவிக்கப்பட வேண்டும் என்பதுடன், அவசியமான சந்தர்ப்பங்களில் சட்டமா அதிபர் திணைக்களத்துடனான ஒருங்கிணைப்பை மேற்கொள்ள வேண்டும்.

> **குறிப்பு : குற்றங்களை அடையாளங் காண்பதற்கு உதவுமுகமாக சட்டமா அதிபர் திணைக்களத்துடன் ஒருங்கிணைப்பை மேற்கொள்ளல் மற்றும் விசாரணைக் கலந்துரையாடல்களை நடாத்துவது பற்றிய தகவல்களுக்கு, 5.2.4.1 பிரிவைப் பார்க்கவும்.

வளங்கள்: குற்றத்தின் தன்மை மற்றும் குற்றத்தின் அளவைப் பொறுத்து ஒவ்வொரு சம்பவத்திற்கும் சரியான எண்ணிக்கையிலான விசாரணை உத்தியோகத்தர்கள் நியமிக்கப்படுவதை சிரேஸ்ட அதிகாரிகள் உறுதி செய்தல் வேண்டும். அவசியமான பயிற்சி பெற்ற உத்தியோகத்தர்கள் இக்குழுவில் உள்ளடக்கப்படல் வேண்டும். புலனாய்வை சரியான வகையில் பூர்த்தி செய்யவதற்காக ஒவ்வொரு விசாரணைக்கும் தேவையான போக்குவரத்து வசதிகள் மற்றும் ஏனைய நிர்வாக ரீதியான உதவிகளை வழங்குதல் வேண்டுமென்பதனை கவனத்திற் கொள்ள வேண்டும்.

நிறுவனங்களுக்கிடையிலான தொடர்பாடல்: நெருக்கமான ஒத்துழைப்பினூடாக புலனாய்வினை வெற்றிகரமாக மேற்கொள்ளும் பொருட்டு மற்றும் சிறுவரின் அதிசிறந்த நலன்கள் பாதுகாக்கப்படுவதனை உறுதி செய்வதற்காக தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாசபை, நன்னடத்தை மற்றும் சிறுவர் பராமரிப்புச் சேவைகள் திணைக்களம், குற்றச்செயல்களுக்கு பலியாக்கப்பட்டோரையும் சாட்சிகளையும் பாதுகாப்பதற்கான தேசிய அதிகாரசபை மற்றும் மருத்துவமனைகள் போன்ற சிறுவர் பாதுகாப்பில் ஈடுபடும் சம்பந்தப்பட்ட நிறுவனங்களுடன் தொடர்பாடலை மேற்கொள்வதற்காக தெளிவான ஒழுங்குமுறைகளைப் பின்பற்றி நிறுவனங்களுக்கிடையேயான தொடர்பாடலை மேற்கொள்வது மிக முக்கியமானதாகும்.

ஒத்துழைப்பு: அவசியமான சந்தர்ப்பத்தில் மற்றும் அவசியமான வகையில் பொலிஸார் உரிய நன்னடத்தை உத்தியோகத்தர்களுடன் மற்றும் பாதுகாப்பான பராமரிப்பிற்காக சிறுவர் வைக்கப்பட்டுள்ள நிறுவனங்களின் அதிகாரிகளுடன் தொடர்பாடலை மேற்கோள்ள வேண்டும். விசாரணைகளின் முன்னேற்றத்தை மதிப்பிடும் பொருட்டு மற்றும் சிறுவர் தொடர்பான சம்பவத்தை முகாமைத்துவம் செய்வதற்காக தொடர்புடைய ஏனைய விடயங்களை ஆராய்வதற்காக மாதமொரு தடவை குறித்த நன்னடத்தை உத்தியோகத்தர் மற்றும் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையின் உத்தியோகத்தருடன் கலந்துரையாடுதல் வேண்டும்.

சிறுவர்கள் உட்பட காணாமல் போனவர்கள் இருக்குமிடங்களைக் கண்டறிதல், நபர்களை அடையாளங் காணல் அல்லது வெளிநாடுகளில் சந்தேகநபர்களுடன் இடங்களை அடையாளங் காணுதல், கைது செய்வதற்கான அறிவிப்புகள், பரஸ்பர சட்ட உதவி மற்றும் குற்றவாளிகளை சொந்த நாட்டிற்கு ஒப்படைத்தல் ஆகியன தொடர்பாக சர்வதேச பொலிஸ்/ நீதி அமைச்சு/ வெளிநாட்டலுவல்கள் அமைச்சு ஆகியவற்றுடன் ஒத்துழைப்புடன் செயலாற்றுதல் தொடர்பான விடயங்களை அறிவதற்கு பிரிவு 5.2.4.5 ஐப் பார்க்கவும்.

2.2.2 பாதிக்கப்பட்ட சிறுவர்களையும் சாட்சிகளையும் நேர்காணல் செய்தல்

சிறுவர்களின் உரிமைகள் மற்றும் அவர்கள் மீண்டும் பாதிக்கப்படுவதைத் தடுத்தல் ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு, சிறுவர் நேயமிக்க மற்றும் பாதிக்கப்பட்டவர்களை மையமாகக் கொண்ட அணுகுமுறையைப் பயன்படுத்தி சிறுவர்கள் நேர்காணல் செய்யப்படுவதை உறுதி செய்வதற்காக, ''சேவ் த சில்ரன்'' ஸ்ரீ லங்கா நிறுவனம் மற்றும் புலம்பெயர்வுக்கான சர்வதேச அமைப்பின் ஆகியவற்றின் ஒத்துழைப்பு மற்றும் தொழில்நுட்ப உதவிகளுடன் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையினால் தயாரிக்கப்பட்ட **'விற்பனையால் பாதிக்கப்பட்ட சிறுவர்களுடன் நேர்காணல் செய்வது தொடர்பான சட்ட அமுலாக்க உத்தியோகத்தர்களுக்கான வழிகாட்டலை'** பார்க்கவும்.[13]

மொழிபெயர்ப்பாளர்களை பயன்படுத்துதல்:

மொழிபெயர்ப்பாளரின் உதவி தேவைப்படும் பட்சத்தில், பொலிஸ் அதிகாரிகளுக்கு அரசகரும மொழிகள் திணைக்களத்தின் அல்லது நீதிச் சேவைகள் ஆணைக்குழுவினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பல்கலைக்கழகத்தின் மொழிப் பீடத்திலிருந்து மொழிபெயர்ப்பாளர்களை கோர முடியும். சைகை மொழியைப் பயன்படுத்தும் சிறுவர்கள் இருப்பார்களாயின் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி சமூக சேவைகள் திணைக்களம் போன்ற திணைக்களங்களிலிருந்து அல்லது நிறுவனங்களிடமிருந்து தேவையான சைகை மொழிபெயர்ப்பு வசதிகளை பெற்றுக் கொடுப்பதற்கு ஏற்பாடு செய்தல் வேண்டும். குற்றவாளிகளின் அழுத்தம் காரணமாக அக்கறைகளின் முரண்பாடு அல்லது மொழிபெயர்ப்பு மற்றும் சைகை மொழி சேவைகள் செல்வாக்கு செலுத்துப்படுதல் இல்லாமல் இருக்கின்றது என்பதை உறுதிப்படுத்தும் பொருட்டு அங்கீகரிக்கப்பட்ட மற்றும் முறைசார்ந்த வழிகளில் மூலம் பெறப்பட வேண்டும்.

சமகால காணொளி பதிவு

சிறுவர் விற்பனையால் பாதிக்கப்பட்ட சிறுவர்களின் வாக்குமூலங்கள் விரைவில் பதிவு செய்யப்பட வேண்டும். 1995 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க சாட்சிகள் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்திற்கு அமைவாக ஒலிப்பதிவு/காணொளிப் பதிவு மூலம் பதிவு செய்ய முடியும் என்பதோடு இந்த வாக்குமூலங்கள் நீதிமன்றத்தில் ஏற்றுக்கொள்ளப்படும்.

தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையின் காணொளிப் பதிவுப் பிரிவு மற்றும் ராகம, கொழும்பு வடக்கு போதனா வைத்தியசாலையின் கீழ் இயங்கும் பல்துறைக் குழுவினால் நிர்வகிக்கப்படும் 'லமா பியச' ஆகியவற்றில் காணப்படும் காணொளிப் பதிவு வசதிகளின் கீழ் மேற்கொள்ளப்படும் காணொளிப் பதிவு மூலம் சிறுவரின் மேற்படி வாக்குமூலத்தைப் பெற்றுக்கொள்ள முடியும்.

13. Guidelines for Law Enforcement Officials on Interviewing Child Victims of Trafficking.pdf (savethechildren.net)

பாதிக்கப்பட்ட சிறுவரின் வாக்குமூல காணொளிப் பதிவின் போது கவனம் செலுத்தப்பட வேண்டிய விடயங்கள். விற்பனையால் பாதிக்கப்பட்ட பிள்ளைகளை நேர்காணல் செய்தல் சார்ந்த சட்ட அமுலாக்க உத்தியோகத்தர்களுக்கான வழிகாட்டுதல்களைப் பின்பற்றவும்.

1. விரும்பிய பதிலை பெற்றுக்கொள்வதற்கான வினாக்களைக் கேட்க வேண்டாம்.

2. சிறுவருக்கும் சிறுவரின் தேவைகளுக்கும் மதிப்பளியுங்கள்.

3. மிகச்சிறிய பிள்ளையாக இருக்குமிடத்து அச்சந்தர்ப்பத்தில் பெற்றோர்/பாதுகாவலர் சிறுவரோடு இருப்பதற்கு அனுமதியுங்கள் (05வயது அல்லது அதற்கு குறைவான வயதுடைய பிள்ளைகள்) அல்லது விசேட தேவையுடைய அல்லது வலுவீனத்தோடு கூடிய பிள்ளைகள்.

4. பெற்றோர்/ பாதுகாவலர்/ நேர்காணல் செய்பவர் சிறுவர் எத்தகைய பதிலை அளிக்க வேண்டும் என்று பயிற்சி அளிக்கவில்லை அல்லது ஊக்குவிக்கவில்லை என்பதை உறுதிப்படுத்துங்கள்.

   நேர்காணல் நடந்து கொண்டிருக்கும் போது பெற்றோர் அல்லது பாதுகாவலர் சிறுவரை நேரடியாக எதிர்கொள்ளக்கூடாது. விதிவிலக்கான சூழ்நிலைகளின் போது சிறுவரின் குறிப்பிட்ட தேவைகளின் அடிப்படையில் காவல்துறை அதிகாரிகள் தங்கள் விருப்புரிமையைப் பயன்படுத்தலாம்.

5. சிறுவரின் வாக்குமூலத்தின் அடிப்படையிலேயே குறிப்புகள் எடுத்துக்கொள்ளப்படுகின்றது என்பதையும் ஏதேனும் பிரிவுகள் தவிர்க்கப்படவில்லை அல்லது நீக்கப்படவில்லை என்பதையும் உறுதிப்படுத்தவும்.

6. காணொளி பதிவுக்கு தொழில்நுட்ப உதவி வழங்கும் பொலிஸ் உத்தியோகத்தரும் நீதிமன்றத்தில் சாட்சியம் அளிக்க வேண்டும்.

7. 1995 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க சாட்சியங்கள்; (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 7 ஆம் பிரிவின் கீழ் ஒரு அறிவிப்புக் காலம் வழங்கப்பட்டுள்ளது - காணொளி வழியிலான நேர்காணல் சார்ந்த சாட்சியங்கள் 1999 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்க சாட்சிய (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 163(அ) பிரிவின் இன் கீழ் உருவாக்கப்பட்டுள்ள ஏற்பாடுகளை கருத்தில் கொள்ள வேண்டும்.

2.2.3 புலன் விசாரணைத் திட்டத்தின் மீளாய்வு

புலன் விசாரணை செய்யும் உத்தியோகத்தர் புலன் விசாரணைத் திட்டத்தை மீளாய்வு செய்து மேலும் என்ன விசாரணைகள் நடாத்தப்பட வேண்டும் என்பதை தீர்மானிக்க வேண்டும்.

மீளாய்வு செயன்முறை பின்வருவனவற்றை உள்ளடக்கியதாக இருத்தல் வேண்டும்;

புலன் விசாரணையின் அடுத்த கட்டங்கள்

காலவரம்பு மற்றும் வளங்களின் போதியத்தன்மை உள்ளடங்கலாக விடயத்தை புலன் விசாரணை செய்வதற்கான மிகவும் பயனுறுதிமிக்க மற்றும் வினைத்திறன்மிக்க வழிமுறையைத் தீர்மானிக்கவும்.

விசாரணை செயன்முறைகள்

விசாரணையானது விசாரணை செய்யப்படுகின்ற விடயத்திற்கும் சம்பந்தப்பட்ட இடர்களுக்கும் தொடர்புபடுவதை உறுதிசெய்ய வேண்டும் என்பதுடன் பாதிக்கப்பட்டவருக்கு மேலும் பாதிப்பு ஏற்படுவதைத் தடுக்கவும், விசாரணையின் நேர்மைக்கு ஏற்படும் அபாயங்களைக் குறைக்கவும் சம்பவங்கள் அல்லது சிக்கல்களை சரியாக நிர்வகிக்கும் திட்டம் காணப்படுதல் வேண்டும். விசாரணை நடைமுறைகளில் சிறந்த நடைமுறைகள் பின்பற்றப்பட வேண்டும் என்பதுடன் சம்பந்தப்பட்ட சட்ட விதிகள் மற்றும் பொலிஸ் ஒழுங்குவிதிகளுக்கு உட்பட்டதாக இருத்தல் வேண்டும். மேலும் தொடர்பற்ற விடயங்களை விசாரிப்பதால் ஏற்படும் இடர் நிலைகளைத் தவிர்த்தல் வேண்டும்.

2.2.4 மேலதிக விசாரணைகள்

மேலதிக விசாரணைகளின் போது சேகரிக்கப்பட்ட விடயங்களின் சுருக்கத்தை சம்பந்தப்பட்ட புலனாய்வு உத்தியோகத்தர் நீதிமன்றத்திற்கு சமர்ப்பிக்க வேண்டும். அதனையடுத்து தேவைக்கேற்ப கீழ்க்கண்ட உத்தரவுகளைப் பிறப்பிக்க விசாரணை உத்தியோகத்தர் நீதிமன்றத்தைக் கோர வேண்டும்;

1. மருத்துவ-சட்ட அறிக்கை (MLR).
2. அரச பகுப்பாய்வாளரின் அறிக்கை.
3. சிறுவரின் பராமரிப்பு மற்றும் பாதுகாப்பிற்கான உத்தரவு.
4. சம்பந்தப்பட்ட சந்தேக நபர்களை விளக்க மறியலில் வைத்தல்.
5. தேவையான இடங்களில் காணொளிப் பதிவு செய்தல்.

2.2.4.1. சொத்துக்களை முடக்குதல்/ பறிமுதல் செய்தல்

மேலதிக விசாரணைகளின் போது குற்றத்தின் மூலம் பெறப்பட்ட சொத்துக்களை முடக்குவது அல்லது பறிமுதல் செய்வது குறித்தும் சிறப்பு கவனம் செலுத்தப்பட வேண்டும். மனித விற்பனை குற்றத்தின் விளைவாக சட்டவிரோதமாக பெறப்பட்ட சொத்துக்கள் தொடர்பான ஆதாரங்கள் சேகரிக்கப்படுவதை உறுதிசெய்யவும், குற்றவாளிகள் தவறாகசம்பாதித்த சொத்துக்களை அவர்களிமிருந்து பறிமுதல் செய்யவும் குற்றத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு இழப்பீடு வழங்கவும் இது உதவுகிறது.

1. சொத்துக்களை அரசுடமையாக்கல்

1979 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க பயங்கரவாதத் (தற்காலிக ஏற்பாடுகள்) தடுப்புச் சட்டத்தின் (6(1)(ஈ) பிரிவு, 2006 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க நிதியியல் கொடுக்கல் வாங்கல் அறிக்கையிடல் சட்டத்தின் (24, 25, 26 பிரிவுகள்) ஆகிய விசேட சட்டங்கள், வங்கித்தொழில் சார்ந்த சட்டங்கள் (உதா: 1988 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க வங்கித் தொழில் சட்டத்தின் 57, 67 பிரிவுகள்) குற்றவியல் நடவடிக்கைமுறை சட்டக்கோவை மற்றும் 1870 ஆம் ஆண்டின் சுங்கக் கட்டளைச்சட்டம் (உதா. சுங்கக் கட்டளைச் சட்டத்தின் பிரிவு 125) போன்ற சட்டங்கள் ஊடாக குறிப்பிட்ட சொத்துக்களைக் கைப்பற்றுதல் தொடர்பான விடயங்களை கையாளப்படுகின்றன. குற்றவியல் நடைமுறைச் சட்டத்தின் பிரிவுகள் 60 மற்றும் 61, பிடியாணை பிறப்பிக்கப்பட்டு தலைமறைவாகி உள்ள ஒருவரின் சொத்துக்களைப் பறிமுதல் செய்ய நீதிமன்றத்திற்கு இடமளிக்கின்றது.

2. பண மோசடி

பண மோசடி குற்றத்தை பொருத்தமட்டில் 2006 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க பண மோசடி தடுப்புச் சட்டம் சொத்துக்களை முடக்குவதற்கு ஏற்பாடுகளை வழங்குகிறது. (பிரிவு 6 -12).

பணத்தூய்தாக்கல் தடுப்புச் சட்டத்தின் பிரிவு 13-16, பணத்தூய்தாக்கல் குற்றம் சார்ந்த சொத்துக்களை பறிமுதல் செய்தல் பற்றிய விடயத்தை குறித்துரைக்கின்றது.

மேற்கூறப்பட்டவற்றைத் தவிர, குற்றவியல் நடவடிக்கைமுறை சட்டக்கோவை (1979 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க) சட்டத்தின் 29, 426, 431, 433 பிரிவுகளின் கீழ் உள்ள ஏற்பாடுகள் குற்றத்தினால் ஈட்டிக்கொள்ளப்பட்ட வருமானத்தைப் பறிமுதல் செய்வதற்கான தத்துவத்தை வழங்குகின்றது.

சிறுவர் விற்பனை சம்பவத்தில் சந்தேகிக்கப்படும் நபர்களால் பெறப்பட்ட குற்றவியல் வருமானத்தைப் பற்றி புலனாய்வு செய்வதற்காக புலனாய்வு உத்தியோகத்தரால் 'பொலிஸாரின் சட்டவிரோத சொத்துக்கள் மற்றும் புலமைசார் சொத்துக்கள் பற்றிய விசாரணைப் பிரிவின்' உதவியை நாடலாம்.

2.2.4.2 குற்றங்களை அடையாளங் காணுதல் - மனித விற்பனை சார்ந்த கூறுகளை நிறுவுதல்

சந்தேக நபர்களை விசாரிக்கும் மற்றும் விசாரணை செய்யும் புலனாய்வு உத்தியோகத்தர் கடத்தல் குற்றத்தின் கூறுகளை உறுதிப்படுத்துவதற்கு உதவும் விடயத்தில் பின்வருவனவற்றைக் கருத்தில் கொள்ள வேண்டும்.

1. சிறுவர் விற்பனையின் முழு செயன்முறையையும் புரிந்து கொள்ள உதவும் விடயங்கள்: கேள்வி-நிரம்பல் முறைகள், 'மூல மற்றும் புறவயக்காரணிகளை' போன்றவை குற்றவாளிகளுக்கு எதிரான ஆதாரங்களைக் கண்டறிவதில் உதவுவது மட்டுமல்லாமல், மனித விற்பனை குற்றங்களைத் தடுப்பதில் புலனாய்வுத் தகவல்களையும் வழங்கும்:

    1.1 பாதிக்கப்பட்டவர்/ கள் முன்வைத்த முறைப்பாட்டின் பிரகாரம் பாதிக்கப்பட்டவர்/ கள் சந்தேகப்படும் நபர்களை எப்படி அறிந்துகொண்டார்கள்? பாதிக்கப்பட்டவர்களுக்கும் சந்தேக நபர்களுக்கும் இடையே உள்ள தொடர்பு வெளிப்படுத்தப்பட வேண்டும்.

1.2 சந்தேகநபர்கள் கொடுத்த வாக்குமூலத்தின்படி சந்தேகநபர்கள் பாதிக்கப்பட்டவர்களை எப்படி அறிந்துகொண்டார்கள்?

1.3 ஏதேனும் வேறுபாடுகளைக் கண்டறிவதற்கும் மேலதிக விசாரணைகளை மேற்கொள்வதற்கும் மேற்கூறியவை தனித்தனியாகக் குறிப்பிடப்பட வேண்டும்.

1.4 பாதிக்கப்பட்டவர்கள் அல்லது சந்தேக நபர்கள் இந்த சம்பவத்தில் வேறு மேலதிக தரப்பினர் சம்பந்தப்பட்டிருப்பதாக அறிவித்தால், அந்த நபர்களின் அறிக்கையின் சுருக்கம் ''பி ''அறிக்கையுடன் இணைக்கப்பட வேண்டும்.

2. மனித விற்பனை ஆரம்பித்த இடம், இடைமாறல் இடம் மற்றும் சென்றடைதல் இடம் (மூல-போக்குவரத்து-இலக்கு) ஆகியவற்றில் மனித விற்பனையின் முழு ஒழுங்கமைக்கப்பட்ட இணைப்பைக் கண்டறியும் விடயங்கள்.

3. ஏற்புடையதாயின் மூல-போக்குவரத்து-இலக்கு பிரதேசங்களில் உள்ள தொடர்புகள், மூலங்கள் மற்றும் சாட்சிகளை ஆராய்தல்.

4. பாதிக்கப்பட்டவர்களின் போக்குவரத்துக்கு பயன்படுத்தப்படும் வழிமுறைகள், பாதைகள் மற்றும் முறைகளைக் கண்டறிதல்.

5. விற்பனையில் ஈடுபடுபவர்கள் பயன்படுத்தும் தொடர்பாடல் வழிமுறைகளை (கைத்தொலைபேசிகள், இணையம் போன்றவை) கண்டறிதல்.

6. மனித விற்பனையில் ஈடுபடுபவர்களின் செயல்வகையை (அனைத்து தொழிற்பாட்டு வழிகள் மற்றும் வழிமுறைகள், உத்திகள் மற்றும் தந்திரோபாயங்கள், வேலைகளுக்கான வாக்குறுதி கடனாக பணம் வழங்குதல், நெருக்கமான உறவுகள், சமூக ஊடகங்களின் பயன்பாடு போன்றவை) புலனாய்வு செய்தல்.

7. முந்தைய குற்றவியல் தண்டனைகள், குற்றவாளிகளைக் கைது செய்தல் மற்றும் அதே குற்றவாளிகளால் விற்பனை செய்யப்பட்ட பாதிக்கப்பட்டவர்களைக் கண்டறிந்து மீட்டுக் கொள்ளுதல் (குற்றவாளிகள் தண்டிக்கப்படும் சந்தர்ப்பத்தில் அதற்கொத்த/சமமான குற்றங்களுக்கு முந்தைய தண்டனைகள் இருத்தல் தண்டனை வழங்கும் கட்டத்தில் பாதகமான சூழ்நிலையாகக் கருதப்படும் அளவுகோலாக இருக்கும்.)

8. விற்பனையில் ஈடுபடுபவர்களின் நோக்கங்கள்/ எண்ணங்களை/ ஊக்கங்களைப் புரிந்து கொள்ளுதல்.

9. குற்றவாளிகளுக்கிடையேயான நிதிக் கொடுக்கல் வாங்கல்களைக் கண்டறிதல்.

10. சட்டவிரோத சொத்துகளை கண்டறிந்து அதற்கேற்ப நடவடிக்கை எடுத்தல்.

11. பண மோசடி என்ற அம்சம் தொடர்பாக மேலதிக விசாரணைகளை நடாத்துதல்.

இந்தக் கட்டத்தில் புலனாய்வு உத்தியோகத்தர் சிறுவர் விற்பனை செயல்பாட்டிற்குள் செய்யப்பட்ட பல்வேறு குற்றங்களை அடையாளங் காண வேண்டும் என்பதுடன் பொலிசாரின் ''பி அறிக்கையில்'' சந்தேக நபர்களுக்கு எதிரான குற்றச்சாட்டுகளில் சம்பந்தப்பட்ட சட்ட விதிகள் சேர்க்கப்பட வேண்டும். குற்றங்களை நிரூபிக்க போதுமான ஆதாரங்கள் இருப்பதை உத்தியோகத்தர் உறுதி செய்ய வேண்டும். சிறுவர் விற்பனை குற்றத்தின் கூறுகளை மேலும் புரிந்து கொள்ள, இணைப்பு 1 ஐப் பார்க்கவும்.

விசாரணைகள் சிக்கலான சட்டச் சிக்கல்களை உள்ளடக்கியிருந்தால், விசாரணைகள் முடிவதற்கு முன்னரும் தேவைப்பட்டால், சட்டமா அதிபர் திணைக்களத்தின் (AGD) ஆலோசனையை கோரலாம். குற்றவியல் நடைமுறைச் சட்டத்தின் பிரிவு 393, எந்தவொரு விசாரணையையும் வழிநடத்த அல்லது ஆலோசனை வழங்க சட்ட மா அதிபருக்கு அதிகாரம் அளிக்கிறது.

ஒழுங்கமைக்கப்பட்ட குற்றச் செயல்களின் கூறுகள் சந்தேகத்தை தோற்றுவித்தால் அல்லது இயல்பிலேயே விசாரணை சிக்கலானதாக இருக்குமாயின் சிறுவர் மற்றும் மகளிர் பணியகத்தின் பணிப்பாளர், புலானாய்வு திணைக்களத்தின் பணிப்பாளர், மனித விற்பனை தடுப்புப் பிரிவின் உதவி பொலிஸ் அத்தியட்சகர் ஆகியோர் சட்ட ஆலோசனைக்காக சட்ட மா அதிபரை தொடர்புகொண்டு சாத்தியமான மனித விற்பனை/சிறுவர் விற்பனை பற்றிய விசேட விடயங்களை கலந்துரையாடலாம்.

சிறுவர் விற்பனை குற்றத்தின் அடிப்படைக் கூறுகள் விசாரணை உத்தியோகத்தரால் அடையாளங் காணப்பட்டவுடன், சாட்சியங்களில் உள்ள இடைவெளிகளை மதிப்பீடு செய்து, மனித விற்பனை குற்றத்தின் ஆதாரங்களை வலுப்படுத்த நடத்தப்பட வேண்டிய மேலதிக விசாரணைகள் பரிசீலிக்கப்படலாம். மேலும், பொலிசார் வெளிநாட்டு ஆட்சி எல்லைகளிலிருந்து பரஸ்பர

சட்ட உதவியைப் பெறுவதற்கு பின்பற்ற வேண்டிய நடைமுறை குறித்து சட்ட மா அதிபரின் ஆலோசனையைக் கோரலாம்.
**அநேகமாக மனித விற்பனையுடன் செய்யப்படும் பிற குற்றங்கள்:*

தண்டனைச் சட்டக் கோவை

பிரிவு 285	-	ஆபாசமான புத்தகங்கள் விற்பனை.
பிரிவு 286	-	ஆபாசமான புத்தகங்கள் விற்பனை அல்லது பொதுக் கண்காட்சிக்கு வைத்திருத்தல் பிரிவு 286(அ)- சிறுவர்கள் தொடர்பான ஆபாச வெளியீடு கண்காட்சி.
பிரிவு 286(ஆ)	-	ஒரு கணினி மூலம் சேவையை வழங்கும் நபர், சிறுவர் மீது பாலியல் துஷ்பிரயோகம் மேற்கொள்ளுதல் தொடர்பான குற்றத்தை உருவாக்கும் செயலுக்கு அத்தகைய கணினி வசதி பயன்படுத்தப்படாமல் இருப்பதை உறுதிசெய்ய தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் எடுக்க வேண்டும்.
பிரிவு 286(இ)	-	ஒரு வளாகத்தின் பராமரிப்பு, பராமரிப்பு கட்டுப்பாடு அல்லது உடைமை ஆகியவற்றைக் கொண்ட எந்தவொரு நபரும் அத்தகைய வளாகம் ஒரு சிறுவனை துஷ்பிரயோகம் செய்யும் ஒரு செயலை மேற்கொள்வதற்காக அத்தகைய வளாகம் பயன்படுத்தப்படுவதைப் பற்றி ஏதேனும் அறிந்திருந்தால், உடனடியாக அருகிலுள்ள பொலிஸ் நிலையத்தின் பொறுப்பதிகாரிக்கு அவ்விடயத்தை அறிவித்தல் வேண்டும்.
பிரிவுகள் 310 - 329	-	காயத்தை ஏற்படுத்துதல்.
பிரிவுகள் 330 -339	-	தவறான கட்டுப்பாடு மற்றும் தவறான முறையில் தடுத்து வைத்தல்.
பிரிவுகள் 340 - 349	-	குற்றவியல் பலாத்காரம் மற்றும் தாக்குதல்.
பிரிவு 350	-	பிரிவு 350 - கடத்தல்.
பிரிவு 352	-	சட்டப்பூர்வ பாதுகாப்பில் இருந்து கடத்துதல்.
பிரிவு 353	-	கடத்தல்.
பிரிவு 356	-	கடத்தும் நோக்கில் தவறான முறையில் மற்றும் இரகசியமாக ஒரு நபரை தடுத்து வைத்தல்.
பிரிவு 358	-	ஒரு நபரை கடுமையான காயம், அடிமைத்தனத்திற்கு உட்படுத்துவதற்காக கடத்தல்.
பிரிவு 358(அ):	-	கடன் அடிமைத்தனம், கொத்தடிமைத்தனம், பலாத்கார அல்லது கட்டாய உழைப்பு, சேவகம் மற்றும் ஆயுத மோதலில் பயன்படுத்த சிறுவர்களை ஆட்சேர்ப்பு செய்தல்.
பிரிவு 360(அ)	-	விலைப்படுத்தல்
பிரிவு 360(ஆ)	-	சிறுவர்களை பாலியல் நோக்கில் சுரண்டல்.

1941 ஆம் ஆண்டின் 51 ஆம் இலக்க திரிவோர் கட்டளைச் சட்டம்

பிரிவு 9 (1)	-	(அ) தெரிந்தே விபச்சாரத்தின் வருமானத்தில் முழுமையாகவோ அல்லது பகுதியளவிலோ வாழுதல். (ஆ) சட்டவிரோத அல்லது இயற்கைக்கு முரணான உடலுறவில் ஈடுபடுத்தும் குறிக்கோளுடன் நபர்களை முறைசார்ந்த வகையில் பெறுகின்ற நபர் திருத்த முடியாத அயோக்கியன் என கருதப்படுவார்.
பிரிவு 11	-	ஒரு சிறுமியின் மீது ஆசை மயக்கம் அல்லது விபச்சாரம் அல்லது சட்டவிரோதமான பாலியல் அறிவை ஏற்படுத்துதல்.

1889 ஆம் ஆண்டின் 05 ஆம் இலக்க விபச்சார விடுதிகள் கட்டளைச்சட்டம்

பிரிவு 2	-	ஒரு விபச்சார விடுதியை வைத்திருத்தல் அல்லது நிர்வகிப்பது அல்லது உதவுதல்.

சிறுவர் விற்பனை குற்றத்துடன் விசாரிக்கப்படும் பிற சட்டங்களின் கீழ் உள்ள குற்றங்கள்:

1985 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகச் சட்டம்

பிரிவு 62 (1)	-	அங்கீகரிக்கப்படாத ஆட்சேர்ப்பு.
பிரிவு 62 (2)	-	உரிமம் இல்லாமல் செயற்படுதல்.
பிரிவு 63 (ஆ)	-	போலியாக்கம் அல்லது வெளியேற தூண்டுதல்.
பிரிவு 64	-	அங்கீகரிக்கப்படாத கட்டணம் அறவிடல்.
பிரிவு 67 அ	-	பொது தண்டனை.
பிரிவு 67 ஆ	-	சட்டத்தின் கீழ் ஒரு குற்றத்திற்கு உதவுதல் மற்றும் துணை புரிதல்.
பிரிவு 68	-	63 மற்றும் 64 பிரிவின் கீழான குற்றத்தை மீண்டும் செய்தல்.

1948 ஆம் ஆண்டின் 20 ஆம் இலக்க குடிவருவோர் மற்றும் குடியகல்வோர் கட்டளைச் சட்டம்

45(அ)(1)	-	சட்டத்திற்கு முரணாக நபர்களை இலங்கைக்குள் கொண்டுவருதல் பற்றிய குற்றம்.
45(1)(ஆ)	-	இந்தச் சட்டத்தின் ஏற்பாடுகளை மீறும் வகையில் இலங்கையை விட்டு வெளியேறுதல்.
45(இ)(1)	-	நபர்கள் இலங்கையை விட்டு வெளியேற வழிவகை செய்தல் (2006 ஆம் ஆண்டின் 31 ஆம் இலக்க சட்டத்தால் திருத்தப்பட்ட வகையில்)

2.2.4.3 சந்தேக நபர்கள் மற்றும் கைது செய்யப்பட்டவர்களை விசாரணை செய்தல்

1979 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க குற்றவியல் நடைமுறைச் சட்டத்தின் இன் கீழ் ஒரு பொலிஸ் உத்தியோகத்தர் சந்தேக நபர்களைக் கைது செய்ய வேண்டும்.

சிறப்பு கரிசனைகள்;

- புலனாய்வு உத்தியோகத்தர்கள் இரண்டு வகையான தனிநபர்களைக் கையாள நேரிடலாம் - சந்தேக நபர்கள் மற்றும் பாதிக்கப்பட்டவர்கள்.
- பாதிக்கப்பட்ட சிறுவர்கள் அனைத்து சந்தர்ப்பங்களிலும் சந்தேக நபர்களிடமிருந்து பிரிக்கப்படுவது முக்கியமானதாகும்.
- 2018 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க தண்டனைச் சட்டக் கோவை திருத்தச் சட்டத்தின் 76 ஆவது பிரிவிற்கமைய, எட்டு வயதுக்கு மேற்பட்ட மற்றும் பன்னிரெண்டு வயதுக்குட்பட்ட சிறுவர்களினால் செய்யப்படும் எந்தவொரு குற்றமும் ஒரு குற்றமாக கருதப்படுவது இல்லையென்பதுடன் இதற்கான காரணம் அந்தச் சந்தர்ப்பத்தில் பிள்ளை தனது நடத்தையின் தன்மை மற்றும் விளைவுகளைத் தீர்மானிக்க போதுமான புரிதல் முதிர்ச்சி அடையவில்லை என்பதாகும்.
- 12 வயதுக்கு மேற்பட்ட சிறுவர் மீது குற்றப் பொறுப்பு சுமத்துப்படுகின்றது. சிறுவர் 12 முதல் 14 வயது வரை இருக்கும் பட்சத்தில், அத்தகைய குற்றப் பொறுப்பை ஏற்றுக்கொள்வதற்காக, பிள்ளையின் உடல் மற்றும் மன நிலையைக் கண்டறியும் பொருட்டு நீதிபதி சிறப்பு மருத்துவக் குழுவிற்கு சிறுவரை ஆற்றுப்படுத்துவார்.
- 2018 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க குற்றவியல் நடைமுறை (திருத்தம்) சட்டத்தின் பிரிவு 122அ, பன்னிரெண்டு வயதுக்கு மேற்பட்ட மற்றும் பதினான்கு வயதுக்குட்பட்ட சிறுவர் செய்ததாகக் கூறப்படும் குற்றத்தின் போது மருத்துவப் பரிசோதனை தொடர்பான ஏற்பாடுகளை குறித்துரைக்கின்றது.

எவ்வாறாயினும், மனித விற்பனை சந்தர்ப்பங்களில், சந்தேகத்திற்கிடமான சிறுவர் குற்றவாளிகள் உண்மையில் கட்டாயப்படுத்தப்படுகிறார்கள், ஏமாற்றப்படுகிறார்கள், அச்சுறுத்தப்படுகிறார்கள், மனித விற்பனை தொடர்பான குற்றங்களைச் செய்ய கட்டாயப்படுத்தப்படுகிறார்கள் என்பதை கவனத்தில் கொள்ள வேண்டும் என்பதுடன் பொலிஸ் உத்தியோகத்தர்கள் பிள்ளை உண்மையில் அத்தகைய குற்றங்களைச் செய்ய போதுமான அறிவு அல்லது எண்ணம் கொண்டிருக்கவில்லை என்பதை மதிப்பீடு செய்வதற்காக தேவையான தகவல்களை திரட்டுவதற்கு அனைத்து சாத்தியமான முயற்சிகளையும் மேற்கொள்ளுதல் வேண்டும்.

சந்தேக நபர்களை விசாரணை செய்வதற்குத் திட்டமிடுதல்

தீர்மானிக்கவும்:

- விசாரிக்கப்பட வேண்டிய சந்தேக நபர்களின் எண்ணிக்கை.
- அவற்றை நடாத்துவதற்கு உள்ள நேர்காணல் நடத்துபவர்களின் எண்ணிக்கை.
- ஆராயப்பட வேண்டிய குற்றங்களின் எண்ணிக்கை.
- உள்வாங்க வேண்டிய குற்றத்தின் கால அளவு.
- ஆராயப்பட வேண்டிய சாட்சியங்களின் பிரச்சினைகள் சார்ந்த சிக்கலான தன்மை.
- சந்தேக நபர்கள் பொலிஸ் காவலில் இருக்கக்கூடிய காலம்.

*** சந்தேக நபர்கள் குறைந்தபட்சம் 24 மணிநேரம் காவலில் வைக்கப்படுவார்கள். ஆயினும், தடுப்புக் காவல் கட்டளையின் கீழ் 72 மணிநேரம் வரை இது நீட்டிக்கப்படலாம்.*

2.2.4.4 ஆதாரங்களின் சுருக்கத்தைக் கொண்டு B அறிக்கையைத் தயாரித்தல்

நீதிவானிடம் சமர்ப்பிக்கப்படும் பி அறிக்கையில் பின்றும் விடயங்கள் இருக்க வேண்டும்:

- முறைப்பாட்டின் சுருக்கமான சாராம்சம்.
- ஒரு பிள்ளை விற்பனை செய்யப்பட்டதென, சுரண்டலுக்கு ஆளாக்கப்பட்டுள்ளதென, வாங்கப்பட்டதென, பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தப்பட்டுள்ளதென அல்லது கடுமையான பாலியல் துஷ்பிரயோகத்திற்கு உட்பட்டுள்ளதென கண்டறியப்பட்டால் அவை உள்ளடங்கலாக பொலிசாரால் சேகரிக்கப்பட்ட ஆதாரங்களின் சுருக்கங்கள்.

2.2.4.5 நீதவான் முன்னிலையில் ஆஜர்படுத்துதல் ('B' அறிக்கையுடன்)

சந்தேகநபர்கள் குற்றமிழைத்தமைக்கு போதிய சாட்சியங்கள் இருப்பின் சந்தேகநபர்கள் நீதிவான் முன்னிலையில் ஆஜர்படுத்தப்பட வேண்டும். குற்றவியல் நடைமுறைச் சட்டத்தின் விதிகளின் கீழ் நடைமுறைகள் பின்பற்றப்பட வேண்டும். (பிரிவு 116-120).

2.2.4.6 விளக்கமறியல் மற்றும் பிணை வழங்குதல்

1979 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க குற்றவியல் நடைவடிக்கைமுறை சட்டக்கோவை சட்டத்தின் 264 ஆம் பிரிவு சந்தேக நபர்களை விளக்கமறியலில் வைப்பதற்கான நடைமுறைகளைக் குறித்துரைக்கின்றது.

பிரிவு 115 பிரிவு 159 பிரிவு 239 அல்லது பிரிவு 263 இன் கீழ் வழங்கப்படும் ஒவ்வொரு எழுத்தாணையின் தடுப்பு, குற்றச்சாட்டு அல்லது விளக்கமறியல் ஆகியவை பரிந்துரைக்கப்பட்ட படிவத்தில் இருக்க வேண்டும் என்பதுடன் நீதிவான் அவர்களினால் கையொப்பமிடப்பட வேண்டும். மேலும் அத்தகைய எழுத்தாணை சிறைச்சாலைகள் திணைக்களத்தின் உத்தியோகத்தரிடம் ஒப்படைக்கப்படும்.

குற்றவியல் நடைவடிக்கைமுறை சட்டக்கோவை சட்டம் மற்றும் 1997 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க பிணைச் சட்டம் ஆகியவற்றுக்கு அமைவாக பிணை வழங்கப்பட வேண்டும். குற்றவியல் நடைமுறைச் சட்டத்தில் உள்ள அட்டவணையொன்றின் ஊடாக பிணை வழங்கக்கூடிய மற்றும் வழங்க முடியாத குற்றங்கள் குறித்துரைக்கப்பட்டுள்ளன. பிணைச் சட்டத்தின் பிரிவு 14 இல் குறிப்பிடப்பட்டுள்ள ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட நிபந்தனைகள் பொருந்துமாயின் சந்தேக நபரை விளக்கமறியலில் வைக்க நீதிமன்றத்திற்கு கோரிக்கை விடுக்கப்பட வேண்டும்.

2.2.4.7 வெளிநாடுகளில் உள்ள சந்தேக நபர்களைக் கண்டறிதல் மற்றும் கைது செய்தல்

சிறுவர் விற்பனை சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேக நபர் ஒருவர் வெளிநாட்டில் இருப்பது கண்டறியப்பட்டு, அவரின் இருப்பிடம் கண்டறியப்பட வேண்டும் என்றால், INTERPOL அதன் வலையமைப்பின் ஊடாக அத்தகைய விடயங்களை இனங்காண்பதை வசதிப்படுத்த முடியும்.

பொலிஸ் சுற்றறிக்கை எண். CRTM_1478 (2019 ஒற்றோஓபர் 24 ஆம் திகதியிடப்பட்ட RTM890) இன் கீழ், எந்தவொரு பொலிஸ் நிலையமும் அல்லது சட்ட அமுலாக்க நிறுவனமும் சிரேஸ்ட பொலிஸ் அத்தியட்சகர் பிரிவு (மூத்த கண்காணிப்பாளர்) ஊடாக DIG CID அல்லது பணிப்பாளர் CID அவர்களின் விசாரணைகளுக்கு INTERPOL Colombo தொடர்பு கொள்ள வேண்டும். இந்த

சுற்றறிக்கைக்கு அமைய, சட்ட அமுலாக்க உத்தியோகத்தர்கள் மற்றும்/அல்லது அதிகாரிகள் பின்வரும் நிகழ்வுகளில் உதவியை நாடலாம்;

1. 'தேடப்படும் நபர்' பற்றிய தகவல்களைச் சேகரித்தல்/கண்டறிதல்,
2. அத்தகைய 'தேடப்படும் நபரை' கைது செய்தல், தடுத்து வைத்தல் நடமாட்டத்தை கட்டுப்படுத்துதல்.
3. விசாரணைகளுடன் தொடர்புடையதாக ஒரு நபர் அல்லது ஒரு பொருளின் இருப்பிடத்தைக் கண்டறிவதற்கு/ ஆராய்வதற்கு
4. ஒரு நபரின் விசாரணைகள் அல்லது குற்றச் செயல்கள் தொடர்பாக தகவல்களை பகிர்தல்/வழங்குதல் அல்லது பெறுதல்.
5. ஒரு நபர் அல்லது ஒரு சம்பவம் அல்லது ஒரு விடயம் அல்லது குற்றச் செயல்களுடன் தொடர்புடைய ஏதேனும் திட்டம்/உபாயம்/தந்திரம் பற்றிய எச்சரிக்கையை தெரிவித்தல் அல்லது வெளியிடுதல்.
6. அடையாளம் காணப்படாத இறந்த உடல் அல்லது உயிருடன் இருக்கும் நபரை அடையாளங் காணுதல்/கண்டறிதல்.
7. தடயவியல் பகுப்பாய்வு நடாத்துதல்.
8. பாதுகாப்பு தொடர்பான தேடல்களை மேற்கொள்ளுதல்.
9. குற்றவியல் வலையமைப்புகள், போக்குகள் மற்றும் அச்சுறுத்தல்களை அடையாளங் காணுதல்.
10. NCMEC மற்றும் ICSE தரவுத்தளங்களின் உதவியைப் பெற்றுக்கொள்ளுதல்.

INTERPOL ஆல் பின்வரும் அறிவிப்புகளை வெளியிட முடியும் என்பதுடன் இது நாடுகள் உலகெங்கிலும் விழிப்பூட்டல்கள் மற்றும் தகவல்களுக்கான கோரிக்கைகளை பகிர உதவுகிறது. இவை ஒத்துழைப்புக்கான சர்வதேச கோரிக்கைகள் அல்லது விழிப்பூட்டல்களாக இருப்பதுடன் இவை உறுப்பு நாடுகளில் உள்ள பொலிசாருக்கு முக்கியமான குற்றம் தொடர்பான தகவல்களைப் பகிர்ந்து கொள்ள அனுமதிக்கின்றது. இத்தகைய அறிவிப்புகள் வெவ்வேறு நோக்கங்களின் அடிப்படையில் வண்ணக் குறியீடுகளை கொண்டவையாக அமைவதுடன் அவை பின்வருமாறு:

சிவப்பு அறிவிப்பு	வழக்குத் தொடர அல்லது தண்டனை அனுபவிக்க வேண்டிய நபர்களின் இருப்பிடத்தை கண்டறிந்து கைது செய்தல்
நீல அறிவிப்பு	குற்றவியல் விசாரணை தொடர்பான ஒரு நபரின் அடையாளம், இருப்பிடம் அல்லது செயல்பாடுகள் பற்றிய மேலதிக தகவல்களைச் சேகரித்தல்,
பச்சை அறிவிப்பு	ஒரு நபர் பொதுப் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாகக் கருதப்படுமிடத்து அத்தகைய நபரின் குற்றச் செயல்கள் குறித்த எச்சரிக்கையை வழங்குதல்
மஞ்சள் அறிவிப்பு	காணாமல் போனவர்களை, பெரும்பாலும் சிறார்களைக் கண்டறிய உதவுதல் அல்லது தங்களை அடையாளம் காண முடியாத நபர்களை அடையாளம் காண உதவுதல்
கறுப்பு அறிவிப்பு	அடையாளம் காணப்படாத உடல்கள் பற்றிய தகவல்களைப் பெற்றுக்கொள்ளுதல்
செம்மஞ்சள் அறிவிப்பு	ஒரு நிகழ்வு, ஒரு நபர், ஒரு பொருள் அல்லது பொதுப் பாதுகாப்புக்கு ஒரு தீவிரமான மற்றும் உடனடி அச்சுறுத்தலைக் குறிக்கும் ஒரு செயன்முறையை பற்றி எச்சரிப்பதற்கு
ஊதா அறிவிப்பு	செயன் முறை, பொருட்கள், சாதனங்கள் மற்றும் குற்றவாளிகள் பயன்படுத்தும் மறைக்கும் முறைகள் பற்றிய தகவல்களைத் தேடுவதற்கு அல்லது வழங்குவதற்கு

பரஸ்பர சட்ட உதவி

குறிப்பு ; பரஸ்பர சட்ட உதவிக்கான கோரிக்கை எழுத்து மூலமாக நீதி அமைச்சின் செயலாளரிடம் முன்வைக்கப்படுவதுடன் அவர் அத்தகைய கோரிக்கையை வெளிநாட்டலுவல்கள் அமைச்சிற்கு அடுத்த கட்ட நடவடிக்கைகளுக்கு அனுப்புவார். இந்த கேரிக்கையானது சட்டமா அதிபர் திணைக்களத்தின் உதவியுடன் ஒருங்கிணைக்கப்பட வேண்டும்.

சந்தேக நபர்கள் அல்லது பாதிக்கப்பட்டவர்கள் வெளிநாட்டில் இருந்தால், அவர்கள் திருப்பி அனுப்பப்பட வேண்டும் என்றால், 2002 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க குற்றவியல் விவகாரங்களில் பரஸ்பர உதவிச் சட்டத்தின் விதிகளின் கீழ் நடைமுறைகள் பின்பற்றப்பட வேண்டும்.

எவ்வாறாயினும், குற்றத்தால் பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் சாட்சிகளுக்கான உதவி மற்றும் பாதுகாப்புச் சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ், வெளிநாட்டில் இருக்கும் பாதிக்கப்பட்டவரின் வாக்குமூலம் அவசியமானால், சம்பந்தப்பட்ட தூதரகம் அல்லது தூதரக அலுவலகத்துடன் ஒருங்கிணைந்து வீடியோ பதிவு மூலம் இந்த அறிக்கை பதிவு செய்யப்படலாம்.

2018 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க சட்டத்தால் திருத்தப்பட்ட 2002 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க குற்றவியல் விவகாரங்களில் பரஸ்பர உதவிச் சட்டத்தின் பிரிவு 2 (1), பரஸ்பர உதவிச் சட்டத்தினால் உதவிகளை கோரக்கூடிய பின்வரும் நாடுகள்/ அமைப்புகளை பரிந்துரைத்துள்ளது:

- ஊழலுக்கு எதிரான ஐக்கிய நாடுகளின் உடன்படிக்கையின் தரப்புகள்.
- இணையவழிக்குற்றங்கள் தொடர்பான ஐரோப்பிய ஒன்றியத்தின் தரப்புகள்.
- அணிசேரா நாடுகளின் உறுப்பினர்கள்.
- குற்றவியல் விவகாரங்களில் பரஸ்பர உதவிக்காக இலங்கையுடன் ஒப்பந்தம் செய்து கொண்டுள்ள நாடுகள்.
- ஊழலுக்கு எதிரான ஐக்கிய நாடுகளின் உடன்படிக்கையின் தரப்புகள்.
- இணையவழி குற்றங்கள் தொடர்பான ஐரோப்பிய பேரவை உடன்படிக்கையின் தரப்புகள்.
- அணிசேர நாடுகளின் உறுப்பினர்கள்.
- குற்றவியல் விவகாரங்களில் பரஸ்பர உதவிக்காக இலங்கையுடன் ஒப்பந்தம் செய்து கொண்டுள்ள எதேனும் நாடு.
- இலங்கையுடன் எந்தவொரு உடன்படிக்கையிலும் ஈடுபடாத ஒரு நாடாக இருந்த போதிலும் இறையாண்மையுள்ள நாடுகளின் நலன்களுக்காக பரஸ்பர அடிப்படையில் இலங்கை உதவிகளை வழங்குவது தொடர்பாக அல்லது பெற்றுக்கொள்வது தொடர்டபாக அமைச்சர் தீர்மானிக்கலாம்.
- ஊழல், பணமோசடி அல்லது பயங்கரவாதத்திற்கு நிதியுதவியளித்தல் ஆகியவற்றை எதிர்த்துப் போராடும் அரசாங்கங்களுக்கிடையிலான அமைப்பின் தேவைப்படக்கூடியவாறான ஏற்பாடுகள் மற்றும் நிபந்தனைகள் மற்றும் பரஸ்பர உத்தரவாதத்தின் அடிப்படையில்.

சட்டத்தின் பிரிவு 3 இந்தச் சட்டத்தின் நோக்கத்தை எடுத்துரைப்பதுடன் இது இலங்கையின் குற்றவியல் மற்றும் தொடர்புடைய விடயங்களில் உதவிகளை வழங்குவதையும் பெறுவதையும் வசதிப்படுத்துகின்றது.

(அ) சாட்சிகள் அல்லது சந்தேக நபர்களின் இருப்பிடங்கள் மற்றும் அடையாளம்.

(ஆ) ஆவணங்கள் பற்றிய அறிவித்தலை வழங்குதல்.

(இ) சாட்சிகள் அல்லது சந்தேகத்திற்குரிய நபர்களின் விசாரணை மற்றும் நேர்காணல்.

(ஈ) சான்றுகள், ஆவணங்கள், பிற சாதனங்கள் அல்லது தகவல்களை வழங்குதல் மற்றும் பெறுதல் (உ) தேடுதல் மற்றும் கைப்பற்றுதலுக்கான கோரிக்கைகளை நிறைவேற்றுதல்.

(ஊ) காவலில் உள்ள ஒருவரை சாட்சியாக ஆஜராவதற்காக தற்காலிகமாக மாற்றுதல்.

(எ) சாட்சிகள் தனிப்பட்ட ரீதியில் ஆஜராகுவதை வசதிப்படுத்தல்.

(ஏ) பதிப்புரிமை மீறல் உட்பட புலமைசார் சொத்துக்களின் குற்றவியல் மீறல்.

(ஐ) கணினி அமைப்பின் அமைவிடம் அல்லது குற்றச் செயல்களுடன் தொடர்புடைய பிற சொத்து தொடர்பான தகவல்கள்.

(ஒ) அபராதம் செலுத்துவதற்கான ஏதேனும் உத்தரவுகளை அமுல்படுத்துதல்.

(ஓ) சம்பந்தப்பட்ட விடயங்களுடன் தொடர்புடைய சட்டங்களின்படி சொத்து பறிமுதல் அல்லது முடக்கம்.

(ஔ) இணையம், தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம், ''க்ளவுட் '' தொழில்நுட்பம், கணினி செயற்பாடுகள், ''ப்ளொக்'' செயின் தொழில்நுட்பம் மற்றும் டிஜிட்டல் பண பரிமாற்றம் உள்ளிட்ட பிற கணினி வலையமைப்புகள் மூலம் செய்யப்படும் குற்றங்களைக் கண்டறிதல்.

(க) எந்தவொரு வெளிநாட்டு அரச அதிகாரி அல்லது சர்வதேச அமைப்பின் அரச அதிகாரி மற்றும் அவர்களுக்குரிய பதிலாட்கள் மற்றும் பயனாளிகளுக்கான இலஞ்சம்.

(ඟ) சேமிக்கப்பட்ட கணினித் தரவை விரைவாகப் பாதுகாத்தல் மற்றும் பாதுகாக்கப்பட்ட போக்குவரத்துத் தரவு மற்றும் தரவுத் தக்கவைப்பு ஆகியவற்றை விரைவாக வெளிப்படுத்துதல்.

(ச) குற்ற நடவடிக்கையின் மூலம் ஈட்டப்பட்ட வருமானங்கள் காணப்படும் இடத்தைக் கண்டுபிடித்தல்.

(ஞ) நீதித்துறை நடவடிக்கையில் ஏற்றுக்கொள்ளக்கூடிய குறிப்பிட்ட அங்கீகாரத்தின் மூலம் ஒரு குறிப்பிட்ட நாட்டில் அல்லது குறிப்பிட்ட நிறுவனத்திலிருந்து பெறப்பட்ட ஆவணச் சான்றுகளின் பயன்பாடு.

(ண) வீடியோ கலந்துரையாடல் தொழில்நுட்பத்தின் மூலம் ஒரு குறிப்பிட்ட நாடு அல்லது குறிப்பிட்ட நிறுவனத்திடம் இருந்து நெறிப்படுத்தப்படும் சாட்சியங்களின் ஏற்றுக்கொள்ளப்படும் தன்மை மற்றும் பொருந்தக்கூடிய தன்மை.

கடத்தல் மீட்டொப்படைப்பு

1977 ஆம் ஆண்டின் 08 ஆம் இலக்க கடத்தல் மீட்டொப்படைப்பு சட்டமே இலங்கையில் உள்ள புறத்தொப்படைத்தல் விடயத்தில் முக்கியமான சட்டமாக இருக்கின்றது. 2022.07.22 ஆம் திகதிய 2289/43 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தலுக்கமைய இலங்கையில் புறத்தொப்படைத்தலுக்கான மத்திய அதிகாரம் பாதுகாப்பு அமைச்சுக்குரியதாக காணப்படுகின்றது. இதற்கமைவாக, இராஜதந்திர வழிகள் மூலம் புறத்தொப்படைத்தலுக்கான கோரிக்கைகள் பாதுகாப்பு அமைச்சிடம் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

2.3 கட்டம் மூன்று - வழக்கு விசாரணை

2.3.1 குற்றச்சாட்டுகளை உருவாக்குதல் - சட்டமா அதிபர் திணைக்களத்தின் அறிவுறுத்தல்கள்

சாத்தியமான மனித விற்பனை சம்பவம் தொடர்பாக ஆலோசனையைப் பெறுவதற்கான முறைசார்ந்த நடைமுறை யாதெனில் பொலிசாரின் பணிப்பாளர் - சட்டம் அவர்களினால் எழுத்துப்பூர்வமாக சட்ட மா அதிபருக்கு அறிவித்தல் ஆகும்.

சட்டமா அதிபர் திணைக்களத்திற்கு பொழிப்பு கிடைத்த பின்னர் சட்ட மா அதிபர் திணைக்களத்தில் கோப்பு ஒப்படைக்கப்பட்ட உத்தியோகத்தர், விசாரணை உத்தியோகத்தர்களுடன் கலந்தாலோசிப்பது அவசியம் என்று கருதினால் விசாரணையாளர்களை கலந்தாலோசனைக்கு அழைக்கலாம்.

**குறிப்பு : குற்றவியல் நடைமுறைச் சட்டத்தின் பிரிவு 393- சட்ட மா அதிபர் எந்த விசாரணைக்கும் வழிகாட்டலாம்/ ஆலோசனை வழங்கலாம்.

ஏதேனும் சம்பவங்களல் ஒழுங்கமைக்கப்பட்ட குற்றத்தின் கூறுகள் உள்ளதென சந்தேகிக்கப்படுமிடத்தோ அல்லது அவை சிக்கலான தன்மையைக் கொண்டிருக்கும் சந்தர்ப்பங்களிலோ, சிறுவர் மற்றும் மகளிர் பணியகத்தின் பணிப்பாளர், புலனாய்வுத் துறையின் பணிப்பாளர், மனித விற்பனைத் தடுப்புப் பிரிவின் உதவி அத்தியட்சகர் ஆகியோர் சட்ட ஆலோசனைக்காக சட்ட மா அதிபரைத் தொடர்புகொண்டு சாத்தியமுள்ள மனித விற்பனை/சிறுவர் விற்பனை சம்பவங்கள் பற்றிய விசேட விடயங்களைப் பற்றி கலந்துரையாடலாம்.

சட்டமா அதிபர் திணைக்களத்தின் வகிபாகம்

- ஒவ்வொரு சம்பவத்தின் விடயங்கள் மற்றும் சூழ்நிலைகளைப் பொறுத்து பின்வரும் விடயங்கள் தொடர்பாக சட்டமா அதிபரின் ஆலோசனைகள் வழங்கப்படலாம்:

1. விசாரிக்கப்பட வேண்டிய சம்பவத்தில் காணப்படும் மனித விற்பனைக் கூறுகள்/ சம்பந்தப்பட்ட சட்ட ஏற்பாடுகள்.
2. புரியப்பட்டுள்ள பிற குற்றங்கள்.
3. நிபுணர் அறிக்கைகளுக்கான கோரிக்கை: CCTV/ SOCO/JMO/DNA/ குரல் அடையாளம்.
4. புரியப்பட்ட குற்றங்களுக்கு ஏற்ப சேகரிக்க வேண்டிய சாட்சியங்களின் வகைகள்.
5. தொலைபேசி பதிவுகளைப் பெறுதல். (நீதிமன்ற உத்தரவின்றி புலனாய்வுத் திணைக்களத்தின் பணிப்பாளர் பெறலாம்)
6. தேவைப்படுமிடத்து பாதிக்கப்பட்டவர்/சாட்சிகளிடமிருந்து மேலதிக வாக்குமூலங்களைப் பெறுதல்.
7. கிடைக்கக்கூடிய ஆதாரங்களை மதிப்பாய்வு செய்தபின், தேவைப்பட்டால் மேலதிக விசாரணைகளை மேற்கொள்ளுமாறு சட்ட மா அதிபர் திணைக்களம் பொலிசாருக்கு ஆலோசனை வழங்கும்.

- மனித விற்பனை குற்றச்சாட்டை நிறுவ கிடைக்கக்கூடிய சான்றுகள் போதுமானதாக இருந்தால், சட்ட மா அதிபர் திணைக்களம் உயர் நீதிமன்றத்திற்கு குற்றப்பத்திரிகையை அனுப்பும்.

- முடிக்கப்பட்ட விசாரணையில் உள்ள ஆதாரங்கள் மனித விற்பனை தொடர்பாக எவரேனும் நபரை குற்றம் சாட்டுவதற்குப் போதுமானதாக இல்லாமலும், சம்பந்தப்பட்ட குற்றங்களுக்காக எவருக்கும் எதிராக குற்றப்பத்திரிகை தாக்கல் செய்வதற்கு போதுமானதாக இல்லாமலும் இருக்குமிடத்து விடுவிப்பதற்கான ஆவணங்கள் சட்டமா அதிபர் திணைக்களத்தால் சம்பந்தப்பட்ட நீதிவான் நீதிமன்றத்திற்கு அனுப்பப்படும்.

விசாரணை உத்தியோகத்தரின் வகிபாகம்

சம்பவத்தின் விடயங்கள் பற்றிய முழுமையான ஆவணக்கோப்பை சட்ட மா அதிபருக்கு சமர்ப்பித்தல்.

பாதிக்கப்பட்டவர் மன அழுத்தத்தில் இருந்தால் அல்லது ஏதேனும் மனநலப் பிரச்சினைகளைக் காட்டினால், அச்சுறுத்தலில் இருந்தால், ஏதேனும் ஒழுங்கமைக்கப்பட்ட குற்றங்களுடன் தொடர்புகளைக் கொண்டிருந்தால், அல்லது விசாரணை வரையிலும் அதற்கு பின்னரும் பாதிக்கப்பட்டவருக்குத் தேவைப்படும் விசேட பராமரிப்பு மற்றும் கவனிப்பு போன்ற ஏதேனும் சிறப்புக் கரிசனைகள் இருப்பின் அது குறித்து சட்ட மா அதிபருக்கு தெரியப்படுத்துதல் வேண்டும்.

சந்தேக நபரால் அல்லது நபர்களால் பாதிக்கப்பட்டவர்கள் அல்லது சாட்சியங்களுக்கு ஏதேனும் அச்சுறுத்தல் இருந்தால், 2023 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க குற்றத்தால் பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் சாட்சிகளுக்கான உதவி மற்றும் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் தனித்தனியாக சம்பந்தப்பட்ட விபரங்கள் அறிவிக்கப்படுதல் வேண்டும்.

**விசாரணையின் போது மேலதிக சந்தேக நபர்கள் பொலிசாரினால் அடையாளம் காணப்பட்டால், தேவைப்படும் பட்சத்தில் அத்தகைய சந்தேக நபர்களின் அடையாளத்தை உறுதிப்படுத்துவதற்கு தேவையான DNA அறிக்கைகளுக்காக அரசாங்க பகுப்பாய்வாளரிடம் விடயத்தை ஆற்றுப்படுத்தல் வேண்டும்.

2.3.2 குற்றப்பகர்வு

மனித விற்பனை மற்றும் சிறுவர் விற்பனை ஆகியவை குற்றப்பகர்வு தாக்கல் செய்யக்கூடிய குற்றங்களாகும் என்பதுடன் மேல் நீதிமன்றத்தில் சட்ட மா அதிபரினால் வழக்குத் தொடரப்படும்.

1979 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க குற்றவியல் நடைமுறைச் சட்டத்தின் பிரிவு 162 இன் படி, மேல் நீதிமன்றத்தில் முன்வைக்கப்படும் ஒவ்வொரு குற்றப்பகர்வும் பின்வருவனவற்றைக் கொண்டிருத்தல் வேண்டும்.

1. குற்றவழக்கினால் அழைப்பதற்கு எதிர்பார்க்கப்படும் சாட்சிகளின் பட்டியல்.
2. விசாரணையில் சமர்ப்பிக்கப்படவிருக்கும் ஆவணங்கள் மற்றும் பொருட்களின் பட்டியல்.
3. பூர்வாங்க விசாரணை நடைபெற்றிருந்தால் அத்தகைய, விசாரணையின் பதிவு மற்றும் ஆவணங்களின் சான்றளிக்கப்பட்ட பிரதிகள் மற்றும் விசாரணை நடந்திருந்தால் விசாரணை நடவடிக்கைகள்.
4. பூர்வாங்க விசாரணை நடைபெற்றிருக்காவிடின் குற்றம் சாட்டப்பட்டவர் மற்றும் பட்டியலிடப்பட்டுள்ள சாட்சிகளால் பொலிசாருக்கு அளிக்கப்பட்ட வாக்குமூலங்களின் பிரதிகள்;.
5. குற்றப்பகர்வில் பட்டியலிடப்பட்டுள்ள அனைத்து அறிக்கைகள் மற்றும் குறிப்புகளின் பிரதிகள்;.
6. வழக்கின் விசாரணையின் போது நடத்தப்பட்ட அடையாள அணிவகுப்புகளின் குறிப்புகளின் பிரதிகள்.
7. குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவையின் 127 ஆவது பிரிவின் கீழ், குற்றம் சாட்டப்பட்டவர் மற்றும் குற்றப்பகர்வில் பட்டியலிடப்பட்டுள்ள சாட்சிகளினாலும் நீதிவான் முன்னிலையில் அளிக்கப்பட்ட ஏதேனும் வாக்குமூலங்களின் பிரதிகள்.

குற்றஞ்சாட்டப்பட்ட சந்தேக நபர் இருக்கும் இடத்தை கண்டறிந்து கைது செய்வதற்கு சிவப்பு அறிவிப்பு மூலம் ஒரு திறந்த பிடியாணை பிறப்பிக்கப்படலாம்.

2.3.3 தனிப்பட்ட சட்ட பிரதிநிதித்துவம்/ சட்ட உதவி

இலங்கையில், ஒரு சிறுவர் மீது பாதிப்பை ஏற்படுத்தும் விடயம் தொடர்பில் குற்றவியல் வழக்கு நடவடிக்கைகளின் அத்தகைய ஒவ்வொரு சிறுவருக்கும், குற்றவியல் நடவடிக்கைகளில் அரசின் செலவில் அரசால் வழங்கப்படும் சட்ட உதவியைப் பெற உரிமை உண்டு என்பதுடன் அவ்வாறு இல்லாதவிடத்து 2007 ஆம் ஆண்டின் 56 ஆம் இலக்க சிவில் மற்றும் அரசியல் உரிமைகள் தொடர்பான சர்வதேச உடன்படிக்கையின் பிரிவு 5(இ) மற்றும் 5(ஈ) இன் அடிப்படையில் கணிசனமான அநீதி ஏற்படுகின்றது.

மனித விற்பனையால் பாதிக்கப்பட்ட சிறுவர்களின் நலன்கள் மற்றும் உரிமைகள் நீதித்துறை செயன்முறை முழுவதிலும் பாதுகாக்கப்படுவதை உறுதிப்படுத்தும் பொருட்டு சட்ட ஆலோசனை மற்றும் சட்ட உதவியைப் பெறலாம். 2023 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க குற்றத்தால் பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் சாட்சிகள் சட்டத்தின் 5 (ஈ) பிரிவானது தேவைப்படுமிடத்து அரசிடம் இருந்து சட்ட உதவிகளைப் பெற பாதிக்கப்பட்டவர்களுக்கு உரிமை அளிக்கிறது. மேலும், பாதிக்கப்பட்டவர்களுக்கு விசேட உதவி வழங்கும் சர்வதேச மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்கள் மூலமாகவும் சட்ட உதவி பெறப்படலாம்.

இத்தகைய தனிப்பட்ட சட்டப் பிரதிநிதித்துவமானது பாதிக்கப்பட்ட சிறுவர் அல்லது அவர்களது குடும்பங்களின் ஏதேனும் அச்சுறுத்தல்கள் அல்லது பிற பாதுகாப்புத் தேவைகளைப் பற்றி புலனாய்வாளர்கள் மற்றும் வழக்குத் தொடருநர்களுக்குத் தெரிவிக்கும்.

குற்றம் சாட்டப்பட்டவருக்கும் சட்டப்பூர்வ பிரதிநிதித்துவத்திற்கான உரிமை உள்ளதுடன் குற்றம் சாட்டப்பட்டவருக்கு அதற்கான தொகையை செலுத்த இயலாதவிடத்து சட்ட உதவி ஆணைக்குழுவின் மூலம் அரசிடமிருந்து சட்ட உதவிச் சேவைகளைப் பெறலாம்.

2.3.4 வழக்கு விசாரணை செயன்முறை

பாதிக்கப்பட்டவரின் தயார் நிலை

பாதிக்கப்பட்ட பிள்ளை வழக்கு விசாரணை நிலைக்கு நன்கு தயாராக இருப்பது முக்கியமானதாகும். ஆலோசகர்கள், நன்னடத்தை உத்தியோகத்தர்கள் மற்றும் சிறுவர் பாதுகாப்பு உத்தியோகத்தர்களின் உதவியுடன் பாதிக்கப்பட்டவருக்கு இந்த செயன்முறையின் மூலம் உதவியளிக்க முடியும்.

சிறுவர் விற்பனை சம்பவத்தின் முழுநீதி செயல்முறையும் பாதிக்கப்பட்டவருக்கு வழங்கப்படும் பதிலளிப்பையும் பாதுகாப்பையும் உறுதி செய்வதாகவும் பிள்ளையின் உச்சமட்ட நலன்களை உறுதிப்படுத்துவதாகவும் அமைவது முக்கியமானதாகும். புலனாய்வு மற்றும் நீதிமன்றச் செயன்முறை பாதிக்கப்பட்ட பிள்ளையை மீண்டும் மன அதிர்ச்சிக்குள்ளாக்காமலும் மீண்டும் பாதிப்படையச் செய்யாமலும், மேலதிக தீங்குகளை விளைவிக்காமலும் இருப்பதற்கு பொலிசாரும், வழக்கு விசாரணை மற்றும் புலன்விசாரணையில் ஈடுபட்டுள்ள மற்றைய அனைத்து உத்தியோகத்தர்களும் விசேட முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும்.

பின்பற்ற வேண்டிய படிமுறைகள்:

- **பாதிக்கப்பட்டவர்களுக்கு அவர்களின் சட்ட நிலையை அறிவித்தல்:**
  - அடையாளம் காணப்பட்ட பாதிக்கப்பட்டவர்களுக்கு பாதிக்கப்பட்டவராக அவர்களின் சட்டபூர்வநிலை மற்றும் கிடைக்கக்கூடிய சேவைகள் பற்றிய தகவல்களை வழங்குதல்
  - சட்டத்திற்கமைய, வெளிநாட்டிலுள்ள பாதிக்கப்பட்டவர்கள் - சாட்சிகள் (இலங்கையில் விசா அந்தஸ்து இல்லாமல்) தடுத்து வைக்கப்படாமல் அல்லது நாடு கடத்தப்படாமல் இருக்க அனுமதிக்கும் சட்ட நிலையை உறுதிப்படுத்துதல்.
- **பயமுறுத்தல் மற்றும் அச்சுறுத்தல்களிலிருந்து பாதிக்கப்பட்டவர்களை பாதுகாத்தல் (குற்றவியல் நீதிச் செயல்பாட்டில் ஒத்துழைக்கும் விற்பனையால் பாதிக்கப்பட்டவர்கள் பழிவாங்கல் மற்றும் அச்சுறுத்தலுக்கு உள்ளாகும் பெருமளவு இடர்நிலை காணப்படலாம்)**
  - குற்றத்தால் பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் சாட்சிகள் தொடர்பில் பொலிசார் மற்றும் தேசிய அதிகாரசபை பாதிக்கப்பட்டவர்களின் தனியுரிமையைப் பாதுகாத்தல் உட்பட, பாதிக்கப்பட்டவர்களின் பாதுகாப்பு மற்றும் நல்வாழ்வுக்கான இடர்நிலைகளைக் கண்டறிந்து அவற்றை நிவர்த்தி செய்ய வேண்டும். பாதிக்கப்பட்டவர்கள்/ சாட்சிகளைப் பாதுகாப்பதில் தனியுரிமை மற்றும் இரகசியத்தன்மை முக்கியமானது மட்டுமல்லாமல்

தனியுரிமை மற்றும் இரகசியத்தன்மையைப் பாதுகாக்கும் விடயமானது பாதுகாப்பு மற்றும் நம்பிக்கை பற்றியதொரு சாதகமான உணர்வுகளையும் தோற்றுவிக்கின்றது.

➢ **குற்றவியல் நீதிச் செயற்பாட்டில் பாதிக்கப்பட்டவர்களின் பாதுகாப்பான மற்றும் அர்த்தமுள்ள பங்கேற்பை வசதிப்படுத்துதல்**

மனித விற்பனையால் பாதிக்கப்பட்டவர்கள் தாங்கள் ஊடகங்களால் அடையாளங் காணப்படுதல் அல்லது அவர்களின் விற்பனை செய்வதில் ஈடுபட்டவர்கள்ஃசுரண்டியவர்கள் மத்தியில் பொது நீதிமன்ற அறையில் எழுந்து நின்று அவர்களின் அதிர்ச்சிகரமான தனிப்பட்ட அனுபவங்களைப் பற்றி பேசுதல் என்ற நிலைக்கு உள்ளாவதாலும் சாட்சிகளை வழங்குவதற்கு பெரும்பாலும் தயக்கம் காட்டும் அதேவைளை ஆதாரங்களை வழங்க பயப்படுவார்கள்.

- பொலிஸாரும் மற்றைய நீதிமன்ற உத்தியோகத்தர்களும், விற்பனைக்கு ஆளானவர்கள், சட்ட நடவடிக்கைகளில் பாதுகாப்பாகவும் அர்த்தமுள்ளதாகவும் வயதுக்கு ஏற்றவாறு பங்கேற்க உதவுவதற்கான வழிகளைக் கண்டறிய வேண்டும். அவர்களுடனான அனைத்து இடையீடுகளிலும் செயற்பாடுகளிலும் அவர்களின் துயர அனுபவங்களை உணர்ந்துகொள்ளுதல் மற்றும் கூருணர்வுமிக்கதாக நடந்துகொள்ளுதல் ஆகியவை இதில் அடங்கும்.

- சிறுவர்களுக்கு அவர்களின் உரிமைகள், பாதுகாப்பு செயன்முறைகள் மற்றும் சட்ட நடவடிக்கைகள் குறித்து அவர்களின் வயது மற்றும் வளர்ச்சியின் நிலைக்கு பொருத்தமான மொழி மற்றும் முறையில் தெரிவிக்க வேண்டும்.

- சாட்சியாக இருப்பது பிள்ளையின் நலனுக்காக மேற்கொள்ளப்படுகின்ற ஒரு விடயமென நிர்ணயிக்கப்பட்டால் பாதிக்கப்பட்ட பிள்ளைக்கு சட்டச் செயற்பாட்டில் அவர்களின் நலன்களைப் பாதுகாப்பதற்கும் நேரடி சாட்சியத்திற்கும் அத்துடன் முடிந்தவரை நீதிமன்றத்தில் நேர்காணலுக்கும் மாற்று வழிகள் போன்ற பாதுகாப்புகளைப் பெறுவதை உறுதி செய்வதற்கும் ஒரு உதவி வழங்கும் நபரை வழங்குதல் வேண்டும்.

- பாதிக்கப்பட்டவருக்குத் தேவையான உதவி மற்றும் ஆதரவு கிடைக்கப்பெறுவதை உறுதி செய்வதற்காக பாதுகாப்புச் சேவைகளை வழங்கும் அரச சார்பற்ற நிறுவனங்களின் உதவியை அணுகி ஒருங்கிணைத்தல் வேண்டும்.

தனிப்பட்ட ரீதியிலான வழக்கு விசாரணைகள்

பாலியல் தொடர்பான குற்றங்கள் தொடர்புடையதாக சம்பந்தப்பட்ட குற்றச்சாட்டுகள் காணப்படுமிடத்து அத்தகைய குற்றங்கள் தொடர்பாக தனிப்பட்ட ரீதியிலான வழக்கு விசாரணைகளை நடாத்துவதற்கு இலங்கை அரசியலமைப்பின் 106 ஆவது பிரிவு ஏற்பாடுகளை வழங்கியுள்ளது.

மேலும், சிறுவர்கள் மற்றும் இளம் ஆட்கள் கட்டளைச் சட்டத்தின் பிரிவு 19 (1) நீதிமன்றத்தின் உத்தியோகத்தர்கள் அல்லாத அனைத்து அல்லது எந்தவொரு நபரையும் அல்லது வழக்கின் தரப்புகள், அவர்களின் சட்டத்தரணிகள் அல்லது வழக்கில் நேரடியாக சம்பந்தப்பட்ட நபர்கள் ஆகியோரை ஒரு பிள்ளையின் சாட்சியங்களை பெற்றுக்கொள்ளும் போது நீதிமன்றத்திலிருந்து விலக்கப்படுவதற்கு நீதிமன்றத்திற்கு இடமளிக்கின்றது.

குற்றத்தால் பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் சாட்சிகளுக்கான உதவி வழங்கல் பற்றிய சட்டத்தின் பிரிவு 19(1)(ஆ) ஆனது நீதிமன்ற நடவடிக்கைகளை முழுமையாக அல்லது அதன் ஒரு பகுதியை தனிப்பட்ட ரீதியில் நடத்துமாறு பாதிக்கப்பட்டவர் கோருவதற்கான ஏற்பாடுகளையும் வழங்குகிறது.

2023 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க குற்றத்தால் பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் சாட்சிகளுக்கு உதவி வழங்கும் சட்டத்தின் பிரிவு 28 (1) (ன), பாதிக்கப்பட்டவர் நீதிமன்ற நடவடிக்கைகளின் முழுவதையும் அல்லது பகுதியையும் "கேமரா" மூலம் நடத்தக் கோருவதற்கான ஏற்பாட்டை வழங்குகிறது. 'சமகால ஒளி ஒலி இணைப்பு மூலம் சாட்சியம்' தொடர்பான சட்டத்தின் பகுதி ஓ இன் பிரிவுகள் 82, 83 மற்றும் 87, இலங்கைக்குள் அல்லது வெளியே உள்ள தொலைதூர இடத்திலிருந்து குற்றத்தால் பாதிக்கப்பட்டவர், சாட்சி அல்லது சட்ட அமலாக்க அதிகாரியால் சமகால ஒளி ஒலி இணைப்பு மூலம் சாட்சியங்களை வழங்குவதற்கான ஏற்பாடுகளைக் கொண்டுள்ளது.

பாதிக்கப்பட்ட சிறுவர்களின் பாதுகாப்பு

பொலிஸ் புலன்விசாரணை உத்தியோகத்தர்கள் பாதிக்கப்பட்டவர்களின் பாதுகாப்பு தொடர்பான விசாரணை கட்டத்தில் முக்கிய பங்கு வகிக்கின்றனர். குற்றம் சாட்டப்பட்டவர்களால் பாதிக்கப்பட்டவருக்கு ஏதேனும் அச்சுறுத்தல்கள் அல்லது பிற

பயமுறுத்தல்கள் இருப்பின், வழக்கு விசாரணைக்கு முந்தைய மற்றும் விசாரணைக் கட்டங்களில் எழக்கூடிய விசேட விடயங்களைப் பற்றி சட்டத்தரணியிடம் பொலிசார் குறிப்பிடலாம். பாதிக்கப்பட்டவர்கள் அல்லது சாட்சிகள் நேரடியாகவே குற்றங்களால் பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் சாட்சிகளுக்கான உதவிக்காக தேசிய அதிகாரசபையிடம் நேரடியாக முறைப்பாடு செய்யலாம்.

2023 ஆம் ஆண்டின் 10 ஆம் எண் குற்றத்தால் பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் சாட்சிகளுக்கு உதவி மற்றும் பாதுகாப்பு சட்டத்தின் பகுதி II மற்றும் பகுதி IV இன் கீழ் உள்ள விதிகள், கீழே பட்டியலிடப்பட்டுள்ளபடி, குற்றங்களால் பாதிக்கப்பட்டவர்களின் உரிமைகள் நிர்ணயிக்கின்றன. பிரிவு 34 (6) இல், 'குற்றத்தால் பாதிக்கப்படக்கூடிய பாதிக்கப்பட்டவர்' என்பது குற்றத்தால் பாதிக்கப்பட்டவர் அல்லது 18 வயதுக்குட்பட்ட சாட்சி மற்றும் தண்டனைச் சட்டத்தின் பிரிவு 360ஊ இன் கீழ் கடத்தலுக்கு ஆளான நபரை உள்ளடக்கியது.

பகுதி II

பிரிவு 3 – குற்றத்தால் பாதிக்கப்பட்டவருக்கு நியாயமான முறையில் நடத்தப்படும் உரிமைகள்.

பிரிவு 4 - 6 – குற்றத்தால் பாதிக்கப்பட்டவருக்கு உதவி, பாதுகாப்பு மற்றும் அவருக்குக் கிடைக்கக்கூடிய தீர்வுகள் பற்றிய தகவல்களைப் பெறுவதற்கான உரிமை.

பிரிவு 7 – குற்றத்தால் பாதிக்கப்பட்டவருக்கு நிதி உதவி பெறுவதற்கான உரிமைகள்.

பிரிவு 8 – பாதிக்கப்பட்டவரின் தாக்க அறிக்கை.

பகுதி IV

பிரிவுகள் 27 - 29 – குற்றத்தால் பாதிக்கப்பட்டவர் அல்லது சாட்சி பாதுகாப்பைப் பெறும் உரிமை.

பிரிவு 34 – குற்றத்தால் பாதிக்கப்படக்கூடிய பாதிக்கப்பட்டவர்களுக்கான சிறப்பு நடவடிக்கைகள்.

பிரிவு 35 – பாதுகாப்பு அதிகாரியால் தொடர்ச்சியான தேவைகள் மதிப்பீடு.

பிரிவு 59 – குற்றத்தால் பாதிக்கப்பட்டவருக்கு ஒரு குறிப்பிட்ட திட்டத்தை ஏற்றுக்கொள்ளுதல்.

2023 ஆம் ஆண்டு 10 ஆம் எண் குற்றத்தால் பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் சாட்சிகளுக்கு உதவி மற்றும் பாதுகாப்பு சட்டத்தின் பகுதி III இன் கீழ் உள்ள விதிகள், பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் சாட்சிகளுக்கு எதிராக செய்யப்பட்ட எந்த குற்றங்களை இந்தச் சட்டத்தின் கீழ் குற்றஞ்சாட்டலாம் மற்றும் " மாஜிஸ்திரேட் " நீதிமன்றத்தில் வழக்குத் தொடரலாம் என்பதைக் குறிப்பிடுகின்றன.

Part II

பிரிவு 14 - குற்றத்தால் பாதிக்கப்பட்டவர் அல்லது சாட்சியை மிரட்டுதல்.

பிரிவு 15 - குற்றத்தால் பாதிக்கப்பட்டவர் அல்லது சாட்சியை காயப்படுத்துதல்.

பிரிவு 16 - குற்றத்தால் பாதிக்கப்பட்டவர் அல்லது சாட்சியை கட்டுப்படுத்துதல்.

பிரிவு 17 - குற்றத்தால் பாதிக்கப்பட்டவரை அல்லது சாட்சியை எந்த இடத்திலிருந்தும் வெளியேற கட்டாயப்படுத்துதல் அல்லது தூண்டுதல் அல்லது குற்றத்தால் பாதிக்கப்பட்டவர் அல்லது சாட்சியின் சொத்துக்கு இழப்பு அல்லது சேதத்தை ஏற்படுத்துதல்.

பிரிவு 18 - வேலை செய்யும் இடத்தில் ஒரு நபருக்கு துன்புறுத்தல்.

பிரிவு 19 - சட்ட நடவடிக்கைகளைத் தடுக்க மனநிறைவை வழங்குதல்.

**குறிப்பு : பிரிவுகள் 14-23 என்பவை பிடியாணையின்றி கைது செய்வதற்குரிய குற்றங்களாக இருப்பதுடன் 1997 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க பிணைச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு அமைவாக மாத்திரம் பிணை வழங்கக்கூடிய குற்றங்களாகும். அத்தகைய குற்றங்களுக்கு பிணை வழங்கும்போது, பிணை உத்தரவுக்கு நிபந்தனைகளை விதிக்க நீதிவானுக்கு அதிகாரம் உள்ளதுடன் இதன் கீழ் உதாரணமாக தொடர்பாடல்களை ஏற்படுத்துவதை தடுத்தல் அல்லது குற்றத்தால் பாதிக்கப்பட்டவர் மற்றும் சாட்சியை நெருங்கி வருதல் அல்லது அத்தகைய உத்தரவின் கீழ் வேறு ஏதேனும் பொருத்தமான நிபந்தனை விதிக்கப்படலாம்.

**மேலும், 1998 ஆம் ஆண்டின் 50 ஆம் இலக்க தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை சட்டத்தின் பிரிவு 14 (த) இன் கீழ், குற்றச் செயல்கள் சார்ந்த புலன்விசாரணைகள் மற்றும் வழக்கு விசாரணைகளுடன் தொடர்புடைய சிறுவர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்கான அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்படுவதை உறுதி செய்வதே அதிகாரசபையின் முக்கிய பணியாகும்.

சிறுவர் உழைப்பு சுரண்டப்படுவது குறித்த ஆதாரங்களை சமர்ப்பிப்பது தொடர்பாக தொழிலாளர் துறை அதிகாரிகளைத் தொடர்பு கொள்ளலாம்.

இடைக்கால நிவாரணம் மற்றும் இழப்பீடு

2023 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க குற்றத்தால் பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் சாட்சிகளுக்கான உதவி வழங்குதல் சட்டத்தின் IX வழங்குதல் நியாயமானதும் நீதியானதுமாக அமைய வேண்டுமென குறித்துரைக்கின்றது. பிரிவு 61, குற்றம் சாட்டப்பட்டவரின் தண்டனையின் பேரில், அவர் குற்றவாளி எனத் தீர்ப்பளிக்கப்பட்ட குற்றத்தைப் பொறுத்தவரை தண்டனை விதிக்கப்பட்ட நபருக்கு விதிக்கப்படும் எந்தவொரு தண்டனை அனுமதியும் கூடுதலாக, தண்டனை பெற்ற நபருக்கு நீதிமன்றத்திற்கு அத்தகைய இழப்பீட்டுத்தொகையை செலுத்த உத்தரவிடலாம்.

2.3.5 பாதிக்கப்பட்ட சிறுவர் இலங்கைக்கும் இலங்கையிலிருந்தும் திரும்புதல்

பெற்றோர் அல்லது பாதுகாவலர்களுடன் வரும் பாதிக்கப்பட்ட சிறுவர்களை அவர்களிடமிருந்து பிரிக்கக்கூடாது என்பதுடன் அவ்வாறு செய்வது பிள்ளையின் உச்ச மட்ட நலனுக்கு பொருத்தமானதென காணப்படும் சந்தர்ப்பத்தில் மாத்திரமே அவ்வாறு செய்யப்படுதல் வேண்டும். ஒரு பிள்ளை துணையில்லாத சிறுவராக இருக்கும் போது, விசாரணை உத்தியோகத்தர் அத்தகைய பிள்ளை தொடர்பாக சிறுவர்கள் மற்றும் இளம் ஆட்களுக்கான சட்டத்தின் கீழ் நீதிமன்றத்திற்கு விடயத்தை அறிவித்து பிள்ளையை தற்காலிகமாக பாதுகாப்பான இல்லத்தில் வைப்பதற்கான உத்தரவைப் பெற வேண்டும்.

பாதிக்கப்பட்ட சிறுவர் வெளிநாட்டவராக இருந்தால், ஆயுதமேந்திய வன்முறை, மனித விற்பனை, துஷ்பிரயோகம், சுரண்டல் அத்துடன் பிள்ளையின் குடும்பத்தில் உள்ள பாதுகாப்பு நிலை போன்றவற்றின் கீழ் பிள்ளையின் பாதுகாப்பிற்கு ஏற்படும் இடர்வரு நிலைகளைக் கருத்தில் கொண்டு, சிறுவர் திரும்பி வருவது பாதுகாப்பானதா என்பதை அறிய, பிறந்த நாடு அல்லது தாய்நாட்டில் பாதுகாப்பு சார்ந்த மதிப்பீடு செய்யப்பட வேண்டும். இது நீதிமன்ற உத்தரவின் மூலம் செய்யப்பட வேண்டும்.[14] பிள்ளை தனது சொந்த நாட்டிற்குத் திரும்பும் வரை (திரும்புமாயின்), பிள்ளை (மற்றும் ஏற்புடையதாயின் குடும்பம்) கண்ணியத்துடன் நடத்தப்பட வேண்டும் என்பதுடன் பிள்ளை அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்துகொள்வதற்கான உரிய அணுகலைப் பெற வேண்டும்.

ஊட்டச்சத்து, சுகாதாரம், தங்குமிடம், கல்வி, பாதுகாப்பு. குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களத்தின் ஒருங்கிணைப்புடன் பாதிக்கப்பட்டவர்களைத் திரும்புதல்/ திருப்பி அனுப்புதல் ஆகியவை மேற்கொள்ளப்பட வேண்டும்.

பாதிக்கப்பட்ட சிறுவர் வெளிநாட்டில் இருக்கும் அதேவேளை சரியான இருப்பிடம் அடையாளம் காணப்பட வேண்டுமாயின் மற்றும்/ அல்லது பிள்ளையின் பாதுகாப்பை பொறுப்பேற்றுக்கொள்ளுதல் தேவையாயின் அது தொடர்பாக உதவி தேவைப்படுமிடத்து INTERPOL இன் உதவி கோரப்படலாம்.

பாதிக்கப்பட்ட சிறுவரின் உரிமைகளைப் பாதுகாக்கும் சிறந்த சூழலைத் தீர்மானிப்பதற்கு, இலங்கையில் சிறுவர்களுக்கு வழங்கப்படக்கூடிய பாதுகாப்பின் நிலை பற்றிய மதிப்பீடும் இருக்க வேண்டும்.

2.3.6 பாதிக்கப்பட்ட சிறுவர்கள் மீண்டும் பாதிக்கப்படுவதையும் மேலதிக தீங்கு ஏற்படுவதையும் தடுத்தல்

பாதிக்கப்பட்டவர்களுக்கான உதவி சேவை வழங்குநர்களிடம் ஆற்றுப்படுத்துதல் மற்றும் ஒருங்கிணைப்பு

பாதிக்கப்பட்டவர்களுக்கான உதவிச் சேவை வழங்குவதற்கு ஆற்றுப்படுத்துவதற்கான சம்பந்தப்பட்ட நிறுவனங்களை பொலிசார் அடையாளம் காண்பது முக்கியமானதாக இருப்பதுடன் இவ்விடயமானது ஒவ்வொரு பாதிக்கப்பட்டவரின் உடனடித் தேவைகளின் ஆரம்ப மதிப்பீட்டின் அடிப்படையில் அமைந்துள்ளது. ஆற்றுப்படுத்தல் நிறுவனங்கள் அரச நிறுவனங்கள் மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்கள் என பலதரப்பட்டவையை உள்ளடக்கியிருக்கலாம் என்பதுடன் குறைந்தபட்சம் இடைநிலை தங்குமிடங்கள் மற்றும் மருத்துவ சேவைகளை உள்ளடக்கியிருக்கும்.

தங்குமிடம்

மனித விற்பனைக்கு ஆளான ஒரு சிறுவர் தொடர்பாக இடர்வரு நிலை மதிப்பீடு செய்யப்பட்டு நன்னடத்தை உத்தியோகத்தருடனான கலந்தாலோசனையின் பின்னர் 'தகுதியான நபரின் உத்தரவு' பெறப்படும் வரை அப்பிள்ளைக்கு குறுகிய கால பாதுகாப்பான தங்குமிடம் தேவைப்படலாம். பொலிஸ் புலன்விசாரணை உத்தியோகத்தர் சிறுவரை அரச அல்லது அரச சார்பற்ற நிறுவனங்களால் நடத்தப்படும் தங்குமிடங்கள் போன்ற பாதுகாப்பான இடங்களுக்கு அனுப்ப இடைக்கால ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும். அத்தகைய இல்லங்களை நடத்தும் அமைச்சுக்கள் அல்லது நிறுவனங்களின் தொடர்பு இலக்கங்கள் உட்பட அவற்றின் பட்டியலை சம்பந்தப்பட்ட பொலிஸ் உத்தியோகத்தருக்கு பெற்றுக்கொள்ளக்கூடியதாக இருத்தல் முக்கியமானதாகும்.

நீதித்துறை செயன்முறை முழுவதும் ஏற்படும் தாமதங்களை அறிந்தவர்களாக, மனித விற்பனைக்கு ஆளான பிள்ளைக்குக்கு நீண்ட கால தங்குமிடம் வழங்க வேண்டிய தேவை ஏற்படலாம். இதுபோன்ற சந்தர்ப்பங்களில், பிள்ளையின் உச்சமட்ட நலனை கருத்திற்கொண்டு சிறுவர் தனது குடும்பத்துடன் இருப்பதற்கான அனைத்து முயற்சிகளும் மேற்கொள்ளப்பட வேண்டும் என்பதுடன் சிறுவர் வீட்டிற்குத் திரும்புவதால் ஆபத்து அல்லது மேலும் தீங்கு ஏற்படலாம் என எதிர்பார்க்கப்படும் பட்சத்தில் மட்டுமே பிள்ளையை நீண்ட கால தங்குமிடத்தில் வைக்க வேண்டும்.

உளசமூக உதவி

மனித விற்பனைக்கு ஆளான ஒரு பிள்ளை, விற்பனையின் காரணமாக அது சந்தித்த சுரண்டலின் விளைவாக மிகுந்த அதிர்ச்சியை அனுபவித்திருக்கலாம். சிறுவரின் அதிர்ச்சி மற்றும் துயரத்தைக் குறைப்பதற்கு உளவள ஆலோசகர்கள் போன்ற சம்பந்தப்பட்ட பங்குதாரர்களின் சேவைகள் மூலம் உளசமூக உதவி மற்றும் தலையீட்டை வசதிப்படுத்துவதற்கு பொலிசார் அனைத்து முயற்சிகளையும் மேற்கொள்ள வேண்டும். இத்தகைய உளசமூக உதவி வழக்கு விசாரணைக்கு பின்னரும் பாதிக்கப்பட்ட பிள்ளையின் எந்தவொரு திட்டமிடப்பட்ட மீள் ஒருங்கிணைப்பு செயன்முறையின் போதும் தொடர்ந்து வழங்கப்படுதல் வேண்டும்.

உள் நாட்டில் கிடைக்கும் அரசு சேவைகள்

பாதிக்கப்படக்கூடிய பிள்ளைகளின்; பாதுகாப்பு மற்றும் அதிகாரமளிப்புக்காக பிரதேச செயலகங்கள் பல்வேறு ஆதரவு சேவைகளை வழங்குகின்றன, இது பாதிக்கப்பட்டவர்களுக்கு அல்லது பிள்ளைகளுக்கு மேலும் தீங்கு விளைவிப்பதையோ அல்லது மீண்டும் பாதிக்கப்படுவதையோ தடுக்கலாம். பாதுகாப்பு தேவைப்படும் பிள்ளைகளுக்கு போலிஸாரின் பரிந்துரை மூலம் இதுபோன்ற சேவைகளைக் கோரலாம்:

அதிகாரி	வழங்கப்படும் சேவைகள்
சிறுவர் உரிமைகள் மேம்பாட்டு அலுவலர்	வழக்கு மேலாண்மை மூலம் சிறுவர் உரிமை மீறல்களை அடையாளங் காணுதல், தடுத்தல் மற்றும் தணித்தல்.
பிரதேச சிறுவர் பாதுகாப்பு அலுவலர்	சிறுவர் பாதுகாப்பு பிரச்சினைகளை அடையாளங் காணுதல், தடுத்தல் மற்றும் தணித்தல், சிறுவர்களுக்கு எதிரான குற்றங்கள் குறித்த விசாரணைகளை கண்காணித்தல்.
சமூக சேவைகள் அலுவலர்	பாதிக்கப்படக்கூடிய மற்றும் வலுவீனத்தோடு கூடிய சிறுவர்கள், தெரு சூழ்நிலைகளில் வாழுகின்ற சிறுவர்களுக்கான ஆதரவு மற்றும் சமூக நல சேவைகளை வழங்குதல்.
திறன் மேம்பாட்டு அலுவலர்	திறன் மேம்பாடு மற்றும் பயிற்சி சேவைகள.;
முன்பள்ளி சிறுவர் பருவ மேம்பாட்டு அலுவலர்	ஆரம்பகால சிறுவர் பருவ மேம்பாட்டு அலுவலர் 5 வயதுக்குட்பட்ட பிள்ளைகளின் பிள்ளை வளர்ச்சி பிரச்சினைகளை அடையாளங் காணுதல், தடுத்தல் மற்றும் தணித்தல்.
மகளிர் மேம்பாட்டு அலுவலர்	மகளிர் மேம்பாட்டு அலுவலர் பெண்களின் பாதுகாப்பு மற்றும் நலன்புரி பிரச்சினைகளை அடையாளங் காணுதல், தடுத்தல் மற்றும் தணித்தல்.

14. விசாரணை அதிகார இதனை நீதிமன்றில் ஆற்றுப்படுத்த வேண்டும். நீதிமன்ற கட்டளையின் படி விசாரணை அதிகாரி பிள்ளையின் தாய்நாட்டில் பிள்ளையின் குடும்பத்திலிருந்து தகவல் பெறுவதற்காக மற்றும் பிள்ளையை மீள ஒப்படைப்பதற்காக தீர்மானிக்கும் பொரட்டு அவசியமான ஒருங்கிணைப்பு நடவடிக்கைகள் உள்ளிட்ட உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சின் மேம்பாட்டு அலுவலர்	புலம்பெயர்ந்த பெற்றோரின் பிள்ளை பாதுகாப்பு மற்றும் நலன்புரி கவலைகளை அடையாளங் காணுதல், தடுத்தல் மற்றும் தணித்தல்.
ஆலோசனை அலுவலர்	சிறுவர்கள் மற்றும் பெண்களுக்கு அடிப்படை ஆலோசனை சேவைகளை வழங்குதல்.
மகளிர் அபிவிருத்தி அலுவலர்	பெண்களின் பாதுகாப்பு மற்றும் நலன்புரி பிரச்சினைகளை அடையாளங் காணுதல், தடுத்தல் மற்றும் குறைத்தல்.
இளைஞர் சேவை அலுவலர்	இளைஞர்களின் அதிகாரமளித்தல் மற்றும் திறன் மேம்பாட்டை இலக்காகக் கொண்ட திட்டங்களை வழங்குதல்.
ஆபத்தான மருந்துகள் கட்டுப்பாட்டு வாரியத்தின் தடுப்பு கல்வி மற்றும் பயிற்சி அதிகாரி	பாடசாலைகள், இளைஞர்கள், குடும்பங்கள் மற்றும் சமூகங்களை இலக்காகக் கொண்ட போதைப்பொருள் தடுப்பு திட்டங்களை வழங்குதல்.

*இது முழுமையான பட்டியல் அல்ல, மேலும் கிடைக்கும் சேவைகளுக்கு ஏற்ப மாறுபடும்.

03 சிறுவர்களுக்கு எதிரான இணையவழி குற்றங்கள் (சைபர் கிரைம்)

இணையவழி குற்றம் என்பது கணினி வலையமைப்பு அல்லது வலையமைப்புக்கு உட்படுத்தப்பட்ட சாதனத்தை குறிவைக்கும் அல்லது பயன்படுத்தும் குற்றச் செயல்கள் ஆகும். இத்தகைய பெரும்பாலான குற்றச் செயல்கள் பணம் சம்பாதிப்பதை நோக்கமாகக் கொண்டு செய்யப்படுகின்றன.

எனவே, சட்டவிரோத நிதி பரிவர்த்தனைகள், துன்புறுத்தல், இணையவழி சிறுவர் பாலியல் துஷ்பிரயோகம், சிறுவர் பாலியல் துஷ்பிரயோகம் தொடர்பான தயாரிப்புகளை உருவாக்குதல் அல்லது வெளியிடுதல் (CSAM), இணையவெளி பயங்கரவாதம், தனிப்பட்ட தகவல்களை திருடுதல் அல்லது வெளியிடுதல் போன்ற இணைய ஊடகமான மின்னஞ்சல், அரட்டை, வலைத்தளங்கள், பயன்பாடுகள் போன்றவற்றை மின்னஞ்சல், செட், இணையத்தளங்கள், செயலிகள் போன்ற இணையத்தைப் பயன்படுத்தும் எந்தவொரு செயலும் இணையவெளி குற்றமாக கருதப்படும்.

இணையவெளி குற்றத்தை 'சொத்து சார்ந்த குற்றங்கள்' மற்றும் 'ஒரு நபருக்கு எதிரான குற்றங்கள்' என இரண்டாக வகைப்படுத்தலாம்.

சொத்து சார்ந்த குற்றங்கள் - சட்டவிரோத பரிவர்த்தனைகள், அடையாள திருட்டு, மோசடி, மற்றும் பதிப்புரிமை மீறல்

ஒரு நபருக்கு எதிரான குற்றங்கள் - பின்தொடர்தல், இணையவெளி மிரட்டல், CSAM மற்றும் ஒரு நபரின் அனுமதியின்றி தனிப்பட்ட படங்கள் அல்லது வீடியோக்களைப் பகிர்தல்.

தொழில்நுட்பத்தின் வேகமான வளர்ச்சி மற்றும் அதனுடன் தொடர்புடைய இணையவெளி குற்றங்களில் உள்ள சிக்கல்களைக் கருத்திற் கொள்ளுமிடத்து இத்தகைய இணையவெளி குற்றங்களைத் தடுப்பதற்கு வழமையாக பின்பற்றப்படும் விசாரணை அனுபவம்மட்டும்போதாதுஎன்பதனைக்காணக்கூடியதாகஉள்ளது.இத்தகையகுற்றங்களைத்நிவர்த்திசெய்வதற்குபுலனாய்வு மற்றும் தொழில்நுட்ப நிபுணத்துவம் ஆகிய இரண்டையும் கொண்ட கட்டமைக்கப்பட்ட அணுகுமுறை தேவைப்படுகிறது. இணையவெளி குற்றங்களின் விசாரணையில் சட்ட அமுலாக்கத்தை மாற்றியமைக்கவும் சவால்களை எதிர்கொள்ளவும், தகவல் தொழில்நுட்பத் துறையின் வளங்கள் மற்றும் நிபுணத்துவம் மற்றும் முக்கிய பங்குதாரர்களுடன் ஒருங்கிணைந்த கூட்டுறவை கட்டியெழுப்புதல் முக்கியமானதாகும். இணையவெளி குற்ற விசாரணையில் நியம நடைமுறைகளை அறிமுகப்படுத்துதல் இவ்விடயத்தில் முக்கியமானதொரு படிமுறையாகும்.

3.1 சிறுவர்களுக்கு எதிரான இணையவழி குற்றங்களின் வகைகள்

இந்தக் குழுவின் எளிதில் பாதிப்படையும் தன்மை காரணமாக சிறுவர்களுக்கு எதிரான இணையவெளி குற்றங்கள் தொடர்பாக விசேட கவனம் தேவைப்படுகின்றது. இணையவழியில் (நிகழ்நிலையில்) அவர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்கு விசேட கவனம் செலுத்தப்படுதல் வேண்டும்.

இணையவெளி பாலியல் சுரண்டல், இணையவெளி மிரட்டல் மற்றும் பணம் பறித்தல், ஒன்லைன் வழியாக சீர்ப்படுத்தல் மற்றும் இணையவெளி டிஜிட்டல் வழிமுறைகள் மூலம் சிறுவர்களை தீவிரவாத வன்முறை ரீதியில் தீவிரமயமாக்கல் என சிறுவர்களுக்கு எதிராக செய்யப்படும் சில இணையவெளி குற்றங்கள் அடையாளம் காணப்படுகின்றன. சிறுவர் பாலியல் துஷ்பிரயோக தயாரிப்புகள் (CSAM) மற்றும் சிறுவர் பாலியல் சுரண்டல் தயாரிப்புகள் (CSEM) ஆகியவற்றை தயாரித்தல் மற்றும் காட்சிப்படுத்துவதற்காக சிறுவர்கள் சுரண்டப்படும் குற்றங்களும் உள்ளன. தற்போது CSEM மற்றும் CSEM இற்கு உலகளாவிய ரீதியில் ஏற்றுக்கொள்ளப்பட்ட எவ்வித வரைவிலக்கணமும் இல்லை என்பதுடன் இது சிறுவர்களை பாலியல் மற்றும் சுரண்டல் முறையில் சித்தரிக்கும் வழிமுறைகளைக் குறிக்கிறது.

சிறுவர்களுக்கு எதிரான இணையவெளிக் குற்றங்களைத் தீர்ப்பதற்கு அரசாங்கங்கள், சட்ட அமுலாக்க நிறுவனங்கள், தொழில்நுட்ப நிறுவனங்கள், கல்வியாளர்கள் மற்றும் பெற்றோர்களின் ஒருங்கிணைந்த முயற்சி தேவைப்படுகிறது. இதன் குறிக்கோள் யாதெனில் சுரண்டல், துன்புறுத்தல் மற்றும் பிற வகையான தீங்குகளிலிருந்து சிறுவர்களைப் பாதுகாக்கும் பாதுகாப்பான இணையவழி மற்றும் மெய்நிகர் சூழலை உருவாக்குவதாகும்.

பின்வரும் பகுதிகள், குறிப்பாக பிள்ளைகள் தொடர்பான பல்வேறு வகையான இணையவெளி குற்றங்கள் தொடர்பாகவும், இணையவெளி குற்றங்கள் தொடர்பான சட்ட ஏற்பாடுகள் தொடர்பாகவும் மற்றும் இணையவெளி குற்றங்கள் தொடர்பான புலன்விசாரணைகளின் படிப்படியான செயன்முறை ஆகியவற்றைப் பற்றி ஒரு புலனாய்வு உத்தியோகத்தர் (10) புரிந்துகொள்ளவும் வழிகாட்டவும் உதவுகின்றன.[15]

- **இணையவழி பாலியல் துஷ்பிரயோகம் மற்றும்/ அல்லது சுரண்டல் -** சிறுவர்களை பாலியல் துஷ்பிரயோகத்திற்கான மற்றும்/ அல்லது பாலியல் ரீதியாக சுரண்டுவதற்கான வழிமுறையாக தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துதல். இது ஒரு பிள்ளைக்கும் அப்பிள்ளையை விட வயது கூடிய அல்லது முதிர்ச்சியடைந்த பிள்ளை அல்லது வயது வந்தவருக்கும் இடையேயான தொடர்பு அல்லது ஊடாட்டத்தை உள்ளடக்கியதாக இருப்பதுடன் அங்கு அப்பிள்ளையானது மேற்படி வயது கூடிய பிள்ளை அல்லது வயது வந்தவரின் பாலியல் தேவைகளுக்கு ஒரு பொருளாக பயன்படுத்தப்படுகிறது. இந்த தொடர்புகள் அல்லது ஊடாட்டங்கள் பிள்ளைக்கு எதிராக பலாத்காரம், தந்திரம், இலஞ்சம், அச்சுறுத்தல்கள் அல்லது அழுத்தம் ஆகியவற்றைப் பயன்படுத்தி மேற்கொள்ளப்படுகின்றன.

- **இணையவெளி மிரட்டல்-**இணையத்தளம், செல்லிட தொலைபேசிகள் அல்லது பிற சாதனங்களைப் பயன்படுத்தி மற்றொரு நபரை புண்படுத்தும் அல்லது சங்கடப்படுத்தும் நோக்கில் உரை அல்லது படங்களை அனுப்ப அல்லது இடுகையிடுவதற்கான செயன்முறை. சிறுவர்கள் மற்றும் இளைஞர்களிடையே அதிகரித்து வரும் சமூக ஊடகங்கள் மற்றும் சாதனங்களின் தவறான பயன்பாடு இணைய மிரட்டல் சம்பவங்கள் அதிகரிக்க வழிவகுத்துள்ளது. இணையவழியில் மற்றவர்களைப் பற்றிய வதந்திகளை இடுகையிடுதல், அச்சுறுத்தல் விடுத்தல், பாலியல் கருத்துகளையும் தனிப்பட்ட தகவல்களையும் வெளிப்படுத்துதல், வெறுப்பூட்டும் பேச்சு அல்லது மற்றொரு நபருக்குதீங்கு விளைவிக்கும் வகையில் போலி சுயவிவரங்களை உருவாக்குதல் ஆகியவை இதில் அடங்கும்.

- **இணையவழி சீர்ப்படுத்தல் -** இது ஒரு வயது வந்தவர் ஒரு பிள்ளையை பாலியல் ரீதியாக தவறாகப் பயன்படுத்த வேண்டும் என்ற நோக்கத்துடன் (பெரும்பாலும் இணையவழியில், ஆயினும் ஒப்லைன் சீர்ப்படுத்தலும் உள்ளது) 'நட்பை உருவாக்கும்' ஒரு நடைமுறையாகும். பாலியல் நோக்கங்களுக்காக மற்றும்/ அல்லது அவர்களை சீர்படுத்துவதற்காக பெரும்பாலும் ஆண்களால் சீர்ப்படுத்தல் மேற்கொள்ளப்படுகிறது என்பதை ஆராய்ச்சிகள் மற்றும் கிடைக்கக்கூடிய தரவுகள் எடுத்துரைக்கின்றன. பாதிக்கப்படுபவரின் ஈர்ப்பு/ கவர்ச்சி, அணுகுவதற்கான வசதி மற்றும் எளிதில் பாதிப்படைவதற்கான தன்மை ஆகியவற்றின் அடிப்படையில் குற்றவாளிகள் பாதிக்கப்படுபவரைத் தேர்வு செய்கிறார்கள். குற்றவாளி இலக்கு வைக்கப்பட்ட பாதிக்கப்படுபவருடன் நட்பை உருவாக்கி, இணையவழி மூலங்களிலிருந்து பாதிக்கப்படுபவர் பற்றிய தகவல்களைப் பெற்று அதனையடுத்து அவரை ஏமாற்ற முற்படுகிறார்.

- **சிறுவர் பாலியல் துஷ்பிரயோக தயாரிப்புகள் (CSAM) மற்றும் சிறுவர் பாலியல் சுரண்டல் தயாரிப்புகள் (CSEM) -** இது முதன்மையாக சிறுவர்களை பாலியல் ரீதியாக அல்லது சுரண்டல் முறையில் சித்தரிக்கும் ஊடக வழிமுறைகளைக குறிக்கிறது. CSAM என்பது சிறுவர்களின் ஆபாசப் படங்களைப் பற்றி குறிப்பிடுவதற்கு பொருந்தக்கூடிய சொற்பதமாக இருப்பதுடன் இது பாலியல் துஷ்பிரயோகச் செயல்களை சித்தரிப்பதுடன் பிள்ளையின் பிறப்புறுப்பில் கவனம் செலுத்துவதைக் குறிக்கிறது. ஒரு பிள்ளையை சித்தரிக்கும் மற்றைய அனைத்து பாலுறவு பொருட்களையும ஒன்றிணைத்துக் கூறுவதற்கு CSEM ஒரு பரந்த கருத்தில் பயன்படுத்தப்படலாம்.

3.2 இணையவெளிக் குற்றங்கள் தொடர்பான இலங்கையின் சட்டக் கட்டமைப்பு

இணையவெளி குற்றம்தொடர்பான உடன்படிக்கையானது 'இணையவழி குற்றம்தொடர்பான Budapest உடன்படிக்கை' அல்லது 'Budapest உடன்படிக்கை' எனவும் அறியப்படுவதுடன் இது இணையம் மற்றும் கணினி குற்றங்களை தேசிய சட்டங்களுடன்

ஒத்திசைய செய்தல், புலனாய்வு நுட்பங்களை மேம்படுத்துதல் மற்றும் இணையவழி குற்றங்கள் மற்றும் சாட்சியங்களை சேகரிப்பதில் நாடுகளிடையே ஒத்துழைப்பை அதிகரிப்பதன் மூலம் இணையம் மற்றும் கணினி குற்றங்களுக்கு தீர்வு காண முயற்சி செய்யும் முதல் சர்வதேச ஒப்பந்தமாகும். இலங்கை 2015 ஆம் ஆண்டு முதல் Budapest உடன்படிக்கையின் ஒரு தரப்பாக உள்ளது.

இலங்கையில், இவ்விடயம் தொடர்பான புலனாய்வுகள் 2007 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க கணினி குற்றங்கள் சட்டத்தின் கீழ் ஆரம்பிக்கப்படுகின்றன. இவ்விடயத்தில் இணையவழி குற்றங்களுக்கு எதிராக செயற்படும் பிரதான நிறுவனமாக குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் இலங்கை பொலிஸ் கணினி குற்றங்கள் புலனாய்வு பிரிவு (CCID) செயற்படுகின்றது.

சட்டத்தின் பின்வரும் பிரிவுகள் குற்றங்களாகக் கருதப்படும் செயல்களைக் குறிப்பிடுகின்றன.

பிரிவு 3 - கணினிக்கு அங்கீகரிக்கப்படாத முறையில் அணுகலைப் பெற்றுக்கொள்ளுதல்.

பிரிவு 4 - ஒரு குற்றத்தைச் செய்வதற்காக அங்கீகரிக்கப்படாத அணுகலைப் அடைந்து ஏதேனும் செயலைச் செய்தல்.

பிரிவு 5 - சட்டப்பூர்வ அதிகாரம் இல்லாமல் ஒரு கணினியைச் செயல்பட வைத்தல்.

பிரிவு 7 - சட்டத்திற்குப் புறம்பாகப் பெறப்பட்ட தரவுகளைக் கையாளுதல்.

பிரிவு 8 - தரவுகளை சட்டவிரோதமாக இடைமறித்தல்.

பிரிவு 9 - சட்டவிரோத சாதனங்களைப் பயன்படுத்துதல்.

பிரிவு 10 - ஒரு சேவைக்கான அணுகலை பெற்றுக்கொள்வதற்கு சம்பந்தப்பட்ட தகவல்களை அங்கீகரிக்கப்படாத முறையில் வெளிப்படுத்தல்.

* சிறுவர் விற்பனை மற்றும்/அல்லது சிறுவர்களுக்கு எதிரான இணையவழி குற்றம் மீதான விசாரணை, தண்டனைச் சட்டக் கோவையின் ஏற்பாடுகள் மற்றும் சிறுவர்களுக்கு எதிரான குற்றங்கள் மற்றும் கணினி குற்றங்கள் சட்டத்தின் ஏற்பாடுகள் ஆகியவற்றுடன் சேர்த்து விசாரிக்கப்பட்டு வழக்குத் தொடரப்பட வேண்டும் என்பதைப் புரிந்துகொள்வது அவசியமாகும்.

3.3 இணையவழி குற்ற புலன்விசாரணையின் கட்டங்கள்

3.3.1. முதல் தகவல்

ஒரு சிறுவருக்கு எதிரான இணையவெளி குற்றம் பற்றிய முதல் தகவல் பின்வரும் முறையில் அறிக்கையிடப்படலாம்:

1. பாதிக்கப்பட சாத்தியமுடைய நபர்கள்/ குடும்ப உறுப்பினர்கள்/ பாதுகாவலர்கள்/ உறவினர்கள்
2. உதவித் தொலைபேசி அழைப்புகள்/ நேரடி தொலைபேசி அழைப்புகள் - தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை, பொலிசார், அரச சார்பற்ற நிறுவனங்கள் (NGOக்கள்)
3. எழுத்திலான முறைப்பாடுகள் (அநாமதேயங்கள் உட்பட) - கடிதங்கள், மின்னஞ்சல்கள், தொலைநகல் போன்றவை.
4. சிவில் சமூக அமைப்புகள்/ சமூக அடிப்படையிலான அமைப்புகள் மூலம்
5. ஊடகவியாலாளர்கள்/ ஊடகங்கள்/ சமூக ஊடக அறிக்கைகள்
6. பொலிஸ் தரவுத்தளங்கள்/ ICMEC/ ICSE தரவுத்தளங்கள்

**சிறப்பு குறிப்பு : சர்வதேச சிறுவர் பாலியல் சுரண்டல் (ICSE) சார்ந்த படங்கள் மற்றும் வீடியோ தரவுத்தளம்

இந்த தரவுத்தளம் பாதிக்கப்பட்டவர்களை அடையாளங் காணும் உலகளாவிய ரீதியில் உள்ள நிபுணவர்களு சிறுவர் பாலியல் துஷ்பிரயோக படங்களை பகுப்பாய்வு செய்து ஒப்பிடுவதற்கு உதவுகிறது. இது ஒரு நுண்ணறிவு மற்றும் புலனாய்வுக் கருவியாக இருப்பதுடன் இது சிறப்பு புலனாய்வாளர்களை சிறுவர் பாலியல் துஷ்பிரயோக சம்பவங்கள் பற்றிய தரவைப் பகிர இடமளிக்கின்றது இந்த தரவுத்தளத்தில் "படம் மற்றும் வீடியோ ஒப்பீட்டு மென்பொருள்" என்ற விசேட மென்பொருள் பயன்படுத்தப்படுவதுடன் இந்த மென்பொருளைப் பயன்படுத்தி, புலனாய்வாளர்களுக்கு பாதிக்கப்பட்டவர்கள், துஷ்பிரயோகம் செய்பவர்கள் மற்றுஒம் இடங்களும் இடையே உடனடியாக தொடர்புகளை ஏற்படுத்த முடியும். தரவித்தளமானது, இவ்விடயம் சார்ந்தமாக மேற்கொள்ளப்படும் ஒரே விடயத்தை பலர் செய்வதை தவிர்ப்பதுடன், தொடர்ச்சியான படங்கள் ஏற்கனவே வேறு நாட்டில் கண்டுபிடிக்கப்பட்டதா விடயத்தை பலர் செய்வதை தவிர்ப்பதுடன், தொடர்ச்சியான படங்கள் ஏற்கனவே வேறு நாட்டில் கண்டுபிடிக்கப்பட்டதா அல்லது அடையாளம் காணப்பட்டதா அல்லது மற்றைய படங்களைப் போன்ற அம்சங்களைக் கொண்டுள்ளதா என்பதை புலனாய்வாளர்களுக்கு தெரியப்படுத்துவதன் மூலம் விலைமதிப்பற்ற நேரத்தை மீதப்படுத்திக் கொள்வதற்கு வழிசமைக்கின்றது. மேலும், 68 இற்கும் மேற்பட்ட நாடுகளில் இருந்து விசேட புலனாய்வாளர்கள் தகவல்களை பரிமாறிக்கொள்ளவும், உலகம் முழுவதும் உள்ள தங்கள் சக ஊழியர்களுடன் தரவைப் பகிர்ந்து கொள்ளவும் இது வாய்ப்பளிக்கின்றது.

புகைப்படங்கள் மற்றும் வீடியோக்களின் டிஜிட்டல், ஒலி மற்றும் ஒலி உள்ளடக்கத்தை பகுப்பாய்வு செய்வதன் மூலம், பாதிக்கப்பட்டவர்கள் தொடர்பான அடையாள வல்லுநர்களுக்கு சாட்சியங்களை மீட்டெடுக்க இயலும் என்பதுடன் சம்பவங்களின் ஏதேனும் ஒரே விடயம் அநாவசியமாக பலரால் செய்யப்படுவதாக இருக்கின்றதா என்பதை அடையாளம் காணலாம் என்பதுடன் சிறுவர் பாலியல் துஷ்பிரயோகத்தால் பாதிக்கப்பட்டவர்களைக் கண்டறிவதற்கான அவர்களின் முயற்சிகளை ஒருங்கிணைக்கலாம்.

இலங்கை பொலிசாரின் சிறுவர்கள் மற்றும் பெண்கள் மீதான துஷ்பிரயோக தடுப்பு பணியகம், ICSE தரவுத்தளத்தை அதன் புலன்விசாரணை நோக்கங்களுக்கா பயன்படுத்துவதற்கு இன்டர்போலுடன் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் (MOU) கையெழுத்திட்டுள்ளது.

3.3.2 புலன்விசாரணைக்கு முந்தைய மதிப்பீடு

ஒவ்வொரு புலனாய்வு உத்தியோகத்தரும் (IO) சிறுவர் விற்பனை / சம்பவம் உட்பட ஒவ்வொரு இணையவழி குற்றங்களுக்கும் ஏதுவாக புலன்விசாரணைக்கு முந்தைய மதிப்பீட்டைச் செய்வது மிகவும் முக்கியமானதாகும். முறைப்பாட்டாளர் பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவரையோ அல்லது ஏதேனும் ஒரு நிறுவனத்தையோ தங்கள் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு அணுகுவதற்குமுன்னர், தாங்களாகவோ அல்லது அவர்களது நண்பர்கள் அல்லது பிறரின் உதவியுடனோ விடயங்களைச் சரிசெய்வதற்கான முயற்சிகளை மேற்கொண்டிருக்கலாம் என்பதை பொதுவாக நினைவில் கொள்ள வேண்டும். இருப்பினும், இந்த செயல்கள் முக்கியமான டிஜிட்டல் ஆதாரங்கள் அழிக்கும் விடயத்திற்கு இட்டுச் சென்றிருக்கலாம். இதைப் போலவே சில சமயங்களில் குற்றச் செயலானது தற்போது நடந்துகொண்டிருக்கும் ஒரு குற்றமாக இருக்கலாம் என்பதுடன் இது மேலும் சேதத்தை ஏற்படுத்தக்கூடும். முறைப்பாட்டாளர்கள் தங்களின் தங்களின் பதற்றம் அல்லது அறியாமையால் முழு உண்மைகளையும் ஆரம்பத்தில் வெளியிடாமல் போகலாம். இந்த காரணிகள் அனைத்தும் விசாரணையின் முடிவுகளில் தாக்கத்தை ஏற்படுத்தும்.

அறிக்கையிடப்படுகின்ற ஒவ்வொரு சம்பவத்தின் தன்மையையும் பொறுத்து, சம்பவத்தின் முழு பரப்பையும அதன் சாத்தியமான விளைவுகளையும் புரிந்து கொள்ளும் பொருட்டு புலன்விசாரணை உத்தியோகத்தர் விசாரணைக்கு முந்தைய மதிப்பீட்டின் ஒரு பகுதியாக முறைப்பாட்டாளர்(கள்)/பாதிக்கப்பட்டவர்களிடமிருந்து தேவையான தகவல்களை சேகரிக்க வேண்டும். இது விசாரணையின் செயல் திட்டத்தை/அடுத்த கட்டங்களை உருவாக்க விசாரணை உத்தியோகத்தருக்கு உதவும். புலனாய்வாளர்கள் மற்றும் தொழில்நுட்ப பணியாளர்கள் டிஜிட்டல் சான்றுகள் மிகவும் முக்கியமானது என்பதையும் நிலையற்றது என்பதையும் அறிவார்கள். எனவே விசாரணைக்கு முந்தைய மதிப்பீட்டிற்கான சரியான சான்றுகளை பாதுகாத்தல்

மற்றும் சேகரிப்பது அவசியமானதாகும். விசாரணைக்கு முந்தைய மதிப்பீடானது குற்றத்தின் இடம் மற்றும் சூழ்நிலை உட்பட பல்வேறு அம்சங்களைக் கருத்தில் கொள்ள வேண்டும்.

ஒரு விசாரணை உத்தியோகத்தர் பின்வரும் அடிப்படையில் முந்தைய மதிப்பீட்டை மேற்கொள்ள வேண்டும். இவ்விடயமானது அனைத்து டிஜிட்டல் சான்றுகளையும் அவற்றின் அழிவு, இழப்பு அல்லது சேதப்படுத்துதல் ஆகியவற்றிற்கு வாய்ப்பளிக்காமல் பாதுகாக்கும் கரிசனையின் தேவையான முன்னுரிமை நடவடிக்கைகளை விசாரணை உத்தியோகத்தர் தீர்மானிக்க உதவும்.

விசாரணைக்கு முந்தைய மதிப்பீடு அனைத்து சரியான மற்றும் பொருத்தமான தகவலைப் பெறுவதன் மூலம் தொடங்க வேண்டும் என்பதுடன் இது விசாரணை உத்தியோகத்தருக்கு சம்பவம்{குற்றத்தின் முழு பரப்பையும் பற்றிய ஒரு முன்னோட்டத்தை வழங்கும்.

3.3.2.1 குற்றத்தை அடையாளங் காணுதல்

மேலே விவரிக்கப்பட்டுள்ளபடி, கணினி குற்றச் சட்டத்தின் கீழ் குற்றங்களாகக் கருதப்படும் செயல்களை பிரிவு 6.2 வரையறுக்கிறது. தண்டனைச் சட்டக் கோவையின் கீழ் ஒரு சிறுவருக்கு எதிரான குற்றம் கணினிகள் மற்றும் பிற டிஜிட்டல் சாதனங்களைப் பயன்படுத்துவதன் மூலம் செய்யப்பட்டிருக்கலாம்.

தகவல்கள் மூலம் ஒரு குற்றம் புரியப்பட்டுள்ளது என்பதை வெளிப்படுமிடத்து, விசாரணை உத்தியோகத்தர் பின்வரும் விடயங்களை மேற்கொள்ள வேண்டும்.

- அறிக்கையிடப்பட்ட செயல் தொடர்பான தகவல்களை விரிவாக பெற்றுக்கொள்ளுதல் மற்றும் குற்றங்களின் விவரங்கள் முழுமையாக முறைப்பாட்டில் பதிவாகியுள்ளன என்பதை உறுதிப்படுத்திக்கொள்ளுதல்.
- இணையவெளி குற்றத்தின் தன்மை/முறையை விரிவாகக் குறிப்பிடுதல் (மின்னஞ்சல், முகவரி, முறைமைகள், நேர வலயங்கள் போன்றவை உள்ளடக்குதல்).
- முறைப்பாட்டிலிருந்து அடையாளம் காணக்கூடிய அனைத்து விவரங்களையும் குறிப்பிடுதல்:
- மின்னஞ்சல் மற்றும் இணையம் சார்ந்த IP முகவரி.
- சமூக வலைப்பின்னல் துஷ்பிரயோகமாக இருக்குமாயின் சுயவிவரப் பெயர் அல்லது பயனர் பெயர்.
- இணையவழி மோசடி சம்பவமாக இருக்குமாயின் வங்கி விவரங்கள்/இணைய வங்கி, கிளை போன்றவை.
- கடன் அட்டை மோசடியாக இருக்குமாயின் கடன் அட்டை விபரங்கள் மற்றும் கொள்வனவின் தன்மை.
- முறைப்பாடுடன் இணைக்கப்பட்டுள்ள ஆவணங்களில் (மின்னஞ்சல்கள் போன்றவை) முறைப்பாட்டாளர் குறிப்பிட்டுள்ள நேரத்தையும் திகதியையும் சரியான வடிவத்தில் சேர்க்க வேண்டும் என்பதுடன் விசாரணையின் போது நேர வலய மாற்றம் கவனத்திற் கொள்ளப்படுதல் வேண்டும்.

3.3.2.2 தொழில்நுட்ப மதிப்பீடு

குற்ற நிகழ்விடம் பற்றிய முன்னரான மதிப்பாய்வு

பொதுவாக, குற்றம் நடந்த இடம் பின்வரும் அமைப்புகளில் ஏதேனும் ஒன்றாக இருக்கலாம்:

1. ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட கணினிகளைக் கொண்ட தனிநபர்களின் வீடு.
2. சைபர் கபே/ பொது இடங்கள்.
3. ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட கணினிகள் மற்றும் சில சந்தர்ப்பங்களில் பரந்தளவிலான மற்றும் சிக்கலான முறைமைகளுடன் கூடிய வலையமைப்புகளைக் கொண்ட கம்பனிகள்/ அமைப்புகள்.
4. மெய்நிகர் தளங்கள்.

3.4 நிபுணத்துவ

குற்றத்தின் நிகழ்விடம்: வீடு

- இணைப்பு வகையை (Wi-Fi/ Ethernet) அடையாளம் காணவும்.
- இணைய இணைப்பு மூலம் எத்தனை கணினி அமைப்புகள் பயன்படுத்தப்படுகின்றன?
- முறைமையின் இருப்பிடம் மற்றும் முறைமையை(களை) அணுகக்கூடிய நபர்களின் விவரங்கள்.
- பயனர் பயன்படுத்திய/ சொந்தமான நீக்கக்கூடிய சேமிப்பக தகவல் தொடர்பு சாதனம் (வெளிப்புற ஹார்ட் டிஸ்க் உட்பட) பற்றிய விவரங்களைப் பெறவும்.

- நெட்வொர்க் டொபொலஜி மற்றும் கட்டிடக்கலை (கிளையன்ட் - சர்வர்) ஏதேனும் இருந்தால், அது பற்றிய விவரங்களைப் பெற்றுக்கொள்ளுதல்.
- பிற கணினி சாதனங்கள் (அச்சுப்பொறி/ ஸ்கேனர்/ மோடம் போன்றவை) பற்றிய விவரங்களைப் பெற்றுக்கொள்ளுதல்.

குற்றத்தின் நிகழ்விடம்: சைபர் கபே (Cyber Café)

- சைபர் கபேவில் உள்ள கணினி அமைப்புகளின் எண்ணிக்கையை அடையாளங் காணுதல்.
- இணையத்துடன் இணைக்கப்பட்ட கணினி அமைப்புகளின் எண்ணிக்கையை அடையாளங் காணுதல்.
- வலையமைப்பு டொபொலஜி மற்றும் முறைமை உருவாக்கம் (கிளையன்ட் - சர்வர்) பற்றிய விவரங்களைப் பெறுதல்.
- சிசிடிவி/வெப் கேமரா கிளிப்பிங்ஸ் ஏதேனும் இருந்தால் அவற்றைப் பெறுதல்.
- சைபர் கபே உரிமையாளரால் ஏதேனும் பயனர் முகாமைத்துவ மென்பொருள் பயன்படுத்தப்படுகிறதா?
- இணைய பயனர்களின் சம்பந்தப்பட்ட காலத்திற்கான பதிவு பதிவேட்டை பெறுதல்.
- சைபர் கபே உரிமையாளரால் பின்பற்றப்படுகின்ற சேமிப்பக சாதனங்களின் கொள்கையின் வடிவமைப்பைச் சரிபார்த்தல்.
- சைபர் கபே உரிமையாளர் மேற்கொண்டுள்ள வன்பொருள் மாற்றங்களைச் சரிபார்த்தல்.
- சைபர் கபே அமைப்புகளில் தொடர்பாடல் சாதன உபயோகத்தை அகற்றுவது தொடர்பான கொள்கையைச் சரிபார்த்தல்.

குற்ற நிகழ்விடம் : பெருநிறுவன சூழல்

குற்றத்தை மதிப்பிடுவதற்கான அடிப்படை தகவல்களை சேகரித்தல்:

- நடந்த சம்பவத்தின் தன்மை என்ன?
- சம்பவத்தை கண்டுபிடித்தது யார், எப்போது? சம்பவம் தொடர்பாக நபருக்கு விழிப்புநிலையை ஏற்படுத்தியது எது? இழப்பு ஏற்பட்டிருப்பின் அதன் அளவு எவ்வளவு?
- சம்பவம் நடந்த போது/கண்டுபிடிக்கப்பட்ட போது பணிபுரிந்தவர்கள் யார்?
- வழக்கமாக இருக்கும் குழு உறுப்பினர்கள் யார்?
- நிறுவனத்தால் என்ன பயன்பாடுகள் மற்றும் மென்பொருள், தரவுத்தளங்கள் பயன்படுத்தப்படுகின்றன?
- பயன்படுத்தப்படும் பயன்பாடுகளை விருத்திசெய்தவர்கள் யாவர்?
- பயன்பாடுகளுக்கான உதவியையும் பராமரிப்பையும் வழங்குபவர் யார்?
- உண்மையான பரிமாறிகள் (server) எங்கே அமைந்துள்ளன?
- நிர்வாக மற்றும் சிறப்பு பயனர் சிறப்புரிமைகள் யாருக்கு உள்ளன?
- அமைப்பின் காப்பு நகல் கொள்கை என்ன?
- என்ன வகையான காப்புப் பிரதிகள் எடுக்கப்படுகின்றன என்பதுடன் அவை எவ்வளவு காலம் தக்கவைக்கப்படுகின்றன?
- நிறுவனம் வழங்கும் சேவைகள் யாவை?
- நடந்த சம்பவத்தால் பாதிக்கப்பட்டவர்கள் யார்? அவர்களுக்கு தகவல் கொடுக்கப்பட்டதா?
- என்ன வகையான பாதுகாப்பு நடவடிக்கைகள் பயன்படுத்தப்படுகின்றன (என்டிவைரஸ், பயர்வோல், மற்றும் IDS/IPS)
- பயன்படுத்தப்படும் எந்த பயன்பாடுகளாலும் உள்நுழைவு செயல்படுத்தப்பட்டுள்ளதா?
- ஊழியர்களுக்கு எந்த அளவிலான அணுகல் வழங்கப்படுகிறது?
- நிறுவனத்தின் தகவல் பாதுகாப்புக் கொள்கை என்ன? இது இணக்கத்திற்காக எவ்வளவு காலத்துக்கு ஒருமுறை கணக்காய்வு செய்யப்படுகின்றது?

- பௌதீக பாதுகாப்பு நடவடிக்கைகள் நடைமுறையில் உள்ளன?
- மின்னஞ்சல் பரிமாறி உள்ளதா? உள்ளதாயின் அது எங்கு அமைந்துள்ளது?
- நிறுவனத்தின் மனிதவளக் கொள்கைகள் என்ன மற்றும் சமீபத்தில் நிறுவனத்தை விட்டுச் சென்ற ஊழியர்களில் சந்தேகத்திற்குரியவர்கள் யார்?

குற்றத்தின் நிகழ்விடம்: மெய்நிகர் சூழல்

1. **உள்ளமை சேமிப்பகம்: (Local Storage)**

   - நிலைவட்டு இயக்கிகள் (ஹார்ட் டிரைவ்கள்), SSDகள், USBடிரைவ்கள் மற்றும் பிற பௌதீக சேமிப்பு தகவல் சாதனங்கள்.
   - மேசைக் கணினிகள், ஆவணக் கோப்புறைகள், பதிவிறக்கங்கள் மற்றும் பயன்பாடு சார்ந்த விபரக்குறிப்புகள் போன்ற இருப்பிடங்கள்.

2. **ரெம் (குறிப்பின்றி அணுகும் நினைவகம்):**

   - செயலில் உள்ள செயல்முறைகள் மற்றும் திறந்த கோப்புகள் தற்காலிகத் தரவைச் சேமிக்கக்கூடிய நினைவகம் ஆகும் -

     இயங்கும் செயல்முறைகள், குறியாக்க விசைகள் மற்றும் சேமிக்கப்படாத தரவு ஆகியவற்றை மீட்டெடுக்கும் பொருட்டு நினைவக சேமிப்புகளை மீளக் கைப்பற்றுதல்.

3. **இயக்க முறைமை கலைப்பொருட்கள்:**

   - கணினி பதிவுகள், நிகழ்வு பதிவுகள், பதிவேட்டில் உள்ளீடுகள் மற்றும் கணினி கோப்புகள்.
   - கணினி செயல்பாடுகள், மென்பொருள் நிறுவல்கள், பயனர் செயல்பாடு மற்றும் உள்ளமைவுகள் பற்றிய தகவல்.

4. **வலையமைப்பு கலைப்பொருட்கள்:**

   - வலையமைப்பு பதிவுகள், பொதிவு பிடிப்புகள் மற்றும் போக்குவரத்து பகுப்பாய்வு.
   - இணைய முகவரிகள், URLகள் மற்றும் பயன்படுத்தப்படும் நெறிமுறைகள் உள்ளிட்ட தரவுத்தொடர்புடைய வலையமைப்பு தொடர்பாடல்கள்.

5. **பயனர் செயல்பாடு:**

   - உலாவி வரலாறு, "குக்கீகள்", தற்காலிக சேமிப்பு கோப்புகள் மற்றும் புக்மார்க்குகள்.
   - பயனர் தொடர்புகள், பார்வையிட்ட வலைத்தளங்கள் மற்றும் இணையவழி செயல்பாடுகள் பற்றிய தகவல்கள்.

6. **விண்ணப்பத் தரவு:**

   - நிறுவப்பட்ட பயன்பாடுகளுக்கான குறிப்பிட்ட கோப்புகள் மற்றும் பதிவுகள் (உதா- உரையாடல் பதிவுகள், வாடிக்கையாளர் மின்னஞ்சல், அலுவலக பயன்பாடுகள்).
   - பல்வேறு மென்பொருள் பயன்பாடுகளின் பயன்பாடு மற்றும் தொடர்புகள் பற்றிய தரவுகள்.

7. **மேக சேமிப்பகம்:**

   - Google Drive, Dropbox, OneDrive மற்றும் பிற போன்ற மேக தளங்களில் தரவு சேமிக்கப்படுகிறது. - மேகக்கணியில் சேமிக்கப்பட்ட ஆவணங்கள், விரிதாள்கள், புகைப்படங்கள், காப்புப்பிரதிகள் மற்றும் பிற கோப்புகள்.

8. **க்ளவுட் சேவைப் பதிவுகள்:**

- மேக சேவை வழங்குநர்கள் வழங்கும் அணுகல் பதிவுகள், பயன்பாட்டுப் பதிவுகள் மற்றும் செயல்பாட்டுப் பதிவுகள். - உள்நுழைவு முயற்சிகள், கோப்பு அணுகல், மாற்றங்கள் மற்றும் நீக்குதல் பற்றிய தகவல்கள்.

9. **மெய்நிகர் இயந்திரங்கள் (VMகள்) மற்றும் கொள்கலன்கள்:**

- மேக உட்கட்டமைப்பில் இயங்கும் VMகள் அல்லது கொள்கலன்களின் நிகழ்வுகள்.
- உள்ளமைவு கோப்புகள், நொடிப்பு சேமிப்புகள் (ஸ்னாப்ஸாட்கள்) மற்றும் மெய்நிகர் சூழல்களின் செயல்பாட்டு பதிவுகள்.

10. **கிளவுட் பயன்பாடுகள் மற்றும் சேவைகள்:**

- சந்தேக நபர் பயன்படுத்தும் இணைய அடிப்படையிலான பயன்பாடுகள் மற்றும் சேவைகள்.
- CRM, ERP மற்றும் பிற வணிகக் கருவிகள் உட்பட SaaS (ஒரு சேவையாக மென்பொருள்) பயன்பாடுகளால் உருவாக்கப்பட்ட தரவுகள்.

11. **API தொடர்புகள்:**

- மேக சேவை API களுடன் தொடர்புகளிலிருந்து பதிவுகள் மற்றும் தரவுகள்.
- பயன்பாடுகள் மற்றும் சேவைகள் மேக உள்கட்டமைப்புடன் எவ்வாறு தொடர்பு கொள்கின்றன என்பது பற்றிய விவரங்கள்.

12. **அங்கீகாரம் மற்றும் அடையாள மேலாண்மை:**

- பயனர் கணக்குகள், பாத்திரங்கள், அனுமதிகள் மற்றும் அடையாள வழங்குநர் பதிவுகள் (உதா., AWAIAM, Azure AS).
- பயனர் அங்கீகாரம், அங்கீகாரம் மற்றும் மேக சூழலில் செயல்பாடு பற்றிய தரவு.

13. **மெட்டாடேட்டா:**

- கோப்புகள், மின்னஞ்சல்கள் மற்றும் ஆவணங்களுடன் தொடர்புடைய மெட்டாடேட்டா.
- உருவாக்கிய திகதிகள், மாற்றியமைக்கும் திகதிகள், உருவாக்குபவர் விவரங்கள் மற்றும் கோப்பு பாதைகள் போன்ற தகவல்கள்.

14. **குறியாக்கம் மற்றும் பாதுகாப்பு:**

- குறியாக்க விசைகள், சான்றிதழ்கள் மற்றும் பாதுகாப்பு டோக்கன்கள்.
- தகவல் எவ்வாறு பாதுகாக்கப்படுகிறது மற்றும் அணுகப்படுகிறது என்பது தொடர்பான தரவு.

15. **பின் பாதுகாப்பு மற்றும் மிகையாக்கம்:**

- காப்பு கோப்புகள் மற்றும் மிகையாக்க தீர்வுகள்.
- காப்புப் பிரதி சேமிப்பு அல்லது பிரதிபலித்த சூழல்களில் இருக்கக்கூடிய தரவின் நகல்கள்.

16. **இடைமேக தொடர்பாடல்கள்:**

- வெவ்வேறு மேக சூழல்களுக்கு இடையேயான தரவு பரிமாற்றங்கள் மற்றும் தொடர்புகள். - குறுக்கு-மேக செயற்பாடுகள் மற்றும் ஒத்துழைப்பு பற்றிய தகவல்கள்.

குற்றம் நடந்த இடத்தில் (குற்றம் நடந்த இடத்தின் வகையைப் பொருட்படுத்தாமல்) புலன்விசாரணை உத்தியோகத்தர் அந்தக் காட்சியை கவனமாக ஆய்வு செய்ய வேண்டும்/பகுப்பாய்வு செய்ய வேண்டும் என்பதுடன் நிலைமையைக் கண்காணித்து மதிப்பீடு செய்ய வேண்டும் மற்றும் / அல்லது மெய்நிகர் இடத்தை நிர்ணயம் செய்ய வேண்டும். அத்துடன் தொடர்ந்து இதனை முன்னெடுத்துச் செல்வதற்கான படிமுறைகளை தீர்மானித்தல் வேண்டும்.

விசாரணைக்கு முந்தைய மதிப்பீடானது விசாரணை உத்தியோகத்தருக்கு ஆதாரங்களைக் கைப்பற்றுவதற்கு / பாதுகாப்பதற்கு முன் குற்றம் நிகழ்ந்த இடத்தில் உள்ள முறைமைகள்/வலையமைப்பின் உள்ளூர் சூழ்நிலை, நிலைமைகள் மற்றும் தொழில்நுட்ப விவரங்கள் ஆகியவற்றைப் புரிந்துகொள்வதற்கு உதவும். டிஜிட்டல் சான்றுகள் மிகவும் விரைவாக மறையக்கூடியவை மற்றும் நிலையற்றவையாக உள்ளன. இது பல சாதனங்களில், இடங்களில் மற்றும் பல்வேறு வடிவங்களில் கிடைக்கும். உதாரணமாக பிரதியெடுக்கும் இயந்திரங்கள், தொலைநகல் இயந்திரங்கள், ரவுட்டர்கள், மையங்கள் போன்றவற்றை கூற முடியும் என்பதுடன் நிலையான சேமிப்பகம்/கணினி சாதனங்களுக்கு மேலதிகமாக சம்பவம் / நிகழ்வு தொடர்பான முக்கிய தகவல்களையும் கொண்டிருக்கலாம். எனவே, விசாரணை உத்தியோகத்தர் குற்றத்தின் முழு நிகழ்விடத்தையும் பூர்வாங்க மதிப்பாய்வு செய்வது மற்றும் ஆதாரங்களை அடையாளம் கண்டு, தேடுதல் மற்றும் கைப்பற்றுவதற்கு முன் சில மேலதிக நடவடிக்கைகளை எடுப்பது மிகவும் முக்கியமானதாகும். பொதுவான நடைமுறையின்படி, விசாரணை உத்தியோகத்தர் குற்றம் நடந்த இடத்தில் வீடியோ / புகைப்படம் எடுத்து வலையமைப்பு வடிவமைப்பு உருவரை (network architecture sketch) ஒன்றை 'எங்கே இருக்கிறதோ அப்படியே' வரைந்து அதை ஆவணப்படுத்த வேண்டும்.

விசாரணைக்கு முந்தைய மதிப்பீட்டில் மேற்கூறிய படிமுறைகள், விசாரணை உத்தியோகத்தர் அல்லது உத்தியோகத்தர்களுக்கு சம்பவத்தை முழுவதுமாகப் புரிந்துகொள்ளவும், விசாரணைகளை எவ்வாறு தொடரலாம் என்பதைத் தீர்மானிக்கவும் உதவும்.

3.3.3 சான்றுகள் சேகரிப்பு

இணையவெளி குற்ற நிகழ்விடமானது வழக்கமான குற்ற நிகழ்விடத்திலிருந்து முற்றிலும் வேறுபட்டதாகும். டிஜிட்டல் சான்றுகள் எளிதில் அழியத்தக்கவையாக இருப்பதுடன் அவற்றை எளிதாகவும் திருட்டுத்தனமாகவும் சேதப்படுத்தலாம். இதன் காரணமாக தேடுதல், சேகரிப்பு, பாதுகாத்தல், போக்குவரத்து மற்றும் ஆதாரங்களை ஆய்வு செய்யும் போது மிகுந்த கவனிப்பு மற்றும் முன்னெச்சரிக்கைகள் தேவைப்படுகின்றது.

3.3.3.1 குற்ற நிகழ்விடத்தைப் பாதுகாத்தல்

குற்றம் நடந்த இடத்தைக் கண்டறிந்த பிறகு, விசாரணை உத்தியோகத்தர் அதைப் பாதுகாக்க வேண்டும் என்பதுடன் குற்றம் நடந்த இடத்தில் உடல் ரீதியாக இருந்த ஒவ்வொரு தனிநபரையும், குற்றம் நடந்த இடத்தைப் பாதுகாக்கும் போது அவர்களின் பங்கையும் கவனத்தில் கொள்ள வேண்டும்.

- சேகரிக்கப்பட்ட தகவல் மற்றும் குற்றம் நடந்த இடத்தின் ஆய்வின் அடிப்படையில், விசாரணை உத்தியோகத்தர் அனைத்து சாத்தியமான ஆதாரங்களையும் அடையாளம் காண வேண்டும். இந்த பௌதீக சான்றுகளில் கையேடுகள், பயனர் வழிகாட்டிகள் மற்றும் சீட்டுகளில் உள்ள அடவுச்சொற்கள், வங்கிக் கணக்கு எண்கள் போன்ற பிற பொருட்கள் போன்ற வழக்கமான பௌதீக சான்றுகள் இருக்கலாம். குற்றம் நடந்த இடத்தில் உள்ள பல்வேறு உபகரணங்கள் மற்றும் பொருட்களின் நிலையையும் கவனிக்க வேண்டியது அவசியமாக இருக்கின்றது. உதாரணமாக மேசைக் கணினியின் இடது புறத்தில் இருக்கும் மவுஸ், கணினியை இயக்குபவர் இடது கைப் பயனாளர் என்பதைக் குறிக்கலாம்.

- டிஜிட்டல் ஆதாரங்களை அடையாளங் காணும் போது, அழிந்துபோகக்கூடிய ஆதாரங்கள் அடையாளம் காணப்படுவதையும், அதைப் பாதுகாப்பதற்கான அனைத்து முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படுவதையும் விசாரணை உத்தியோகத்தர் உறுதிசெய்ய வேண்டும். இது தொடர்பான மீளாய்வு செய்யும் போது, மின்னணுச் சான்றுகளின் நிலையைத் தொந்தரவு செய்வது அல்லது மாற்றுவது தவிர்க்கப்பட வேண்டும்.

- கணினிகள் முடக்கப்பட்டிருந்தால், ஆய்வுக்காக அவற்றை இயக்கக் கூடாது. கணினிகள் இயக்கத்தில் இருந்தால், அவற்றை இயங்கு நிலையிலேயே வைக்குமாறு அறிவுறுத்தப்படுகிறது.

- குற்றம் நடந்த இடத்தில் அமைப்புகள் இயக்கத்தில் இருந்தால், விசாரணை உத்தியோகத்தர் அதை புகைப்படம் எடுக்க அவசியமான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்பதுடன் ஆதாரங்களை விரைவில் கைப்பற்ற திட்டமிட்டு ஆவணப்படுத்த வேண்டும். விசாரணை உத்தியோகத்தர் கைப்பற்றும் செயல்பாட்டின் போதுஉதவி வழங்குமாறு சம்பந்தப்பட்ட தொழில்நுட்ப பணியாளர்களுக்கு அறிவிக்க வேண்டும் என்பதுடன் இதனூடக அழிந்துபோகக்கூடிய

சான்றுகள் (விரைவில் மாற்றமடையக்கூடிய தரவு) இழப்பின்றி சரியான முறையில் மீட்டெடுக்கப்படுவதற்கான வாய்ப்பு கிட்டும். ஒவ்வொரு சாதனமும் விசாரணைச் செயல்முறையைத் தொடங்குவதற்கு முன், அவற்றின் அசல் இடத்தில் அறை எண் அல்லது பெயர் அறை போன்ற தொடர்புடைய குறிப்புகளுடன் புகைப்படம் எடுக்கப்பட்டிருப்பதை உறுதிசெய்யவும்.

- இணைக்கப்பட்ட வலையமைப்பு கேபிள் கம்பிகள் மற்றும் கணினிகளில் மின் இணைப்புகளை விசாரணை உத்தியோகத்தர் கவனத்திற் கொள்ளுதல் வேண்டும். முகவர் நிறுவனத்தில் முறைப்பாடு செய்பவரின் அல்லது தொழில்நுட்ப பணியாளர்களின் உதவியுடன், அனைத்து வலையமைப்பு இணைப்புகள், மோடம்கள், தொலைபேசி இணைப்புகள் மற்றும் அவை சாதனத்தின் இணைப்பு முடிவு மற்றும் சுவர்களில் உள்ள மூலத்திலிருந்த அவை தொடர்புபட்டுள்ள விதம் ஆகிய இரண்டையும் குறிக்கவும்.

3.3.3.2 *சம்பவம்/குற்றத்தை கட்டுப்படுத்துதல்*

- சம்பவத்தை கட்டுப்படுத்துதல் என்பது சம்பவத்தின் தன்மை மற்றும் செயற்பரப்பையும் தீர்மானிப்பதையும் அதனையடுத்து சேதம் ஏதேனும் இருந்தால் அதைக் குறைப்பதையும் குறிக்கின்றது. கட்டுப்படுத்தல் படிமுறைகளை பொருத்தமட்டில் அவை அணுகலைத் தடுப்பதற்கு பயர்வோல் மீதான கூடுதல் விதிகளை விதித்தல், வலையமைப்பிலிருந்து பாதிக்கப்பட்ட இயந்திரங்களை அகற்றுதல், பயனர் அணுகல் கட்டுப்பாடுகளை முடக்குதல் அல்லது பாதிக்கப்பட்ட இயந்திரங்களுக்கு கருந்துளையை உருவாக்குதல் ஆகியவற்றை உள்ளடக்குகின்றது. இந்த நடவடிக்கைகள் புலனாய்வாளர்கள் அல்லது முகவர் நிறுவனங்களுடனான கலந்துரையாடலின் பின்னர் பாதிக்கப்பட்டவர்கள் அல்லது ஒழுங்கமைப்புகளினால் எடுக்கப்படுகின்றன.

- நிதி மோசடிகளை பொருத்தமட்டில் மோசடியான பணப் பரிமாற்றங்கள் நடந்திருக்குமாயின், பயனாளி/சந்தேக நபர்/ குற்றம் சாட்டப்பட்ட நபரின் வங்கிக் கணக்குகளை முடக்குவதற்கு விசாரணை உத்தியோகத்தர் உடனடியாக சம்பந்தப்பட்ட வங்கிகளின் கிளைகளைத் தொடர்பு கொள்ள வேண்டும்.

- சமூக வலைப்பின்னல்/சமூக இணையத்தளங்களில் உள்ள போலி / அவதூறு சுயவிவரங்களின் அணுகல் விவரங்களைத் தடுக்க / அகற்றவும் அதே நேரத்தில் அவற்றைப் பாதுகாக்கவும் சேவை வழங்குநர்களிடம் விசாரணை உத்தியோகத்தர் வேண்டுகோள் விடுத்தல் வேண்டும். அவதூறான/ஆபாசமான உள்ளடக்கங்களின் அணுகல் விவரங்களைப் பாதுகாக்க, சேவை வழங்குநர்களுக்கு விசாரணை உத்தியோகத்தர் அறிவிக்க வேண்டும்.

- வணிகக் காரணங்களுக்காக அல்லது பொது நலன் கருதி பாதிக்கப்பட்ட தரப்பினரால் இலக்கு வைக்கப்பட்ட முறைமையை உடனடியாக மீட்டெடுக்க வேண்டிய நிலை காணப்படுமாயின் விசாரணை உத்தியோகத்தர் இணையவெளி தடயவியல் துறையில் நிபுணத்துவம் பெற்ற தொழில்நுட்ப பணியாளர்களின் சேவைகளைப் பெற வேண்டும் என்பதுடன் பாதிக்கப்பட்ட முறைமையின் உருப்படத்தின் நகலைப் பெற்றுக்கொண்ட பின்னர் மாத்திரமே அதை மீட்டெடுக்க அனுமதிக்க வேண்டும். இந்த நடவடிக்கைகள் போதுமான நியாயத்துடன் ஆவணப்படுத்தப்பட வேண்டும் என்பதுடன் மிகவும் அரிதான சூழ்நிலைகளில் பயன்படுத்தப்பட வேண்டும். பொதுவாக, மீட்டெடுப்பு என்பது சாட்சியங்களைக் கைப்பற்றிய பின்னரே செய்யப்படுகிறது என்பதுடன் குற்றத்தைப் பற்றி முறைப்பாடு செய்கின்ற உடனடி கட்டத்தில் அல்ல.

3.3.3.3. சான்றுகளின் அடையாளமிடல் மற்றும் ஆவணப்படுத்தல்

- விசாரணைக்கு முந்தைய மதிப்பீட்டின் போது செய்யப்பட்ட குறிப்புகளை குறுக்கு சரிபார்த்தல் மற்றும் குற்றம் நடந்த இடத்தில் உபகரணங்கள், வலையமைப்புகள் மற்றும் பிற தகவல் தொடர்பு சாதனங்கள் தொடர்பான தொழில்நுட்ப தகவல்களை சரியாக ஆவணப்படுத்துதல்.

- பாதுகாப்பு சங்கிலித் தொடர் மற்றும் டிஜிட்டல் சான்றுகள் சேகரிப்பு படிவங்களை ஆவணப்படுத்துதல். (தயாரிப்பு பதிவேடு -PR படிவம்)

- ஒவ்வொரு சாதனத்திற்கும் ஒரு வரிசை எண் ஒதுக்கப்பட வேண்டும் என்பதுடன் அதுவே பாதுகாப்பு சங்கிலித் தொடர் மற்றும் டிஜிட்டல் சான்றுகள் சேகரிப்புப் படிவங்களில் முறையாகக் குறிப்பிடப்படுதல் வேண்டும்.

- குற்றம் நடந்த இடத்தின் 'எங்கே இருக்கிறதோ அப்படியே' ஆவணப்படுத்தவும். (புகைப்படம்)

3.3.3.4 ஆதாரங்களை மாற்றுவதைத் தவிர்த்தல்

- விசாரணைக்கு முந்தைய மதிப்பீடுகளின் முதன்மை நோக்கம் யாதெனில் இணையவெளி குற்றங்களை வெற்றிகரமாக நடத்துவதில் முக்கியமானதாக இருக்கும் "ஆதாரங்களை மாற்றுவதைத் தவிர்ப்பது" ஆகும். சம்பவம் மற்றும் வலையமைப்புகள் பற்றிய புரிதல் குறித்து உங்களுக்கு தெளிவாக தெரியாவிட்டாலோ அல்லது சந்தேகம் இருந்தாலோ, தடயவியல் ஆய்வாளரின் உதவியை முடிந்தவரை விரைவாக அணுகுதல் வேண்டும்.

3.3.3.5. சாதனங்களைப் கைப்பற்றுதல், சேமித்தல் மற்றும் போக்குவரத்து செய்தல்

- **கைப்பற்றுதல்:** டிஜிட்டல் ஆதாரங்களைத் தேடுவதற்கும் கைப்பற்றுவதற்கும் பயன்படுத்தப்படும் கருவிகளைப் பற்றி சாட்சிகளிடம் சுருக்கமாக கூறுங்கள்

- **மின் இணைப்பைத் துண்டிக்கவும்:** இயங்கும் சாதனங்களாக இருக்குமாயின், ஆவணப்படுத்தப்பட்டவுடன், தற்போதைய நிலையைப் பாதுகாக்க மின்சார விநியோகத்தைத் துண்டிக்கவும்.

- **அடையாளமிடல் மற்றும் உறையிடல்:** தனிப்பட்ட அடையாளம் காட்டியுடன் சாதனத்தை அடையாளமிடுங்கள். அதை ஒரு ஆண்டிஸ்டேடிக் பையில் அல்லது ஆதாரப் பையில் வைத்து, அதை சேதப்படுத்தாத முத்திரையால் மூடவும்.

- **பாரடே பைகளைப் பயன்படுத்தவும்:** வயர்லெஸ் சிக்னல்களைத் தடுக்கவும், தொலைவிலிருந்து தரவுகளை நீக்குதல் அல்லது மோசடியான மாற்றம் செய்யப்படுவதை தடுக்கவும் மொபைல் சாதனங்கள் மற்றும் பிற கம்பியில்லாமல்-இயக்கப்பட்ட சாதனங்களுக்கு பாரடே பைகளைப் பயன்படுத்தவும்.

களஞ்சியப்படுத்தல் (சேமிப்பு)

- **பாதுகாப்பான களஞ்சியப்படுத்தல்:** கைப்பற்றப்பட்ட சாதனத்தை பாதுகாப்பான, அணுகல் கட்டுப்படுத்தப்பட்ட சூழலில் களஞ்சியப்படுத்தவும். பாதுகாப்பு பெட்டிகள் அல்லது பூட்டக்கூடிய சேமிப்பு பெட்டிகளைப் பயன்படுத்தவும்.

- **சுற்றுச்சூழல் கட்டுப்பாடுகள்:** சேமிப்பு சூழல் தீவிர வெப்பநிலை, ஈரப்பதம் மற்றும் மின்காந்த குறுக்கீடு ஆகியவற்றிற்கு நீங்கலாக இருப்பதை உறுதிசெய்யவும்.

போக்குவரத்து

- **பாதுகாப்பான போக்குவரத்து:** ஏதேனும் சேதம் விளைவதைத் தடுக்கும் பொருட்டு பாதுகாப்பான காலநிலை கட்டுப்பாட்டு சூழலில் சாதனத்தை கொண்டு செல்லவும். மின்காந்த குறுக்கீட்டைத் தவிர்க்கவும்.

- **கண்காணிப்பு நிபந்தனைகள்:** பௌதீக தாக்கங்கள், தீவிர வெப்பநிலை மற்றும் ஈரப்பதம் ஆகியவற்றிலிருந்து சாதனம் பாதுகாக்கப்படுவதை உறுதிசெய்யவும்.

3.3.3.6. சேமிப்பக ஊடுபொருளை கையாளுதல்

- சேமிப்பக ஊடுபொருளை அகற்றுதல்: சாத்தியமாயின் மற்றும் தேவைப்பட்டால், சாதனத்திலிருந்து ஹார்ட் டிரைவ்கள், SSDகள், USB டிரைவ்கள் மற்றும் பிற சேமிப்பக ஊடுபொருட்களை அகற்றவும்.

- எழுது தடுப்பான்களைப் பயன்படுத்துதல்: உருவமைப்பு அல்லது சோதனைக்காக சேமிப்பக ஊடகத்தை அணுகும் போது, தரவுகளில் ஏதேனும் மாற்றங்களைத் தடுக்க எப்போதும் எழுது தடைகளைப் பயன்படுத்தவும்.

3.3.3.7. தடயவியல் நகல்

ஒவ்வொரு சேமிப்பக ஊடகமும் குறிப்பிட்ட தரவுகளைக் கொண்டுள்ளது. தடயவியல் நோக்கத்திற்காக, சாதனத்தில் உள்ள எந்த தகவலையும் மாற்றாத வகையில் தரவு நகலெடுக்கப்பட வேண்டும். பின்வரும் நுட்பங்களைப் பயன்படுத்த வேண்டும்:

தர்க்க முறை காப்புப்பிரதி: (Logical Backup) இது ஒரு தர்க்க தொகுதியின் கோப்பகங்கள் மற்றும் கோப்புகளின் கோப்பகங்களை நகலெடுக்கிறது. நீக்கப்பட்ட கோப்புகள் அல்லது ஸ்லாக் ஸ்பேஸ்களில் சேமிக்கப்பட்ட மீதமுள்ள தரவு போன்ற ஊடகத்தில் இருக்கும் பிற தரவை இது பிடிக்காது.

பிட் ஸ்ட்ரீம் இமேஜிங்: (Bit Stream Imaging) இது இமேஜிங் அல்லது குளோனிங் என்றும் அறியப்படுகிறது, இது பிட்-க்கு-பிட் அசல் மீடியாவின் நகலை உருவாக்குகிறது. இது ஒரு வட்டிலிருந்து வட்டுக்கு (இலக்கு ஊடகத்திலிருந்து மற்றொரு ஊடகத்திற்கு) அல்லது 'டிஸ்க்-டு-பைல்' (ஊடகத்திலிருந்து ஒரு தர்க்கக் கோப்பு வரை) முறையில் செய்யப்படலாம்; மேலும் அதிக இட நேரம் தேவைப்படுகிறது.

எழுது-தடுப்பான்: (Web Blocker) இவை சேமிப்பக ஊடகத்தில் கணினி எழுதுவதைத் தடுக்கும் வன்பொருள் மற்றும் மென்பொருள் கருவிகளாகும். சந்தேகத்திற்கிடமான சேமிப்பக மீடியா நேரடியாக வன்பொருள் எழுது-தடுப்பானுடன் இணைக்கப்பட்டுள்ளது, பின்னர் எழுது-தடுப்பான் காப்புப் பிரதி எடுக்கும் சாதனத்துடன் இணைக்கப்பட்டுள்ளது. இதேபோல், நகலெடுக்கும் சாதனம் அதனுடன் இணைக்கப்படுவதற்கு முன்பு, சந்தேகத்திற்கிடமான கணினியில் ஒரு மென்பொருள் எழுத- தடுப்பான் ஏற்றப்படும்.

3.3.4 குற்ற நிகழ்விடத்தில் இடம்பெறும் பூர்வாங்க நேர்காணல்கள்

குற்றம் நடந்த இடத்தில் பூர்வாங்க நேர்காணல்களை நடாத்துதல் முன் விசாரணையின் போது சாத்தியமான சாட்சியங்களை அடையாளம் காணவும் அவற்றை கைப்பற்றவும் விசாரணை உத்தியோகத்தருக்கு உதவும். ஒரு விசாரணை உத்தியோகத்தர் கேட்கக்கூடிய சில நேர்காணல் கேள்விகள் பின்வருமாறு:

- சிக்கலைக் கட்டுப்படுத்த என்ன நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன? (சந்தேகத்திற்குரிய நபர்களுக்கு அவ்விடத்தை அணுகுவதற்கான அனுமதி மறுக்கப்பட்டது, சந்தேகத்திற்குரிய கணினிகளை வலையமைப்புகளிலிருந்து துண்டித்தல், பணியாளர்களை அவ்விடத்தை அணுகுவதை இடைநிறுத்துதல். (சந்தேகத்திற்குரிய பெயர்கள், முகவரி)

- சிக்கலை உள்ளடக்கிய பதிவுகள். (கணினி அணுகல் போன்றவை) ஏதேனும் இருந்ததா? அவற்றில் ஏதேனும் சந்தேகத்திற்கிடமான பதிவுகள் உள்ளதா?

- சிக்கல் ஏற்பட்ட பிறகு யாராவது கணினியைப் பயன்படுத்தினார்களா? - இதற்கு முன் இது போன்ற சம்பவத்தை நீங்கள் அவதானித்தீர்களா?

- பயர்வோல் / ஐடிஎஸ் / வலையமைப்பு பாதுகாப்பு சாதனங்களால் ஏதேனும் முன் எச்சரிக்கை முறைகள் செயற்படுத்தப்-பட்டிருந்ததா?

- சிக்கல் ஏற்பட்ட பிறகு, பாதிக்கப்பட்ட கணினி முறைமை அல்லது வலையமைப்பில் இயங்க வைக்கப்பட்டுள்ள கட்டளைகள் அல்லது செயல்முறைகளின் தொகுப்பு பற்றிய விரிவான ஆவணங்களை வழங்கவும். (முறைப்பாட்டாளரிடமிருந்து ஒரு உறுதிப்படுத்தல் கடிதத்தைக் கோருங்கள்)

- அவர்களிடம் வேறு ஏதேனும் கிளைகளில் / அலுவலகங்களில் இதே போன்ற கணினி முறைமைகள் உள்ளதா?

- இந்தச் சிக்கலைப் பற்றி பதிலளிக்கப்படாத கேள்விகள் ஏதேனும் உள்ளதா? (பாதிக்கப்பட்ட முறைமைப் பட்டியல், சம்பந்தப்பட்டவர்களின் எண்ணிக்கை போன்றவை)

- சிக்கலை பகுப்பாய்வு செய்வதற்கான மேலதிக திட்டங்கள் என்ன?

குற்றம் நடந்த இடத்தில், விசாரணை உத்தியோகத்தர் செய்ய வேண்டியவை:

- பல்வேறு சாதனங்களின் முறைப்பாட்டாளர்/உரிமையாளர்(களை) கண்டறிந்து அணுகல் விவரங்கள், பயனர் பெயர்கள், சேவை வழங்குநர்களின் விவரங்களைப் பெறவும். பல்வேறு கடவுச்சொல்லை அணுகுவதற்கான தேடல் மற்றும் கைப்பற்றல் குழுவுடன் இந்த நபர்கள் இருப்பதை விசாரணை உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டும்.

- குறிப்பாக கொள்கைகள் மற்றும் ஓப் - சைட் தரவு சேமிப்பு மற்றும், தரவு மையம் மற்றும் நிறுவனத்தின் அனர்த்த மீட்புக் கொள்கைகள் அல்லது காப்புப் பிரதி திட்டங்கள் போன்ற அனைத்து பாதுகாப்பு முறைமைகளின் தகவல்களையும் சேகரிக்கவும்.

- வலையமைப்பை அடையாளம் காணக்கூடிய நபர்களின் பட்டியலை அடையாளம் காண்பதும் வலையமைப்பின் திட்ட வரைபடத்தை நேர்காணலின் போது தயாரிப்பதும் பயனுள்ளதாக இருக்கும்.

3.3.5. டிஜிட்டல் தடயவியல் பகுப்பாய்வு

டிஜிட்டல் தடயவியல் என்பது டிஜிட்டல் சாதனங்களிலிருந்து ஆதாரங்களைக் கண்டறிவதற்கும், குற்றவாளிகளுக்கு எதிராக நீதிமன்றத்தில் வழக்குத் தொடரவும் உதவியாக அமையக்கூடிய ஒரு வளர்ச்சியடைந்து வரும் நடைமுறையாக அமைகின்றது. பாரம்பரிய தடயவியல் போலவே, டிஜிட்டல் தடயவியல் ஒரு விஞ்ஞான ரீதியிலான முறையாக இருப்பதுடன் இது சிறப்புத் திறன்கள், கருவிகள் மற்றும் திட்டங்களைப் பயன்படுத்துகிறது. இவ்விடயத்தை புலனாய்வாளர்களின் கண்ணோட்டத்தில் எளிமையான சொற்களில் கூறுவதாயின் இது மூல ஆதாரப் பொருளின் நம்பகத்தன்மையை மாற்றாமல் டிஜிட்டல் சாதனங்களிலிருந்து ஆதாரங்களைப் பிரித்தெடுப்பதற்கான விஞ்ஞான முறையாகும்.

- தரவு மீட்பு: மேலெழுதப்படாத நீக்கப்பட்ட கோப்புகளை மீட்டெடுத்தல் மற்றும் பகுப்பாய்வு செய்தல், அத்துடன் ஒதுக்கப்படாத மற்றும் தளர்வான இடத்திலிருந்து கோப்புகள் மற்றும் உரையின் பகுதிகளை பிரித்தெடுத்தல் ஆகியவை அடங்கும்.

- தொடர்சரம் மற்றும் முக்கிய வார்த்தை தேடுதல்: பைனரி கோப்பில் உள்ள வாசிக்கக்கூடிய உரையை அடையாளம் காண அல்லது குறிப்பிட்ட தொடர்சரம் உள்ள ஆவணக்கோப்பைக் கண்டறிவதற்காக, அறியப்பட்ட மற்றும் அறியப்படாத கோப்புகள், அத்துடன் ஒதுக்கப்படாத மற்றும் தளர்வான இடம் ஆகியவற்றைப் பார்த்தல் ஆகியவை இதில் உள்ளடங்கும்.

- அழியக்கூடிய சான்றுகள் பற்றிய பகுப்பாய்வு: இணைப்புகள், செயன்முறைகள் மற்றும் தற்காலிக அதிவேக நினைவக அட்டவணைகளை கூர்ந்து ஆராய்வதன் மூலம் கணினி தற்போது எந்த நிலையில் உள்ளது என்பதைப் பார்க்கும் திறனை ஆய்வாளருக்கு வழங்குகிறது.

- காலவரிசை பகுப்பாய்வு: படம்பிடிக்கப்பட்ட அனைத்து கோப்புகளுடன் தொடர்புடைய மாற்றியமைக்கப்பட்ட, அணுகப்பட்ட மற்றும் மாற்றப்பட்ட நேரங்களின் அடிப்படையில் நிகழ்வுகளின் காலவரிசை உருவாக்கப்பட்டு பகுப்பாய்வு செய்யப்படும் செயன்முறையாகும்.

- கணினி கோப்பு பகுப்பாய்வு: கணினி பைனரிகளில் அங்கீகரிக்கப்படாத மாற்றங்களை வெளிப்படுத்துகிறது.

3.4 நிபுணத்துவ இணையவெளி குற்றப் புலனாய்வுப் பிரிவு - CID

கணினி குற்றப் புலனாய்வுப் பிரிவு - CID

CCID உதவிக்கான அனைத்து கோரிக்கைகளும் அத்தகைய கோரிக்கைகளை சிரேஷ்ட பிரதி பொலிஸ் மா அதிபர் (குற்றப் புலனாய்வுத் திணைக்களம், குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் இணையவழி குற்றப் பிரிவு (CID) அஞ்சல் பெட்டி 534, கொழும்பு 01 இற்கு அனுப்பப்படுதல் வேண்டும்.

கணினி குற்றச் சட்டத்தின் ஏற்பாடுகளின்படி ஒரு CCID பொலிஸ் உத்தியோகத்தரால் பின்வரும் வகையில் கைது செய்யலாம், தேடலாம் மற்றும் கைப்பற்றலாம்;.

பிரிவு 21 (1) எந்தவொரு பொலிஸ் உத்தியோகத்தரும் இந்தச் சட்டத்தின் கீழ் விசாரணையின் போது, சட்டத்தால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளவாறு எந்தவொரு வளவிலும் அணுகக்கூடிய எந்தவொரு தகவலையும் தனது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவருதல், தேடுதல் அல்லது கைப்பற்றுவதற்கான அதிகாரங்களைப் பயன்படுத்தலாம்:

ஆனால், இந்தச் சட்டத்தின் கீழ் குற்றத்தைச் செய்ததாக சந்தேகிக்கப்படும் நபரை எழுத்தாணை இல்லாமல் கைது செய்யும் பொலிஸ் உத்தியோகத்தர் தேவையற்ற தாமதமின்றி, கைது செய்யப்பட்ட இடத்திலிருந்து பயணத்திற்கு எடுத்துக் கொண்ட நேரத்தைத் தவிர்த்து கைது செய்யப்பட்டு இருபத்தி நான்கு மணி நேரத்திற்குள், சந்தேக நபர் கைது செய்யப்பட்ட இடத்திற்கு அருகில் உள்ள நீதிமன்ற நீதவான் முன்னிலையில் அத்தகைய நபரை முன்னிலைப்படுத்த வேண்டும்.

CCID ஆனது விசாரணைகளில் பின்வரும் நிறுவனங்கள் மற்றும் முகவர் நிறுவனங்களுடன் இணைந்து செயல்படுகிறது.

- தொலைத்தொடர்பு ஒழுங்குபடுத்தும் ஆணைக்குழு (TRC)
- கணினி அவசர தயார்நிலை குழு (CERT)
- அரசாங்க பகுப்பாய்வாளர் திணைக்களம் (GAD)
- டிஜிட்டல் தடயவியல் கணினி ஆய்வுக்கூடங்கள் (DFC)

- அரச பல்கலைக்கழகங்கள் (உதா: மொரட்டுவை)
- நிதி புலனாய்வு பிரிவு (FIU)
- இணைய சேவை வழங்குநர்கள்
- குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களம்
- கணினி குற்றச் சட்டத்தின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள வேறு எந்த நபர்/நிறுவனம்

கணினிக் குற்றக் கண்காணிப்பு பிரிவு - தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை

தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையில் உள்ள கணினிக் குற்றக் கண்காணிப்புப் பிரிவு சிறுவர்களுக்கு எதிரான இணையவழி வன்முறை சம்பவங்களை கண்காணித்து விசாரணைகளை நடத்துகிறது. இது இணையவழி பாதுகாப்பு மற்றும் சிறுவர்களின் ஒன்லைன் பாதுகாப்பு பற்றிய அறிவு மற்றும் திறன்களை பரப்புவதன் மூலம் விழிப்புணர்வை ஏற்படுத்துகிறது.

தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை இணையக் கண்காணிப்பு பவுன்டேஷன் (IWF) குழு உடன் இணைந்து ஒன்லைன் வழியிலான சிறுவர் பாலியல் துஷ்பிரயோகப் படங்களைக் கண்டறிந்து அகற்றுவதற்காக ஒன்லைன் பொது அறிக்கையிடல் போர்ட்டலை அறிமுகப்படுத்தியுள்ளது.

சர்வதேச பொலிஸ் (இன்டர்போல்)

சர்வதேச அளவிலானெ பரிமாணத்தைக் கொண்ட சிறுவர்களுக்கு எதிரான குற்றங்களுக்குதீர்வுகாணும் பொருட்டு இன்டர்போல் செயற்படுகிறது. இணையதளம் வழியாக சிறுவர்கள் மீதான பாலியல் துஷ்பிரயோகம்; மற்றும் சுரண்டலை தடுத்தல் இதன் முக்கிய பணிகளில் ஒன்றாகும். இணையத்தின் சிறப்பம்சங்கள், குறிப்பாக இணையத்தின் பெயர் தெரியாத தன்மை, சிறுவர் பாலியல் துஷ்பிரயோகப் பொருட்களை விநியோகிப்பதற்கும் அதை அணுகுவதற்கும் பெரிதும் உதவுகிறது. குற்றவாளிகள் இப்போது இணையம் மூலம் சிறுவர்களின் (சிறுவர்கள் துஷ்பிரயோகம் செய்யப்படுவதைக் கூட) நேரடி வீடியோவை உருவாக்கி பரிமாறிக் கொள்வதற்கு வாய்ப்பளிக்கின்றது. அவர்கள் சமூக வலையமைப்புகள் மற்றும் கேம் விளையாட்டுகள் அல்லது செயலிகளின் உரையாடல் செயற்பாடுகள் மூலம் சிறுவர்களுடன் நேரடி தொடர்பு கொள்ளக்கூடியதாக இருக்கின்றது.

இன்டர்போல் சிறுவர்களுக்கு எதிரான குற்றங்கள் பிரிவின் முன்னுரிமை:

- பாலியல் துஷ்பிரயோகத்தால் பாதிக்கப்பட்ட இளம் வயதினரைக் கண்டறிந்து மீட்பது.
- சிறுவர் பாலியல் துஷ்பிரயோகம் சார்ந்த பொருட்களை அணுகுவதற்கான வாய்ப்புகளை தடுத்தல்;.
- பாலியல் குற்றவாளிகள் சிறுவர்களை துஷ்பிரயோகம் செய்வதற்கு அல்லது நீதிமன்ற நடவடிக்களிலிருந்து தப்பிப்பதற்காக வெளிநாடு செல்வதைத் தடுத்தல்.

மேலும் INTERPOL நிபுணர்கள் மனித விற்பனை மற்றும் கட்டாய உழைப்பு ஆகியவற்றினால் பாதிக்கப்பட்ட சிறுவர்களை மீட்பதற்காக உறுப்பு நாடுகளுடன் இணைந்து பணியாற்றுகின்றனர்.

இவ்விடயத்தில் பொலிஸ் பிரிவின் சம்பந்தப்பட்ட எஸ்.எஸ்.பி மூலம் கோரிக்கை விடுக்கப்படலாம் என்பதுடன் கோரிக்கையில் பின்வரும் கூறுகள் உள்ளடங்கியிருத்தல் வேண்டும்.

- சந்தேக நபர்கள் பயன்படுத்திய ஏதேனும் இணைய இணைப்பு அல்லது பிற ‘இணைப்பு’
- சம்பவம் நடந்த திகதி மற்றும் நேரம்.
- சம்பவத்தின் உள்ளடக்கம்.
- குற்றம் தொடர்பான சட்ட ஏற்பாடுகள்.
- CCID இலிருந்து என்ன உதவி மற்றும் தகவல் கோரப்படுகின்றது எனும் விடயம்.
- சம்பவத்தின் வரலாறு.
- சாட்சியங்கள் அழிக்கப்படுவதைத் தவிர்ப்பதற்காக கூடிய விரைவில் கோரிக்கையை முன்வைத்தல்.

4. சார்ந்த நியம தொழிற்பாட்டு நடைமுறைகளை நடைமுறைப்படுத்துதல்

சிறுவர் விற்பனை சம்பவங்களின் விசாரணை மற்றும் வழக்குத் தொடர்தல் சிக்கலானதாகவும் பல பரிமாணங்களைக் கொண்டதாகவும் இருக்கலாம் என்பதுடன் பெரும்பாலும் மனித விற்பனை தொடர்பான எந்தவொரு குற்றத்தையும் முழுமையாகக் நிவரத்தி செய்வதாக அமைதல் வேண்டும். மேற்படி நியம செயல்பாட்டு நடைமுறைகள், பாதிக்கப்பட்டு மீண்ட சிறுவர்களின் பாதுகாப்பு மற்றும் நல்வாழ்வை உறுதிப்படுத்தும் அதே வேளையில் விசாரணை மற்றும் வழக்குத் தொடரும் செயன்முறையை ஒழுங்குபடுத்துதல் மற்றும் கண்காணிப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளன.

4.1 ஒருங்கிணைப்பு

பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சு மற்றும் இலங்கை பொலிஸ் போன்ற இந்த நியம தொழிற்பாட்டு நடைமுறையின் முக்கிய தரப்பினர்கள், குறிப்பாக பொலிஸ் சிறுவர் மற்றும் மகளிர் பணியகம் இந்த நியம தொழிற்பாட்டு நடைமுறைகளை செயற்படுத்துவதை ஒருங்கிணைத்து மேற்பார்வையிட வேண்டும்.

சிறுவர்களுக்கு எதிரான மனித விற்பனை தொடர்பான ஒழுங்கமைக்கப்பட்ட குற்றங்களை திறம்பட விசாரணை செய்தல் மற்றும் வழக்குத் தொடுப்பதில் முக்கிய பங்குகளையும் செயற்பாடுகளையும் வகிக்கும் அரசாங்கத்திற்குள்ளேயே உள்ள பிற திணைக்களங்கள் இருப்பதால், சம்பந்தப்பட்ட இந்த தரப்பினருடனான ஒருங்கிணைப்பு மற்றும் ஒத்துழைப்பு செயன்முறைகள் அவ்வப்போது மதிப்பீடு செய்யப்பட வேண்டும்.

சிறுவர்களுக்கு எதிரான மனித விற்பனை தொடர்பான ஒழுங்கமைக்கப்பட்ட குற்றங்களை விசாரணை செய்வதற்கும் வழக்குத் தொடுப்பதற்கும் நியம தொழிற்பாட்டு நடைமுறைகளை அறிமுகப்படுத்தி நிறுவுவதன் நோக்கம் யாதெனில் உள்ளூர், மாவட்ட, மாகாணம் மற்றும் தேசிய ஆகிய அனைத்து மட்டங்களிலும் பொலிஸ் பிரிவுகள் மற்றும் பங்குதாரர்களுக்கு இடையே ஒத்துழைப்பையும் ஒருங்கிணைப்பையும் ஊக்குவிப்பதாகும். இது போன்ற குற்றங்களின் விசாரணை மற்றும் வழக்குத் தொடுப்பதில் பங்குதாரர்கள் தங்கள் வகிபாகங்களையும் பொறுப்புகளையும் நிறைவேற்ற இது வழிகாட்டுகிறது. இந்த நெறிப்படுத்தப்பட்ட மற்றும் ஒருங்கிணைக்கப்பட்ட செயன்முறையானது, சம்பந்தப்பட்ட அனைத்து பங்குதாரர்களின் இணக்கமான முயற்சிகள் மூலம் பாதிக்கப்பட்டவர்களை மையப்படுத்தியதும் சிறுவர் நேயமிக்கதுமான முறையில் விற்பனையால் பாதிக்கப்பட்டு மீண்ட சிறுவர்களை சரியான நேரத்தில் அடையாளங் காணுதல், மீட்டுக் கொள்ளுதல் மற்றும் உதவி வழங்குதல் ஆகியவற்றை உறுதி செய்யும்.

4.2 புதுப்பித்தல் மற்றும் மீளாய்வு

நியம தொழிற்பாட்டு நடைமுறைகளின் செயல்திறனை மதிப்பிடுவதற்காக, பொது பாதுகாப்பு அமைச்சின் தலைமையில் காலாண்டு கூட்டங்கள் ஒவ்வொரு ஆண்டும் நடாத்தப்படுவதுடன் இதன் ஊடாக நியம தொழிற்பாட்டு நடைமுறைகள் மீளாய்வு செய்யப்பட்டு இற்றைப்படுத்தப்படும். நியம தொழிற்பாட்டு நடைமுறைகளின் இசைந்தொழுகும் தன்மையை மீளாய்வு செய்வதற்காக கிரமமான சூழ்நிலை மற்றும் முன்னேற்ற அறிக்கைகள் பெறப்பட்டு முக்கிய பங்குதாரர்களிடையே கலுந்துரையாடப்படும். இது நியம தொழிற்பாட்டு நடைமுறைகளை திறம்பட செயல்படுத்துவதை உறுதிசெய்யும் அதேவேளை செயற்படுத்துவதில் உள்ள சிக்கல்கள் மற்றும் சவால்களை கண்டறிய உதவுகின்றது. மேலும், சம்பந்தப்பட்ட பங்குதாரர்களின் கலந்துரையாடல்கள் மற்றும் ஒருமித்த கருத்துக்கள் மூலம், நியம தொழிற்பாட்டு நடைமுறைகளை செயல்படுத்துவதில் நெருக்கமான ஒத்துழைப்பை ஏற்படுத்துவதற்கு அவசியமான மேலதிக சுற்றறிக்கைகள் மற்றும் பணிப்புரைகள் அறிமுகப்படுத்தப்படும்.

இலங்கை அரசாங்கத்தால் அறிமுகப்படுத்தப்பட்ட கொள்கை மற்றும் சட்ட மாற்றங்களுக்கு ஏற்ப மூன்று வருடங்களுக்கு ஒருமுறை நியம தொழிற்பாட்டு நடைமுறைகள் மீளாய்வு செய்யப்பட்டு இற்றைப்படுத்தப்படும்.

4.3 ஆற்றல் விருத்தி

பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கான பயிற்சிகள் மற்றும் சிறுவர்களுக்கு எதிரான விற்பனை தொடர்பான ஒழுங்கமைக்கப்பட்ட குற்றங்களைப் புரிந்துகொள்வதற்கான மேலதிக விழிப்புணர்வு மற்றும் பயிற்சித் திட்டங்கள் மூலம் இந்த நியம தொழிற்பாட்டு நடைமுறைகளை வெளியிடுவதற்கு பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சு இலங்கை பொலிஸ் திணைக்களத்திற்கு அவசியமான ஒருங்கிணைப்பு மற்றும் ஒத்துழைப்புக்களை வழங்கும்.

4.4 நியம தொழிற்பாட்டு நடைமுறைகள்:

நடைமுறைப்படுத்தல், உதவி வழங்குதல் மற்றும் மேற்பார்வை செய்தல்



இணைப்பு 1: மனித விற்பனை குற்றங்களின் கூறுகளைப் புரிந்துகொள்ளுதல்

2006 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க தண்டனைச் சட்டக் கோவை (திருத்தச்) சட்டத்தின் பிரிவு 360 சி

யாசகம் செய்தல் (ஒரு சிறுவன்)	கட்டாய உழைப்பு	பாலியல் சுரண்டல்	கட்டாய திருமணம் (சிறுமியொருவர்)
மனித விற்பனையின் கூறுகள் மற்றும் உண்மைகள்			
கதிர்காமம் தேவாலயத்திற்கு அருகில் 12 வயது நிரம்பிய ஒரு சிறுவன் கதிர்காமம் பொலிஸாரால் கைது செய்யப்பட்டான். அவன் பிச்சை எடுக்கும் தொழிலில் ஈடுபட்டு வந்தான். பொலிஸாரிடம் வாக்குமூலம் அளித்த சிறுவன், தான் அனுராதபுரத்தைச் சேர்ந்தவன் என்றும், ரயில் மற்றும் பேரூந்தில் கதிர்காமம் வந்ததாகவும் கூறியுள்ளார். அவன் தன்னைப் பற்றி மேலும் கூறுகையில், அவனது மாமா 'அத்தை' என்று அடையாளம் காட்டப்பட்ட ஒருவருடன் செல்லுமாறு கூறியதாக தெரிவித்தான். அவர்களுடன் 'டாக்ஸி கமல்' என்ற மற்றொரு நபரும் வந்திருந்தார். அங்கு அவர் 'பொஸ்' என்று அழைக்கப்படும் ஒருவரினால் தான் பொறுப்பேற்றுக் கொள்ளப்பட்டு வைத்துக்கொள்ளப் பட்டதாகவும் கூறினான். பிச்சை எடுப்பதற்கு மேலதிகமாக, சிறிய வெள்ளை 'பார்சல்களை' பல்வேறு இடங்களுக்கும், டாக்ஸி டிரைவர்களுக்கும் கொண்டு செல்ல வேண்டிய நிலை ஏற்பட்டதாகவும் அவன் கூறினான். அவனுக்கு செய்ய வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்ட இந்த வேலையை செய்வதற்கு எவ்வித்திலும் விருப்பம் இருக்கவில்லை என்றும் தனக்கு மிக சிறியளவு உணவு மட்டுமே கொடுக்கப்பட்டதாகவும் தனது வீட்டுக்கு திரும்பி வருவதற்கு இடமளிக்கப்படவில்லை எனவும் தெரிவித்தான்.	பொலிஸாருக்கு கிடைத்த தகவலின் அடிப்படையில், சிறுவர் விடுதியில் இருந்து 15 வயதுச் சிறுமியொருவர் மீட்கப்பட்டார். பொலிஸார் அவளைக் கண்டுபிடித்த போது, அவள் தனக்குச் சொந்தமில்லாத துணிகளைத் துவைத்துக் கொண்டிருந்தாள். அவள் பாடசாலைக்கு செல்லவில்லை. அவளது தாயார் மத்திய கிழக்கில் புலம்பெயர்ந்த தொழிலாளியாக பணியாற்றியுதுடன் அவளது தந்தை குடும்ப வருமானத்திற்காக அவளை ஒரு வேலையில் ஈடுபட ஒப்படைத்திருந்தார். அவளது விடுதியில் தலைமை நிர்வாகியாக இருந்த பெண் அவளை தரையை துடைத்தல், பெருக்குதல், சமையலறையை சுத்தம் செய்தல், அழுக்குப் பாத்திரங்கள் கழுவுதல் மற்றும் துணிகளை துவைத்தல் போன்ற பணிகளில் ஈடுபடுவதற்கு அச்சுறுத்தப்படுவதாக அவள் கூறினாள். அவளுக்கு மிகக் குறைந்தளவு உணவு கொடுக்கப்பட்டதுடன் சமையலறையின் ஒரு மூலையில் நித்திரை செய்ய நிர்ப்பந்திக்கப்பட்டிருந்தாள்.	ஒரு ஹோட்டலில் பொலிஸார் நடத்திய சோதனையின் பின்னர் 14 வயது சிறுமி ஒருவர் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்டாள். பொலிசார் அவளிடம் விசாரணை நடத்திய போது, தான் 09ஆம் தரத்தில் கல்வி பயின்று வருவதாகவும், பாடசாலை வேன் வண்டியில் பயணிப்பதாகவும் தெரிவித்தாள். வேன் வண்டி டிரைவர் ஒரு மிடுக்கான ஒருவராக இருந்ததுடன் அவள் அவருடன் ஒரு தொடர்பை ஏற்படுத்திக் கொண்டாள். ஒரு நாள் அந்த சாரதி அவளை தன்னுடன் ஒரு ஹோட்டலுக்கு வரும்படி கூறி உடன்பட செய்தான். அந்த சாரதி அவளுடன் உடலுறவு கொண்டதுடன் அதன் பின்னர் அவளை ஹோட்டல் முகாமையாளரிடம் ஒப்படைத்தான். அவர் அவளை மிரட்டி, தனது வாடிக்கையாளர்களுக்கு பாலியல் சேவைகளை வழங்குமாறு கட்டாயப்படுத்தினார்.	60 வயது முதியவர் ஒருவருடன் சுமார் 15 வயதுடைய சிறுமி ஒருவர் செல்வதைப் பார்த்த சம்பவத்தை ஒரு பெண் பொலிஸ் உத்தியோகத்தர் பதிவு செய்து கொள்கின்றார். நகரில் உள்ள ஒரு பென்சி பொருட்கள் விற்பனை செய்யும் கடைக்கு அவர்கள் வந்தனர். சிறுமி மனக்குழப்பத்தில் இருந்ததுடன் வயதானவர் தனக்கு என்ன வாங்க முயற்சிக்கிறார் என்பதில் கூட ஆர்வம் காட்டவில்லை. அவள் அவருடன் இருக்க வேண்டிய கட்டாயத்தில் இருப்பதைப் போல் தோன்றியது. சில நிமிடங்களுக்குப் பிறகு, அந்தப் பெண்ணிடம் ஏதாவது வாங்கச் சொல்லி கூறிவிட்டு முதியவர் கடையை விட்டு வெளியே சென்றார். பெண் பொலிஸ் உத்தியோகத்தர் அவளிடம் சென்று பேச ஆரம்பித்தார். அந்த முதியவரிடம் தனது தந்தை கடன் வாங்கியதாக கூறி அந்த கட்டிளம் பருவப் பெண் அழ ஆரம்பித்தார். அவரால் கடனை திருப்பி செலுத்த முடியவில்லை. ஒரு நாள் அவள் வீட்டிற்கு ஒரு டாக்ஸி வந்தது, அவளது தந்தை அவளை தன்னுடன் டாக்ஸியில் செல்லச் சொன்னார். அந்த முதியவருடன் வாழ நிர்ப்பந்திக்கப்பட்டதுடன் அந்த நபர் அவளை சட்டப்பூர்வமாக திருமணம் செய்து கொண்டதாக கூறினார். அந்த நபர் தனது சட்டப்பூர்வ மனைவி எனக் கூறி அவளை பாலியல் செயல்களில் ஈடுபடும்படி கட்டாயப்படுத்தினார்.

யாசகம் செய்தல் (ஒரு சிறுவனி)	கட்டாய உழைப்பு	பாலியல் சுரண்டல்	கட்டாய திருமணம் சிறுமியொருவரி
செயல்			
ஆட்சேர்ப்பு			
கே: அந்த பிள்ளை பணியமர்த்தப்பட்டதா? யாரால்?	**கே:** பிள்ளை பணியமர்த்தப்பட்டதா? யாரால்?	**கே:** அந்த பெண் பிள்ளை பணியமர்த்தப்பட்டதா? யாரால்?	**கே:** சிறுமி பணியமர்த்தப்பட்டாரா?
ப: ஆம் **ப:** அவரது மாமாவினால்	**ப:** விடுதி மேட்ரனால்	**ப:** பாடசாலை வேன் சாரதியால்	**ப:** ஆம் அவளது தந்தையால்
போக்குவரத்து			
கே: பிள்ளை சொந்த இடத்திலிருந்து வேறு இடத்திற்கு கொண்டு செல்லப்பட்டதா? **கே.** யாரால்? **கே.** போக்குவரத்து முறை?	**கே:** பிள்ளை சொந்த இடத்திலிருந்து வேறு இடத்திற்கு கொண்டு செல்லப்பட்டதா? **கே:** யாரால்? **கே:** போக்குவரத்து முறை?	**கே:** பிள்ளை சொந்த இடத்திலிருந்து வேறு இடத்திற்கு கொண்டு செல்லப்பட்டதா? **கே:** யாரால்? **கே:** போக்குவரத்து முறை?	**கே:** பிள்ளை சொந்த இடத்திலிருந்து வேறு இடத்திற்கு கொண்டு செல்லப்பட்டதா? **கே:** யாரால்? **கே:** போக்குவரத்து முறை?
ப: ஆம், அனுராதபுரத்திலிருந்து கதிர்காமத்திற்கு, இரயில் மற்றும் பேருந்தில் அவரது அத்தையினால்	**ப:** ஆம் **அ:** அப்பா **அ.** பஸ்	**ப:** ஆம், **ப:** பாடசாலை வேன் சாரதியினால் **ப:** பேருந்தில்	**ப:** அவள் தந்தையால் **ப:** வாடகை டாக்ஸி மூலம்
இடமாற்றம்			
கே: பிள்ளை வேறு நபருக்கு மாற்றப்பட்டதா?	**கே:** பிள்ளை வேறு நபருக்கு மாற்றப்பட்டதா?	**கே:** பிள்ளை வேறு நபருக்கு மாற்றப்பட்டதா?	**கே:** பிள்ளை வேறு நபருக்கு மாற்றப்பட்டதா?
ப: ஆம், தெரியாத ஒரு நபர் 'டாக்ஸி கமல்' என்று அழைக்கப்படுகிறார். **கே:** பிள்ளைக்கு வேறு யாரேனும் ஒருவரால் அடைக்கலம் வழங்கப்பட்டதா?	**ப:** இல்லை **கே:** பிள்ளைக்கு வேறு யாரேனும் ஒருவரால் அடைக்கலம் வழங்கப்பட்டதா?	**ப:** ஆம், ஹோட்டல் உரிமையாளர் **கே:** பிள்ளைக்கு வேறு யாரேனும் ஒருவரால் அடைக்கலம் வழங்கப்பட்டதா?	**ப:** ஆம், 60 வயது முதியவருக்கு கொடுக்க வேண்டிய பணத்திற்கான கொடுப்பனவாக அடைக்கலம் வழங்குதல் **கே:** பிள்ளைக்கு வேறு யாரேனும் ஒருவரால் அடைக்கலம் வழங்கப்பட்டதா?
ப: ஆம், "பொஸ்" என்று அழைக்கப்பட்ட பரிட்சயம் இல்லாத ஒருவர்	**ப:** ஆம் **ப:** விடுதி பெண் நிர்வாகி	**ப:** ஆம், ஹோட்டல் முகாமையாளர்	**ப:** இல்லை
பெறுதல்			
கே: பிள்ளை வேறொருவரால் பெறப்பட்டதா?	**கே:** பிள்ளை வேறொருவரால் பெறப்பட்டதா?	**கே:** பிள்ளை வேறொருவரால் பெறப்பட்டதா?	**கே:** பிள்ளை வேறொருவரால் பெறப்பட்டதா?
ப: ஆம், பரிட்சயம் இல்லாத "பொஸ்" என்று அழைக்கப்பட்ட நபர்	**ப:** இல்லை	**ப:** ஆம், ஹோட்டலில் பல வாடிக்கையாளர்கள்	**ப:** இல்லை

யாசகம் செய்தல் ஒரு சிறுவனி	கட்டாய உழைப்பு	பாலியல் சுரண்டல்	கட்டாய திருமணம் சிறுமியொருவரி
நோக்கம்			
கட்டாய அல்லது கட்டாய உழைப்பு அல்லது சேவைகள்			
கே: பிள்ளை ஏதேனும் கட்டாய அல்லது கட்டாய உழைப்பு தொடர்பான நடவடிக்கைகளைச் செய்யும்படி நிர்ப்பந்திக்கப்பட்டதா?	**கே:** பிள்ளை ஏதேனும் கட்டாய அல்லது கட்டாய உழைப்பு தொடர்பான நடவடிக்கைகளைச் செய்யும்படி நிர்ப்பந்திக்கப்பட்டதா?	**கே:** பிள்ளை ஏதேனும் கட்டாய அல்லது கட்டாய உழைப்பு தொடர்பான நடவடிக்கைகளைச் செய்யும்படி நிர்ப்பந்திக்கப்பட்டதா?	**கே:** பிள்ளை ஏதேனும் கட்டாய அல்லது கட்டாய உழைப்பு தொடர்பான நடவடிக்கைகளைச் செய்யும்படி நிர்ப்பந்திக்கப்பட்டதா?
ப: ஆம், பிள்ளை கதிர்காமம் தேவாலயத்திற்கு முன்பாக பிச்சையெடுக்க நிர்ப்பந்திக்கப்பட்டது.	**ப:** ஆம், விடுதியின் சமையலறையை துப்பரவு செய்தல், தரையை துடைத்தல், உடைகளை சலவை செய்ய நிர்ப்பந்திக்கப்பட்டது. அவளுக்கு பணம் எதுவும் கிடைக்கவில்லை. எல்லா பணமும் தந்தையிடம் கொடுக்கப்பட்டது.	**ப:** இல்லை.	**ப:** இல்லை.
அடிமைத்தனம்			
கே: 'பொஸ்' என்று அழைக்கப்பட்ட நபரால் பிள்ளை அடிமையாகப் பயன்படுத்தப்பட்டதா?	**கே:** சிறுமி விடுதி மேட்ரனால் அடிமையாகப் பயன்படுத்தப்பட்டதா?	**கே:** அந்த சிறுமி 'ஹோட்டல் உரிமையாளரால் அடிமையாக பயன்படுத்தப்பட்டதா?	**கே:** சிறுமியை முதியவர் அடிமையாக பயன்படுத்தினாரா?
ப: அதற்கான ஆதாரம் இல்லை	**ப:** ஆம், அடிமைத்தனம் போன்ற நிபந்தனைகளுக்கு ஆதாரங்கள் உள்ளன	**ப:** இல்லை.	**ப:** இல்லை.
சேவகம்			
கே: பிள்ளை சேவகத்திற்கு பயன்படுத்தப்பட்டதா?	**கே:** பிள்ளை சேவகத்திற்கு பயன்படுத்தப்பட்டதா?	**கே:** பிள்ளை சேவகத்திற்கு பயன்படுத்தப்பட்டதா?	**கே:** பிள்ளை சேவகத்திற்கு பயன்படுத்தப்பட்டதா?
ப: அதற்கான ஆதாரம் இல்லை	**ப:** அதற்கான ஆதாரம் இல்லை	**ப:** அதற்கான ஆதாரம் இல்லை	**ப:** அதற்கான ஆதாரம் இல்லை
உறுப்புகளை அகற்றுதல்			
கே: பிள்ளை ஏதேனும் மருத்துவ சிகிச்சை அல்லது அறுவை சிகிச்சைக்கு உள்ளாகியிருக்கின்றதா?	**கே:** பிள்ளை ஏதேனும் மருத்துவ சிகிச்சை அல்லது அறுவை சிகிச்சைக்கு உள்ளாகியிருக்கின்றதா?	**கே:** பிள்ளை ஏதேனும் மருத்துவ சிகிச்சை அல்லது அறுவை சிகிச்சைக்கு உள்ளாகியிருக்கின்றதா?	**கே:** பிள்ளை ஏதேனும் மருத்துவ சிகிச்சை அல்லது அறுவை சிகிச்சைக்கு உள்ளாகியிருக்கின்றதா?
ப: அதற்கான ஆதாரங்கள் எதுவும் இல்லை	**ப:** அதற்கான ஆதாரங்கள் எதுவும் இல்லை	**ப:** அதற்கான ஆதாரங்கள் எதுவும் இல்லை	**ப:** அதற்கான ஆதாரங்கள் எதுவும் இல்லை

யாசகம் செய்தல் (ஒரு சிறுவனி)	கட்டாய உழைப்பு	பாலியல் சுரண்டல்	கட்டாய திருமணம் (சிறுமியொருவர்)
பாலியல் தொழில்			
கே: பிள்ளை யாரேனும் ஒருவருக்கு பாலியல் சேவைகளை வழங்க கட்டாயப்படுத்தப்பட்டதா?	**கே:** பிள்ளை யாரேனும் ஒருவருக்கு பாலியல் சேவைகளை வழங்க கட்டாயப்படுத்தப்பட்டதா?	**கே:** பிள்ளை யாரேனும் ஒருவருக்கு பாலியல் சேவைகளை வழங்க கட்டாயப்படுத்தப்பட்டதா?	**கே:** பிள்ளை யாரேனும் ஒருவருக்கு பாலியல் சேவைகளை வழங்க கட்டாயப்படுத்தப்பட்டதா?
ப: அதற்கான ஆதாரங்கள் எதுவும் இல்லை	**ப:** அதற்கான ஆதாரங்கள் எதுவும் இல்லை	**ப:** ஆம், வாடிக்கையாளர்-களுக்கு	**ப:** அதற்கான ஆதாரங்கள் எதுவும் இல்லை
பாலியல் சுரண்டலின் பிற வடிவங்கள்			
கே: பிள்ளை வேறு ஏதேனும் பாலியல் செயற்பாடுகளுக்கு பயன்படுத்தப்பட்டதா?	**கே:** பிள்ளை வேறு ஏதேனும் பாலியல் செயற்பாடுகளுக்கு பயன்படுத்தப்பட்டதா?	**கே:** பிள்ளை வேறு ஏதேனும் பாலியல் செயற்பாடுகளுக்கு பயன்படுத்தப்பட்டதா?	**கே:** பிள்ளை வேறு ஏதேனும் பாலியல் செயற்பாடுகளுக்கு பயன்படுத்தப்பட்டதா?
ப: அத்தகைய ஆதாரம் இல்லை	**ப:** அத்தகைய ஆதாரம் இல்லை	**ப:** அத்தகைய ஆதாரம் இல்லை	**ப:** ஆம், முதியவரின் வேண்டுகோளின் பேரில் பிள்ளைக்கு பாலியல் செயல்பாடு களைச் செய்ய வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது.
எந்தவொரு சட்டத்தின் கீழும் குற்றமாக அமையும் வேறு எந்தச் செயலும்			
கே: பிள்ளை வேறு வகையான செயல்களைச் செய்ய நிர்பந்திக்கப்பட்டதா?	**கே:** பிள்ளை வேறு வகையான செயல்களைச் செய்ய நிர்பந்திக்கப்பட்டதா?	**கே:** பிள்ளை வேறு வகையான செயல்களைச் செய்ய நிர்பந்திக்கப்பட்டதா?	**கே:** பிள்ளை வேறு வகையான செயல்களைச் செய்ய நிர்பந்திக்கப்பட்டதா?
ப: ஆம், சிறிய வெள்ளைப் பொட்டலங்களை (போதைப்பொருள் என்று சந்தேகிக்கப்படுகிறது) பல்வேறு இடங்களுக்கும் டாக்சி ஓட்டுநர்களுக்கும் கொண்டு செல்லச் சொன்னார்.	**ப:** அத்தகைய ஆதாரம் இல்லை	**ப:** ஆம், ஒன்லைன் வீடியோக்களின் பதிவுக்காக அவள் பயன்படுத்தப்பட்டாள்	**ப:** இல்லை

இணைப்பு 2 - முக்கிய சொற்களஞ்சியம்

'சிறுவர்' என்பது பதினெட்டு வயதுக்குக்கும் குறைவான ஓர் ஆள் என்று பொருள்படும்.[16]

'சிறுவர் விற்பனை' சுரண்டல் நோக்கத்திற்காக ஒரு பிள்ளையை ஆட்சேர்ப்பு செய்தல், போக்குவரத்து செய்தல், இடமாற்றம், அடைக்கலம் அளித்தல் அல்லது பெறுதல் என்று பொருள்படும்.[17]

'கடன் அடிமைத்தனம்' ஒரு தனிநபரை அவமானப்படுத்தும் அல்லது இழிவுபடுத்தும் விதமாக நடாத்துதல், அவரது மனித கண்ணியத்திற்கு குறைவான மரியாதையை அளித்தல் அல்லது அத்தகைய மரியாதை குறைவடைந்து செல்ல வழிவகுத்தல், பயம், வேதனை அல்லது தாழ்வு உணர்வுகளைத் தூண்டும் ஒரு தனிநபரின் தார்மீக மற்றும் உடல் எதிர்ப்பை உடைக்கும் திறன் கொண்டதொரு நிலை.[18]

'சிறுவர்களை சுரண்டுதல்' பொருளாதாரச் சுரண்டல் மற்றும் சிறுவரின் கல்வியில் இடையூறு விளைவிக்கக்கூடிய அல்லது பிள்ளையின் உடல்நலம் அல்லது உடல், உள, ஆன்மீகம் தார்மீக அல்லது சமூக வளர்ச்சி ஆகியவற்றுக்குத் தீங்கு விளைவிக்கக்கூடிய அல்லது இடையூறு விளைவிக்கும் எந்தவொரு வேலையும் உட்பட, சட்டவிரோத போதைப்பொருள் உற்பத்தி மற்றும் கடத்தல் சார்ந்த சுரண்டலுக்கு ஒரு சிறுவரைப் பயன்படுத்திக் கொள்ளும் செயல்: பாலியல் சுரண்டல் மற்றும் பாலியல் துஷ்பிரயோகம், குறிப்பாக சட்டத்திற்குப் புறம்பான பாலியல் செயலில் ஈடுபட சிறுவர்களை தூண்டுதல் அல்லது வற்புறுத்துதல், பாலியல் தொழில்களில் ஈடுபடுத்தி சிறுவர்களை சுரண்டுதல் அல்லது பிற சட்டவிரோத பாலியல் நடைமுறைகள் மற்றும் ஆபாச நிகழ்வுகளில் மற்றும் பொருட்களில் சிறுவர்களை ஈடுபடுத்தி சுரண்டுதல்; மற்றும் சிறுவர்களை கடத்தல், விற்பனை செய்தல் அல்லது விற்பனை செய்தல் அல்லது சிறுவரை சுரண்டலின் வேறு வடிவங்களில் ஈடுபடுத்துதல்.[19]

'மனித உரிமைகள்' அடிப்படை சுதந்திரங்கள், உரித்துடைமைகள் மற்றும் மனித மாண்பு ஆகியவற்றிற்கு சார்பாக செய்ய வேண்டிய விடயங்களை செய்யாமல் விடுதல் அல்லது அவற்றுக்கு எதிராக தலையிடும் செயல்கள் தொடர்பாக தனிநபர்கள் மற்றும் குழுக்களைப் பாதுகாக்கும் உலகளாவிய சட்ட உத்தரவாதங்கள்.[20]

'மனித விற்பனை பேர்வழிகள்' மனித விற்பனை குற்றத்தை செய்யும் அல்லது முயற்சிக்கும் நபர் அல்லது அத்தகைய விடயத்திற்கு துணையாளியாக பங்கேற்கும், மற்றைய நபர்களை ஒழுங்குபடுத்தும் அல்லது வழிநடத்தும் எந்தவொரு நபரும் இவ்வாறு அறியப்படுகின்றனர்.[21]

'விற்பனையால் பாதிக்கப்பட்டவர்' மனித விற்பனை சார்ந்த குற்றவாளி அடையாளம் காணப்பட்டாலும், கைது செய்யப்பட்டாலும், வழக்குத் தொடரப்பட்டாலும் அல்லது குற்றவாளியாக இருந்தாலும் எது எவ்விதமாக இருப்பினும் மனித விற்பனைக்கு உட்பட்ட எந்தவொரு இயற்கையான நபரும் இவ்வாறு அறியப்படுகின்றார். [22]

'வயது மதிப்பீடு' ஒரு நபர் சிறுவரா இல்லையா என்பதை தீர்மானிக்க ஒரு நபரின் வயது அல்லது வயது வரம்பை அதிகாரிகள் நிறுவ முற்படும் செயன்முறை.[23]

'பாகுபாடு' இனம், நிறம், பாலினம், மொழி, மதம், அரசியல் அல்லது வேறு நம்பிக்கை, தேசிய மற்றும் சமூக தோற்றம், சொத்து, பிறப்பு அல்லது பிற அந்தஸ்து, மற்றும் அனைத்து உரிமைகள் மற்றும் சுதந்திரங்களின் சமமான நிலையில், அனைத்து நபர்களின் அங்கீகாரம், அனுபவித்தல் அல்லது செயற்படுதல் ஆகியவற்றை இல்லாதொழிக்கச் செய்யும் அல்லது பலவீனப்படுத்தும் நோக்கம் அல்லது விளைவைக் கொண்ட எந்தவொரு அடிப்படையையும் அடிப்படையாகக் கொண்டு ஏற்படுத்தப்படும் எந்தவொரு வேறுபாடு, விலக்கு, கட்டுப்பாடு அல்லது முன்னுரிமை.[24]

'ஒழுங்கமைக்கப்பட்ட குற்றவியல் குழு' ஒரு குறிப்பிட்ட காலமாக இருக்கும் மற்றும் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட கடுமையான குற்றங்கள் அல்லது குற்றங்களைச் செய்யும் நோக்கத்துடன், நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ, நிதி அல்லது பொருள்

16 மனித வியாபாரம் பற்றிய ஒப்பந்தம், 2000(ஈ) பிரிவு

17 மனித வியாபாரம் பற்றிய ஒப்பந்தம், 2000(ஈ) பிரிவு

18 அடிமைத்தனம், அடிமை வியாபாரம், அடிமைத்தனத்திற்கு இணையான செயற்பாடுகளை அகற்றுதல் பற்றிய மேலதிக சடவாயத்திலிருந்து பெறப்பட்டது.

19 1989இன் சிறுவர் உரிமைகள் பற்றிய சமவாயத்தின் 32, 34 மற்றும் 35ஆம் பிரிவுகளூடாக பெறப்பட்டது.

20 ஐ.நா.வின் மனித உரிமைகள் பற்றிய ஆணையாளர் அலுவலகம், ஒத்துழைப்பைக் கட்டியெழுப்பல் பற்றி அடிக்கடி கேட்கப்படும் வினா, 2006 புலம்பெயர்வு பற்றிய

21 புலம்பெயர்வு பற்றிய சொற்களஞ்சியம் சர்வதேச தொழிலாளர் அமைப்பு, 2019 ப.216

22 புலம்பெயர்வு பற்றிய சொற்களஞ்சியம் சர்வதேச தொழிலாளர் அமைப்பு, 2019 ப.216

23 புலம்பெயர்வு பற்றிய சொற்களஞ்சியம் சர்வதேச தொழிலாளர் அமைப்பு, 2019 ப.7

24 மனித உரிமைகள் பேரவை, கருத்துக்கள் இலக்கம் 18, பாகுபாடு காட்டாமை 1989

சார்ந்த பிறவற்றைப் பெறுவதற்காக இணைந்து செயல்படும் மூன்று அல்லது அதற்கு மேற்பட்ட நபர்களைக் கொண்ட ஒரு கட்டமைக்கப்பட்ட குழு.[25]

'நியம தொழிற்பாட்டு நடைமுறை (SOP)' செயல்திறனை அதிகரிக்கவும், பயனுறுதியை மேம்படுத்தவும், முறையான ஒத்திசைவு மூலம் தரத்தை உறுதிப்படுத்தவும் வடிவமைக்கப்பட்ட வழக்கமான பணியை முடிப்பதற்கான எழுதப்பட்ட வழிகாட்டுதல்கள் அல்லது வழிமுறைகளின் தொகுப்பு. இந்த சொற்பதம் முதன்முதலில் 20 ஆம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் பதிவாகியது.[26]

SOPஎன்பது ஒரு நிறுவனத்தால் தொகுக்கப்பட்ட படிப்படியான வழிமுறைகளின் தொகுப்பாக இருப்பதுடன் இது ஊழியர்களின் வழக்கமான செயற்பாடுகளை மேற்கொள்ள உதவுகிறது. SOPகள் வினைத்திறன், தரமான வெளியீடு மற்றும் செயல்திறனின் சீரான தன்மை ஆகியவற்றை அடைவதை நோக்கமாகக் கொண்டுள்ள அதேவேளை தவறான தொடர்பாடல் மற்றும் தொழில்துறை விதிமுறைகளுக்கு இசைந்தொழுகுவதன் மீதான தவறுவதைக் குறைக்கின்றன.[27]

'சிறுவர் உழைப்பு' ஒரு பிள்ளையின் உடல்நலம், கல்வி மற்றும் உடல், மன, ஆன்மீக, தார்மீக அல்லது சமூக மேம்பாட்டிற்குக் கேடு விளைவிக்கும் செய்யப்படும் எந்தவொரு தொழிலும் ஒரு பிள்ளையை ஈடுபடுத்தப்படுதல்.[28]

'சுரண்டல்' சுரண்டலில் குறைந்த பட்சம், மற்றவர்களின் விபச்சாரத்தை சுரண்டல் அல்லது பிற வகையான பாலியல் சுரண்டல், கட்டாய உழைப்பு அல்லது சேவைகள், அடிமைத்தனம் அல்லது அதற்கொத்த வடிவிலான அடிமைத்தனம், சேவகம் அல்லது உறுப்புகளை அகற்றுதல் போன்ற நடைமுறைகள் அடங்கும்.[29]

'பிள்ளையின் உச்சமட்ட நலன்கள்'

1. பிள்ளைகள் தொடர்பான அனைத்து நடவடிக்கைகளிலும் அத்தகைய விடயங்கள் பொது அல்லது தனியார் சமூக நல நிறுவனங்கள், நீதிமன்றங்கள், நிர்வாக அதிகாரிகள் அல்லது சட்டமன்ற அமைப்புகளால் மேற்கொள்ளப்பட்டாலும் பிள்ளையின் உச்ச மட்ட நலன்கள் முதன்மையானதான கருத்திற் கொள்ளப்பட்டு செயற்படுத்தப்படுதல் வேண்டும்.

2. பிள்ளையின் பெற்றோர், சட்டரீதியான பாதுகாவலர்கள் அல்லது அப்பிள்ளைக்கு சட்டரீதியில் பொறுப்பான பிற தனிநபர்களின் உரிமைகள் மற்றும் கடமைகளைக் கருத்தில் கொண்டு பிள்ளையின் நல்வாழ்வுக்குத் தேவையான பாதுகாப்பு மற்றும் பராமரிப்பை உறுதி செய்வதை அரச தரப்புகள் மேற்கொள்வதுடன் இவ்விடயத்தில் அனைத்து பொருத்தமான சட்ட மற்றும் நிர்வாக நடவடிக்கைகளை மேற்கொள்ளும்.

3. பிள்ளைகளின் பராமரிப்பு அல்லது பாதுகாப்பிற்கு பொறுப்பான நிறுவனங்கள், குறிப்பாக பாதுகாப்பு, சுகாதாரம், ஊழியர்களின் எண்ணிக்கை மற்றும் அவர்களது பொருத்தப்பாடு மற்றும் தகுதிவாய்ந்தவர்களின் மேற்பார்வை ஆகிய விடயங்கள் உள்ளடங்களாக சேவைகள் மற்றும் வசதிகள் அதிகாரம் பெற்றவர்களினால் நிறுவப்பட்ட தரநிலைகளுக்கு இசைந்தொழுகுவதை அரச தரப்புகள் உறுதி செய்ய வேண்டும்.[30]

கணினி அமைப்புகள் கருவிகளாக/உபகரணங்களாக பயன்படுத்தப்படும் குற்றங்கள்

'நிதி மோசடி'

நிதி மோசடி என்பது வணிக மோசடிகள், முதலீட்டு மோசடிகள், வெகுசன சந்தைப்படுத்தல் மோசடிகள், வெளிநாட்டு வேலைவாய்ப்பு வழங்குதல், நைஜீரிய மோசடிகள், வணிக வாய்ப்பு மோசடிகள் போன்றவை உள்ளடங்குவதுடன் சந்தேகப்படாத மக்களுக்கு அத்தகைய வாய்ப்புகளை வழங்குவதாக உறுதியளித்து அவர்களை வலையில் சிக்கவைத்து அவர்களின் பணம் மற்றும் பிற மதிப்புமிக்க பொருட்களை ஏமாற்றுதல் இவ்விடயத்தில் இடம்பெறுகின்றது.

'தரவுகளை மாற்றியமைத்தல்'

இந்த குற்றத்தை பொருத்தமட்டில், குற்றவாளி நிதி சம்பந்தப்பட்ட முறைமைகள் போன்ற இலக்கு வைக்கும் முறைமைகளுக்கு உட்புகுந்து கணினி அமைப்பில் உள்ள தரவை மாற்றியமைக்கிறார் அல்லது மாற்றுகிறார். கணினிகளின் அங்கீகரிக்கப்பட்ட பயனர்களாலும் (உள்ளே உள்ளவர்கள்) இந்த வகையான குற்றங்கள் செய்யப்படலாம்.

25 பிரிவு 2(அ), சர்வதேச கட்டமைக்கப்பட்ட குற்றங்களுக்கெதிரான சமவாயம் 2000

26 https://www.britannica.com/topic/standard-operating - procedure

27 https://www.wikipedia.org/wiki/standard-operating - procedure

28 1989 சிறுவர் உரிமைகள் பற்றிய சமவாயத்தின் 32ஆவது பிரிவு

29 மனித விற்பனையைத் தடுத்தல், விற்பனையாளர்களுக்கு தண்டனையளித்தல் பற்றிய ஐ.நா. சமவாயம், 2000

30 1989 சிறுவர் உரிமைகள் பற்றிய சமவாயத்தின் 6ஆவது பிரிவு

'அடையாளத் திருட்டு மற்றும் அதன் தவறான பயன்பாடு'

இது மோசடி நோக்கங்களுக்காக பிறந்த தேதி, பெயர் நிரலான கணக்கு இலக்கங்கள், கடவுச்சீட்டு இலக்கங்கள், கடன் அட்டை இலக்கங்கள், மின்னஞ்சல் கணக்குகள் போன்ற முக்கியமான அடையாளத் தகவல்களைத் திருடுவதாகும். இதன் கீழ் விவரத் திருட்டு, பாதிக்கப்படக்கூடியவரின் மின்னஞ்சல் முகவரிக்கு சில இணைப்புகளை அனுப்புதல் மற்றும் இரகசியத் தகவலை வழங்குமாறு அவர்களிடம் கேட்டுக்கொள்ளுதல் அல்லது சமூகப் பொறியியல் மூலம் தகவலைப் பெறுதல், கீ-லொக்கர்களைப் பயன்படுத்துதல் போன்ற பல வழிகளில் பயனர் முக்கியமான தகவலைப் பெறலாம்.

'இணையவழி மிரட்டல் / பின்தொடர்தல்'

ஒருவரைத் துன்புறுத்துவதற்கும், அச்சுறுத்துவதற்கும், பீதியூட்டுவதற்கும், தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பங்களைப் பயன்படுத்திக்கொள்ளும் விடயமாக இது வரையறுக்கப்படுகிறது. இதன் கீழ் இணையவெளி மிரட்டல், ஆத்திரமூட்டும் அவமதிப்பு அல்லது இனவாத அவதூறுகளை அனுப்புதல், ஓரினச்சேர்க்கையாளர்களை இழிவுபடுத்துதல், பாதிக்கப்பட்டவரின் கணினியில் வைரஸ் தொற்ற வைக்க முயற்சித்தல், மற்றும் அதிக செய்திகளை அனுப்புவதன் மூலம் மின்னஞ்சல் இன்பொக்ஸ் நிரம்பி வழிய செய்தல் போன்ற செயல்கள் அடங்கும்.

'தரவுத் திருட்டு'

தரவுத் திருட்டு என்பது கணினி/ கணினி முறைமை/கணினி வலையமைப்பின் உரிமையாளரின் அனுமதியின்றி தரவை பிரதியெடுப்பதாகும். இது கணினியில் கபடத்தனமாக நுழைந்து, பெரும்பாலும் பணியிடத்தில் / வணிகத்தில் வகைப்படுத்தப்பட்ட மற்றும் முக்கியமான தகவல்களை பிரதியெடுப்பதாக அமையலாம். இத்தகைய தரவுகள் உத்தியோகபூர்வ / வணிகத் தொடர்பு பாவனையாளர்கள் அல்லது வாடிக்கையாளர்களின் முகவரிகள், பயன்படுத்தனரின் பெயர்கள், கடவுச்சொற்கள், கடன் அட்டை இலக்கங்கள் மற்றும் பிற தொடர்புடைய ஆவணங்களின் தொடர்பு விவரங்கள் போன்ற எந்த வகையான தரவுகளாகவும் இருக்கலாம்.

'CSAM - சிறுவர் பாலியல் துஷ்பிரயோக உருவாக்கங்கள்'

அவை ஒரு பிள்ளையை தொடர்புடுத்தி உருவாக்கப்படும் வெளிப்படையான பாலியல் உள்ளடக்கமாகும். இத்தகைய கட்புல சித்தரிப்புகளில் புகைப்படங்கள், வீடியோக்கள் அல்லது கணினியால் உருவாக்கப்பட்ட படங்கள் ஒரு குறிப்பிட்ட சிறுவரிடமிருந்து பிரித்தறிய முடியாதவைகளாக இருக்கக்கூடும்.

'வர்த்தக இரகசியங்கள் மற்றும் புலமைச் சொத்து திருட்டு'

இது அறிவுசார் சொத்துக்கள் மற்றும் மூலதனம், வர்த்தக வடிவமைப்புகள், இலச்சினைகள், கருத்துக்கள் மற்றும் கண்டுபிடிப்புகள், ஒரு தனிநபர் அல்லது ஒரு நிறுவனத்தால் பதிப்புரிமை பெற்ற பொருள் போன்றவற்றின் திருட்டாகும். இதில் ஒலி, ஒளி திரைப்படங்கள் போன்றவையும் அடங்கும். அதிக எண்ணிக்கையிலான புலமைச் சொத்து சம்பவங்கள் மென்பொருள் மற்றும் அதன் மூலக் குறியீட்டின் சார்ந்ததாகவே இருந்துள்ளன.

'பாதுகாக்கப்பட்ட முறைமைகள் மீதான உளவுபார்த்தல்'
அரசாங்க அமைப்புகளை வேவு பார்த்தல் பெரும்பாலும் எதிரி அல்லது அயல் நாடுகளின் உளவுத்துறை அதிகாரிகளால் செய்யப்படுகிறது. இது முக்கியமான மற்றும் வகைப்படுத்தப்பட்ட ஆவணங்களை அணுகுவதை உள்ளடக்கியதாக அமைகின்றது.

இணைப்பு 3 - மனித விற்பனை மற்றும் சிறுவர் விற்பனை தொடர்பான சர்வதேச மற்றும் தேசிய சட்டக் கட்டமைப்பு

மனித விற்பனை (வரைவிலக்கணம்)

(அ) மனித விற்பனை என்பது சுரண்டல் நோக்கத்திற்காக பலாத்காரம்; அல்லது வேறு விதமான வலுக்கட்டாயம், மோசடியை, ஏமாற்றுதலை அல்லது மற்றவரின் பலிக்குட்படுத்தும் தன்மையைப் பயன்படுத்தி அல்லது ஒருவர் மீது கட்டுப்பாடுடைய மற்றைய ஒருவருக்கு அத்தகைய நபரின் இணக்கத்திற்காக கொடுப்பனவுகளை அல்லது நன்மைகளை வழங்குதவன் ஊடாக ஆட்திரட்டுகின்றாரோ, ஏற்றிச் செல்கின்றாரோ, இடமாற்றுகின்றாரோ, அடைக்கலமளிக்கின்றாரோ அல்லது ஏற்றுக்கொள்கின்றாரோ அத்தகைய செயலாகும். சுரண்டலானதுகுறைந்தபட்சம் விபச்சாரம் அல்லது வேறு விதங்களிலான பாலியல் சுரண்டல், கட்டாய ஊழியம் அல்லது சேவைகள், அடிமைத்துவம், அல்லது அதற்கொத்த அடிமைத்துவம், சேவகம் அல்லது உறுப்புகளை அகற்றுதல் ஆகியவை உள்ளடங்கும்.

(ஆ) இந்த உறுப்புரையின் துணைப் பந்தியில் (அ) குறிப்பிடப்பட்டுள்ள உத்தேசிக்கப்பட்ட சுரண்டலுக்கு ஆட்களை விற்பனை செய்வதில் பாதிக்கப்படுபவரின் ஒப்புதல் சார்ந்ததாக துணைப் பந்தியில் (அ) குறிப்பிடப்பட்டுள்ள ஏதேனும் வழிமுறைகள் பயன்படுத்தப்பட்டால் பொருத்தமற்றதாக இருக்கும்;

(இ) இந்தக் உறுப்புரையின் துணைப் பந்தி (அ) குறிப்பிடப்பட்டுள்ள எந்தவொரு வழிமுறையையும் உள்ளடக்காவிட்டாலும், சுரண்டல் நோக்கத்திற்காக ஒரு சிறுவரை ஆட்சேர்ப்பு செய்தல், போக்குவரத்து செய்தல், இடமாற்றம், அடைக்கலம் அளித்தல் அல்லது பெறுதல் ஆகியவை 'மனித விற்பனை' என்று கருதப்படும்;

(ஈ) பதினெட்டு வயதுக்கு குறைவான ஆளொருவர் சிறுவர் என வரையறுக்கப்படும்.

சர்வதேச சட்டம்

நாடுகடந்த ஒழுங்கமைக்கப்பட்ட குற்றங்களுக்கு எதிரான ஐக்கிய நாடுகளின் உடன்படிக்கை (UNTOC) 2000

UNTOC என்பது நாடுகடந்த ஒழுங்கமைக்கப்பட்ட குற்றங்களைக் கையாள்வதற்காக உருவாக்கப்பட்ட சமவாயங்கள் தொகுப்பின்மையக்கருவியாகும். UNTOC உடன்இணைக்கப்பட்டுள்ளநெறிமுறைகள், மனிதவிற்பனை, புலம்பெயர்ந்தோரை கடத்தல் மற்றும் சிறிய ஆயுதங்களை சட்டவிரோதமாக தயாரித்தல் மற்றும் கடத்தல் ஆகியவற்றுடன் தொடர்புடையதாக காணப்படுகின்றது.

நாடுகடந்த ஒழுங்கமைக்கப்பட்ட குற்றங்களை மிகவும் திறம்பட எதிர்த்துப் போராடும் பொருட்டு அரசாங்களுக்கு இடையேயான ஒத்துழைப்பை மேம்படுத்துவதே UNTOC இன் நோக்கமாகும். UNTOC, அடிப்படை குறைந்தபட்ச நடவடிக்கைகளை மேற்கொள்வதை ஊக்குவிப்பதன் மூலம் ஒழுங்கமைக்கப்பட்ட குற்றச் செயல்கள் அல்லது ஆதாரங்களை மறைத்தல் அல்லது பெற்றுக்கொள்ளும் இலாபத்தை பதுக்கிவைத்தல் ஆகியவற்றைக் கொண்டு நடாத்தக்கூடிய 'பத்திரமான புகலிடங்களை' இல்லாதொழிப்பதற்கு முயல்கிறது.

தனிநபர்கள் அல்லது பெறு நிறுவனங்களால் செய்யப்படுகின்ற நான்கு குற்றங்கள் (அத்துடன் 'பாரதூரமான குற்றம்' என்ற பொதுவான வகை) இதில் உள்வாங்கப்படுகின்றன: இவையாவன, ஒழுங்கமைக்கப்பட்ட குற்றவியல் குழுவில் பங்கேற்றல்; பணத்தூய்தாக்கல்; ஊழல்; நீதிக்கு இடையூறு விளைவித்தல்.

UNTOC ஐப் பயன்படுத்துவதற்கு இரண்டு முக்கிய முன்நிபந்தனைகள் உள்ளன. முதலாவதாக, சம்பந்தப்பட்ட குற்றமானது நாடுகடந்த ஒருவித அம்சத்தைக் கொண்டிருக்க வேண்டும். இரண்டாவதாக, அது ஒரு ஒழுங்கமைக்கப்பட்ட குற்றவியல் குழுவை உள்ளடக்கியதாக இருக்க வேண்டும். இவ்விரண்டு கூறுகளும் மிகவும் பரந்த அளவில் வரையறுக்கப்பட்டுள்ளன. 'பாரதூரமான குற்றம்' குறிப்பிடத்தக்க அனைத்து குற்றவியல் குற்றங்களையும் உள்வாங்கும் வகையில் வரையறுக்கப்பட்டுள்ளது.

இதன் விளைவாக, மனித விற்பனை மற்றும் அதனுடன் தொடர்புடைய சுரண்டல் மற்றும் புலம்பெயர்பவர்களை கடத்தல் உள்ளிட்ட பல்வேறு நவீன குற்றச் செயல்களை நிவர்த்தி செய்யும் பொருட்டு அரசாங்களுக்கு இந்த உடன்படிக்கையை பயன்படுத்திக் கொள்ள முடியும். எந்தவொரு நெறிமுறையையும் அல்லது அனைத்து நெறிமுறைகளையும் ஏற்றங்கீகரிக்காமலேயே நாடுகளுக்கு இந்த உடன்படிக்கையின் ஒரு தரப்பாக மாற முடியும் என்பதால் இது முக்கியமானதாக இருப்பதுடன் உடன்படிக்கையின் ஏற்றங்கீகாரமானது எந்தவொரு நெறிமுறையின் ஏற்றங்கீகாரத்திற்கு முன்னதாக இருக்க வேண்டும்.

குறிப்பிட்ட நடத்தையை குற்றமாக்குவது மேற்படி உடன்படிக்கையின் முதன்மைக் கடமையுடன் தொடர்புடையதாக உள்ளது. பின்வரும் விடயங்களை அரச தரப்புகள் குற்றமாக்க வேண்டும்:

- ஒழுங்கமைக்கப்பட்ட குற்றவியல் குழுவில் பங்கேற்றல்;.
- குற்றத்திலிருந்து பெறும் வருமானத்தை மோசடி செய்தல்.
- அரசதுறை ஊழல் மற்றும் நீதியை நிலைநாட்டுவதற்கு இடையூறு விளைவித்தல்.

இந்த குற்றங்களும் உரிய தடைகளுக்கு உட்பட்டதாக மாற்றப்படுதல் வேண்டும்.

மனித விற்பனை உள்ளிட்ட நாடுகடந்த ஒழுங்கமைக்கப்பட்ட குற்றங்களுக்கு எதிராக திறம்பட நடவடிக்கை எடுப்பதற்கான கொள்கைத் தடைகளில் ஒன்றாக அமைவது யாதெனில் தேசிய குற்றவியல் நீதி நிறுவனங்களுக்கிடையேயான தொடர்பாடல் மற்றும் ஒத்துழைப்பின் பற்றாக்குறை ஆகும். பயனுறுதிமிக்க சட்ட அமுலாக்க ஒத்துழைப்பை மேம்படுத்துவதற்கு அரச தரப்புகளால் மேற்கொள்ளப்பட வேண்டிய பல நடவடிக்கைகளை UNTOC ஏற்பாடு செய்கின்றது. இவ்விடயத்துடன் ஏற்புடைய குற்றங்கள் தொடர்பான புலன்விசாரணைகள், வழக்கு விசாரணை மற்றும் நீதித்துறை நடவடிக்கைகளில் பரஸ்பர சட்ட உதவி பற்றிய விரிவான சட்டக் கட்டமைப்பைச் சேர்ப்பதன் மூலம் இந்த ஏற்பாடுகளின் நடைமுறைப் பயன்பாட்டை மேம்படுத்தப்படுவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.

இதனை உடனடுத்து மேலும் விரிவாக ஆராயப்பட்டுள்ளவாறு, சாட்சியங்களை பெற்றுக்கொள்ளுதல், நீதித்துறை ஆவணங்களைச் செயல்படுத்துதல், தேடல்களை செயல்படுத்துதல், குற்றத்திலிருந்து விளைந்த வருமானத்தை அடையாளங் காணுதல் மற்றும் ஆவணங்களையும் தகவல்களையும் தயாரித்தல் உள்ளிட்ட பல்வேறு நோக்கங்களுக்காக பரஸ்பர சட்ட உதவியைக் கோர அரச தரப்புகள் இந்த உடன்படிக்கையைப் பயன்படுத்திக் கொள்ள முடியும். மேலும், கூட்டு விசாரணை அமைப்புகளை நிறுவுதல்: சிறப்பு புலனாய்வு நுட்பங்களைப் பயன்படுத்துவதற்கான முறைசார்ந்த இணக்கப்பாட்டை எட்டிக்கொள்ளுதல்; குற்றவியல் நடவடிக்கைகள் மற்றும் தண்டனை பெற்ற நபர்களை மாற்றுவதைக் கருத்தில் கொள்ளுதல் மற்றும் பொருத்தமான குற்றங்களுக்கான ஒப்படைப்பு நடைமுறைகளை எளிதாக்குதல் ஆகியவற்றின் பொருட்டு அரச தரப்புகள் ஊக்குவிக்கப்படுகின்றன.[31]

ஒழுங்கமைக்கப்பட்ட குற்றங்களுக்கான உடன்படிக்கை என்றும் அழைக்கப்படுகின்ற இந்த உடன்படிக்கை நாடுகடந்த ஒழுங்கமைக்கப்பட்ட குற்றங்களை எதிர்த்துப் போராடுவதற்கான முக்கிய சர்வதேச கருவியாகும். நாடுகடந்த ஒழுங்கமைக்கப்பட்ட குற்றங்களை மிகவும் திறம்படத் தடுப்பதற்கும் எதிர்த்துப் போராடுவதற்கும் நாடுகளிடையே ஒத்துழைப்பை மேம்படுத்தும் நோக்கத்துடன் இத்தாலியின் பலேர்மோவில் 2000 டிசம்பர் மாதத்தில் இந்த உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டது. இந்த உடன்படிக்கை 2003 செப்டெம்பர் மாதம் 29 ஆம் திகதியன்று நடைமுறைக்கு வந்தது. இன்றுவரை 147 அரச தரப்புகள் உடன்படிக்கையில் கையொப்பமிட்டுள்ளதுடன் 186 நாடுகள் அதை ஏற்றங்கீகரித்துள்ளன.

உடன்படிக்கைக்கு ஏதுவாக மூன்று துணை நெறிமுறைகள் உள்ளன.

1. குறிப்பாக பெண்கள் மற்றும் சிறுவர்கள் உள்ளடங்கலாக மனித விற்பனையை தடுப்பதற்கும், ஒடுக்குவதற்கும் மற்றும் தண்டிப்பதற்குமான நெறிமுறை.

2. தரை, கடல் மற்றும் வான்வழியாக புலம்பெயர்பவர்களை கடத்துவதற்கு எதிரான நெறிமுறை.

3. சுடுகலன்கள், அவற்றின் பாகங்கள் மற்றும் கூறுகள் மற்றும் வெடிமருந்துகளை சட்டவிரோதமாக தயாரித்தல் மற்றும் கடத்தல் ஆகியவற்றுக்கு எதிரான நெறிமுறை.

குறிப்பாக பெண்கள் மற்றும் சிறுவர்கள் உள்ளடங்கலாக மனித விற்பனையை தடுப்பதற்கும், ஒடுக்குவதற்கும் மற்றும் தண்டிப்பதற்குமான நெறிமுறை

ஐ.நா. நெறிமுறை மனித விற்பனை பற்றிய மிகவும் விரிவான மற்றும் பரவலாக ஏற்றுக்கொள்ளப்பட்ட வரையறையை வழங்குவதுடன் மனித விற்பனையை தடுப்பதற்கும் பாதிக்கப்பட்டவர்களை பாதுகாப்பதற்கும் குற்றவாளிகளுக்கு எதிராக வழக்கு தொடுக்கவும், அரசாங்களுக்கு நடவடிக்கை எடுப்பதற்கு ஏற்பாடுகளை அமைக்கின்றது.

(அ) இந்த உறுப்புரையின் துணைப் பத்தியில் (அ) குறிப்பிடப்பட்டுள்ள உத்தேசிக்கப்பட்ட சுரண்டலுக்கு ஆட்களை விற்பனை செய்வதில் பாதிக்கப்படுபவரின் ஒப்புதல் சார்ந்ததாக துணைப் பந்தி (அ)வில் குறிப்பிடப்பட்டுள்ள ஏதேனும் வழிமுறைகள் பயன்படுத்தப்பட்டால் பொருத்தமற்றதாக இருக்கும்.

(ஆ) இந்தக் உறுப்புரையின் துணைப் பந்தி (அ)வில் குறிப்பிடப்பட்டுள்ள எந்தவொரு வழிமுறையையும் உள்ளடக்காவிட்டாலும், சுரண்டல் நோக்கத்திற்காக ஒரு சிறுவரை ஆட்சேர்ப்பு செய்தல், போக்குவரத்து செய்தல், இடமாற்றம், அடைக்கலம் அளித்தல் அல்லது பெறுதல் ஆகியவை 'மனித விற்பனை' என்று கருதப்படும்.

(ஈ) பதினெட்டு வயதுக்கு குறைவான ஆளொருவர் சிறுவர் என வரையறுக்கப்படும்.

31 மனித விற்பனை சார்ந்த சம்பவங்கள் தொடர்பான சர்வதேச சட்ட ஒத்துழைப்பிற்கான ஆசிய ஒத்துழைப்பின் கையேடு. 2010, ப.10,11. போதைப்பொருள் மற்றும் குற்றங்கள் பற்றிய ஐ.நா.வின்அலுவலகம்.

1989 ஆம் ஆண்டின் சிறுவர் உரிமைகள் பற்றிய உடன்படிக்கை

சிறுவர் உரிமைகள் பற்றிய உடன்படிக்கையானது மனித உரிமைகளுக்கான உலகளாவிய பிரகடனத்தில் (1948) பிரகடனப்படுத்தப்பட்ட சிறுவர்கள் சிறப்பு பராமரிப்பு மற்றும் உதவிக்கு உரித்துடையவர்கள் எனும் புரிதலை மீண்டும் வலியுறுத்துகிறது. மேலும், உடன்படிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு 'சிறுவருக்கு, அதன் உடல் மற்றும் மன முதிர்ச்சியின்மை காரணமாக, பிறப்பதற்கு முன்பும் அதற்குப் பிறகும் தகுந்த சட்டப் பாதுகாப்பு உட்பட சிறப்பு பாதுகாப்பு மற்றும் பராமரிப்பு தேவைப்படுகின்றது'.

சிறுவர் தனது முழுமையான மற்றும் ஒத்திசைவான ஆளுமை வளர்ச்சிக்காக, குடும்பச் சூழலில், மகிழ்ச்சி, அன்பு மற்றும் புரிதல் நிறைந்த சூழலில் வளர வேண்டும் என்பதை இது மேலும் அங்கீகரிக்கிறது. எனவே குடும்பம், சமூகத்தில் ஒரு அடிப்படைக் குழு என்ற வகையிலும் அதன் உறுப்பினர்கள் மற்றும் குறிப்பாக சிறுவர்களின் வளர்ச்சி மற்றும் நல்வாழ்வுக்கான இயற்கைச் சூழல் என்ற வகையிலும் சமூகத்தில் அதன் பொறுப்புகளை முழுமையாக ஏற்கும் வகையில், அதற்கு தேவையான பாதுகாப்பும் உதவியும் வழங்கப்பட வேண்டும்.

உடன்படிக்கை மேற்கூறியவற்றை அடைவதற்காக ஒரு பிள்ளையின் அடிப்படை உரிமைகளை முன்வைப்பதுடன் பிள்ளைகளுடன் பணிபுரியும் மிகவும் பொதுவான தரநிலைகள் மற்றும் அடித்தளத்தை அமைக்கிறது.

சிறுவர் உரிமைகள், சிறுவர் விற்பனை, சிறுவர் பாலியல் தொழில், சிறுவர் ஆபாசப் படங்கள் பற்றிய உடன்படிக்கை மீதான விருப்ப நெறிமுறை - 2000

OPSC பாலியல் சுரண்டலுக்கு எதிராக சிறுவர்களின் உரிமைகள் தொடர்பான உடன்படிக்கையின் ஏற்பாடுகளை வலுப்படுத்துகிறது. இந்த உடன்படிக்கையின் கீழ், 18 வயதுக்குட்பட்ட அனைத்து சிறுவர்களையும் அனைத்து வகையான பாலியல் சுரண்டல்களிலிருந்தும் பாதுகாக்கவும், சிறுவர் விற்பனை, சிறுவர் பாலியல் தொழில் மற்றும் சிறுவர் ஆபாசப் படங்கள் அனைத்தையும் குற்றமாக்குதல் மற்றும் பாதிக்கப்பட்ட சிறுவர்கள் மற்றும் சாட்சிகளின் உரிமைகளை உறுதிப்படுத்துதல் ஆகிய விடயங்களுக்க அரச தரப்புகள் கடப்பாட்டினை கொண்டுள்ளன. பாலியல் சுரண்டலுக்கு ஆளான பிள்ளை, பாலியல் சம்மதத்தின் சட்டபூர்வ வயதைப் பொருட்படுத்தாமல், குற்றவாளியாகக் கருதப்படுவதற்குப் பதிலாக பாதிக்கப்பட்டவராகக் கருதப்படுதல் வேண்டும்.

OPSC அதன் ஏற்பாடுகளுக்கு இணங்க தேசிய சட்டத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட்டு திறம்பட செயல்படுத்துவதற்கு அழைப்பு விடுப்பதுடன் இதில் பின்வருவன அடங்கும்:

- சிறுவர் விற்பனை, சிறுவர் பாலியல் தொழில் மற்றும் சிறுவர் ஆபாசத்தை குற்றமாக்குதல்.
- OPSC இனால் உள்வாங்கப்பட்ட குற்றங்கள் தொடர்பான இரட்டைக் குற்றவியல் தேவையை நீக்குதல் மற்றும் எல்லைக்கு அப்பாற்பட்ட நியாயாதிக்க வரம்பை நிறுவுதல்.
- OPSC ஆல் உள்வாங்கப்பட்ட குற்றங்கள் புறத்தொப்படைத்தலை கொண்டிருப்பதை உறுதி செய்தல்.
- சட்டப்பூர்வ நபர்களின் பொறுப்பை உறுதி செய்தல்.
- குற்றவியல் நீதி செயல்முறையின் அனைத்து நிலைகளிலும் பாதிக்கப்பட்ட பிள்ளைகள் மற்றும் சாட்சிகளின் உரிமைகள் மற்றும் நலன்களை அவர்களின் தனியுரிமை மற்றும் பாதுகாப்பு உட்பட, அவர்களின் கருத்துக்கள், தேவைகள் மற்றும் கரிசனைகளை கருத்தில் கொண்டு பாதுகாத்தல்.
- சிறுவர்களின் உரிமைகள், உச்சமட்ட நலன்கள் மற்றும் சம்பந்தப்பட்ட முடிவுகள் மற்றும் நடவடிக்கைகளில் பங்கேற்றல் மற்றும் பாதிக்கப்பட்ட சிறுவர்களுக்கு அவர்களின் மீட்பு, மீண்டும் ஒருங்கிணைத்தல் மற்றும் இழப்பீடு உட்பட தகுந்த உதவி ஆகியவற்றுக்கான உரிமைகளை உறுதி செய்தல்.
- OPSCஆல் உள்வாங்கப்பட்ட குற்றங்களைத் தடுக்கவும், நிவர்த்தி செய்யவும் சிறுவர்களுடனும் சிறுவர்களுக்காகவும் பணிபுரியும் நிபுணர்களின் ஆற்றலை வலுப்படுத்துதல்.
- OPSC இல் குறிப்பிடப்பட்டுள்ள குற்றங்களின் தடுப்பு நடவடிக்கைகள் மற்றும் தீங்கான விளைவுகள் பற்றிய தகவல்கள், கல்வி மற்றும் பயிற்சி மூலம் சிறுவர்கள் உட்பட பொதுமக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்துதல்.
- எல்லைகடந்த மற்றும் சர்வதேச ஒத்துழைப்பை ஊக்குவித்தல் மற்றும் OPSC ஐ செயல்படுத்துவதற்கு பரஸ்பர உதவியளித்தல்.

- சிறுவர் உரிமைகள் மீதான குழுவிற்கு அரச தரப்புகளின் அறிக்கையிடல் கடப்பாட்டிற்கான மரியாதையை ஊக்குவித்தல் மற்றும் குழுவின் இறுதி அவதானிப்புகள் மற்றும் சிறுவர் உரிமைசார்ந்த பணிப்பாணை கொண்டவர்களின் பரிந்துரைகளுக்கு பொருத்தமான பின்தொடர் நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்.

ஆயுத மோதலில் சிறுவர்களை ஈடுபடுத்துதல் மீதான சிறுவர்களின் உரிமைகள் தொடர்பான உடன்படிக்கையின் விருப்ப நெறிமுறை - 2000

ஆயுத மோதலில் சிறுவர்களை ஈடுபடுத்துதல் மீதான சிறுவர்களின் உரிமைகள் தொடர்பான உடன்படிக்கையின் விருப்ப நெறிமுறையானது சிறுவர்கள் பகைமை நடவடிக்கைகளுக்கு ஆட்சேர்ப்பு செய்யப்படுதல் மற்றும் பயன்படுத்தப்படுவதிலிருந்து பாதுகாப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

ஐக்கிய நாடுகளின் பொதுச் சபையால் 2000 ஆம் ஆண்டு மே மாதம் 25 ஆம் திகதி இந்த வரைவு ஏற்றுக்கொள்ளப்பட்டு, 2002 பெப்புருவரி 12 இல் நடைமுறைக்கு வந்தது.

விருப்ப நெறிமுறையானது பின்வரும் விடயங்களை உள்வாங்கும் ஒரு உறுதிப்பாடாக அமைகின்றது.

- 18 வயதுக்குட்பட்ட சிறுவர்களை போர்க்களத்திற்கு அனுப்புவதற்காக அரசாங்கங்கள் அவர்களை ஆட்சேர்ப்பு செய்யாது.
- அரசாங்கங்கள் 18 வயதுக்குட்பட்ட வீரர்களை படைத்துறைக்கு கட்டாய ஆட்சேர்ப்பு செய்யாது.

- 18 வயதுக்குட்பட்ட சிறுவர்களை ஆட்சேர்ப்பு செய்தல் மற்றும் மற்றும் அவர்களை பகைமை நடவடிக்கைகளில் ஈடுபடுத்துதல் ஆகியவற்றை தடைசெய்தல் மற்றும் குற்றமாக்குதல் சார்ந்த சட்டம் உள்ளடங்கலாக அத்தகைய ஆட்சேர்ப்பைத் தடுக்க நாடுகள் அனைத்து சாத்தியமான நடவடிக்கைகளையும் எடுக்க வேண்டும்.

- படைத்துறையில் கட்டாயப்படுத்தப்பட்ட அல்லது பகைமை நடவடிக்கைகளில் ஈடுபடுத்தப்பட்ட 18 வயதுக்குட்பட்டவர்களை படைத்துறை நடவடிக்கைகளிலிருந்து விடுவிப்பதற்கு நாடுகள் நடவடிக்கை மேற்கொள்ளும் என்பதுடன் அவர்களுக்கு உடல், உளவியல் மீட்பு சேவைகளை வழங்கும் அதேவேளை அவர்களின் சமூக மீள் ஒருங்கிணைப்புக்கு உதவி வழங்கும்.

- ஒரு நாட்டின் ஆயுதப் படைகளிலிருந்து வேறுபட்ட ஆயுதக் குழுக்கள், எந்தச் சூழ்நிலையிலும், 18 வயதுக்குட்பட்ட எவரையும் பகைமை நடவடிக்கைகளில் சேர்க்கவோ பயன்படுத்தவோ கூடாது.

சர்வதேச தொழிலாளர் அமைப்பின் 182 ஆம் இலக்க சிறுவர்களை வேலைக்கமர்த்துவதின் மிக மோசமான வடிவங்களை இல்லாதொழித்தல் பற்றிய உடன்படிக்கை

'சிறுவர்களை வேலைக்கமர்த்துவதின் மிக மோசமான வடிவங்கள் மீதான உடன்படிக்கை' என சுருக்கமாக அழைக்கப்படும் சிறுவர்களை வேலைக்கமர்த்துவதின் மிக மோசமான வடிவங்களை இல்லாதொழிப்பதற்கான தடை மற்றும் உடனடி நடவடிக்கை தொடர்பான உடன்படிக்கை 1999 ஆம் ஆண்டில் சர்வதேச தொழிலாளர் அமைப்பின் இலக்கம் 182ஆம் இலக்க சமவாயமாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

182ஆம் இலக்க இச் சமவாயமானது அங்கீகரிக்கப்பட்டதன் மூலம், சிறுவர் தொழிலாளர்களின் மோசமான வடிவங்களைத் தடை செய்வதற்கும் அகற்றுவதற்கும் உடனடி நடவடிக்கை எடுப்பதற்கு ஒரு நாடு உறுதியளிக்கிறது.

உறுப்புரை 3 'சிறுவர்களை வேலைக்கமர்த்துவதன் மிக மோசமான வடிவங்கள்' பின்வருமாறு வரையறுக்கிறது:

(அ) சிறுவர்களை விற்பனை செய்தல் மற்றும் கடத்தல், கடன் கொத்தடிமை மற்றும் அடிமைத்தனம் மற்றும் கட்டாய அல்லது நிர்ப்பந்திக்கப்பட்ட உழைப்பு மற்றும் ஆயுத மோதலில் பயன்படுத்த சிறுவர்களை பலாத்காரமாக அல்லது வலுக்கட்டாயமாக ஆட்சேர்ப்பு செய்தல் உட்பட அடிமைத்தனத்தை ஒத்த அனைத்து வகையான அடிமைத்தனம் அல்லது நடைமுறைகள்.

(ஆ) பாலியல் தொழிலுக்காக, ஆபாசப் படங்களை தயாரிப்பதற்காக அல்லது ஆபாச நிகழ்ச்சிகளுக்காக ஒரு சிறுவரைப் பயன்படுத்துதல், வாங்குதல் அல்லது முன்வருதல்.

(இ) சட்டவிரோத நடவடிக்கைகளுக்காக, குறிப்பாக சம்பந்தப்பட்ட சர்வதேச ஒப்பந்தங்களில் வரையறுக்கப்பட்டுள்ளதன்படி போதைப்பொருள் உற்பத்தி மற்றும் போக்குவரத்துக்கு பிள்ளையைப் பயன்படுத்துதல், பெறுகை அல்லது வழங்குவதற்கு முன்வருதல்.

(ஈ) ஏதேனும் வேலையொன்றுக்காக குறிப்பாக அதன் இயல்பு அல்லது அது மேற்கொள்ளப்படும் சூழ்நிலைகள் காரணமாக சிறுவர்களின் உடல்நலம், பாதுகாப்பு அல்லது ஒழுக்கத்திற்கு தீங்கு விளைவிக்கக்கூடிய வகையில் அமைகின்ற வேலையாக அமைதல்.

குறைந்தபட்ச வயது பற்றிய சர்வதேச தொழிலாளர் அமைப்பின் 1973 சமவாயம்; (S138)

இந்த உடன்படிக்கை வேலை அல்லது தொழிலில் சேருவதற்கான பொதுவான குறைந்தபட்ச வயதை 15 ஆண்டுகள் (இலகுவான வேலைக்கு 13) எனவும் அபாயகரமான வேலைக்கான குறைந்தபட்ச வயது 18 (சில கடுமையான நிபந்தனைகளின் கீழ் 16) எனவும் ஏற்பாடு செய்கின்றது.

13 முதல் 15 வயது வரையிலான நபர்களை இலகுவான வேலைகளில் ஈடுபடுத்துவதற்கு அல்லது பணியாற்றுவதற்கு தேசிய சட்டங்கள் அல்லது ஒழுங்குமுறைகள் அனுமதிக்கலாம் என்று உறுப்புரை 7 குறித்துரைப்பதுடன் அத்தகைய வேலைகள் பின்வருமாறு அமைதல் வேண்டும்.

(அ) அவர்களின் உடல்நலம் அல்லது வளர்ச்சிக்கு தீங்கு விளைவிக்காதது.

(ஆ) பாடசாலைக்கான அவர்களின் வருகை, தகுதிவாய்ந்த அதிகாரியால் அங்கீகரிக்கப்பட்ட தொழில்சார் திசைமுகப்படுத்தல் அல்லது பயிற்சித் திட்டங்களில் அவர்கள் பங்கேற்பு அல்லது பெறப்பட்ட அறிவுறுத்தலில் இருந்து பயனடையும் அவர்களின் திறனைப் பாதிக்காமல் இருக்காவிடத்து,

நாடுகளுக்கிடையேயான மகவேற்பு தொடர்பாக சிறுவர்களின் பாதுகாப்பு மற்றும் ஒத்துழைப்புக்கான 1993 ஆம் ஆண்டின் ஹேக் ஒப்பந்தம்

2001 செப்டெம்பர் 27 இல், இலங்கை, புதிய உறுப்பு நாடாக அனுமதிக்கப்பட்ட பின்னர், ஹேக் மாநாட்டின் சட்டத்தை ஏற்றுக்கொண்டதுடன் இதன் ஊடாக அமைப்பின் 55 வது உறுப்பு நாடாக மாறியுள்ளது.

1993 ஹேக் உடன்படிக்கையானது தற்போது 89 நாடுகளில் (அனைத்து முக்கிய பெறும் நாடுகள் உட்பட), நடைமுறையில் உள்ள சர்வதேச சட்ட கட்டமைப்பாக அங்கீகரிக்கப்பட்டுள்ளதுடன் இது நாடுகளுக்கிடையேயான மகவேற்பினை ஒழுங்குபடுத்துவதுடன் மகவேற்பு செயன்முறைக்கு முன்னர் மற்றும் பின்னர் சிறுவர்கள் மற்றும் குடும்பங்களைப் பாதுகாக்கிறது. மகவேற்பு செய்யப்பட்ட சிறுவர்களை கடத்தல், விற்பனை செய்தல் ஆகியவற்றை தடுப்பதற்கான பாதுகாப்புகளை இந்த உடன்படிக்கை நிறுவுகின்ற அதேவேளை சொந்த நாட்டில் குடும்பத்துடன் இருக்க முடியாத பிள்ளைகளுக்கு பாதுகாப்பான நடைமுறைகளை உறுதிப்படுத்த சர்வதேச தரநியமங்களை வழங்குகிறது. இந்த பாதுகாப்புகளில் பின்வருவன உள்ளடங்கும்:

- பிள்ளை உண்மையிலேயே மகவேற்பு செய்யக்கூடியது என்பதையும் மகவேற்பு மட்டுமே அப்பிள்ளைக்கு சிறந்த தீர்வாக அமைகின்றது என்பதையும் உறுதிப்படுத்துதல்.
- உயிரியல் பெற்றோர்களுடன் கலந்துரையாடப்பட்டு அவர்களின் முடிவின் விளைவுகள் குறித்து முறையாகத் தெரிவிக்கப்பட்ட பிறகும், எந்த விதமான கட்டணமும் அல்லது இழப்பீடும் பெறாமலும், சுதந்திரமாக ஒப்புதல் அளித்திருப்பதை உறுதி செய்தல்.
- பிள்ளை மற்றும் அதன் உயிரியல் பெற்றோர் தொடர்பான தகவல்களைப் பாதுகாத்தல்.
- மகவேற்பு செய்வதற்கு வருங்கால வளர்ப்பு பெற்றோரின் தகுதி மற்றும் பொருத்தப்பாட்டை மதிப்பீடு செய்தல்;.
- பொருத்தமான குடும்பத்துடன் சிறுவரை இணைத்தல்.
- மத்திய அரச அதிகாரிகள், பொது அதிகாரிகள், நீதித்துறை மற்றும் நிர்வாக அதிகாரிகள் மற்றும் அங்கீகாரம் பெற்ற அமைப்புகள் போன்ற தகுதிவாய்ந்த அதிகாரிகள் மூலம் மட்டுமே மகவேற்புகளை செயல்படுத்துதல்.
- 1993 ஹேக் உடன்படிக்கையின் ஏற்பாடுகளின்படி அங்கீகரிக்கப்பட்ட மகவேற்பு அமைப்புகளுடன் பணிபுரிதல்.
- முறையற்ற நிதி ஆதாயத்தைத் தடுப்பதற்கான நடைமுறைகளை நிறுவுதல்.
- மேலும் 1993 ஹேக் உடன்படிக்கை அரச தரப்புகளுக்கு பின்வரும் விடயங்களுக்கு இடமளிக்கின்றது:
- அவர்களின் உடன்படிக்கை சார்ந்த பங்குதார அரச தரப்புகள் மீது உயர் தரநிலைகள் அல்லது தேவைப்பாடுகளை விதித்தல்.
- சொந்த நாடுகள் மீதான அழுத்தத்தைத் தடுக்கும் பொருட்டு மகவேற்பு தேவைப்படுகின்ற பிள்ளைகளின் உண்மையான எண்ணிக்கையின் அடிப்படையில் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டு குறைந்த எண்ணிக்கையிலான நாடுகள் மற்றும் அங்கீகாரம் பெற்ற அமைப்புகளுடன் மட்டுமே பணிபுரிய முடிவெடுப்பதன் ஊடாக மகவேற்புகளின் எண்ணிக்கையின் மீது கட்டுப்பாட்டைப் பேணுதல்.

- மகவேற்பின் போது பெறும் நாடானது மேற்படி உடன்படிக்கைக்கு அல்லது சொந்த நாட்டின் தேவைப்பாடுகளுக்கு இசைந்தொழுகாத நிலையில் ஒத்துழைப்பை இடைநிறுத்த அல்லது நிறுத்த தீர்மானம் மேற்கொள்ளுதல்.

- ஏற்றங்கீகரிக்கப்பட்ட அமைப்புகளின் செயற்பாடுகளை அங்கீகரித்தல் அல்லது அங்கீகரிக்காமல் விடுதல்.[32]

இலங்கைச் சட்டம்

இலங்கையின் 2006 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க தண்டனைச் சட்டக்கோவை (திருத்தச்) சட்டம்

இலங்கை அரசாங்கம் மனிதர்களை விற்பனை செய்தல் பற்றிய ஒப்பந்தத்தில் 'மனித விற்பனை' என்பதற்கான வரைவிலக்கணத்திற்கு இசைவாகும் வகையில் 2006 ஆம் ஆண்டு தண்டனைச் சட்டக் கோவையில் திருத்தங்களை அறிமுகப்படுத்தியது. இந்த திருத்தச் சட்டத்தினூடாக பிரதானமாக மனிதர்களை விற்பனை செய்தல் பற்றிய ஒப்பந்தத்தில் 'மனித விற்பனை' என்பதற்கான வரைவிலக்கணத்திற்கு இசைவாகும் வகையில் மனித விற்பனை பற்றிய குற்றத்தினை விரிவாக வரைவிலக்கணம் செய்துள்ளது.

360(இ)(1) ஆம் பிரிவு

360(இ)(1) பிரிவினூடாக ஒரு சுருக்கமான வடிவத்தில் குறிப்பாக, பின்வரும் செயற்பாடுகளை குற்றமாக்குகிறது:

(அ) பணத்திற்காக அல்லது வேறு ஏதேனும் பிரதிப் பயனுக்காக வேறோர் ஆளை வாங்குகின்றாரோ விற்பனை செய்தல் அல்லது பண்டமாற்றுச் செய்தல் அல்லது எவரேனும் ஆளை வாங்குவதற்கு, விற்பதற்கு அல்லது பண்டமாற்றுச் செய்வதற்குத் தூண்டுதல்.

(ஆ) எவரேனும் ஆளை பலாத்காரமான அல்லது கட்டாய ஊழியத்தை அல்லது சேவைகளைப் பெறுகின்ற அல்லது அடிமைத்துவத்தின், சேவகத்தின், உறுப்புகளை அப்புறப்படுத்தலின், விபச்சாரத்தின் அல்லது வேறு விதங்களிலான பாலியற் பயன்நுகர்வின் அல்லது ஏதேனும் சட்டத்தின் கீழ்த் தவறொன்றாக அமைகின்ற வேறேதேனும் செயலின் நோக்கத்திற்காக ஆட்திரட்டுதல், ஏற்றிச்செல்லுதல், இடமாற்றுதல், அடைக்கலமளித்தல் அல்லது ஏற்றுக்கொள்ளுதல் அல்லது அச்சுறுத்தலை, வலுக்கட்டாயத்தை, மோசடியை, ஏமாற்றுதலை அலவலது தூண்டுதலைப் பயன்டுத்தி மற்றவரின் பலிக்குட்படுத்தும் தன்மையைப் பயன்நுகர்வதன் மூலம் வேறேதேனும் செயலைச் செய்தல் இச்சட்டத்தின் கீழ் குற்றமாக கருதப்படும்.

(இ) இந்த சுரண்டல் நடவடிக்கைகளுக்காக சிறுவனொன்றை அத்தகைய **சிறுவரின் சம்மதத்துடன் அல்லது சம்மதமின்றி** இணைத்துக் கொள்ளல், ஏற்றிச்செல்லுதல், இடமாற்றுதல், பாதுகாப்பளித்தல், பொறுப்பேற்றல் அல்லது வேறேதேனும் செயற்பாடு.

மேலே கலந்துரையாடப்பட்டபடி, சர்வதேச நெறிமுறை வரையறையின்படி தண்டனைச் சட்டக் கோவையில் 'சிறுவர் விற்பனை' வரைவிலக்கணப்படுத்தப்பட்டுள்ளது.

பிரிவு 360(இ)(1)(இ)

பிள்ளையொன்றை அத்தகைய சம்மதத்துடனும் சம்மதமில்லாமலும் பலாத்காரமான அல்லது கட்டாய ஊழியத்தை அல்லது சேவைகளைப் பெறுகின்ற அல்லது அடிமைத்துவத்தின், சேவகத்தின் அல்லது உறுப்புகளை அப்புறப்பத்துதலின், விபச்சாரத்தின் அல்லது வேறு விதங்களிலான பாலியற் பயநுகர்வின் அல்லது ஏதேனும் சட்டத்தின் கீழத் தவறொன்றாக அமைகின்ற வேறேதேனும் செயலின் நோக்கத்திற்காக ஆட்திரட்டுகின்றாரோ, ஏற்றிச்செல்கின்றாரோ, இடமாற்றுகின்றாரோ, அடைக்கலமளிக்கின்றாரோ அல்லது ஏற்றுக்கொள்கின்றாரோ அல்லது வேறு ஏதேனும் செயலைச் செய்கின்றாரோ, அத்தகை ஆள் மனித விற்பனை குற்றத்திற்கு தவறாளியாகின்றார்.

360(இ)(1)

'சிறுவர்' என்பது பதினெட்டு வயதுக்குட்பட்ட ஆள் என்று பொருள்படும்.

32 நாடுகளுக்கிடையில் பிள்ளைகளை மகவேற்பு செய்தல் பற்றிய பிள்ளைகளின் பாதுகாப்பு மற்றும் ஒத்துழைப்பு பற்றிய ஹேக் சமவாயம் 1993, தகவல் பத்திரம், தனிநபர் சர்வதேச சட்டம் பற்றிய ஹேக் மாநாடு, நிரந்தர அலுவலகம், 2012.

360(ඉ)(1)(ඉ)

இந்த பிரிவின்படி, பாதிக்கப்பட்டவர் ஒரு சிறுவராக இருந்தால், விற்பனையின் 'முறையை' நிரூபிக்க வேண்டிய அவசியம் ஏற்படாது. குறித்த நபர் பதினெட்டு வயதிற்குட்பட்டவராக இருக்கும்போது, சுரண்டலின் 'செயல்' மற்றும் 'நோக்கம்' ஆகியவற்றை நிரூபிப்பது மட்டுமே அவசியமாக அமைகின்றது.

பிரிவு 360(ඉ)(2)

விற்பனை என்னும் தவறுக்குக் குற்றவாளியாகும் ஆள் ஒருவர்; குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன் மூலம் இரண்டு ஆண்டுகளுக்குக் குறையாததும் இருபது ஆண்டுகளை விஞ்சாததுமானவொரு காலப்பகுதிக்கு இருவகையிலொருவகை மறியற்றண்டனையுடன் தண்டிக்கப்படுதல் வேண்டும் என்பதுடன் குற்றப்பணத்துடனும் தண்டிக்கப்படலாம். **அத்துடன் அத்தகைய தவறு ஒரு பிள்ளை தொடர்பில் புரியப்படுமிடத்து, மூன்று ஆண்டுகளுக்குக் குறையாததும் இருபது ஆண்டுகளை மிஞ்சாதுதுமான காலப்பகுதிக்கு இருவகையிலொருவகை மறியற்தண்டனையுடன் தண்டிக்கப்படுதல் வேண்டும் என்பதுடன் குற்றப்பணத்துடனும் தண்டிக்கப்படலாம்.**

சிறுவர் விற்பனை தொடர்பாக தண்டனைச் சட்டக் கோவையில் குறிப்பிடப்பட்டுள்ள ஏனைய குற்றங்கள்

1995 ஆம் ஆண்டின் 22 ஆம் இலக்க தண்டனைச் சட்டக் கோவை (திருத்தச்) சட்டம் முதன்மைச் சட்டத்தின் 360(அ) பிரிவை பிரதியீடு செய்தல்

முதன்மைச் சட்டத்தின் பிரிவு 360 நீக்கப்பட்டு விலைப்படுத்தல் குற்றத்தைப் பற்றிய பின்வரும் பிரிவு பிரதியீடு செய்யப்பட்டது:

பிரிவு 360(அ): விலைப்படுத்தல்

எவரேனுமொரு ஆள்

(1) ஆணோ பெண்ணோ எந்த வயதினராக இருந்தாலும் (அத்தகைய நபரின் சம்மதத்துடன் அல்லது சம்மதம் இல்லாமல்) எந்தவொரு நபரையும், இலங்கைக்குள் அல்லது வெளியில் விபச்சாரத்தில் ஈடுபடச் செய்வதற்கு விலைப்படுத்தல் அல்லது விலைப்படுத்துவதற்கு முயற்சித்தல்.

(2) பதினாறு வயதிற்குட்பட்ட எந்தவொரு நபரையும், இலங்கைக்கு வெளியில் உள்ள எந்தவொரு நபருடனும் சட்டவிரோதமான உடலுறவு கொள்ளும் நோக்கில், அத்தகைய நபரின் அனுமதியுடனோ அல்லது இல்லாமலோ இலங்கையை விட்டு வெளியேறுவதற்குப் விலைப்படுத்தல் அல்லது விலைப்படுத்த முயற்சித்தல், அல்லது அகற்றுதல் அல்லது முயற்சித்தல் அந்த நோக்கத்திற்காக இலங்கையில் இருந்து அத்தகைய நபரை (அத்தகைய நபரின் அனுமதியுடன் அல்லது இல்லாமல்) அகற்றுவதற்கு முயற்சித்தல்.

(3) எந்த வயதினராக இருந்தாலும், இலங்கையை விட்டு (அத்தகைய நபரின் சம்மதத்துடன் அல்லது இல்லாமலும்) அத்தகைய நபர் வேறு எங்காவது ஒரு விபச்சார விடுதியில் உடனுறைபவராக அல்லது அடிக்கடி உடனுறைபவராக ஆகலாம் என்ற நோக்கத்துடன் விலைப்படுத்தல் அல்லது விலைப்படுத்துவதற்கு முயற்சித்தல். குறிப்பிட்ட நோக்கத்திற்காக அத்தகைய நபரை (அத்தகைய நபரின் அனுமதியுடன் அல்லது இல்லாமல்) இலங்கையில் இருந்து அகற்றுதல் அல்லது அகற்ற முயற்சித்தல்.

(4) பதினாறு வயதுக்குட்பட்ட எந்தவொரு நபரையும், இலங்கையிலோ அல்லது இலங்கைக்கு வெளியிலோ, வேறு எந்த நபருடனும் சட்டவிரோதமான உடலுறவு கொள்ளும் நோக்கில் கொண்டு வருதல் அல்லது கொண்டுவர முயற்சித்தல்.

(5) எந்த வயதினரையும் (அத்தகைய நபரின் சம்மதத்துடன் அல்லது இல்லாமலும்) அத்தகைய நபரின் வழக்கமான வசிப்பிடமான இலங்கையில் (அத்தகைய இடம் விபச்சார விடுதியாக இல்லாதது) விட்டுச் செல்வதற்கு, விலைப்படுத்தல் அல்லது விலைப்படுத்துவதற்கு முயற்சித்தல ஒரு நபர் விபச்சாரத்தின் நோக்கத்திற்காக இலங்கைக்குள் அல்லது வெளியில் உள்ள ஒரு விபச்சார விடுதியில் அல்லது அடிக்கடி உடனுறைபவராக இருக்கலாம்; அல்லது இலங்கையிலோ அல்லது இலங்கைக்கு வெளியிலோ வேறு எந்த நபருடனும் உடலுறவு நடவடிக்கைகாக ஈடுபடுத்துதல்.

(6) அத்தகைய நபரின் அனுமதியின்றி எந்தவொரு விபச்சார விடுதியிலும் சட்டவிரோதமான உடலுறவு அல்லது அத்தகைய நபரை பாலியல் துஷ்பிரயோகம் செய்யும் நோக்கில் தடுத்து வைத்தல்,

ஒரு நபர் 'விலைப்படுத்தல்' குற்றத்தைச் செய்கின்ற அதேவேளை, குற்றவாளியாக்கப்படும் பட்சத்தில் இரண்டு ஆண்டுகளுக்குக் குறையாததும் பத்து ஆண்டுகளுக்கு அதிகரிக்காத காலமொன்றுக்கான இருவகையில் ஒருவகை சிறைத்தண்டனை தண்டிக்கப்படுதல் அல்லது தண்டப்பணத்தினாலும் தண்டிக்கப்படலாம்.

பிரிவு 360(ஆ): சிறுவர்களை பாலியல் ரீதியாக சுரண்டல்

1. எவரேனுமொருவர்:-

(அ) எந்தவொரு சிறுவரையும் பாலியல் ரீதியாக துஷ்பிரயோகம் செய்யப்படுவதற்கு அல்லது எந்தவொரு வடிவத்திலோ அல்லது பாலியல் செயலிலோ அல்லது ஏதேனும் ஆபாசமான அல்லது அநாகரீகமான காட்சிப்படுத்தல் அல்லது நிகழ்ச்சிகளில் பங்கேற்கும் நோக்கங்களுக்காக, அத்தகைய சிறுவரை எந்தவொரு வளாகத்திலும் தங்குவதற்கு தெரிந்தே அனுமதித்தல்.

(ஆ) உடலுறவு நோக்கங்களுக்காக அல்லது எந்தவொரு பாலியல் துஷ்பிரயோகத்திற்காகவும் ஒரு சிறுவனை விலைப்படுத்துபவராக செயற்படுதல்.

(இ) அச்சு அல்லது பிற ஊடகங்கள், வாய்வழி விளம்பரங்கள் அல்லது பிற ஒத்த வழிமுறைகள் மூலம் உடலுறவு அல்லது எந்தவொரு பாலியல் துஷ்பிரயோகத்திற்கும் ஒரு நபரை ஒரு பிள்ளையின் வாடிக்கையாளராக இருக்க தூண்டுதல்.

(ஈ) ஒரு சிறுவரின் மீதான அவரது செல்வாக்கு அல்லது அவரது உறவைப் பயன்படுத்தி, அத்தகைய சிறுவரை உடலுறவு அல்லது எந்தவொரு பாலியல் துஷ்பிரயோகத்திற்காகவும் விலைப்படுத்தல்.

(உ) பாலியல் உடலுறவு அல்லது ஏதேனும் பாலியல் துஷ்பிரயோகத்திற்காக ஒரு சிறுவரை விலைப்படுத்தும் பொருட்டு அத்தகைய சிறுவனை அச்சுறுத்துதல் அல்லது வன்முறையைப் பயன்படுத்துதல்.

(ஊ) ஒரு சிறுவரை உடலுறவு அல்லது ஏதேனும் பாலியல் துஷ்பிரயோகத்திற்காக வாங்கும் நோக்கத்துடன் ஒரு சிறுவனுக்கு அல்லது அதன் பெற்றோருக்கு பணரீதியான கொடுப்பனவு அல்லது பிற நன்மைகளை வழங்குதல்.

ஒரு நபர் பிள்ளைகளிடமிருந்து தவறான பாலியல் குற்றத்தைச் செய்கின்ற அதேவேளை, அந்நபர் குற்றவாளியாக்கப்படும் பட்சத்தில் ஐந்து ஆண்டுகளுக்குக் குறையாததும் இருபது ஆண்டுகளுக்கு விஞ்சாததுமான காலமொன்றுக்கான இருவகையில் ஒருவகை சிறைத்தண்டனையால் தண்டிக்கப்படுதல் வேண்டுமென்பதுடன் அவர் தண்டப்பணத்தினாலும் தண்டிக்கப்படலாம்.

2. இப்பிரிவில் "சிறுவர் " என்பது பதினெட்டு வயதுக்கும் குறைந்த ஒரு ஆள் எனப் பொருள்படும்.

1998 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க தண்டனைச் சட்டக் கோவை (திருத்தச்) சட்டம்

பிரிவு 288: சிறுவர்களை பிச்சை எடுக்கச் செய்வித்தல் அல்லது விலைப்படுத்தல்

1. பிச்சை எடுக்கும் அல்லது யாசகப் பொருள் பெற்றுக்கொள்ளும் நோக்கங்களுக்காக அல்லது யாசகப் பொருள் கொடுக்கப்படுவதைத் தூண்டும் நோக்கங்களுக்காக (பாடுதல், விளையாட்டுக் காட்டல், கேளிக்கை நிகழ்ச்சி நடாத்துதல், எதனையும் விற்பனை செய்வதற்காகக் கொடை முனைதல் அல்லது வேறு வகையில் செய்வதென்று பாசாங்கு எதுவும் இருந்தாலென்ன, இல்லாவிட்டாலென்ன) பிள்ளை ஒன்றை ஏதேனும் தெருவில், வளவுகளில் அல்லது இடத்தில் நிற்கச் செய்விக்கின்ற அல்லது விலைப்படுத்தல் செய்கின்ற ஆள் எவரும் குற்றவாளியாக்கப்படும் பட்சத்தில் ஐந்து ஆண்டுகளுக்கு மிஞ்சாதவொரு காலத்துக்கான இருவகையில் ஒரு வகையான சிறைத்தண்டனையால் தண்டிக்கப்படுதல் வேண்டுமென்பதுடன் குற்றப்பணமொன்றுக்கும் ஆளாதல் வேண்டும்.

2. இந்த பிரிவில் "சிறுவர்" என்பது பதினெட்டு வயதுக்குட்பட்ட ஆளொருவர் எனப் பொருள்படும்.

பிரிவு 288(அ): உடலுறவுக்காக விலைப்படுத்துபவர்களாகச் செயற்படுவதற்குப் பிள்ளைகளை வாடகைக்கு அல்லது ஊழியத்துக்கு அமர்த்துதல்.

1. சட்டவிரோதமான உடலுறுவுக்கென ஆளெவரையும் கூட்டிவிடுவதற்காக தெரிந்துகொண்டே சிறுவரொன்றை வேலைக்கு அமர்த்துகின்ற, இசையச் செய்கின்ற, பயன்படுத்துகின்ற, தூண்டுகின்ற அல்லது பலவந்தப்படுத்துகின்ற ஆள் எவரும் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன் மேல் இரண்டாண்டுகளுக்குக் குறையாததும் ஐந்தாண்டுகளை மிஞ்சாததுமான காலமொன்றுக்கான இருவகையில் ஒருவகை சிறைத்தண்டனையால் தண்டிக்கப்படுதல் வேண்டுமென்பதுடன் அவர் குற்றப்பணமொன்றுக்கும் ஆளாகலாம்.

2. இப்பிரிவில் "சிறுவர்" என்பது பதினெட்டு வயதுக்கும் குறைந்த ஆளொருவர் எனப் பொருள்படும்.

288ஆ : தடைசெய்யப்பட்ட பொருட்களைக் கொண்டு செல்லுவதற்குப் பிள்ளைகளை வாடகைக்கு அல்லது வேலையில் அமர்த்துதுல்.

1. ஏதேனும் தடைசெய்யப்பட்ட பொருளைக் கொண்டுசெல்லுவதற்குத் தெரிந்துகொண்டே சிறுவரொன்றை வாடகைக்கு அமர்த்துகின்ற, வேலைக்கு அமர்த்துகின்ற, இசையச் செய்கின்ற, பயன்படுத்துகின்ற, தூண்டுகின்ற அல்லது பலவந்தப்படுத்துகின்ற ஆள் எவரும் ஐந்தாண்டுகளுக்கு குறையாததும் ஏழாண்டுகளை மிஞ்சாததுமான காலமொன்றுக்கான இருவகையிலொருவகை சிறைத்தண்டனையால் தண்டிக்கப்படுதல் வேண்டும் என்பதுடன் அவர் குற்றப்பணமொன்றுக்கும் ஆளாகலாம்.

2. இப்பிரிவில் "சிறுவர்" என்பது பதினெட்டு வயதுக்குக் குறைந்த ஆளொருவர் எனப் பொருள்படும்.

முதன்மைச் சட்டவாக்கத்தின் பிரிவு 360அ என்னும் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்பட்டுள்ளது:

1. அப்பிரிவின் (5) ஆம் உட்பிரிவில் "இலங்கையில் அத்தகைய ஆளின் வழமையான வசிப்பிடத்தை விட்டுச் செல்வதற்கும்" என்னும் சொற்களிலிருந்து அந்தப் பந்தி முடியும் வரையுள்ள சொற்கனை நீக்கிவிட்டு அவற்றுக்கு பதிலாகப் பின்வரும் சொற்களை இடுதல்.

2. அந்த பிரிவின் துணைப்பிரிவு (6) இல், 'ஏதேனும் விபசார விடுதியில் சட்டவிரோதமான உடலுறவுகொள்ளும் அல்லது பாலியல் துஷ்பிரயோகம் செய்யும் நோக்குடன்' என்னும் சொற்களுக்குப் பதிலாக "எவையேனும் வளவுகளில் சட்டவிரோத உடலுறவுகொள்ளும் அல்லது பாலியல் துஷ்பிரயோகம் செய்யும் நோக்குடன்" என்னும் சொற்களை இடுதல்.

1999 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்க சாட்சிகள் (விசேட ஏற்பாடுகள்) சட்டம்

பிரிவு 163அ - கட்புல ஒளிப்பதிவு

163(அ) எனும் புதியதொரு பிரிவினை உட்புகுத்துவதன் மூலம் சிறுவர் துஷ்பிரயோகம் தொடர்பான குற்றங்கள் சார்ந்த விடயங்களில் நீதிமன்ற நடவடிக்கைகளுக்கு வீடியோ பதிவை அனுமதிக்கும் விடயம் அறிமுகப்படுத்தப்பட்டது. மேலும், இப்பிரிவின் கீழ் கட்புல ஒளிப்பதிவொன்று சாட்சியத்தில் கொடுக்கப்படுமிடத்து சிறுபிள்ளை சாட்சியால் செய்யப்பட்டதும் கட்புல ஒளிப்பதிவால் வெளியிடப்பட்டதுமான ஏதேனும் கூற்று நேரடி வாய்மூலமான சாட்சியத்தில் அச்சிறுவரினால் கொடுக்கப்பட்டதாகக் கருதப்படுதல் வேண்டும்.

இந்தப் பிரிவின் கீழ், 'சிறுவர் துஷ்பிரயோகம் தொடர்பிலான தவறொன்று' என்பது, சிறுபிள்ளை தொடர்பில் புரியப்படும் போது தண்டனைச் சட்டக் கோவையின் 286அ, 308ஆ, 360அ, 360ஆ,360இ, 363, 364அ, 365, 365அ அல்லது 365ஆ ஆகியவற்றின் கீழான தவறொன்று எனப் பொருள்படும்.

"சிறுவர்" என்பது, முதனிலை நேர்முக விசாரணை கட்புல ஒளிப்பதிவு செய்யப்பட்ட நேரத்தில் பதினெட்டு வயதுக்குட்பட்ட ஆளொருவர் என்று பொருள்படும்.

ஒரு "கட்புல ஒளிப்பதிவு" என்பது எந்த ஊடகத்திலிருந்து ஏதேனும் வழிமுறையில் உருவகப்படுத்தப்பட்ட உருவமொன்று தயாரிக்கப்படலாமோ அந்த ஏதேனும் ஊடகம் என்ற பொருள்படும் என்பதுடன் அதனுடன் சேர்ந்த ஒலிப்பதிவு நாடாவையும் உள்ளடக்கும்.

1998 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க குற்றவியல் நடவடிக்கைமுறை சட்டக் கோவை (திருத்தம்)

பகுதி ஏ: குற்றங்களின் புலன்விசாரணை

முதன்மை சட்டவாக்கத்தின் பிரிவு 2 திருத்தப்பட்டு, "சிறுவர் துஷ்பிரயோகம்" என்பதன் பின்வரும் வரையறை உட்புகுத்தப் பட்டுள்ளது.

"சிறுவர் துஷ்பிரயோகம்" என்பது சிறுவர் தொடர்பான ஏதேனும் செயலை புரிதல் அல்லது புரியாது விடுதல் என்று பொருள்படுவதுடன் இது பின்ரும் ஏதேனும் ஏற்பாடுகளுக்கு முரணாக செயற்படுவதாக அமைகின்றது.

(அ தண்டனைச் சட்டத்தின் பிரிவுகள் 286அ, 288, 288அ, 288ஆ, 308அ. 360அ, 360ஆ, 360இ, 363, 364அ, 365, 365அ, அல்லது 365ஆ

(ஆ) பெண்கள், இளம் ஆட்கள் மற்றும் சிறுவர்களை பணிக்கமர்த்துதல் சட்டம்.

(இ) சிறுவர்கள் மற்றும் இளம் ஆட்கள் சட்டம்.

(ஈ) கல்வி கட்டளைச் சட்டத்தின் கீழ் உருவாக்கப்பட்ட கட்டாயக் கல்வி தொடர்பான ஒழுங்குவிதி மற்றும் சிறுவரின் உயிருக்கு ஆபத்தை விளைவிக்கும் அல்லது உடல் ரீதியாகவோ அல்லது மனவெழுச்சி ரீதியாகவோ தீங்கு விளைவிக்கக்கூடிய ஆயுத மோதலில் ஒரு சிறுவரை ஈடுபடுத்துவதை உள்ளடக்கியதாகும்.

2021 இன் 01 ஆம் இலக்க அபாயகரமான தொழில்கள் பற்றிய ஒழுங்குவிதிகள் (இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானி பத்திரிகை, இல. 2254/35)

2021 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க பெண்கள், இளம் ஆட்கள் மற்றும் சிறுவர்களை பணிக்கமர்த்துதல் (திருத்தச்) சட்டம்

இணைப்பு 4: பொதுமக்களின் உரிமைகளைப் பாதுகாப்பதற்கும் முன்னேற்றுவதற்கும் சட்ட அமுலாக்க அதிகாரிகளுக்கு உயர் நீதிமன்றத்தினால் வழங்கப்பட்டுள்ள வழிகாட்டுதல்கள் (SC[FR] மனு இலக்கம். 677/2012 – 11/06/2019)

1. சட்ட அமுலாக்க அதிகாரிகள் மனித மாண்பை மதித்து பாதுகாக்க வேண்டும் என்பதுடன் அனைத்து ஆட்களினதும் மனித உரிமைகளையும் பராமரித்து நிலைநிறுத்துல் வேண்டும்.

2. சட்ட அமுலாக்க அதிகாரிகள் சட்டபூர்வமான தன்மை, அவசியத்தன்மை, பாகுபாடு காட்டாமை, விகிதசமத்துவம் மற்றும் மனிதநேயம் ஆகியவற்றின் கோட்பாடுகளுக்கு மதிப்பளித்தல் வேண்டும்.

3. சட்ட அமுலாக்க அதிகாரிகள் அனைத்து சந்தர்ப்பங்களிலும் பாரபட்சம் காட்டாமல், சட்டத்தின் சமமான பாதுகாப்பைப் பாதுகாத்து ஊக்குவிக்க வேண்டும். சட்டத்தின் முன் அனைவரும் சமமானவர்கள் என்பதுடன் எவ்வித பாரபட்சமுமன்றி சட்டத்தின் சமமான பாதுகாப்பிற்கு உரித்துரையவர்களாவர்.

4. இனம், பாலினம், மதம், மொழி, நிறம், அரசியல் கருத்தியல், வம்சாவளி, சொத்து, பிறப்பு அல்லது பிற அந்தஸ்து ஆகியவற்றின் அடிப்படையில் அவர்களுக்கு சட்டவிரோதமான முறையில் எவ்வித பாரபட்சமும் காட்டப்படுதல் கூடாது.

5. சர்வதேச மனித உரிமைகள் தரநிலைகளுக்கு அமைவாக பெண்கள் (கர்ப்பிணிப் பெண்கள் மற்றும் புதிய தாய்மார்கள் உட்பட), சிறார்கள், நோயுற்றோர், முதியோர்கள் மற்றும் சிறப்பு சிகிச்சை தேவைப்படும் ஆட்களின் சிறப்பு நிலை மற்றும் தேவைகளை நிவர்த்தி செய்ய வடிவமைக்கப்பட்ட சில சிறப்பு நடவடிக்கைகளைச் செயற்படுத்துதல் சட்டத்திற்குப் புறம்பானது அல்லது பாரபட்சமானது எனக் கருதப்படக் கூடாது.

6. வயது வந்தவர்களுக்கு கிடைக்கும் அனைத்து மனித உரிமை உத்தரவாதங்களிலிருந்தும் சிறுவர்கள் பயனடைய வேண்டும். மேலும், சிறுவர்கள் அவர்களின் மாண்பு மற்றும் பெறுமதி தொடர்பான அவர்களின் உணர்வினை ஊக்குவிக்கும் விதத்தில் நடாத்தப்படுதல் வேண்டும் என்பதுடன் இது சமூகத்தில் அவர்கள் மீள ஒருங்கிணைக்கப்படுவதற்கு உதவுவதுடன் சிறுவர்களின் உச்சமட்ட நலன்களை பிரதிபலிக்கும் அதேவேளை அந்த வயதினரின் தேவைகளை பற்றிய விடயங்களை கவனத்திற்கொள்கின்றது.

7. சிறுவர்களைதடுத்து வைப்பது அல்லது சிறையில் வைப்பது என்பன அனைத்து முயற்சிகளும் தோல்வியடையும் பட்சத்தில் பின்பற்றப்படும் இறுதி நடவடிக்கையாக இருக்க வேண்டும் என்பதுடன் தடுப்புக்காவல் மிகக் குறுகிய காலத்திற்கு மட்டுப்படுத்தப்பட்டதாக இருத்தல் வேண்டும்.

8. சிறுவர்கள் வயது வந்தவர்களிடமிருந்து பிரிக்கப்பட்டு தனியாக தடுத்து வைக்கப்படுதல் வேண்டும்.

9. தடுத்து வைக்கப்பட்டுள்ள பிள்ளைகளை பார்வையிடுவதற்கு குடும்ப உறுப்பினர்களுக்கு வாய்ப்பு கிட்ட வேண்டும் என்பதுடன் கடிதங்களைப் பெறுவதற்கும் வாய்ப்பு கிட்டுதல் வேண்டும்.

10. பெண்கள் மற்றும் சிறுவர்களுக்கு எதிரான அனைத்து வன்முறைச் செயல்களும் அத்தகைய செயல்கள் அரச உத்தியோகத்தர்கள் அல்லது தனிப்பட்ட நபர்களால் நடைபெற்றாலும் வீட்டில், சமுதாயத்தில் அல்லது உத்தியோகபூர்வ நிறுவனங்களில் இடம்பெற்றாலும் அவற்றைத் தடுப்பதற்கு, விசாரணை செய்வதற்கு மற்றும் சம்பந்தப்பட்டவர்களை கைது செய்வதற்கு சட்ட அமுலாக்க உத்தியோகத்தர்கள் உரிய கவனம் செலுத்துதல் வேண்டும்.

11. சட்ட அமுலாக்க அதிகாரிகள் பெண்கள் பாதிக்கப்படுவதைத் தடுப்பதற்கு கடுமையான உத்தியோகபூர்வ நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதுடன் பொலிசார் நடவடிக்கை மேற்கொள்ளாமை அல்லது பாலின கூறுணர்வு இல்லாத அமுலாக்க நடைமுறைகளின் விளைவாக மீண்டும் அவர்கள் பாதிப்படையாமல் இருப்பதை உறுதி செய்தல் வேண்டும்.

12. கைது செய்யப்பட்ட அல்லது தடுத்து வைக்கப்பட்டுள்ள பெண்கள் பாரபட்சத்திற்கு ஆளாகக் கூடாது என்பதுடன் அனைத்து வகையான வன்முறை அல்லது சுரண்டலில் இருந்தும் பாதுகாக்கப்படுதல் வேண்டும்.

13. சட்ட அமுலாக்க அதிகாரிகள் எந்த சூழ்நிலையிலும் சித்திரவதை மற்றும் பிற கொடூரமான, மனிதாபிமானமற்ற அல்லது இழிவான நடத்தையைப் பயன்படுத்தக்கூடாது.

14. எந்தவொரு நபரும் அவரது கௌரவம் அல்லது நற்பெயருக்கு களங்கம் ஏற்படும் வகையிலான நடவடிக்கைகளுக்கு உள்ளாகுதல் கூடாது.

15. சட்ட அமுலாக்க அதிகாரிகள் அனைத்து சந்தர்ப்பங்களிலும் பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் சாட்சிகளை இரக்கத்துடனும் கருணையுடனும் நடாத்துதல் வேண்டும்.

16. சட்ட அமுலாக்க உத்தியோகத்தர்கள் அனைத்து சந்தர்ப்பங்களிலும் கைது செய்யப்பட்ட எவருக்கும் கைதுக்கான காரணங்களை உடனடியாகத் தெரிவிக்க வேண்டும்.

17. சட்ட அமுலாக்க உத்தியோகத்தர்கள் ஒவ்வொரு கைதுக்கும் முறையான பதிவேட்டினை பேணிவருதல் வேண்டும். இந்த பதிவில் பின்வருவன அடங்கும்: கைதுக்கான காரணம் கைது செய்யப்பட்ட நேரம், கைது செய்யப்பட்ட நபர் காவலுக்கு மாற்றப்படும் நேரம், நீதித்துறை அதிகாரிகள் முன் ஒப்படைத்த நேரம் இவ்விடயத்தில் சம்பந்தப்பட்ட உத்தியோகத்தர்களின் அடையாளம், காவலில் வைக்கப்பட்ட இடம் பற்றிய துல்லியமான தகவல்கள் மற்றும் விசாரணை சார்ந்த விவரங்கள்.

18. கைது செய்யப்பட்ட எவருக்கும் அவரது கைது அல்லது காவலின் சட்டப்பூர்வ தன்மையை தாமதமின்றி மீளாய்வு செய்யும் நோக்கத்திற்காக நீதித்துறை அதிகாரியின் முன் ஆஜராக உரிமை உண்டு.

19. சட்ட அமுலாக்க உத்தியோகத்தர்கள் இயன்றவரை சிறார்களை வயதுவந்தவர்களிடமிருந்தும், பெண்களை ஆண்களிடமிருந்தும், தண்டனை பெற்றவர்களிடமிருந்து தண்டனை பெறாதவர்களையும் பிரித்து தனியாக வைப்பதற்கு அனைத்து சாத்தியமான நடவடிக்கைகளையும் மேற்கொள்ள வேண்டும்.

20. சட்ட அமுலாக்க அதிகாரிகள் அனைத்து சந்தர்ப்பங்களிலும் சட்டத்திற்கும் இந்த விதிகளுக்கும் கீழ்ப்படிவதையும் நிலைநிறுத்துவதையும் உறுதிசெய்தல் வேண்டும்.

EOG 07 - 0383